# தேவதேவன் கவிதைகள் - திணையியல் திறனாய்வு

## DEVADEVAN POEMS – A STUDY IN THE PERSPECTIVE OF “THINAI” CONCEPTS

கள்ளிக்கோட்டைப் பல்கலைக்கழக முனைவர் பட்டத்திற்காக
அளிக்கப்பெறும் ஆய்வேடு


**ஆய்வாளர்**

**உமாதேவி. ரா**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
(Reg.No. CHATRAM003)

**நெறியாளர்**

முனைவர் **ப. முருகன்**
பேராசிரியர்

**தமிழ்த்துறை & ஆய்வுமையம்**
**அரசுக்கல்லூரி, சித்தூர்,**
**பாலக்காடு - 678 104**


ஜனவரி – 2026

# DEVADEVAN POEMS – A STUDY IN THE PERSPECTIVE OF "THINAI" CONCEPTS

## தேவதேவன் கவிதைகள் - திணையியல் திறனாய்வு

**THESIS SUBMITTED TO THE UNIVERSITY OF CALICUT FOR THE AWARD OF DOCTOR OF PHILOSOPHY DEGREE IN TAMIL**

**BY**


**UMADEVI. R**

(Reg.No. CHATRAM003)


**Guide**


**Dr. P. MURUGAN**

**Professor**

**DEPARTMENT OF TAMIL AND RESEARCH CENTRE**

**GOVT.COLLEGE CHITTUR, PALAKKAD 678 104**


**JANUARY – 2026**

**முனைவர் ப. முருகன்**
பேராசிரியர் & துறைத்தலைவர்
தமிழ்த்துறை மற்றும் ஆய்வு மையம்
அரசுக் கல்லூரி, சித்தூர், பாலக்காடு – 678104

# நெறியாளர் சான்றிதழ்

**"தேவதேவன் கவிதைகள் – திணையியல் திறனாய்வு"** என்னும் தலைப்பில் உமாதேவி.ரா (பதிவெண். CHATRAM003) அவர்களால் கள்ளிக்கோட்டைப் பல்கலைக்கழக முனைவர் பட்டத்திற்கென சமர்ப்பிக்கப்பட்ட இவ்வாய்வேடு எனது மேற்பார்வையின் கீழ் ஆய்வாளரது சொந்த முயற்சியில் உருவானது என்றும் இவ்வாய்வேடு இதற்கு முன்னர் வேறு எந்த ஆய்வுப் பட்டத்திற்கும் அளிக்கப்பெறவில்லை என்றும் உறுதியளிக்கிறேன்.

இடம் : சித்தூர்

நாள் :

நெறியாளர்

Dr. P. MURUGAN
PEN: 619625
Professor
Dept. of Tamil & Research Centre
Govt. College, Chittur
Palakkad- 678 104

முனைவர் ப. முருகன்

GOVT. COLLEGE, CHITTUR
Palakkad, Kerala
Pin-678 104
CHITTUR COLLEGE P.O.

PRINCIPAL
GOVT. COLLEGE
CHITTUR

உமாதேவி. ரா

(பதிவெண்: CHATRAM003)

முனைவர்பட்ட ஆய்வாளர்

தமிழ்த்துறை மற்றும் ஆய்வு மையம்

அரசுக் கல்லூரி, சித்தூர், பாலக்காடு – 678104

# ஆய்வாளர் உறுதிமொழி

**"தேவதேவன் கவிதைகள் – திணையியல் திறனாய்வு"** என்னும் தலைப்பில் அமைந்துள்ள இவ்வாய்வேடு 2019-26 கால அளவில் கள்ளிக்கோட்டைப் பல்கலைக்கழக முனைவர் பட்டம் பெறுதல் தொடர்பாக பாலக்காடு சித்தூர், அரசுக்கல்லூரி தமிழ்த்துறை & ஆய்வுமையத்தில் எனது சொந்த முயற்சியில் உருவானது என்றும் இந்த ஆய்வின் மீது இதற்கு முன் எந்தப் பட்டமும் அளிக்கப்பெறவில்லை என்றும் நான் உறுதியளிக்கிறேன்

உமாதேவி. ரா

இடம் : சித்தூர்

(ஆய்வாளர்)

நாள் :

**உறுதிக்கையொப்பம்**

**நெறியாளர்**

**துறைத்தலைவர்**

Dr. P. MURUGAN
PEN: 619625
Professor
Dept. of Tamil & Research Centre
Govt. College, Chittur
Palakkad- 678 104

**முனைவர் ப.முருகன்**

பேராசிரியர்,

தமிழ்த்துறை & ஆய்வு மையம்,

அரசுக் கல்லூரி, சித்தூர், பாலக்காடு – 678104.

# UNIVERSITY OF CALICUT

## CERTIFICATE ON PLAGIARISM CHECK

### (For Regional Languages)

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | Name of the research scholar | **UMADEVI. R** | | |
| 2 | Title of thesis/ Dissertation | **DEVADEVAN POEMS – A STUDY IN THE PERSPECTIVE OF "THINAI" CONCEPTS** | | |
| 3 | Name of the Supervisor | **Dr.P.MURUGAN** | | |
| 4 | Department/ Institution | Department of Tamil & Research Centre, Govt College, Chittur, Palakkad-678104 | | |
| 5 | | Introduction/ Review of literature | Materials and Methods | Result/Discussio/ Summary/ Conclusion |
| | Similar content (%) identified | **1** | **7** | **0** |
| | Acceptable maximum limit (%) | **35** | **25** | **10** |
| 6 | Software used | Manual | | |
| 7 | Date of verification | 12/01/2026 | | |

Specific remarks,if any:

I Have verified the contracts of the Thesis, as summarized above and certified that the statements made above are true to the best of my knowledge and belief

Name, Address & signature (with date) of the. Adjudicator.

12/01/2026

Dr.P.MURUGAN

Supervisor

**Dr. P. MURUGAN**
**PEN: 619625.**
**Professor & Head of the Dept.**
**Dept. of Tamil & Research Centre**
**Govt. College, Chittur**
**Palakkad-678 104**

GOVT. COLLEGE, CHITTUR * CHITTUR COLLEGE P.O. Palakkad Pin-678

# நன்றியுரை

**“தேவதேவன் கவிதைகள் – திணையியல் திறனாய்வு”** என்ற தலைப்பில் ஆய்வு மேற்கொள்ள அனுமதி வழங்கிய கள்ளிக்கோட்டைப் பல்கலைக்கழகப் பதிவாளர் அவர்களுக்கும், பாலக்காடு, சித்தூர் அரசுக் கல்லூரி முதல்வர் அவர்களுக்கும் முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முனைவர் பட்ட ஆய்வேட்டை உருவாக்குங்கால் ஆய்வுக்குத் தேவையான தக்க ஆலோசனைகளையும், ஆய்வுத் தொடர்பான ஐயங்களுக்கு விளக்கமளித்தும், ஆய்வினை நன்முறையில் செய்ய என்னை நெறிப்படுத்திய என் ஆய்வு நெறியாளரும், தமிழ்த்துறைத்தலைவருமான **பேராசிரியர் முனைவர் ப.முருகன்** அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

ஆய்வுக்குத் துணையாய் இருந்த **முனைவர் க.முத்துஇலக்குமி** அவர்களுக்கும், பல வினாக்களுக்கும் ஐயங்களுக்கும் கலந்துரையாடல் மூலம் பல கோணங்களில் வழிகாட்டியும், ஆய்வுக்குரிய நூல்களை வழங்கி பேருதவி புரிந்த **முனைவர் ந.மனோகரன்** அவர்களுக்கும், **முனைவர் க.கதிரவன்** அவர்களுக்கும், நூலகப்பொறுப்பாளர் **முனைவர் த.சுஜாதா** அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சித்தூர் அரசுக் கல்லூரி தமிழ்த்துறை பேராசிரியப் பெருமக்கள் **முனைவர் க.சிவமணி, முனைவர் சல்மா மகஜபீன், முனைவர் வே.இரவி, முனைவர் அ.விஜயன், முனைவர் சு.பாத்திமா, முனைவர் உமா மகேஸ்வரி, முனைவர் ர.ரதி, முனைவர் வை.தர்மலிங்கம்,** ஆகியோருக்கும் என் மனமார்ந்த நன்றியினை உரித்தாக்குகின்றேன். ஆய்வு நேரத்தில் எனக்கு பலவாற்றானும் பேருதவிகள் புரிந்த ஆய்வு நண்பர்களுக்கும், கலந்துரையாடல் மூலம் தங்களுடைய அறிவுரைகளைப் பகிர்ந்து கொண்ட சித்ரா, சுதா ஆகியோருக்கும் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் வளர்ச்சியில் மட்டுமல்லாது வாழ்வின் அனைத்து நிலைகளிலும் ஊக்கமளித்து, செம்மைப்படுத்திய என் பெற்றோர் **தந்தை ராஜன்.ம, தாய் ராஜேஸ்வரி மற்றும் அக்கா உஷா.ரா, தம்பி மணிகண்டன்.ரா** ஆகியோருக்கும் என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

உமாதேவி. ரா

## சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | | |
|---|---|---|
| ப | - | பக்கம் |
| அகத் | - | அகத்திணையியல் |
| பக் | - | பக்கங்கள் |
| சிலப் | - | சிலப்பதிகாரம் |
| ஐங் | - | ஐங்குறுநூறு |
| மேலது | - | மேலே குறிப்பிடப்பட்டது |
| மொ.ஆ | | மொழி ஆக்கம் |

## பொருளடக்கம்


| இயல் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | 1 - 6 |
| இயல் ஒன்று | திணையியல் திறனாய்வு | 7 - 65 |
| இயல் இரண்டு | தேவதேவன் கவிதைகளில் முதற்பொருள் | 66 - 110 |
| இயல் மூன்று | தேவதேவன் கவிதைகளில் கருப்பொருள் | 111 - 160 |
| இயல் நான்கு | தேவதேவன் கவிதைகளில் உரிப்பொருள் | 161 - 217 |
| | முடிவுரை | 218 - 221 |
| | துணைநூற்பட்டியல் | 222 - 240 |
| | பின்னிணைப்புகள் | |

# முன்னுரை

# முன்னுரை

உலக மக்கள் யாவரும் தங்களின் உணர்வுகளை வெளிப்படுத்த மொழியை முக்கியக் கருவியாகப் பயன்படுத்துகின்றனர். குறிப்பாக, தமிழ் மொழியைப் பேசும் பழந்தமிழர் இயற்கையுடன் கொண்டுள்ள உறவுமுறைகளையும், அவர்களின் வாழ்வில் மேற்கொள்ள வேண்டிய நெறிமுறைகளையும் எடுத்துரைப்பதில் தொல்காப்பியம் முதன்மை நூலாகத் திகழ்கின்றது.

முதல், கரு, உரி என்னும் முப்பெரும் பிரிவுகளின் அடிப்படையில் திணைக்கோட்பாடு உருவாக்கப்பட்டுள்ளன. இம்முப்பொருள்களும் மனித வாழ்க்கைச் சூழலை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன.

நிலமும் அந்நிலத்தின் ஊடாகப் பயணிக்கும் பருவ நிலைகள் பொழுதுகளாகவும் வரையறுக்கப்பட்டுள்ளன. ஐந்திணைகளுக்கும் முறையே நிலங்களும், சிறுபொழுதுகளும், பெரும்பொழுதுகளும் உருவாக்கப்பட்டுள்ளன. அவை, கார், கூதிர், இளவேனில், முதுவேனில், முன்பனி, பின்பனி ஆகியவை பெரும்பொழுதுகளாகவும் வைகறை, விடியல், நண்பகல், ஏற்பாடு, மாலை, யாமம் என்பன சிறுபொழுதுகளாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

உலக இலக்கியச் சூழலில் மேலை நாட்டுத்திறனாய்வுக் கோட்பாடுகளான நவீனத்துவம், பின் நவீனத்துவம், அமைப்பியல், பின் அமைப்பியல், காலனியம், பின் காலனியம் போன்ற திறனாய்வுக் கொள்கைகள் சார்ந்த படைப்புக்கள் பெருகி வரும் சூழலில் தமிழர்களுக்கே உரித்தான பழந்தமிழ் இலக்கியக் கோட்பாட்டினுடைய திணை மரபாக்கங்களை விரிவுப்படுத்துவதும், அவற்றினுடைய வளர்ச்சிப் படிநிலைகளை

நவீனகால இலக்கியங்களில் கட்டமைப்பதும், பயன்பாட்டுத்தளத்தில் கொண்டு வருவதும் இன்றியமையாததாக விளங்குகின்றன.

தமிழில் மட்டுமின்றி மலையாளத்திலும் திணையியல் திறனாய்வு அணுகுமுறைகள் பயன்பாட்டில் நிலவி வருகின்றன. ஐய்யப்பப்பணிக்கர் திணையினுடைய விரிவாக்கத்தினையும் அவைச் சார்ந்த கருத்துருவாக்கங்களையும் விரிவுப்படுத்துவதில் முக்கியப் பங்கு வகித்தவர்.

திணையியல் திறனாய்வுக் கண்ணோட்டத்தை அணுகுவதில் மலையாள எழுத்தாளர்களுடைய பணியும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றன. நவீன கவிதையுலகில் மனிதச் சமூகத்திற்கு இயற்கையினுடைய காட்சிப்படிமங்களை தன்னுடைய எழுத்துருவாக்கத்தின் மூலமாக வெளிப்படுத்துவதில் கவிஞர் தேவதேவன் நவீனத்துவப் படைப்பாளர்களில் ஒருவராகத் திகழ்கின்றார்.

**ஆய்வுத் தலைப்பு**

**"தேவதேவன் கவிதைகள் – திணையியல் திறனாய்வு"** என்பதே ஆய்வின் தலைப்பாக அமைகின்றது.

**ஆய்வு நோக்கம்**

கடந்த ஐம்பது ஆண்டுகாலமாக நவீன கவிதைத்தடத்தில் இயங்கிவரும் தேவதேவனின் கவிதைத் தொகுப்புகளில் திணையியல் – திறனாய்வுக் கோட்பாட்டின் ஏற்பமைவினைக் கண்டறிந்து ஆராய்வது இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வின் கருதுகோள்**

கவிஞர் தேவதேவன் கவிதைகளில் திணையியல் கோட்பாட்டினுடைய தாக்கம் எவ்வாறு அமைந்திருக்கிறது என்பதைக் காண்பதே இவ்வாய்வின் கருதுகோளாகும்.

**ஆய்வு எல்லை**

கவிஞர் தேவதேவனின் முதற் கவிதைத் தொகுப்பான ‘குளித்துக்கரையேறாத கோபியர்கள்’ (1976) முதல் ’அமுதம் மாத்திரமே வெளிப்பட்டது’ (2016) வரையிலான கவிதைகளை ஆய்வெல்லையாகக் கொண்டு, அகத்திணை மரபுப் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**ஆய்வு மூலங்கள்**

ஆய்வுக்குரிய சான்றுகளை முதன்மை, துணைமை என இருவகையில் வரையறுக்கப்பட்டுள்ளன.

**முதன்மைச் சான்றுகள்**

கவிஞர் தேவதேவனின் முதற் கவிதைத் தொகுப்பான ‘குளித்துக்கரையேறாத கோபியர்கள்’ (1976) முதல் ’அமுதம் மாத்திரமே வெளிப்பட்டது’ (2016) வரையிலான கவிதைகள் முதன்மை ஆய்வுச் சான்றாதாரங்களாக விளங்குகின்றன.

**துணைமைச் சான்றுகள்**

திணைக்கோட்பாடு பற்றிய திறனாய்வுச் சார்ந்த நூற்கள், இவ்வாய்வுப் பொருண்மை மீது நிகழ்த்தப்பட்டுள்ள ஆய்வேடுகள், நூற்கள், இதழ்களில் வெளிவந்தக் கட்டுரைகள், தேவதேவனின் நேர்காணல்கள், முதலியன துணைமைச் சான்றாதாரங்களாக விளங்குகின்றன.

**ஆய்வு முன்னோடிகள்**

இவ் ஆய்வுப் பொருண்மையை ஒட்டி இதுகாறும் நிகழ்த்தப்பட்டுள்ள ஆய்வுகள் இவ் ஆய்வின் ஆய்வுக்களங்களாக அமைகின்றன.

1. **இந்திய இலக்கியக் கோட்பாடுகள் சூழல் – பொருத்தம்** – கெ.ஐய்யப்பப்பணிக்கர்
2. **ஒளியிலானது தேவதேவன் படைப்புலகம்** – ஜெயமோகன்.
3. **நில அமைப்பும் தமிழ்க்கவிதையும்** – தனிநாயக அடிகள்.
4. **தேவதேவன் கவிதைகள் பின் நவீனத்துவ வாசிப்பு** – ந.மனோகரன், எம்.ஃபில்பட்ட ஆய்வேடு, பாரதியார் பல்கலைக்கழகம்.

5. **திணைக்கோட்பாட்டு மரபும் மருதநிலப் புதினங்களும்** – கோ.ப.குணவதி, முனைவர்ப்பட்ட ஆய்வேடு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

**ஆய்வு அணுகுமுறைகள்**

1. பகுப்பாய்வு,
2. ஒப்பாய்வு,
3. பயன்பாட்டுத் திறனாய்வு,
4. விளக்கமுறைத் திறனாய்வு

ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு அமைகின்றன.

**ஆய்வேட்டின் கட்டமைப்பு**

**'தேவதேவன் கவிதைகள் – திணையியல் திறனாய்வு'** என்னும் தலைப்பில் அமைந்த இவ்வாய்வு முன்னுரை, முடிவுரை நீங்கலாக நான்கு இயல்களைக் கொண்டு அமைந்துள்ளது.

இயல் 1. திணையியல் திறனாய்வு

இயல் 2. தேவதேவன் கவிதைகளில் முதற்பொருள்

இயல் 3. தேவதேவன் கவிதைகளில் கருப்பொருள்

இயல் 4. தேவதேவன் கவிதைகளில் உரிப்பொருள்

**இயல் ஒன்று – திணையியல் திறனாய்வு**

அகத்திணை, சங்ககாலத் திணைச்சமுதாயம், அகமும்புறமும், திணை - விளக்கம், அன்பின் ஐந்திணை, அகத்திணை மரபுகள், முப்பொருள் பாகுபாடு, முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள், திணைப்பகுப்பு முறை, குறிஞ்சித்திணை, முல்லைத்திணை, நெய்தல் திணை, மருதத்திணை, பாலைத்திணை, திணை வரிசை, களவும் கற்பும், திணை மயக்கம், இலக்கியத் திறனாய்வு, திணைநிலை வளர்ச்சிகள், இயற்கையும் மனிதனும், தமிழ் இலக்கியங்களில் இயற்கை, சுற்றுச்சூழலியல் வரலாறு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் அமைப்பு, சுற்றுச்சூழலியல் விமர்சனம், சூழலியலின் பின்விளைவுகள்,

சுற்றுச்சூழலியல் கல்வி, ஒய்கோபொயடிக்ஸ், ஒய்கோபொயடிக்ஸும் திணையும், திணைச்சுற்றுச்சூழலியல், போன்றவைகள் ஆராயப்பட்டுள்ளன.

**இயல் இரண்டு – தேவதேவன் கவிதைகளில் முதற்பொருள்**

குறிஞ்சித்திணையின் நிலமும் பொழுதும், முல்லைத்திணையின் நிலமும் பொழுதும், நெய்தல் திணையின் நிலமும் பொழுதும், மருதத்திணையின் நிலம், பாலைத்திணையின் நிலமும் பொழுதும் ஆகியவைகள் ஆராயப்பட்டுள்ளன. இவ்வாறாக, ஒவ்வொரு திணைக்குமுரிய முதற்பொருளான நிலமும் பொழுதும் தேவதேவனுடைய கவிதைகளில் எடுத்தாளப்பட்டுள்ளன என்பதை இவ்வியல் எடுத்துரைக்கின்றன.

**இயல் மூன்று – தேவதேவன் கவிதைகளில் கருப்பொருள்**

குறிஞ்சித்திணை, முல்லைத்திணை, நெய்தல் திணை, மருதத்திணை, பாலைத்திணை என ஒவ்வொரு திணைக்கும் உரிய சில கருப்பொருட்கள் தேவதேவனுடைய கவிதைகளில் இடம்பெற்றுள்ள விதம் குறித்து ஆராயப்பட்டுள்ளன.

**இயல் நான்கு – தேவதேவன் கவிதைகளில் உரிப்பொருள்**

குறிஞ்சித்திணை, முல்லைத்திணை, நெய்தல் திணை, மருதத்திணை, பாலைத்திணை என்னும் ஐந்திணைகளுக்கும் உரிய ஒழுக்க நெறிகளை தேவதேவனுடைய கவிதைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளன. பழந்தமிழர்களுடைய காதல் பற்றிய பொருண்மைகள் தேவதேவனுடைய கவிதையில் இடம்பெற்றுள்ள பாங்கினை எடுத்துரைக்கும் விதமாக இவ்வியல் அமைந்துள்ளன.

ஒவ்வொரு இயலிலும் கண்டறியப்பட்ட ஆய்வு முடிவுகள் அதற்குரிய இயல்களின் இறுதியில் அமையும் தொகுப்புரைகளில் இடம்பெற்றுள்ளன. மேலும், முடிவுரையும், ஆய்வுக்கு துணை நின்ற நூற்கள் அகரவரிசைப்படுத்தப்பட்டு, கவிஞர் தேவதேவனுடைய கவிதைத் தொகுதிகளை முதன்மை நூல்களாகவும், ஆய்வுக்கு பயன்படுத்திய திறனாய்வு நூற்கள், இதழ்கள், அகராதிகள், இணையதளங்கள் ஆகியவை துணை நூற்பட்டியலிலும் வரையறுக்கப்பட்டுள்ளன.

**பின்னிணைப்பு**

கவிஞர் தேவதேவனுடன் நடந்த நேர்காணல், புகைப்படமும் பின்னிணைப்பில் இடம்பெற்றுள்ளன.

இயல் : 1

# திணையியல் திறனாய்வு

# இயல் : 1

## திணையியல் திறனாய்வு

தமிழரின் வாழ்வியல் ஒழுகலாறுகளைப் பற்றி எடுத்துரைக்கும் திணையின் கருத்துருவாக்கங்களை தொல்காப்பியர் முதல், கரு, உரி என முப்பொருள்களாக வகைப்படுத்தியுள்ளார். மனிதர்கள் இயற்கையோடு ஒன்றிணைந்து வாழ்ந்தவர்கள். தங்களுடைய வாழ்வாதாரத்திற்காக ஒரு நிலப்பகுதியிலிருந்து மற்றொரு நிலப்பகுதிக்கு குடிப்பெயர்ந்தனர். ஐந்து வகையான திணையாக்கங்களை உலகத்தில் உள்ள புவிப்பிரதேசங்களோடு ஆராயும் போது, அவற்றிற்கேயுரிய முப்பொருள்கள் தோன்றுகின்றன. இவ்வாறாக, திணைகள் ஒவ்வொன்றும் மனிதர்களின் வாழ்வில் புதியதோர் நிலப்பகுதிகளையும், நாகரிகம், பண்பாட்டு அமைவுகள் தோன்றவும் வழிவகைச் செய்தன.

**அகத்திணை**

மனித வாழ்க்கைக்குத் தேவையான ஒழுக்க நெறிகளைப் பற்றி தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் எடுத்துரைக்கின்றார். “பொருளதிகாரம் வெறும் மொழிக்கும் மொழியாலாகிய இலக்கியத்திற்கு மட்டும் இலக்கணம் வகுக்கவில்லை:- அம்மொழியைப் பேசும் மக்களுக்கும் அவர்கள் வாழ்க்கை முறைக்குக் கூட இலக்கணம் வகுத்தது”. (வசந்தாள்.த, தமிழிலக்கியத்தில் அகப்பொருள் மரபுகள், ப.7) தமிழ் மொழியைக் கற்கும் மக்களுக்கு தேவையான வாழ்வியல் நெறிமுறைகளையும், வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய கடமைகளையும் தொல்காப்பியப் பொருளதிகாரம் புலப்படுத்துவதை த.வசந்தாள் குறிப்பிடுகிறார்.

தொல்காப்பியர் முதல் இரு அதிகாரங்களில் மொழிச்சிறப்பை விளக்க, மூன்றாவது அதிகாரமான பொருளதிகாரத்தில் மனிதர்களின் வாழ்வியல் கூறுகளை எடுத்துரைக்கின்றார். எழுத்தையும், சொல்லையும் கருவியாகக் கொண்டு, தொல்காப்பியர் பொருளதிகாரத்தை அமைத்ததாக வெள்ளைவாரணர் உரைத்துள்ளார். "இவ்வுலகத்து வாழ்வாங்கு வாழும் வாழ்க்கை முறையினை வகுத்துரைப்பது பொருளிலக்கணம்". (விஜயலட்சுமி.த, தமிழ் இலக்கியக்கோட்பாடு, ப.18) த.விஜயலட்சுமி தன் கருத்தை நிறுவுகிறார்.

மக்களின் வாழ்வியலைக் கூறும் பொருளதிகாரம் உலக மக்களுக்கெல்லாம் பொது நூலாகும் என ப.மருதநாயகம் கூறுகிறார். மக்களின் வாழ்வியல் பற்றிய கருத்துக்களையும், தமிழ்ச்செய்யுளுக்குரிய பா வகைகளையும் தொல்காப்பியம் பதிவு செய்துள்ளன. திணையை 'தமிழ் காவ்யமீமாம்சம்' என்று 1949 ஆம் ஆண்டு எஸ்.சுப்ரமணியசாஸ்திரியின் கூற்றை ஸ்ரீதரன் அஞ்சுமூர்த்தி எடுத்துரைக்கின்றார். தொல்காப்பியர் திணையை,

**"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்**

**முற்படக் கிளந்த எழுதிணை என்ப" (947)**

(மாணிக்கவாசகன். ஞா கவிஞர்கோ, தொல்காப்பியம் மூலமும் விளக்க உரையும், ப.346) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை என்று திணையை ஏழு வகைப் படுத்தியுள்ளார். தொல்காப்பியம் முதல், கரு, உரி ஆகிய முப்பெரும் வகைமைக்குள், நிலமும் பொழுதும் முதற்பொருளையும், அந்நிலத்தில் வாழும் உயிருள்ள, உயிரற்றவைகளை கருப்பொருள் எனவும், ஒவ்வொரு திணைக்கும் முறையே ஒவ்வொரு ஒழுக்கங்களை உரிப்பொருளாகவும் வகைப்படுத்தியுள்ளது.

**“புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல்**

**ஊடல் அவற்றின் நிமித்தம் என்றிவை –**

**தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே”          (அகத்.16)**

(இளம்பூரணர், தொல்காப்பியம் பொருளதிகாரம் (அகத்திணையியல்-புறத்திணையியல்), ப.2) குறிஞ்சிக்குப் புணர்தலும், பாலைக்குப் பிரிதலும், முல்லைக்கு இருத்தலும், நெய்தலுக்கு இரங்கலும், மருதத்திற்கு ஊடலுமாகும். இவ்வாறு, புவியில் ஏற்படும் நில அமைப்புக்களை ஐந்து வகை நில வகைமைக்குள் தொல்காப்பியர் கட்டமைத்துள்ளார். தொல்காப்பியர் “பெருமையும் உரனும் ஆடூஉ மேன” தலைவனுக்கும், “அச்சமும் நாணும் மடனும்” தலைவிக்குரிய பண்பு நலன்களையும் எடுத்துரைக்கின்றார்.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தினை பின்பற்றி பல வகையான இலக்கண நூல்களும் தோன்றின. கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் இறையனார் அகப்பொருளும், கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் நம்பியகப்பொருளும், அதன் பிறகு, மாறனகப்பொருள், களவியல் காரிகை, தமிழ்நெறி விளக்கம் போன்ற இலக்கண நூற்கள் தொல்காப்பியரின் அகப்பொருள் கருத்துக்களை பின்பற்றி எழுந்த நூல்களாகும்.

முத்துவீரப்பரால் இயற்றப்பட்ட முத்துவீரியம் ஐந்திலக்கண நூலாகும். இதன் காலம் கி.பி. 19ஆம் நூற்றாண்டு. வீரசோழியமும் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து அதிகாரங்களைக் கொண்டமைந்துள்ளன. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களான ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கார் நாற்பது, கைந்நிலை ஆகிய நூற்கள் அகத்திணைப் பற்றிய கருத்தாடல்களைப் பதிவு செய்துள்ளன.

**சங்ககாலத் திணைச்சமுதாயம்**

மனிதர்கள் தம் குழுவோடு ஒற்றுமையாக வாழ்ந்தக் கூட்டத்தினை சமூகம் என்பர். அவர்கள், பண்பாடு, நாகரிகம், போன்ற பன்முகத்தன்மையோடு ஒன்றிணைந்து வாழ்ந்தனர். "ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பிற்குள் வாழ்ந்து வரும் ஒரு மக்கள் கூட்டம், அந்நிலத்தை ஒட்டிய பொது நினைவுகளைக் கொண்டு அமையப் பெற்றிருப்பதையே சமூகம் என்கிறோம்". (ஜமாலன், மொழியும் நிலமும் (கட்டுரைத்தொகுப்பு) ப.144) என்று சமூக உருவாக்கத்தின் தன்மையை ஜமாலன் விளக்குகிறார்.

தமிழ் நூல்களில் தொன்மையான இலக்கியமும், மனித உணர்வுகளையும், இயற்கைச் சூழல்களையும் விளக்குவதில் சங்க இலக்கியம் முன்னிலை வகிக்கின்றன. சங்ககாலத் திணை மக்கள் வேட்டையாடி உணவு தேடுவதிலும், தங்களுடைய பொருளாதார மேம்பாட்டு வளர்ச்சிக்கு உறுதுணையான வேளாண் துறையிலும், உணவு உற்பத்திக்கும் வழிவகை செய்தனர். அதற்கு, நிலம் அடிப்படைக் களமாய் விளங்கியது. பழந்தமிழர்களுடைய பழக்கவழக்கங்களையும் நாகரிக, பண்பாட்டை புலப்படுத்துவதற்கு திணைச் சமூகம் முதன்மை ஆதாரங்களாக செயல்பட்டன.

பெ.மாதையன் "மனிதன் பண்டு கடந்து வந்த நாகரிகத்தின் படிக்கட்டுகள் ஐந்து. அவை, வேட்டையாடுதல், நாடோடி வாழ்க்கை, கால்நடை மேய்த்தல், கடற்மேற்சேறல், தொழில் மயக்கம் கலந்த உழவுத்தொழில் மேற்கோடல்". (மாதையன்.பெ, சங்க இலக்கியத்தில் குடும்பம், ப.57) என்று ஐந்து வகை நில அமைப்புக்களைப் பற்றி அடையாளப்படுத்துகிறார்.

ஐந்து வகை நிலங்களோடு அமைந்த  வாழ்வியல் நடைமுறைகளைப் பற்றிக் கூறுவது சங்ககாலத் திணைச்சமுதாயமாகும். இயற்கையைப் போற்றியும், அவற்றொடு ஒவ்வொரு திணைக்கும் உரிய வாழ்வியல் ஒழுகலாறுகளையும், பண்பாடுகளையும் பின்பற்றி வாழ்ந்தவர்கள் சங்க கால மக்கள் என்பது புலனாகிறது.

“சங்கத்தமிழில் சமுதாயம் என்கிற சொல் ‘மன்பதை’ – என்றே வழங்கப்பட்டது. மன்பதை நிலம், பல குடிகளின் தொகுப்பு, அமைப்பு என்பதாகப் பல பொருள் கொள்ள முடியும். அவ்வடிப்படையிலேயே  ஐந்திணை வாழ்வை அடிப்படையாகக் கொண்ட பல குடிகளின் ஓர் அமைப்பாகத் தமிழ்ச்சமூக அமைப்பு இருந்துள்ளது”. (ஜமாலன், மொழியும் நிலமும் (கட்டுரைத்தொகுப்பு), ப.159) ஆதிகாலத்தில் பலகுடிகளின் அமைப்பு முறைகளைக் கொண்ட சமுதாயமாக திணைவாழ் மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை ஜமாலனின் கூற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

சங்க இலக்கியத்திற்கு பிறகு தோன்றிய, பக்தி இலக்கியங்கள், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள் அகப்பொருளின் தனித்தன்மைகளை விரிவாக்கப்படுத்தியது எனலாம்.

**அகமும் புறமும்**

காதலையும், வீரத்தையும் போற்றியவர்கள் சங்க காலத் தமிழர்கள். அகம், புறம், புறனாய் மூன்றின் கூட்டமைப்பில் திணைக்கோட்பாடு உருவாகின்றன. அகத்திணையும், புறத்திணையும் ஒன்றோடொன்று உறவு நிலையுடையது. அகத்திணைக்கூறுகளில் புறத்திணை அமைவுகள் அமையப்பெறலாம். அதற்கென வரன்முறைகள் வகுக்கப்படவில்லை. அகமும் புறமும் கலந்து வருவது இயல்புடையதாகும். இவ்விரு அமைவுகளும் ஒன்றினை ஒன்று சார்ந்து வருவதை, “அகத்தையும் புறத்தையும் இணைத்துப்பாடுவதுதான் அன்றைய மரபாக இருந்தது,

அகக்கூறும் இருக்க வேண்டும் புறக்கூறும் இருக்க வேண்டும் என்பது அன்றைய வளர்நிலைப் போக்காக இருந்திருக்க வேண்டும்." (ஜவகர்.க, திணைக்கோட்பாடும் தமிழ்க்கவிதையியலும், ப.29) எனக்கூறலாம்.

"மனித நடத்தையான பாலியம் – மறச்செயல் என்ற கருத்தியலமைப்பையும் இணைந்த ஓர் இலக்கியக் கோட்பாடே திணைக்கோட்பாடு எனலாம்". (சீனிச்சாமி.துரை, திணைக்கோட்பாடு, ப.30) காதல் நிகழ்வுகளின் ஒழுக்கம் அகமெனின், போர்க்காரணமாக உருவாகும் ஒழுக்கங்கள் புறமாகத் திகழ்ந்தது.

பழந்தமிழர்களுடைய வாழ்வியல் முறையானது "காதலையும், போரையும் குறித்த செய்திகள் ஐவகை பூகோளரீதியான நிலப்பிரிவுகளோடு தொடர்புடையன. குறிப்பிட்ட காதல் அல்லது போர் நடவடிக்கைகள் ஒரு குறிப்பிட்ட நிலப் பகுதியின் இயல்பாகச் சித்தரிக்கின்றன". (கார்த்திகேசு சிவத்தம்பி, பண்டைத் தமிழ்ச் சமூகம் – வரலாற்றுப் புரிதலை நோக்கி, ப.2) காதல், வீரம் எனும் இருவகைத் தன்மையில் உருவாக்கம் பெற்றன.

அகமும் புறமும் நாணயத்தின் இரு பக்கங்களைப்போல, மனித வாழ்வியலில் ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபட்டத்தன்மையுடைதாயினும், பல்வேறு காரணங்களினால், தமிழ் மரபில் இணைந்துக் காணப்படுகின்றன. ஆங்கிலத்தில் noumenon, phenomenon ஆகியவை அகப்புற பெயர்களில் வழங்குவதாக ப.மருதநாயகம் குறிப்பிடுகிறார். இவையிரண்டுக்கும் இடையில் சில ஒற்றுமைகள் காணப்படுவதை ப. மருதநாயகம் அட்டவணையில் விளக்கம் தருகிறார்.

| அகம் | உரிப்பொருள் | புறம் | துறை | பொதுக்கூறுகள் |
|---|---|---|---|---|
| 1. குறிஞ்சி | முதல்கூட்டம் | வெட்சி | நிரை கவர்தல், போருக்கு முன் நிகழ்வு | இரவில் நிகழ்தல், மலைப்பகுதி, கள்ளத்தனம் |
| 2. முல்லை | இருத்தல் | வஞ்சி | போருக்கு ஆயத்தமாதல், படையெடுப்பு | காடு, மழைக்காலம், அன்புடை யாரிடமிருந்து பிரிந்திருத்தல் |
| 3. மருதம் | ஊடல் | உழிஞை | முற்றுகை | வளமான நிலம், ஊர் விடியல், உள் நுழைய அனுமதி மறுத்தல் |
| 4. நெய்தல் | இரங்கல் | தும்பை | போர் | கடற்கரை, போர் நடக்கும் திறந்தவெளி, எல்லாப் பருவங்களும், மாலை , துயரம் |
| 5. பாலை | பிரிதல் (உடன்போக்கு) கல்வி, செல்வம், புகழ் தேடிப்பிரிதல் | வாகை | அருஞ்செயல்கள் வெற்றி | எல்லா நிலங்களும், புகழ் |
| 6. பெருந்திணை | பொருந்தாக்காமம் | காஞ்சி | மேம்பாடு கருதிப்போர், குறை கூறாமல் | எல்லா நிலங்களும், போராட்டம், துன்பத்தைத் தாங்கல் |
| 7. கைக்கிளை | ஒருதலைக்காமம் | பாடாண் | இரங்கற்பா, வீரரைப்பாரட்டல், பரிசில் கேட்டல், சாடுதல் | எல்லா நிலங்களும், ஒரு வழி உறவு |

(மருதநாயகம்.ப, ஒப்பில் தொல்காப்பியம், ப. 214) எனவே, அகமும் புறமும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டதன்று, என்றும், இரு பிரிவுகளும் ஏழு வகைப் பகுப்புக்குள் அடங்கும் என்பதை அட்டவணை வழி விளக்குகின்றார்.

**திணை - விளக்கம்**

'ஒழுக்கவிதி', 'பொதுக்கருத்து', அல்லது 'உள்ளடக்கம்' திணைக்கான பொருள்களை நச்சினார்க்கினியரும், இளம்பூரணரும் முறையே விளக்கம் தருகின்றனர். "திணை என்பது 'பண்பை' மையப்படுத்திச் செயல்படுவதாகும்". (பிரகாஷ்.வெ, திணை உணர்வும் பொருளும், ப.20) திணை பண்போடு ஒப்புமையுடையதாக பிரகாஷ்.வெ விளக்குகின்றார். முனைவர் வெ.மு.ஷாஜகான் கனி "திணை என்ற சொல் ' நாகரீகம்' என்ற பொருளைத் தருவதாகக் கொள்வது சாலவும் பொருந்தும்". (ஷாஜகான் கனி வெ.மு முனைவர், திணை வரலாறு, ப.34) என்கிறார்.

திணை என்பது நிலம், இடம், பகுதி, மனை, வீடு, இனம், குலம், குடும்பம், நடத்தை, குடி, நன்னெறி, இல், இருப்பிடம், பூமி, திணை, நாகரிகம் எனும் பல பொருள்களை உள்ளடக்கியதாகும். குலம், குடி, ஒழுக்கம், பதி ஆகியன சங்க இலக்கியம் திணைக்கு விளக்கம் அளிக்கின்றன. இருப்பினும், திணை சொல் ஒட்டுமொத்தமாக 'குடும்ப' அமைப்பினைச் சுட்டுகின்றன. "திணை என்பதற்கு விளக்கம் தரும் ச.பாலசுந்தரம் மக்கள் ஒழுகலாறு அதற்கு அடிப்படையான முதல் கரு உரி இவற்றின் ஒட்டுமொத்தமே, அவற்றின் குறியீடே திணை என்கிறார்". (மாதையன்.பெ, அகத்திணைக் கோட்பாடும் சங்க அகக்கவிதை மரபும், ப.12)

பழந்தமிழர்களுடைய வாழ்வியல் கோட்பாடுகளைக் குறிப்பிடும் “சங்க இலக்கியத்தில் திணை எனும் சொல் குடி எனும் பொருளில் அதிக அளவில் ஆளப்பட்டுள்ளது”. (மாதையன்.பெ, அகத்திணைக் கோட்பாடும் சங்க அகக்கவிதை மரபும், ப.12) எனலாம்.

திணை என்னும் சொல்லுக்கு இணையாக தொல்காப்பியம் எவ்விதமானப் பொருள்களையும் குறிப்பிடப்படவில்லை. ஆனால், உரையாசிரியர்கள் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் திணைக்கு பொதுக்கருத்து, உள்ளடக்கம், ஒழுக்கவிதி என்னும் சொற்றொடர்களைத் தந்துள்ளனர். திணை வெவ்வேறு வகையான பொருள்களைத் தரினும், மக்களுடைய வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிப்பற்றியதாக அமைந்துள்ளன.

மம்மது.நா “நிலம், உலகம், கணக்கர், வீடு, இடம் (காணி), திண்ணை, மக்கள், குடி, குலம், தலைமக்கட் பெயர், அகன் ஐந்து (ஐந்திணை), ஒழுக்கம், பகுப்பு, வகுப்பு, பகுதி, என்றெல்லாம் பல்பொருள் விரிவு கொண்டது திணை என்ற சொல்”. (மம்மது.நா, தமிழர் திணை, ப.18) என்று குறிப்பிடுகின்றார்.

“திணை என்ற சொல்லின் மூல ஒலி திண்; திண் ஒரு சுட்டு (சுட்டுச்சொல்)”. (மம்மது.நா, தமிழர் திணை, ப.17) திண் என்பதிலிருந்து பெறப்பெட்டது திணைச் சொற்றொடராகும்.

**அன்பின் ஐந்திணை**

சங்ககாலத் தமிழ் மக்களின் வாழ்வு சிறக்க குடும்பம் காரணமாக அமைந்தது. ஆணும், பெண்ணும் இணைந்து வாழ்ந்த இல்வாழ்வியலுக்கு அன்பு முக்கியப் பங்கு வகித்தது. இத்தகைய, அன்பு வலுப்பெறுவதற்கும், வளர்வதற்கும் அன்பின் ஐந்திணை தூண்டுதலாக அமைந்ததை சங்க இலக்கிய நூற்கள் எடுத்துக்காட்டுகின்றன.

அகத்திணை ஏழு என்று வரையறுக்கப்பட்டிருப்பினும், ‘அன்பொடு புணர்ந்த ஐந்திணை’ என்றும், ‘மக்கள் நுதலிய அகன் ஐந்திணை எனவும் குறிப்பிடப்படுவது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று தொல்காப்பியம் கூறுகிறது. ஆனால், கைக்கிளை, பெருந்திணைக்கு உரிய நிலங்களை தொல்காப்பியம் குறிப்பிடப்படவில்லை. எண் வகை மணங்களில் உரைக்கப்படும் ‘காந்தர்வ’ திருமண முறை அன்புடைக்காமத்தை ஒத்திருப்பதாக நம்பியகப்பொருள் குறிப்பிடுகிறது.

ஐந்து வகை நிலங்களிலும் வாழ்ந்த தலைவன், தலைவியிடையே ஏற்பட்ட மன உணர்வுகளை காலத்தின் அடிப்படையில் சிறுபொழுது, பெரும்பொழுதாக வகைப்படுத்துவர். நிலமும், அந்நிலத்தில் வாழும் மக்களுடைய மன உணர்வுகளின் பொருண்மையில் ஐந்திணைகள் அமைந்தன. நக்கீரரும் “குடத்துள் விளக்கும், தடற்றுள் வாளும் போல” ( நக்கீரனார், களவியல் என்ற இறையனாரகப்பொருள் விளக்கம், ப.15) அன்பின் ஐந்திணைக்கு விளக்கமளிக்கிறார்.

ஆண், பெண் இருவரிடையே இயற்கையாக உள்ளத்தில் தோன்றும் காதல் உணர்வுகள் இவ்வைந்திணைகள். உயிருள்ளவை, உயிரற்றவை, ஆறு, குளம், மலை, காடு, வயல், மனிதர்கள் அனைத்தும் இயற்கையைச் சுற்றி பரிணமித்துக்கொண்டிருக்கும் பொருள்கள் ஒவ்வொன்றும் திணையுடன் ஒன்றிணைந்துக் காணப்படுகின்றன.

**அகத்திணை மரபுகள்**

ஆணுக்கும் பெண்ணுக்கும் உரிய ஒழுக்க அமைவினையும், வாழ்க்கைக்குத் தேவையான கட்டுக்கோப்பினையும், இருவரும் காதல் கொண்டு, ஊரார் முன் திருமணம் புரிந்துக்கொண்டு உலகியல் நடப்பிற்குரிய ஒழுக்கத்தோடு வாழ்வது அகப்பொருளாகும். இவ்வகத்திணையின் பொருளை, “அகம் என்பது அடங்கியது, இடம், உள்ளிடம், மனம்

உள்ளிட்ட பல பொருள் தரும் ஒரு சொல்லாகும்". (பாலசுப்பிரமணியன்.சி, அகப்பொருள் மரபும் திருக்குறளும், ப.1) சி.பாலசுப்பிரமணியன் அகத்திணையை விளக்கியுள்ளார்.

மனித மனதில் தோன்றும் உணர்வுகளை எடுத்துரைக்கும் தொல்காப்பியரின் அகத்திணை மரபுகள்,

1) ஆண், பெண் இருவரிடையே தோன்றும் காதல் ஒழுகலாறுகளைப் பற்றியதாகும்.
2) ஆண், பெண் இருவரிடையே தோன்றும் காதல் உணர்வுகள் ஒவ்வொரு திணைக்கென குறிப்பிட்டு அடையாளப்படுத்தப்படுவது.
3) இவ்வாறு, தோன்றும் காதல் ஒழுகலாறுகள் காலம், நேரம், இடம், பொருள்களின் அடிப்படையில் காலவரையறை நிர்ணயிக்கப்பட்டு, அவை முறையே முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள்களாக மூவகையில் அமைக்கப்பட்டன.

கார்த்திகேசு சிவத்தம்பி "சங்க இலக்கியம் திணை மரபு என்பது தமிழகத்தின் புவியியற் பிரதேசங்களின் அல்லது பூப்பொளதிகப் பிரதேசங்களின் அடிப்படையில் ஆண் – பெண் பாலார் இடையே நிலவிய காதல் உறவின் வெவ்வேறு நிலைகளை முக்கியப்படுத்திக் கூறுகின்றது. இது அகம் எனப்பட்டது". (கார்த்திகேசு சிவத்தம்பி, பண்டைத் தமிழ்ச்சமூகம் வரலாற்றுப் புரிதலை நோக்கி, ப.57) என்று விளக்கம் தருகிறார்.

அகத்திணையின் வளர்ச்சி நிலைகளுக்கு ஐந்திணைகள் முக்கியப் பங்கு வகித்தன. தொல்காப்பியர் பொருளதிகாரத்திற்கு வகுத்த கூற்றுக்களாலும், சங்க காலத்தில் வாழ்ந்த மக்களின் கலாச்சார, பண்பாட்டு விதிகளாலும் அகத்திணையினை அடையாளங் காண முடிகிறது. அன்பின் ஐந்திணைப் பற்றிக் கூறும் சங்க இலக்கியப் பாடல்களில் தலைவன், தலைவியினுடைய பெயர்களை குறிப்பிடும் மரபு இல்லை.

அன்பின் ஐந்திணைகளும் தமிழருக்கே உரித்தான காதல் சார்ந்து நிகழும் ஒழுக்கங்களை நிலக்கூறுகளோடு ஒப்புமைப்படுத்தியுள்ளமை அகத்திணையின் வளர்ச்சி நிலைகளைச் சுட்டிக்காட்டுகின்றன.

**முப்பொருள் பாகுபாடு**

அகத்திணை முதல், கரு, உரி எனும் முப்பெரும் பிரிவுகளை உடையன. அவற்றுள், முதற்பொருள் என்பது நிலமும் பொழுதுமாகும். உயிருள்ள, உயிரற்றப் பதினான்கு வகைப்பொருட்கள் கருப்பொருளாகும். ஐந்து வகை நில ஒழுக்கங்களுக்கும் உரிப்பொருள் அமைவுக்கு உரித்தானதாகும். மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் போன்று முப்பொருள்களும் மனித வாழ்க்கையின் அடிப்படைக்களமாக விளங்குவதை,

**“முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே**
**நுவலுங் காலை முறை சிறந்தனவே**
**பாடலுட் பயின்றவை நாடுங்காலை”**

(பழனிவேலு.கே, தொல்காப்பியத்திணைக்கோட்பாடு : திறனாய்வியல் நோக்கு, (பொருள்.3; பக்.60,61) தொல்காப்பியம் சுட்டிக்காட்டுகிறது.

ஆங்கிலத்தில் முதற்பொருளை promordial material எனவும், கருப்பொருளை seminal material எனவும், உரிப்பொருளை specific material எனவும் வழங்கப்படுகின்றன. முப்பொருள்களும் ஒன்றின்றி மற்றொன்று அமையப்பெறுவதில்லை என்பதை,

- ”மனித உணர்வுகளை வெளிப்படுத்துதல் (உரிப்பொருள்)
- உணர்வுகளைச் சொல்ல குறியீடுகளைப் பயன்படுத்துதல் (கருப்பொருள்)

- உணர்வுகளையும் அதுசார்ந்த குறியீடுகளையும் இடம் மற்றும் காலத்தோடு இணைத்தல் (முதல்பொருள்)". (பிரகாஷ்.வெ, திணை உணர்வும் பொருளும், ப.89) அறிய முடிகிறது. மனித மனங்களில் ஏற்படும் உணர்வுகளையும், அவ்வுணர்வுகளை வெளிப்படுத்தும் கருவிகளையும், அக்கருவிகள் எவ்வகைச் சூழலில் காலநிலைகளோடு இணைந்துள்ளதையும் முப்பொருள்களும் வெளிப்படுத்துகின்றன.

**முதற்பொருள்**

ஆங்கிலத்தில் நிலத்தை 'Space', பொழுதை 'Time' எனவும் வழங்குவர். நிலமும் பொழுதும் முதற்பொருளின் பிரிவுகளாகும். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை நிலங்கள் ஐந்துக்கும் வெவ்வேறு வகையான நிலப்பிரிவுகளும், பொழுதுகளும் உள்ளன. பருவ காலங்களில் ஐந்து நிலப்பரப்புகளிலும் ஏற்படும் மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு, ஆறு பெரும் பொழுதுகளும், ஆறு சிறு பொழுதுகளும் வகைப்படுத்தப்படுகின்றன.

| **பெரும்பொழுது** | **சிறுபொழுது** |
|---|---|
| ஓராண்டில் இரண்டிரண்டு சேர்ந்தது | ஒரு நாளின் கூறுபாடுகள் |
| கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் | வைகறை, காலை, நண்பகல், அந்தி, மாலை, யாமம் |

ஆண்டு, திங்கள், கிழமை, நாள், நாழிகை, நொடி, பெரும்பொழுதின் பொருண்மைகளாகும்.

1. கார்காலம் – ஆவணி, புரட்டாசி
2. குளிர்காலம் – ஐப்பசி, கார்த்திகை

3. முன்பனிக்காலம் – மார்கழி, தை

4. பின்பனிக்காலம் – மாசி, பங்குனி

5. இளவேனிற்காலம் – சித்திரை, வைகாசி

6. முதுவேனிற்காலம் – ஆனி, ஆடி

**திணையும் பொழுதும்**

| **திணை** | **பெரும்பொழுது** | **சிறுபொழுது** |
|---|---|---|
| குறிஞ்சி | குளிர்காலம், முன்பனிக்காலம், | யாமம் |
| முல்லை | கார்காலம் | மாலை |
| மருதம் | ஆறு பெரும்பொழுதுகள் | வைகறை |
| நெய்தல் | ஆறு பெரும்பொழுதுகள் | ஏற்பாடு |
| பாலை | இளவேனில், முதுவேனில், பின்பனி | நண்பகல் |

**கருப்பொருள்**

அகத்திணையின் பாடுபொருள்களையும், ஒவ்வொரு திணைக்குமுரிய தனித்தன்மைகளோடும் விளங்குவது கருப்பொருட்களாகும். கோ. குணவதி, “கரு என்பதற்கு கருப்பம், முட்டைக்கரு, உடம்பு, குழந்தை, குட்டி, உட்பொருள், அடிப்படை”. (குணவதி.கோ, திணைக்கோட்பாடு மரபும் மருதநிலப் புதினங்களும், ப.23) பலவகையில் பொருள்படும்படி தமிழ் அகராதி விளக்குவதாக, தன்னுடைய ஆய்வேட்டில் எடுத்துரைக்கிறார்.

கருப்பொருட்களின் வகைகளைப் பற்றி முதன்முதலாக அறிய உதவும் கருவியாக தொல்காப்பியம் அமைகின்றன. அவை,

**"தெய்வம், உணாவே, மா, மரம், புட்பறை**

**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**

**அவ்வகை பிறவும் கருஎன மொழிப" ( அகத்.20)**

(இளம்பூரணர், தொல்காப்பியம்பொருளதிகாரம் (அகத்திணையியல் - புறத்திணையியல்), ப.2)

தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவை, பறை, தொழில், பண்ணிசை முதலிய எட்டு வகை கருப்பொருட்களை தொல்காப்பியம் அடையாளப்படுத்துகிறது. தொல்காப்பியத்தைப் பின்பற்றி எழுந்த அகப்பொருள் இலக்கண நூல் நம்பியகப்பொருள் எண் வகை கருப்பொருட்களோடு ஆறையும் உட்படுத்தி பதினான்கு வகையான கருப்பொருட்களைக் குறிப்பிடுகிறது.

**"ஆரணங்கு உயர்ந்தோர் அல்லோர் புள்விலங்கு**

**ஊர் நீர் பூமரம் உணாப் பறை யாழ்பண்**

**தொழில் எனக்கரு ஈரெழு வகைத்தாகும்". (நூற்பா–19)**

(இராமசுப்பிரமணியன் வ.த, நம்பியகப்பொருள், ப.22) தெய்வம், உயர்ந்தோர், ஏனையோர், பறவை, விலங்கு, ஊர், நீர், பூ, மரம், உணவு, பறை, யாழ், பண், தொழில் கருப்பொருட்கள் 14 வகைப்படுமென நம்பியகப்பொருள் கூறுகிறது. இப்பதினான்கு வகை கருப்பொருட்களும் ஐந்து வகை திணைகளுக்கும் முறையே பகுக்கப்பட்டுள்ளன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. தெய்வம் | முருகக்கடவுள் | துர்க்கை | திருமால் | இந்திரன் | வருணன் |
| 2. உயர்ந்தோர் | பொருப்பன், வெற்பன், சிலம்பன், குறத்தி, கொடிச்சி | விடலை, காளி, எயிற்றி | இறும்பொறை நாடன் | ஊரன், மகிழ்நனன், கிழத்தி, மனைவி | சேர்ப்பன், புலம்பன், பரத்தி, நுளைச்சி |
| 3. ஏனையோர் | குறவர், கானவர், குறத்தியர் | மறவர், எயினர், எயிற்றியர், மறத்தியர் | இடையர், இடைச்சியர் ஆயர், ஆய்ச்சியர் | உழவர், உழத்தியர், கடையர், கடைச்சியர் | நுளையர், நுளைச்சியர், பரதர், பரத்தியர், அளவர், அளத்தியர் |
| 4. பறவை | கிளி, மயில் | புறா, பருந்து, கழுகு, எருவை | காட்டுக்கோழி | வண்டானம், மகன்றில், நாரை, அன்னம், பெரு நாரை, கம்புள், குருகு | கடற்காக்கை, தாரா |
| 5. விலங்கு | யானை, புலி, கரடி, சிங்கம் | செந்நாய் | மான், முயல் | எருமை, நீர்நாய் | சுறாமீன் |
| 6. ஊர் | சிறுகுடி | குறும்பு | பாடி | பேரூர், மூதூர் | பாக்கம், பட்டினம் |
| 7. நீர் | அருவி நீர், சுனை நீர் | நீரில்லாக்குழி கிணறு | வறுஞ்சுனை நீர், கான்யாற்று நீர் | ஆற்றுநீர், கிணற்றுநீர், குளத்துநீர், ஏரி நீர் | உவர்நீர், கேணி, கவர்நீர் |
| 8. மலர் | குறிஞ்சி, காந்தள், வேங்கை | மராஅம்பூ, குராஅம்பூ | முல்லை, குல்லை, தோன்றி, பிடவம் | தாமரைப்பூ, குவளை, செங்கழுநீர்ப்பூ | நெய்தற், புன்னை, தாழை, முண்டகம், அடம்பு |
| 9. மரம் | சந்தனம், தேக்கு, அகில், அசோகு, நாகம், மூங்கில் | உழிஞை, பாலை, ஓமை, இலுப்பை | கொன்றை, காயா, குருந்தம் | காஞ்சி, வஞ்சி, மருதம் | கண்டல், புன்னை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **10. உணவு** | மலைநெல், திணை மூங்கிலரிசி | வழிப்பறி செய்தல் | வரகு, சாமை, முதிரை | செந்நெல்லரிசி, வெண்ணெல்லரிசி | மீன், உப்புக்கலந்த மீன் |
| **11. பறை** | தொண்டகம் | துடி | ஏறுகோட்றை | நெல்லரிகிணை, மணமுழவு | மீன்கோட்றை, |
| **12. யாழ்** | குறிஞ்சி யாழ் | பாலை யாழ் | முல்லை யாழ் | மருத யாழ் | விளரி யாழ் |
| **13. பண்** | குறிஞ்சிப் பண் | பஞ்சுரம் | சாதாரிப்பண் | மருதப்பண் | செவ்வழிப்பண் |
| **14. தொழில்** | வெறியாடல், மலைநெல் பயிரிடுதல், தேன் எடுத்தல், அருவி நீராடல், சுனை நீராடல் | சூறையாடுதல், போர் செய்தல் | சாமை, வரகுபயிர் செய்தல், கொன்றைக் குழலுதல், கால்நடை உய்த்தல்,ஏறு தழுவல் | விழாச்செய்தல், களைகட்டல், நெல்லரிதல், கடா விடுதல், குளம் குடைதல் | மீன் பிடித்தல், உப்பு உண்டாக்கல், விற்றல், உண்ணவரும் பறவைகளை விரட்டுதல் |

(இராமசுப்பிரமணியன் வ.த., நம்பியகப்பொருள், பக்.30, 31)

பருவகாலங்கள் உணவுத்தொழிலின் மேம்பாட்டிற்கு துணைபுரிந்தன. தலைவன் – தலைவியிடையே நிகழும் காதல் ஒழுகலாறுகளுக்கும், பொழுதுகளுக்கும் ஐந்திணைகளும் உரித்தானதாக அமைந்தன. கருப்பொருட்கள் 14 வகையை மட்டும் குறிப்பிட வேண்டும் என்ற எவ்விதமான கட்டுப்பாடும் இல்லை. அதற்கு மேலாகவும் கருப்பொருட்கள் அமையப்பெறலாம் என்பதனை க.ஜவகர், “கருப்பொருள் எண்ணிக்கையைப் பொறுத்தவரையில் கூட்டவோ கழிக்கவோ செய்யலாம்”. (ஜவகர்.க, திணைக்கோட்பாடும் தமிழ்க்கவிதையியலும், ப.66) கருப்பொருட்களை பொறுத்தவரையில் மிகுதியாகவோ, குறைவாகவோ கருதப்படுவதினால், தவறில்லை என்கிறார். ஐந்து வகை நிலப் பண்புகளையும், அந்நிலத்தில் வாழும் மக்களின் வாழ்வியல் கூறுகளோடும், கலாச்சார, பண்பாட்டோடும் கருப்பொருட்கள் இணைக்கப்பட்டுள்ளது.

**உரிப்பொருள்**

கருப்பொருளும், உரிப்பொருளும் ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபட்டிருப்பினும், இரண்டும் ஒன்றோறொன்று உறவுக்கொண்டதாகும். கோ.குணவதி "கருப்பொருளே உரிப்பொருளுக்கு அடிக்கல், உரிப்பொருள் கருப்பொருள் மேல் கட்டப்பட்ட கட்டடம்". (குணவதி.கோ, திணைக்கோட்பாடும் மருதநிலப்புதினங்களும், ப.23) என்கிறார்.

நம்பியகப்பொருள் ஐந்து நிலத்திற்கும் உரிய உரிப்பொருள் இலக்கண வரையறையை,

**புணர்தலும் பிரிதலும் இருத்தலும் ஊடலும்**

**இரங்கலும் இவற்றின் நிமித்தமும் எனவாங்கு**

**எய்திய உரிப்பொருள் ஐயிரு வகைத்தே". ( நூற்பா - 25)**

(இராமசுப்பிரமணியன் வ.த., நாற்கவிராச நம்பியின் நம்பியகப்பொருள், ப.27) குறிப்பிடுகிறது.

ஐந்திணைகளுக்கும் ஐந்து வகையான உரிப்பொருள்கள் உள்ளன. ஆனால், அகப்பொருளின் சிறப்பைப் பற்றி எடுத்துரைக்கும் நம்பியகப்பொருள் உரிப்பொருள் பத்து வகைப்படுமெனக் கூறுகிறது. அவை, குறிஞ்சித்திணைக்குரிய புணர்தலும் புணர்தல் நிமித்தமும், பாலைக்குரிய பிரிதலும் பிரிதல் நிமித்தமும், முல்லைக்குரிய இருத்தலும் இருத்தல் நிமித்தமும், மருதத்திணைக்குரிய ஊடலும் ஊடல் நிமித்தமும், நெய்தல் திணைக்குரிய இரங்கலும் இரங்கல் நிமித்தமுமாகும். இவ்வாறு, அகத்திணைக்குரிய உரிப்பொருள் அமைவுகளோடு இணைந்துக் காணப்படும் நிமித்தமும் (காரணமும்) உட்கொண்டு பத்து வகையாக நம்பியகப்பொருள் பாகுபடுத்தியுள்ளது. இவ்வகைப்பாடுகள், ஒவ்வொரு திணைக்குமுரிய நோக்கங்களையும், செயல்களையும் எடுத்துரைக்கின்றன.

கருப்பொருளுக்கும் உரிப்பொருளுக்கும் திணை வகைகளை தொல்காப்பியம், நம்பியகப்பொருள் நூற்களின் வழி அறிய முடிகின்றன. முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் இவற்றில் பயின்று வரும் தலைவன், தலைவி, தோழி, செவிலித்தாய் ஆகிய மாந்தர்களையும் உட்கொண்டு அமைதல் அகப்பொருளுக்குரிய மரபாகக் காணப்படுகின்றது.

"தொல்காப்பியர் உரிப்பொருள் என்ற கலைச்சொல்லை அகத்திணையை நோக்கியே பயன்படுத்தியுள்ளார். புறத்திணைக்கு உரியவற்றையும் உரிப்பொருள் எனச் சுட்டுவது அவர் கருத்தன்று. புறத்திணையலில் ஒவ்வொரு திணைக்கும் அவர் கூறுவன வரையறைகளே அன்றி உரிப்பொருள்கள் அல்ல". (மாதையன்.பெ, அகத்திணைக் கோட்பாடும் சங்க அகக்கவிதை மரபும், ப.34) எனும் மாற்றுக்கருத்தும் நிலவி வருகின்றன. பெ.மாதையன் "திணை துறை வகுக்க உரிப்பொருள் ஒன்றே சிறந்தாகும்". (மாதையன்.பெ, அகத்திணைக் கோட்பாடும் சங்க அகக்கவிதை மரபும், ப.85) என்கிறார்.

கருப்பொருளும் முதற்பொருளும் இன்றி பாடல்கள் புனையப்பட்டுள்ளன. ஆனால், உரிப்பொருள் அமைவின்றி சங்க இலக்கியப் பாடல்கள் உருவாக்கம் பெறுவதில்லை. திணைப்பகுப்பாய்வுகளான முதல், கரு, உரி மூன்றனுள் உள்ள உணர்வுகளின் மையமாக உரிப்பொருளும், அவ்வுணர்வுகளின் இயற்கைப் பின்னணிகளைக் கூறுவது முதற்பொருளும் கருப்பொருளுமாக அமைகின்றன.

**திணைப்பகுப்பு முறை**

உயிரினங்களை உயர்திணை, அஃறிணை என்ற பிரிவுகளில் அடக்கி, நிலப்பரப்பை ஐவகை பகுப்புகளாக வகைப்படுத்தி மக்களின் வாழ்வியலோடு இணைத்து திணையியல் துறையாக வகுத்தவர் தொல்காப்பியர்.

**குறிஞ்சித்திணை**

தமிழர்களின் வாழ்வு முதன்முதலாக குறிஞ்சியில் தொடங்கிற்று. நாகரிகம், பண்பாடு அமைவுகள் தோன்றியதும் இத்திணையிலாகும் என்பதனை சா.ரேவதி, “குறிஞ்சியில் தான் மனித வாழ்க்கையின் நாகரீகம் தொடங்கியது”. (ரேவதி.சா, இனவரைவியல் நோக்கில் முல்லைத்திணைப் பாடல்கள் (எட்டுத்தொகை மட்டும்), ப.44) என்கிறார். குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மக்கள் வேட்டையாடி, அதில் கிடைக்கப்பெற்ற பொருள்களை அனைவரும் ஒன்றாக பகிர்ந்து உண்டார்கள். இயற்கையில் கிடைத்த உணவுப்பொருட்களை உண்டு வாழ்ந்தனர். உயிரினங்களோடு ஒன்றிய வாழ்வை குறிஞ்சி நில மக்கள் மேற்கொண்டிருந்ததினை, சங்க இலக்கியப்பாடல்கள் காட்டுகின்றன.

குறிஞ்சி நில மக்கள் வேட்டையாடுவதற்கு நாயையும் உடன் அழைத்துச் செல்லும் வழக்கம் கொண்டிருந்தனர். கூர்மையானக் கற்கருவிகளைக் கொண்டு விலங்குகளை வேட்டையாடினர். தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல் குறிஞ்சி நில மக்களின் தொழில்களாக இருந்தன. இவைகளின் மூலமாக, தங்களின் அன்றாட உணவு மற்றும் பொருளாதாரத்தேவையை பூர்த்தி செய்தனர். குகைகள் குறிஞ்சி நில மக்களின் வாழ்விடமாக இருந்தன. கொடிய விலங்குகளிடமிருந்து அவர்களை தற்காத்துக்கொள்ள குகைகளைப் பயன்படுத்தினர்.

முதன்முதலாக காதல் சார்ந்து நிகழும் ஒழுகலாறுகள் குறிஞ்சித்திணையில் தோன்றக்காரணமாக அமைந்தன. “திருமணத்திற்கு முன் நிகழும் ஆண் – பெண் காம உறவின் புணர்ச்சியே கூடல் எனப்படும்.” (சீனிச்சாமி.துரை, திணைக்கோட்பாடு, ப.91). ‘புணர்தல்’ என்பது குறிஞ்சித்திணையின் உரிப்பொருளாகும். ஆண், பெண் இருவரிடையே ஏற்படும் காமநுகர்வின் வெளிப்பாடு புணர்தலாகும்.

**முல்லைத்திணை**

மேய்ச்சல் நிலங்கள், புல், சமவெளிகளும் முல்லை நிலத்துக்குரியவையாகும். பால் தரும் விலங்குகளின் வளர்ப்பில் கிடைக்கும் வருவாயில் தங்களது அன்றாட வாழ்வை முல்லை நில மக்கள் நடத்தினர். இம்மக்களை ஆயர்கள் என்றனர். ஆய்ச்சியர், பொதுவர், கோவலர், இடையர், ஆயமகள், ஆய்மகள் போன்றோர் முல்லை நில மக்களாவர். "முல்லை நிலத்தில் ஆயரும் ஆய்ச்சியரும் வாழ்கின்றனர். அவர்கள் தாம் வழிபடு கடவுளாகிய கண்ணனைப் பரவிக் குரவையாடிப் பாடுகிறார்கள். சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவை இருக்கிறது". (ஜகந்நாதன் கி.வா, மலை அருவி( நாட்டுப்புறப் பாடல்கள்), ப.19) என்று கூறலாம்.

பெ. மாதையன், "குறிஞ்சியின் ஒருபால் மக்கள் தொகை பெருகிவிட மற்றொருபால் கிடைக்கக்கூடிய உணவுப்பொருள் வழங்கக் குறையத் தொடங்கியபோது அம்மக்கள் அடுத்த நிலப்பகுதியாகிய காட்டுநிலமாம் முல்லைக்குக் குடிப்பெயர்ந்தனர்". (மாதையன்.பெ, அகத்திணைக்கோட்பாடும் சங்க அகக்கவிதை மரபும், ப.147) தங்களுடைய அன்றாடத் தேவையின் பொருட்டு மனிதர்கள் ஒரு நிலப்பகுதியிலிருந்து மற்றொரு நிலத்திற்கு குடிப்பெயர்ந்தனர். அவ்வாறே, குறிஞ்சி நிலத்திலிருந்து மக்கள் முல்லைக்கு குடிப்பெயர்ந்துள்ளதைக் குறிப்பிட்டுள்ளார்.

"முல்லைக்கு விதிக்கப்பட்ட ஒழுக்க நெறி 'இருத்தல்' ஆகும். இதற்கான பொருள் அமைதியாகக் காத்திருத்தல் என்பதாகும். அரசக் கடமை நிமித்தம் புறத்தே சென்ற தலைவனின் வருகைக்காக மனைவி காத்திருத்தல் என்றே இதற்கு மரபு ரீதியாக விளக்கம் கூறப்படுகிறது. அமைதியாய்க் காத்திருத்தல் பிரிவாற்றலால் வாடுதலினும் தெளிவாக வேறுபடுதலாம்". (கார்த்திகேசு சிவத்தம்பி, பண்டைத் தமிழ்ச் சமூகம் – வரலாற்றுப் புரிதலை நோக்கி, ப.185) முல்லைக்குரிய உரிப்பொருள் இருத்தலாகும்.

போர் காரணமாக பிரிந்து சென்ற தலைவன் கார்காலத்தில் திரும்ப வருவேன் என்று கூறிச் சென்றதை எண்ணியும், உரிய நேரத்தில் வரவில்லை என்று தலைவனை நினைத்து தலைவி புலம்புவதும் முல்லைக்குரிய உரிப்பொருளாகும். "ஆணும் பெண்ணும் மனமொருமித்து காதலுற்ற நிலையிலும் ஆணின் வீரம் உறுதி செய்யப்படுவதற்காக ஏறுதழுவுதல் நடைபெற்றதை (கலித்தொகை : 105) குறிப்பிடும்". (கணபதி இளங்கோ, பண்டைத் தமிழர் வாழ்வியல், ப.27) முல்லைத்திணையின் ஏறுதழுவுதல் ஆயர்கள் வீட்டில் வளர்க்கும் காளையை உரிய நாளில் அடக்கும் இளைஞனுக்கு அவர்களுடைய பெண்ணை மணமுடித்துக் கொடுப்பது ஏறுதழுவுதல் நிகழ்வுக்குரியதாகும்.

**நெய்தல் திணை**

கடலும் கடல் சார்ந்தப் பகுதியும் நெய்தலுக்குரியதாகும். கடலுக்குள் மீன் பிடிக்கச் சென்ற தலைவனின் பிரிவினை எண்ணி தலைவி வருந்துதல் நெய்தல்திணைக்குரிய உரிப்பொருளாகும். இத்திணைக்குரிய மக்கள் பரதவர், மீனவர், வலையர், நுளையர், பழையவர் ஆவர். புலம்பன், துறைவன், சேர்ப்பன் கடற்கரையில் வாழும் தலைவனுக்குரிய பெயர்களாகும்.

கடல் பகுதியில் வாழும் பரதவ மக்களை மாங்குடி மருதனார் 'வலைஞர்' எனக்குறிப்பிடுகின்றார். "வலைவீசி மீன் பிடிப்பவர்கள் வலையர் எனச் சுட்டப்பட்டுள்ளனர். வலை என்ற சொல் எட்டுத் தொகை பத்துப்பாட்டினுள் 43 இடங்களில் பயின்று வந்துள்ளது". (கணபதி இளங்கோ, பண்டைத் தமிழர் வாழ்வியல், ப.46). நெய்தலுக்குரிய பொழுதுகளை "இருள், மருள் (மயக்கம், மாயம், மாயை), மாலை (துன்பமாலை), யாமம் என்னும் நாளின் பிற கூறுகளும் நெய்தலில் பாடப்படுகின்றன". (மம்மது. நா, தமிழர் திணை, ப.144)

**மருதத்திணை**

மருத நிலத்துக்குரிய பெயர்கள் ”மருதம் – ஓர் மரம், காற்று, வயலும் வயல் சார்ந்த இடமும், மருதநிலப்பண், வயல்”. (கிருஷ்ணசாமிப்பிள்ளை.சீ, நவீன தமிழ் அகராதி, ப.434) என்று வழங்கப்படுகின்றன. மருதத்திற்கு சிறுபொழுது வைகறையாகும். மருதத்திணைக்குரிய தலைவன் ஊரன் அல்லது மகிழ்நன் ஆவான். மருதநில மக்கள் இந்திரன் அல்லது வேந்தனை கடவுளாக வழிப்பட்டனர். மழை வேண்டி இருபத்தி எட்டு நாட்கள் இந்திரனுக்காக மக்கள் விழா எடுத்ததை மணிமேகலை நூல் குறிப்பிடுகிறது. சொத்துரிமை எனும் தனியுடைமைத் தோன்றியதும் இத்திணையிலாகும். “உழவுத்தொழில் நாகரீகத்தின் உயர்ந்த சின்னமாகக் கருதப்பட்டது”. (பிள்ளை கே.கே டாக்டர், தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், ப.20) மனிதர்களின் நாகரிகம், பண்பாடுச் சார்ந்த வாழ்வியல் முறைகளுக்கு உழவுத்தொழில் அடிக்கல் இட்டது. அப்படிப்பட்ட, உழவுத்தொழிலை மேம்பட்ட தன்மைக்கு கொண்டு சென்ற பெருமை மருதத்திணை மக்களுக்குரியதாகும்.

மனிதர்களுக்கு சற்று மகிழ்வினைக் கொடுக்கக்கூடிய, நிலமாகவும், சமூகத்தில் பொருளாதார மேம்பாட்டிற்கு வித்திட்ட திணையும் மருதமாகும். கணவன், மனைவியிடையே, ஏற்படும் குடும்ப சிக்கல்களைப் பற்றி மருதம் பேசுகின்றன.

**பாலைத்திணை**

பாலைத்திணைக்கு ”பாலை – ஓர்கொடி, ஓர்மரம், ஓர்மீன், பாலைநிலம், ஓர் பண், கடல், புனர்பூசம், பாலைவனம் – சுரம்” (கிருஷ்ணசாமிப்பிள்ளை.சீ, நவீன தமிழ் அகராதி, ப.379) எனும் பொருள்கள் உள்ளன. பாலை மரம், மலர், யாழ், பாலைப்பண் ஆகிய பொருள்கள் பாலைத்திணைக்குரியதாக சங்க இலக்கியம் குறிப்பிட்டுள்ளது. மணல் சூழ்ந்தப்பகுதி பாலை நிலத்துக்குரியதாகும். பொருள் தேடிச்செல்லும் தலைவனின்

பிரிவினை நினைந்து தலைவிக்கு ஏற்படும் மனக்குமுறல்களை பாலை நில உரிப்பொருள் எடுத்துக் கூறுகிறது. மறவர், வேட்டுவர், எயினர், எயிற்றியர் பாலை நில மக்களாவர்.

"மழை இல்லாமல் வறட்சியுற்ற மலையும் காடும் பாலை எனப்படும்." (மாதையன்.பெ, தமிழ்ச்செவ்வியல் படைப்புகள் கவிதையியல், சமுதாயவியல் நோக்கு, ப.57) முல்லை நிலம் திரிந்தும், மழை வளம் காணாத நிலமும் இருவகை அடிப்படைக் காரணிகளைக் கொண்டு பாலை நிலம் அமையப்பெற்றுள்ளமையைக் காணமுடிகிறது. தொல்காப்பியர் பாலைக்கென நடுவு நிலைத்திணை, நடுவணது சொற்களைக் கையாண்டுள்ளார்.

சிலப்பதிகாரத்தில் மதுரைக்குச் செல்லும் வழியைப் பற்றி மாங்காட்டு மறையோனிடம் கேட்டறியும் கோவலனிடம் பாலை நிலத்தினுடைய இயல்பை பின்வருமாறு கூறியுள்ளார்.

**"முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் றிரி ந்து**

**நல்லியல்பு அழி ந்து நடுங்குதுயர் உறுத்துப்**

**பாலை என்பதோர் படிவம் கொள்ளும்"**

**(சிலப்:11, 64 - 66)**

(பாலசுப்பிரமணியன்.க முனைவர், தொல்காப்பியத்தின் ஒருமையும் முழுமையும், ப.69)

நீர்வளமற்று வறண்ட குறிஞ்சி, முல்லை நிலப்பகுதிகள் பாலையின் நிலப் பின்னணியாகவும், குறிஞ்சி, முல்லை இரண்டும் இணைந்தது பாலைத்திணைக்குரிய நிலமாகவும் கருதப்பட்டது.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனும் நானில வருணனையை தொல்காப்பியர் எடுத்துக்கூறியுள்ளார். இலக்கிய, இலக்கண வளர்ச்சிகளின் காரணமாக, பாலையைத்

தனி நிலமாக கூற வேண்டிய சூழ்நிலை உருவாகியது. தலைவியின் பிரிவினால் வாடும் தலைவனின் வேதனையைக் குறிப்பிட சூரியன் சுட்டெரிக்கும் நண்பகலை பாலைக்கென ஒதுக்கப்பட்டன எனக் கருதப்படுகிறது. பாலைக்குரிய பெரும்பொழுது இளவேனில், முதுவேனில், பின்பனி எனவும், நண்பகல் சிறுபொழுதுமாகும். நில அடிப்படையில் பாலையை திணை வகைமைக்குள் உட்படுத்துவதை விடவும், பருவத்தின் அடிப்படையில் பாலையை ஐந்திணையின் வறையறைக்குள் உட்படுத்தினர். ஏனெனில், பாலையின் கால நிலைகள் வறட்சியை மையப்படுத்துகின்றன.

அக ஒழுக்கங்களில் பிரிவால் ஏற்படும் துன்ப நிலையை அடிப்படையாகக் கொண்டு பாலைத்திணை அமையப்பெற்றுள்ளன. இப்பிரிவு நிலை பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்கமானது ஆண், பெண் இருவருக்கும் இருக்க வேண்டிய கடமையின் பொருட்டு, வரும் பிரிவு எனும் வாழ்வியல் தத்துவத்தை உணர்த்துகின்றன.

தலைவன், தலைவியினுடைய வாழ்வியல் அணுகுமுறைகளுக்கு பொருளாதார தேவை நிறைவு பெரும் பொருட்டிற்கு பாலைத்திணை முக்கியப்பங்கு வகிக்கின்றன. எனவே, பாலைத்திணை என்பது வெறும் நிலம் சார்ந்த திணையை அடிப்படையாகக் கொள்ளாமல், பொருளாதார, சமூகப் பின்னணிகளையும், குடும்ப உருவாக்கத்தினையும் கொண்டு அமைகின்றன.

பிரிவு என்பது காதலர்களுக்கு சில நேரங்களில் இன்பமாகவும், சில வேளைகளில் துன்பமாகவும் பாலை காட்சியளித்தன. கலித்தொகையில் பாலைத்திணை வருணனையை பெருங்கடுங்கோ சிறப்பான உவமைகளோடு எடுத்துக்கூறியமையால் ‘பாலைப்பாடிய பெருங்கடுங்கோ’ என்றனர். பாலையில் வாழ்ந்த மக்களை மறவர், மழவர், எயினர் என்று அழைத்தனர்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணைகளுக்கும் முறையே சிறப்பியல்புகளையும், பண்பாட்டியல் நோக்கத்தோடும், அவற்றிற்கேயுரிய தன்னியல்புகளையும், பொருண்மைகளையும் கொண்டு உருவாக்கம் பெற்றிருந்தன.

**திணை வரிசை**

ஐந்திணைக்குரிய வரிசை அமைப்பு இன்ன முறையில் அமையப்பெற வேண்டும் என்ற நிலையிலிருந்து பிற்காலத்தில் எழுந்த இலக்கண, இலக்கிய நூற்கள் அவ்வரிசை முறைகளில் மாறுதலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

தொல்காப்பியம் - திணை வரிசை அட்டவணை

| **கருத்து** | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | **நூற்பாக்கள்** |
|---|---|---|---|---|---|---|---|---|
| **முதல்** | முல்லை | குறிஞ்சி | மருதம் | நெய்தல் | பாலை | - | - | 950,954 |
| **உரி** | குறிஞ்சி | பாலை | முல்லை | நெய்தல் | மருதம் | - | - | 959 |
| **புறம்** | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை | பெருந்திணை | கைக்கிளை | 1001,6,9,14, 18,22,25 |
| **அகம்** | கைக்கிளை | நடுவண் ஐந்திணை | நடுவண் ஐந்திணை | நடுவண் ஐந்திணை | நடுவண் ஐந்திணை | _ | பெருந் திணை | 94,947 |

(தமிழ்த்துறை ஆசிரியர்கள், இலக்கணச் சிந்தனைகள், ப.9)

ஒவ்வொரு வரிசைக்கும் வைப்பு முறையில் மாற்றம் பெற்றிருப்பதினை மேற்கண்ட அட்டவணை காட்டுகிறது.

| எண் | நூல் | 1 | 2 | 3 | 4 | 5 | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | தொல்காப்பியம் | முல்லை | குறிஞ்சி | மருதம் | நெய்தல் | பாலை | 950,54 |
| 2 | அகநானூறு | பாலை | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | இடையிடையே பாலையும் குறிஞ்சியும் |
| 3 | ஐங்குறுநூறு | மருதம் | நெய்தல் | குறிஞ்சி | பாலை | முல்லை | __ |
| 4 | கலித்தொகை | பாலை | குறிஞ்சி | மருதம் | முல்லை | நெய்தல் | __ |
| 5 | ஐந்திணையெழுபது | குறிஞ்சி | முல்லை | பாலை | மருதம் | நெய்தல் | __ |
| 6 | திணையைம்பது | முல்லை | குறிஞ்சி | மருதம் | பாலை | நெய்தல் | __ |
| 7 | திணைமாலை நூற்றைம்பது | குறிஞ்சி | நெய்தல் | பாலை | பாலை | மருதம் | __ |
| 8 | திணைமொழியைம்பது | குறிஞ்சி | பாலை | முல்லை | மருதம் | நெய்தல் | __ |
| 9 | கைந்நிலை | குறிஞ்சி | பாலை | முல்லை | மருதம் | நெய்தல் | __ |
| 10 | மதுரைக்காஞ்சி | மருதம் | முல்லை | குறிஞ்சி | பாலை | நெய்தல் | __ |
| 11 | பெரும்பாணாற்றுப்படை | பாலை | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | __ |
| 12 | சிறுபாணாற்றுப்படை | நெய்தல் | முல்லை | மருதம் | __ | __ | __ |
| 13 | புறநானூறு | மருதம் | முல்லை | நெய்தல் | குறிஞ்சி | __ | பாட்டு 187 |
| 14 | இறையனார் அகப்பொருள் | குறிஞ்சி | நெய்தல் | பாலை | முல்லை | மருதம் | உரையில் |
| 15 | வீரசோழியம் | முல்லை | குறிஞ்சி | மருதம் | பாலை | நெய்தல் | __ |
| 16 | நம்பியகப்பொருள் | குறிஞ்சி | பாலை | முல்லை | மருதம் | நெய்தல் | __ |
| 17 | மாறனகப்பொருள் | குறிஞ்சி | பாலை | முல்லை | மருதம் | நெய்தல் | __ |
| 18 | இலக்கண விளக்கம் | குறிஞ்சி | பாலை | முல்லை | மருதம் | நெய்தல் | __ |
| 19 | சிலப்பதிகாரம் | குறிஞ்சி | மருதம் | முல்லை | நெய்தல் | __ | நீர்ப்படைக்காதை |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 20 | பெரியபுராணம் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | — | திருக்குறிப்புத் தொண்டர் |
| 21 | இராமாயணம் | குறிஞ்சி | பாலை | முல்லை | மருதம் | — | ஆற்றுப்படலம் |

(தமிழ்த்துறை ஆசிரியர்கள், இலக்கணச் சிந்தனைகள், ப.11)

தொல்காப்பியர் அமைத்த ஐந்திணை வரிசை முறையிலிருந்து இலக்கண, இலக்கியங்களின் வைப்புமுறைகளில் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதை அட்டவணையின் வழியாக அறிய முடிகிறது.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை வகைமையினுள் ஆண், பெண் இருவரிடையே தோன்றும் உணர்ச்சி பூர்வமான மனப்பாங்கை எடுத்தாளும் ஒரு தலைக்காமத்தைக் கூறுவது கைக்கிளையாகும். பெருந்திணை என்பது ஒவ்வாக்காமம் மற்றும் இழிந்தக்காமமாகும். மடலேறுதல், இளமை தீர்த்த பின்பும் காதல் நிறைவேறாமை, பிறரால் தேறுதல் ஒழிந்த நிலையில் காமம் மிகுதல், மிகுதியான காமம் நான்கும் பெருந்திணைக்குரிய வகைப்பாடுகளாக இலக்கண நூலார் குறிப்பிடுகின்றனர்.

கைக்கிளை – ஒருதலைக்காமத்தையும், பெருந்திணை – பொருந்தாக்காமத்தையும், ஐந்திணை – அன்புடைக்காமம் அல்லது ஒத்தக்காமத்தையும் எடுத்துரைக்கிறது. இவை மூன்றும், வெவ்வேறான சூழ்நிலைகளையும், உணர்ச்சிகளையும், கருத்தாக்கங்களையும் குறிப்பினும், அன்பின் ஒழுகலாறுப் பற்றிக்கூறுவது ஐந்திணையாகும். இவ்வைந்திணைகளுக்கும் நிலமும், ஒழுக்க வகையும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால், கைக்கிளை, பெருந்திணை இரண்டிற்குமுறைய நிலங்கள்

வரையறுக்கப்படவில்லையெனினும், தொல்காப்பியர் ஒழுக்க வகைமையைக் கட்டமைத்துள்ளார்.

**களவும் கற்பும்**

ஐந்து வகை நிலங்களும் காதலின் பிரிவு நிலைக்குக் காரணமாக அமைகின்றன. இப்பிரிவு நிலைகளை களவு, கற்பு வகைமைக்குள் இலக்கண நூலார் அடக்குவர். தலைவனும், தலைவியும் ஊரார் அறியாமல், காண நேருவதை களவு எனவும், போர், செல்வத்தின் பொருட்டோ தலைவியை விடுத்து, தலைவன் பிரிவது கற்பு எனவும் கூறுவர்.

எவரும் அறியாமல் தலைவனும், தலைவியும் தாமே கூடி இன்புறுவது களவாகும் என்று பெ.மாதையன் குறிப்பிடுகிறார். இவ்வாறான, களவு ஒழுக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக ஊரார் அறிய திருமணம் புரிந்து வைப்பது அடுத்த நிலையான கற்பு வாழ்க்கையிலாகும்.

கார்த்திகேசு சிவத்தம்பி,

**"உரிமையுடையோர் மணப்பெண்ணை**

**மணமகனுக்கு மணமுடித்தலே கற்பு"**

(கார்த்திகேசு சிவத்தம்பி, பண்டைத்தமிழ்ச் சமூகம் வரலாற்றுப்புரிதலை நோக்கி, ப.189) என்கிறார். ஒத்த தலைவனும், தலைவியும் பிறர் அறிய வாழும் களவு வாழ்க்கை கற்பில் முடிகின்றது.

அகத்திணைகளில் தலைவனும், தலைவியும் தாமே கூடி இன்பமுறுவது களவும், இவர்களுடைய காதல் வாழ்வை அறிந்த பெற்றொர்களும், உறவினர்களும், சுற்றத்தாரும் ஒன்று கூடி இருவருக்கும் திருமணம் செய்து வைப்பது கற்புமாகும். கற்பு வாழ்க்கையில் ஆறு பிரிவுகள் உள்ளன. பரத்தை, கல்வி, தூது, நாடுகாத்தல், பொருள் தேடச்செல்லுதல்,

பிறருக்கு உதவும் வகையில் பிரிதல் என்பவையாகும். இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கியிற்கூட்டம், நான்கும் களவின் இலக்கண வகையும், மலிவு, புலவி, உணர்வு, பிரிவு ஆகியன கற்பின் இலக்கண வகைகளுமாகும். அகப்பொருள் இலக்கண நூலான நம்பியகப்பொருளில் களவின் வறையறையை,

**"உளமலி காதற் களவெனப் படுவது**

**ஒரு நான்கு வேதத்து இருநான்கு மன்றலுள்**

**யாழோர் கூட்டத்து இயல்பினது என்ப".**

(இராமசுப்பிரமணியன் வ.த, நாற்கவிராச நம்பியின் நம்பியகப்பொருள் (மூலமும் விரிவுரையும்), ப.85) கூறியுள்ளது. பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், பைசாசம் ஆகிய எண் வகைத் திருமண முறைகள் உள்ளன. அவற்றுள், காந்தருவம் குறிஞ்சி முதல் பாலை வரையிலான ஐந்திணைகளுக்கும் உரியதாகும். அசுரம், இராக்கதம், பைசாசம் இவை மூன்றும் கைக்கிளைக்குரியதும், பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் ஆகியன பெருந்திணைக்கும் உரியவைகளாகும்.

களவு வாழ்க்கை குறிஞ்சி, நெய்தல் திணைக்கும், முல்லையும் மருதமும் கற்பு வாழ்க்கைக்குரியதும், பாலைத்திணை களவு, கற்பு இரண்டிற்கும் பொதுவானதாகும். களவு வாழ்க்கையிலிருந்து கற்பு வாழ்க்கைக்கு செல்வது தமிழரின் இல்வாழ்க்கைக்குரியதாகக் கருதப்படுகிறது. களவையும், கற்பையும் தொல்காப்பியர் கைகோள் வகையினுள் அமைத்துள்ளார். தலைவன் தலைவியினுடைய சந்திப்பு முதல் திருமணம், தலைவனின் பிரிவு, இணைதல் வரையிலானவை களவு, கற்பிக்குரியதாகும்.

**"களவு கற்பெனக் கண்ணிய ஈண்டையோர்**

**உளநிகழ் அன்பின் உயர்ச்சி மேன"**

(நக்கீரர், களவியல் என்ற இறையனாரகப்பொருள் விளக்கம், ப.208) தலைவன், தலைவியினுடைய வாழ்வில் தோன்றும் களவு, கற்பு உலகத்தில் பிறந்துள்ள அனைவருக்கும் உரியதும், இந்நூற்பாவில் குறிப்பிட்டுள்ள 'ஈண்டையோர்' தேவர்களுக்கும், நாகர்களுக்கும் களவும், கற்பும் அவர்களுடைய உலகத்தில் இல்லை என்கிறார் நக்கீரர்.

**திணைமயக்கம்**

'மயக்கம்' என்பது ஒன்றுடன் ஒன்று கலத்தல், மயங்குதல், கலவை போன்ற பொருள்களில் வழங்கப்படுகின்றன. ஒரு நிலத்திற்குரிய முதல், கரு, உரிப்பொருட்கள் வேறொரு நிலத்திற்குரியதாக பாடல்களில் தம்முள் கலந்து வருவது அல்லது மயங்கி வருதல் திணை மயக்கமாக உருவாக்கம் பெற்றன. "பாலையாகிய பிரிவால் திணை வாழ்க்கை அழிந்து நானிலந்தாங்கிய வேந்து உருவாவதே திணை மயக்கம் ஆகும்". (கணபதி இளங்கோ, பண்டைத் தமிழர் வாழ்வியல், ப.13).

நேமிநாதம் 'மயக்கம்' ஏழு வகைப்படுமென சுட்டுகிறது. அவை, பால், திணை, வினா, மரபு, காலம், செப்பு, இடம் என்பவைகளாகும். ஒரு நிலத்திற்குரிய முதற்பொருளும் கருப்பொருளும் வேறு நிலத்திற்கு மயங்கி வருவது உண்டு. ஆனால், ஒரு நிலத்தினுடைய ஒழுக்கத்தைச் சுட்டும் உரிப்பொருள் மற்றொரு நிலத்திற்குரியதாக கலந்து வருவது வழக்கத்தில் இல்லை என்று பெ.மாதையன் கூறுகிறார்.

திணைகள் தம்முள் கலந்து வருவது இயல்பானதேயாகும். இருப்பினும், உரிப்பொருள்கள் பாடல்களில் மயக்கம் பெறுவதில்லை. "இரண்டு உரிப்பொருள் தம்முள் மயங்கி வரும் என்றால் பொருந்தாது. ஆனாலும் முதலும் கருவும் ஒரு

திணைக்குரியனவாகவும் உரிப்பொருள் பிறிதொரு திணைக்குரியதாகவும் அமையலாம்.” (தமிழரசி.அ, நற்றிணையில் நெய்தல் நில மக்கள் வாழ்வியல், ப.129) என்கிறார் தமிழரசி.

ஒரு நிலத்துக்குரிய கருப்பொருட்கள் முற்றிலுமாக வேறு நிலத்திற்கு சார்ந்து வருவதினால் அந்நிலத்திற்குரிய ஒழுகலாறுகள் வேறுபட வாய்ப்புள்ளது. எனவே, ஒரு சில கருப்பொருட்கள் மட்டும் நிலத்திற்கு நிலம் சார்ந்து வருதல் அந்நிலத்தின் உணர்வினை தக்க வைத்துக்கொள்ள முடியும். ஒரு நாட்டிற்குரிய பூவோ, பறவையோ பிற தேசத்தோடு சேர்ந்துவரின், அவற்றினையும் அந்நாட்டிற்குரியதாய் கணக்கிடலாம். இருப்பினும், எல்லாக் கருப்பொருட்களும் பிறிதோர் நிலத்திற்கு வரினும், அந்நிலத்தின் உணர்ச்சியினைத் தர இயலாது எனக்கருதப்படுகிறது.

**இலக்கியத்திறனாய்வு**

‘Krities’ கிரேக்கச் சொல்லை அடியொற்றி ‘criticism’ ஆங்கிலச்சொல் உருவானது. இச்சொல்லானது தமிழில் ‘திறனாய்வு’ மற்றும் ‘விமர்சனம்’ பொருளைத் தருகிறது. திறன், ஆய்வு என்ற இரண்டு இணைவின் அமைப்பியல் முறை திறனாய்வாகும் என்பது ந.பாலமுருகனின் கருத்தாக அமைகிறது. திறனாய்வு என்ற சொல்லை அ.ச.ஞானசம்பந்தன் வழக்கில் கொண்டு வந்தார்.

க.பஞ்சாங்கம், “ஒரு கலையாக்கத்திலிருந்து, தான் பெறுகிற அனுபவ உணர்வைத் தெளிவுபடுத்தி, மதிப்பிட்டு, மற்றோர்க்கு உணர்த்துகிற செயற்பாடே திறனாய்வாகும்.” (பஞ்சாங்கம்.க, தமிழிலக்கியத்திறனாய்வு வரலாறு, டாக்டர் ப.16) என்கிறார். திறனாய்வினுடைய தனித்தன்மை ஆய்வினுடைய இறுதி முடிவு கூறுவது மட்டுமல்ல, அவற்றினுடைய தரத்தினையும், மதிப்பீட்டையும் முன்னோக்கி நகர்த்திச் செல்வதாகும்.

தி செல்கேசவ முதலியார், மறைமலையடிகள், க.கைலாசபதி, பரிதிமாற்கலைஞர், ஆறுமுக நாவலர், உ.வே.சா., சி.வை.தாமோதரம்பிள்ளை போன்றோர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் சிறந்த திறனாய்வாளர்களாக வளர்ச்சிப் பெற்றிருந்தனர். அதற்குபிறகு, இருபதாம் நூற்றாண்டில் இலக்கியத்திறனாய்வின் வளர்ச்சி உரை நடைத்திறனாய்வு வளர பெரும் பங்கு வகித்தது. 20ஆம் நூற்றாண்டளவில் தமிழ்த்திறனாய்வு வளர்ந்ததாக க.கைலாசபதி குறிப்பிடுகிறார்.

பேராசிரியர் ந. பாலமுருகன், “தமிழில் திறனாய்வு வேகமாக வளர மேலைநாட்டுத் தாக்கமும் தமிழில் புதியன புக வேண்டும் என்ற ஆர்வமுமே சிறப்பான காரணங்களாக அமைந்தன எனலாம்.” (பாலமுருகன்.ந பேராசிரியர், டி.கே.சி.யின் திறனாய்வுப் போக்கு (ஒரு செயல்முறை ஆய்வு), ப.25) எனக்கூறியுள்ளார்.

தமிழில் திறனாய்வு இலக்கியங்களுக்கு புத்துயிர் அளிக்கும் விதமாக, வ.வே.சு. ஐயர் புதிய வகைத் திறனாய்வு உத்திகளை அறிமுகப்படுத்தி தமிழ் இலக்கியங்களுக்கு வளம் சேர்த்தார். டி.கே.இரசிகமணி, வையாபுரிப்பிள்ளை, கா.சுப்பிரமணியப்பிள்ளை போன்றோர் வ.வே.சு ஐயருக்குப் பின் எழுந்த தமிழ் திறனாய்வாளர்களாவர்.

தொன்றுதொட்டு வெவ்வேறு காலமாற்றத்திற்கு ஏற்ப திறனாய்வுக் கொள்கைகள் வளர்ந்து வந்தன. இதனுடைய ஒரு பகுதியாக மேலைநாட்டுத்திறனாய்வு அணுகுமுறைகளான அமைப்பியம், பின் அமைப்பியம், நவீனத்துவம், பின் நவீனத்துவம், காலனியம், பின் காலனியம் திறனாய்வின் படி நிலைகளாக வளர்ச்சிப் பெற்றன.

”தமிழ் மொழியைக் கற்கக்கூடிய அனைவருக்கும் அகம்/புறம் மரபு விமர்சனரீதியாகப் பயிற்றுவிக்கப்படுவதில்லை. இக்கோட்பாட்டைப் படைப்புரீதியாகக் கற்றுத்தராததே இலக்கியத் திறனாய்வில் காலனிய மாதிரிகள் புழக்கத்திற்கு வரக் காரணம். இலக்கியத் திறனாய்வில் முக்கியமான மாறுதல்களை அண்மையில்

ஏற்படுத்தியவை. அமைப்பியலும் பின் – அமைப்பியலும் தான்". (நாகர்ஜுனன், பெங்களூர் ஜெர்னல், ஜுலை 1995, இதழ் : 3 & 4, ப.63)

இவ்வாறான, திறனாய்வு அணுகுமுறைகள் மனிதனின் உள்ள ஆக்கங்களுக்கு உறுதுணை அளிக்கவில்லை எனக் கருதப்படுகிறது. ஆனால், மனிதனின் வாழ்வை மன உணர்வுகளுக்கு முக்கியத்துவம் அளித்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ்ச்சமூகம் அகத்திணைக் கொள்கைகளின் வழியாக தமிழ்த்திறனாய்வாளர்கள் ஆராய்ந்துள்ளனர்.

நவீன காலத்தின் இயல்பும், மேலை நாடுகளின் திறனாய்வு ஆக்கத்தின் தாக்கத்தாலும், தமிழருக்குரிய மரபுகளை மீட்டெடுப்பது இன்றியமையாததாகிறது. குறிப்பாக, மேலை நாட்டு இலக்கியங்கள் வளர்ந்து வரும் சூழ்நிலையில் தமிழ்ச்சமூகத்தின் வேரான திணையின் தனித்தன்மைகளை பாதுகாப்பதும், மறு உருவாக்கம் பெற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளன.

திணை விரிவாக்கம், மற்றுள்ள துறைகளோடு கொண்டுள்ள உறவு நிலைகளைப் பற்றியும் ஆராய வேண்டியத் தேவை ஏற்பட்டுள்ளன. தமிழர்களின் திராவிடக் கோட்பாடான திணையை வளர்த்தெடுப்பதில் ஐய்யப்பப்பணிக்கர் முன்னிலை வகிக்கின்றார். அவர், "திணைக்கோட்பாடு தமிழ் அறிவுப்புலத்தில் கலை இலக்கியப்புலத்தில் முகிழ்த்த ஒரு கோட்பாடு என்ற நிலையில் அதனை விரிவு செய்து தமிழ்/திராவிட இலக்கியக்கோட்பாடாக முன்னாக்க வேண்டும்." (ஜவகர்.க, திணைவெளி (திணைக்கோட்பாட்டுக் கட்டுரைகள்), ப.42) என ஐய்யப்பப் பணிக்கரின் கூற்றை க.ஜவகர் எடுத்தாளுகிறார்.

ஒவ்வொரு படைப்பாளர்களும் ஏதேனும் படைப்புகளில் நிலம் பற்றிய சூழல்களை அமைக்கின்றனர். இந்நிலச்சூழல்கள் நாட்டையும், அந்நாட்டைச் சுற்றி அமையும் பிரதேசங்களையும் உள்ளடக்குகின்றன. இவையே, திணையாக உருவாக்கம் பெறுகின்றன. எழுத்தாளர்கள் படைப்புக்களில் திணையின் சூழல்களை பதிவு செய்வதின் வழி புதியதொரு சமுதாயத்தினை உருவாக்க உதவுகின்றனர்.

கார்த்திகேசு சிவத்தம்பி, "பண்டைய தமிழ்ச்சமூகத்தில் உருவாக்கம், அமைப்பு, குடும்பம், தனிச்சொத்துடைமை, அரசு என்பனவற்றை அறிய "திணை"யே திறவுகோல்." (கார்த்திகேசு சிவத்தம்பி, பண்டைத் தமிழ்ச்சமூகம் வரலாற்றுப்புரிதலை நோக்கி, ப.xxx111) புதியதோர் திணையின் திறனாய்வு அணுகுமுறையினை வெளிப்படுத்தியுள்ளார்.

சங்க காலத்தில் வளர்ச்சிப்பெற்றிருந்த அகத்திணையின் வளர்ச்சிகள் பக்தி இலக்கியத்திற்கு வழிகாட்டுதலாக அமைந்தன. கடவுள் மீது மனிதர்கள் வைக்கும் காதல் உணர்வுகளை பக்தி இலக்கியங்கள் உரிப்பொருளின் கட்டமைப்பில் வரையறை செய்தது. திருக்கோவையார், அம்பிகாபதிக்கோவை, பாண்டிக்கோவை, தஞ்சைவாணன்கோவை முதலிய கோவை நூல்கள் மானுட காதல் நிலையின் உணர்ச்சிகளையும், தனித்துவத்தினையும் வெளிக்கொணர்வதில் பங்காற்றியது.

தமிழரின் நாகரிக, பண்பாட்டு வளர்ச்சிக்குக் காரணமான, திணையை ஐயப்பப்பணிக்கர், பாமயன், க.ஜவகர் மூவரும் இன்றைய சூழலியல் திறனாய்வோடு ஒப்புமைப்படுத்தியும், புத்தாக்கத்திற்கும், முன்னேற்றம் அடைவதில் முனைப்போடு செயல்பட்டனர்.

புதிய வகைத் திறனாய்வு உத்திகளை திறனாய்வாளர்கள் அறிமுகப்படுத்தினர். அகத்திணை ஏழு, புறத்திணை ஏழு பதினான்கை படைப்பாளிகள் படைப்புக்குள்

அமையப்பெற வேண்டுமென்ற தேவை இல்லை. புதிய வகைத் திணை வகைகளையும் உருவாக்கம் பெறச்செய்யலாம் என்பதை ஐயப்பப்பணிக்கர் சுட்டுகிறார். எனவே, நிலத்தையும் அந்நில மக்களின் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுகலாறுகள், பண்பாடு, நாகரிகம், பண்பட்ட வாழ்வியல் முறைகளை திணை உள்ளடக்கியுள்ளது.

**திணைநிலை வளர்ச்சிகள்**

ஐந்து நிலப்பரப்புகளில் வாழ்ந்த மக்கள் வெவ்வேறு விதமான பண்பாடு, நாகரீகம், தொழில்கள், உணவுமுறைகள் பல பிரிவுகளையும் கொண்ட ஒழுக்கங்களையும் கடைப்பிடித்தனர். இயந்திரத்தனமான வாழ்வும், நகரப்பெருக்கத்தினாலும், மேற்கத்திய வாழ்வியல் முறைகளும், மனிதனின் வாழ்வியலில் மாற்றங்களை ஏற்படுத்தின.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்து வகைத் திணைகளையும் தற்கால முறைக்கேற்ப திறனாய்வாளர்கள் மாற்றியமைப்பது திணை விரிவாக்கமாகும். இவ்விரிவாக்கத்தினை அடுத்த நிலைக்கு கொண்டு சென்றவர் ஐய்யப்பப்பணிக்கர் ஆவார். ஐந்திணையின் வாழ்வியல் சூழல்களையும் இலக்கியங்கள், காப்பியங்கள், கவிதைகள், நாவல்கள், சிறுகதைகள் அத்துணைத் துறைகளிலும் படைப்புக்கள் வெளிப்படுத்துகின்றன.

தமிழ்ச்சமூகத்தின் மரபான திணை ஆக்கங்களை பி.டி.சீனிவாச ஐயங்கார், வி.ஆர்.இராமச்சந்திர தீட்சிதர், மு.இராகவ ஐயங்கார், கமில் சுவலபில், சேவியர் தனி நாயக அடிகளார் திறனாய்வுக் கண்ணோட்டத்தில் ஆய்வு செய்தனர். ஐய்யப்பப்பணிக்கர், தமிழண்ணல், நிர்மல் செல்வமணி திணைக்கோட்பாட்டின் வளர்ச்சி நிலைக்கு வலுவூட்டினர். ஒவ்வொரு நிலப்பகுதிகளும் அவற்றிற்கேயுரிய வளர்ச்சிப் படி நிலைகளை எடுத்துரைக்கின்றன. பழந்தமிழரின் பண்பாடு, நாகரிகம், சுற்றுப்புறச்சூழல் அமைவுகளோடு இணங்கி வேறுபட்ட குணங்களைக் கொண்டு திணை அமைகின்றன.

நவீனகால இலக்கியங்களில் முதல், கரு, உரி மூன்றையும் பின்பற்றி படைப்புக்களில் எழுத்தாளர்கள் கையாளுகின்றனர். இதன் மூலமாக, புதியதொரு முதல், கரு, உரி தோன்றுவதற்குரிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும், இவை மூன்றும் நவீனப்படைப்புக்கள் பதிவு செய்திருப்பதையும் ஐய்யப்ப்பணிக்கர் நிறுவுகிறார்.

தமிழர்களுடைய திணை நிலைகளைப் பற்றிய தோற்றங்களையும், வளர்ச்சிகளையும், அவர்களுடைய பண்பட்ட வாழ்வியல் முறைகளைக் கொண்டு அறிந்துக்கொள்ள முடிகின்றது. “குறிஞ்சி நிலத்திலிருந்து பற்பல ஆயிரம் ஆண்டு இடைவெளியில் முல்லை, மருதம் என ஒவ்வொரு நில வாழ்க்கைக்கும் மாறி மாறி வாழ்ந்து வந்திருக்கிறான் ! இந்த உண்மையை ஐயமின்றி உணரும் அறிவே, தமிழரின் திணை வரலாற்றைச் சரியாகப் புரிந்துக் கொள்ளத் துணை செய்யும் அடிப்படை அறிவாகும்,” (ஷாஜகான் கனி வெ.மு முனைவர், திணை வரலாறு, பக்.4,5)

பழந்தமிழர்கள் இயற்கையோடும், ஓரறிவு பெற்ற மரம் முதல் ஆறறிவு படைத்த மனிதன் வரை அனைத்து உயிரனங்களோடும் இணைந்த வாழ்வினை மேற்கொண்டவர்கள். குரங்கிலிருந்து பண்பட்ட, நாகரிகத்தன்மைக்கு மாறிய காலக்கட்டம் மனிதச் சமூகத்தின் வளர்ச்சியாகும். இப்பரிணாம வளர்ச்சியை திணை வரலாறு என்கிறோம்.

பூர்வகாலத் தமிழ்மக்கள் ஒவ்வொரு நிலப்பகுதியிலிருந்தும் புலம்பெயர்ந்து அடுத்த நிலப்பகுதிக்கு சென்றும், தங்களுடைய வாழ்வை பொருளாதார முன்னேற்றங்களுக்கும் முக்கியத்துவம் அளித்திருந்ததையும் ஐந்திணைகள் காட்டுகின்றன. சமுதாயம் பிறிதொரு சூழ்நிலைக்கு ஏற்றவாறு மாறுதலை எதிர்கொண்ட சூழ்நிலையில் மேனாட்டுக் கொள்கைகளும், பொருளாதார வளர்ச்சிகளும் சமூகத்தில் தாக்கங்களை ஏற்படுத்தின.

மேனாட்டுக் கொள்கைகளின் உருவாக்கத்தையும், வளர்ச்சியிலும் ஆர்வம் காட்டுவதை விடுத்து புதியதொரு திறனாய்வுக் கண்ணோட்டத்தில் திணையை அணுகினால், மீட்டுருவாக்கம் செய்ய முடியுமென அய்யப்பப்பணிக்கர் வாதிடுகிறார்.

இவ்வாறாக, திணையை புதியதொரு ஆய்வுக்களத்திற்கு உட்படுத்தும்போது, புதிய வகைத் திணைக் கொள்கைகள் உருவாக வாய்ப்புள்ளன. "பதினான்கு திணைகளில் ஒடுங்கி விடாமல் உலக இலக்கியத்தின் நாம் காண இயல்கின்ற மற்ற நிலப்பகுதிகளையும் – சான்றாகப் பெருநகரம், கடல், பிரயரி, ஸ்டெப்ஸ், துந்திரா, பனிவெளி, விண்வெளி என்பனவற்றையும் திணைக்கோட்பாட்டுள் இணைப்பது காலத்திற்கேற்ற கோட்பாட்டு நவீனமாக்கத்திற்கு இன்றியமையாதது." (அய்யப்பப் பணிக்கர்.கெ, மொழியாக்கம்: ந.மனோகரன், இந்திய இலக்கியக்கோட்பாடுகள் சூழல்–பொருத்தம், ப.125 ) அய்யப்பப்பணிக்கரின் கருத்தை ந.மனோகரன் பதிவு செய்துள்ளார்.

தொல்காப்பியம் குறிப்பிடும் பதினான்கு வகைத்திணைகளை மட்டுமல்லாது, காலத்திற்கேற்ப புதியவகைத் திணைக்கொள்கைகளும் தோன்றுகின்றன. மனிதர்கள் வாழும் இயற்கைச் சூழ்நிலைகளையும், பருவ நிலைகளையும், பிரதேசங்களையும் மையப்படுத்தி பெரும்பாலான படைப்பாளர்கள் படைப்புக்களைப் படைத்துக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறு, உருவாகும் படைப்புக்கள் திணையை தனித்துறையாக வளர்த்தெடுக்கிறது.

இலக்கண, இலக்கியங்களின்றி நவீனயுகத்தில் நாடகம், சினிமா, இசைத் துறைகளும் திணையை வளர்க்கும் கருவியாக செயல்படுகின்றன. இவை, புதிய வகைத் திணைகளை ஊற்றெடுக்கும் கருவூலமாகத் திகழ்கின்றன.

நவீனமயமாதல், உலகமயமாதல் இவ்விரு வகையால் வளம் குன்றும் ஐந்திணைகளை கதை, கவிதை, புதினம், உளவியல், சமூகவியல், மெய்யியல் துறைகள் திணை விரிவாக்கத்தின் அடையாளங்களை ஆராய முற்படுகின்றன. எனவே, ஐந்திணை மட்டுமல்லாது, புதிய வகை நிலங்களையும் எடுத்தாள வேண்டிய தேவை உள்ளன. ஏனெனில், அந்நிலங்களை சுட்டிக்காட்டும் போது அவற்றுடன் புது வகை முதல், கரு, உரிப்பொருட்களும் உருவாக வாய்ப்புள்ளது. பழைய திணைகளை மறு உருவாக்கம் செய்யவும் அவற்றினை நவீன வகைத் திறனாய்வு பகுப்பாய்வுகளுடன் ஒப்பாக்கம் செய்யவும் வழிவகைப் புரிகின்றன.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை நிலங்களுடன் தீவுகள். தீபகற்பங்கள், சொர்க்கம், நரகம், பாதாளம் புதிய வகை நிலங்களும் உருவாக்கம் பெற்று வருகின்றன. “ஃபிரை நிலத்தை மாந்தர் உலகம், விலங்கு உலகம், தாவர உலகம், கனிப்பொருள் உலகம், உருவற்ற உலகம் என ஐந்தாக்குவார்.” (மருதநாயகம்.ப, ஒப்பில் தொல்காப்பியம், ப.254) தொல்காப்பியத்திணைக் கொள்கையுடன் ஒப்புமைப்படுத்தப்பட்டுள்ளது.

தொல்காப்பியம், சங்க இலக்கியங்களில் எடுத்தாளப்படும் பழந்தமிழர்களின் ஐவகை இயற்கைச் சூழலமைவுகளையும், ஆய்வுக்கு உட்படுத்தும் போது, நிலவியல் தன்மையின் அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ள இவ்வைந்து நிலங்களுடைய தனித்தன்மைகளை அடையாளங்காணவும், பூகோள அமைப்பின் நிலப்பிரிவுகளை வரையறைப்படுத்தவும் முடியுமென நிலவியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ஒவ்வொரு நிலமும், அவற்றிற்கேயுரிய ஒழுக்க வகைகள், அந்நிலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வியல் கூறுகளையும், மன உணர்வுகளையும் வெளிப்படுத்துகின்றன. அவை, நிலங்களின் ஊடாக திணைகளை வகைப்படுத்துகின்றன.

**இயற்கையும் மனிதனும்**

மனிதர்கள் சுற்றுப்புறத்தை மாசுபடுத்துவதும், இயற்கையில் கிடைக்கப்பெறும் அரிய வகை வளங்களை தங்களுக்கு சாதகமாகவும் மாற்றி அமைத்தனர். மனிதர்களின் வாழ்க்கைச் சூழலுக்கேற்ப இயற்கையோடு அமைந்த சுற்றுப்புறத்திலும் மாறுதல் ஏற்பட்டன. இவ்வாறான, மாறுதல்கள் மனிதர்களுக்கும் சுற்றுச்சூழலுக்குமான இடைவெளியை உருவாக்கின. துன்பம் நேருகையில் மனிதர்கள் இயற்கையை அன்னையாக நினைந்து ஆறுதல் தேடினர். மனிதர்கள் சக மனிதர்களின் மேல் காட்டும் அதிகாரத்தினை இயற்கையின் மீதும் காட்டினர். இதனால், இயற்கை பலவிதமான பேரிடர்களைச் சந்திக்க நேரிட்டன.

இயற்கையின் ஒரு பகுதியான மனிதர்கள் பிறப்பு முதல் இறப்பு வரை பிற உயிரினங்களோடும், இயற்கையோடும் உறவுக்கொண்டுள்ளனர். இயற்கையில் பிறந்து, வளர்ந்து அங்கிருந்தே கற்றுக்கொள்கிறான். ஒன்றையொன்று இணங்கி வாழும் பூமியில் உள்ள உயிரினங்களைப் போல மனிதனும் இயற்கையின் ஊடாக பயணித்து வந்தான். ஆனால், காலப்போக்கில் செல்வ செழிப்பின் மீது நாட்டம் கொண்டதினால் மனிதர்களின் வாழ்வு பெருகியது. இயற்கை தன்னளவில் சுருங்கியது.

ஆதிகால மனிதர்கள் வேட்டையாடுவதை தொழில் முறையாகக் கொண்டு வாழ்ந்தவர்கள். தேவையான வளங்களை இயற்கை அவர்களுக்கு வழங்கின. அவர்களுடைய சமூகத்தினரையும், இயற்கையையும் உறவினராகவும், காட்டில் உலாவிய விலங்குகளையும், குறிப்பிட்ட சில மரங்களைத் தெய்வமாகக் கருதியும் வழிப்பட்டவர்கள் ஆதிகால மக்கள்.

“மனிதனே இயற்கையின் தலைவன் அல்லது பாதுகாப்பாளன்.” (குளத்தூரான்.க, சுற்றுச்சூழலும் அழகியலும், ப.25) இயற்கையை பேணிக்காக்க வேண்டிய மனிதர்கள் சுய நலத்தைப் பேணுவதில் எண்ணம் கொண்டவர்களாக உள்ளனர். இயற்கையை உறவுப்படுத்திக் காணும் மனிதர்கள் அவற்றொடு இணைந்ததினால் தன் வசப்படுத்தியும் அதன் மீது ஆதிக்கம் செலுத்தவும், தங்களுடைய உடைமைப் பொருளாகவும் கருதினர்.

“‘இசா’ உபநிஷத் கூறுவது என்னவென்றால் இந்தப் பூமிக் கிரஹமானது மனித இனத்திற்கு மட்டும் உரித்தானதல்ல. இக்கிரகத்தில் வாழும் பிற உயிரினங்களுக்கும் அதே அளவில் உரித்தானது. பிற உயிரினங்களை விட மேலான உரிமை மனிதனுக்கு இல்லை. இப்பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும் இறைவனுக்கேயுரியது. ஆதலால் உனக்கு உண்மையாக எவ்வளவு தேவையோ அல்லது ஒதுக்கப்பட்டதோ அதை நீ எடுத்துக்கொள். இதற்கு மேல் நீ எதையும் எடுத்துக்கொள்ளக்கூடாது. ஏனென்றால் இப்பூமி யாருடையது என்பது உனக்குத்தெரியும்”. (மேலது, ப.114) உயிர்களை சமமாகக் கருதும் எண்ணமும், தனக்குத் தேவையானவற்றை விடுத்து, பிறருக்கு கொடுத்து உதவும் மனப்பாங்கும், மனிதர்களுக்கு அமைதல் வேண்டும்.

நவீனமயமாதலின் சீர்கேட்டினால் இயற்கையின் பேராபத்தினைப் பற்றி, வறீதையா கான்ஸ்தந்தின் கூறுகையில் “இயற்கை தனது வளங்களைப் புத்தாக்கம் செய்து கொள்வதற்கான கால அவகாசத்தை அனுமதிக்கும் அளவுக்குப் பொறுமையற்று நிற்கிறான் நாகரீக மனிதன்.” (வறீதையா கான்ஸ்தந்தின், திணைவெளி – நிலம்/சூழலியல்/பண்பாடு, ப.23)

காலங்களுக்கேற்ப வளர்ந்து வரும் மனிதனின் பரிணாம வளர்ச்சி நிலைகள் பெரும்பாலும் இயற்கையின் சுரண்டலுக்கு வழி வகுக்கின்றன. நவ நாகரீகம் பெயரில்

புதுமை ஆக்கத்திற்கு துணைபுரியும் மனிதர்கள் இயற்கையின் வளங்களில் புதுமையைக் காண விருப்பம் கொள்ளாதவர்களாக இருப்பதினை கடிந்துரைக்கிறார்.

**தமிழ் இலக்கியங்களில் இயற்கை**

இயற்கையை இரசிப்பதிலும், அவற்றின் தனித்துவத்தினை அறிவதிலும் சங்கக் காலக் கவிஞர்கள் முன்னிலை வகித்தனர். இயற்கையின் தத்துவங்களையும், யதார்த்தங்களையும் வேட்டையாடியக் காலத்திலிருந்து விடுபடாமல், இயற்கைப் பற்றியக் கருத்துக்களை இடைவெளியின்றி இலக்கியங்களில் பதிவு செய்த வண்ணம் உள்ளனர்.

“பண்டைய கவிஞர்கள் இயற்கையை தங்கள் வாழ்க்கையின் ஒரு பகுதியாகக் கருதினர். மற்றும் மனிதர்களை உயிரினங்களில் ஒன்றாகவே கருதியது மட்டுமல்லாமல் இயற்கைக்குரிய மரியாதையை அளிப்பதற்கான ஒரு ‘நில அறத்தை (Land Ethic)’ வழங்கியுள்ளனர். அவர்கள் இயற்கைக்கு சம உரிமை வழங்கியுள்ளனர். இயற்கைக்கும் மனித நலத்துக்கும் ஒற்றுமை இருப்பதைக் கண்டுள்ளனர்”. (குளத்தூரான்.க, சுற்றுச்சூழலும் அழகியலும், ப.136) ஆதிகால மனிதர்கள் தன்னோடு உறவுக்கொண்டு இயங்கிய நிலத்திற்கும், உயிரினங்களுக்கும் உரிய மரியாதையையும், அறத்தினையும் போற்றினர்.

“கவிஞன் இயற்கையின் தோற்றத்தில், அழகில் மயங்கி அதற்கு மொழி வடிவம் கொடுப்பவன் அல்ல. இயற்கையின் இரகசியங்களில் அவன் ஆழ்ந்து செல்கிறான். இயற்கைக்கும் மனிதனுக்குமான தொடர்பை உய்த்து உணர்கிறான்”. (அவ்வை.எஸ், சங்கப் பாடல்களில் திணையுணர்வும் தன்னுணர்வும் – கவிதையாக்க நெறி, ப. 32)

சங்க காலப் புலவர்கள் நிலப் பதிவுகளையும், அந்நிலங்களில் வாழ்ந்த மக்களுடைய வாழ்வியலை சங்க காலப்புலவர்கள் பாடல்களில் தெளிவுப்படுத்தினர். இப்பாடல்கள், சுற்றுப்புறத்தோடு பண்டைய மக்கள் கொண்டிருந்த சூழலமைவுகளையும், உயிரினங்களுடன் அவர்களுக்கு இருந்த உறவையும் வெளிப்படுத்துகிறது. மனிதனுடைய வாழ்வியல் கூறுகளுக்கும், அடிப்படைத் தேவைகளுக்கும் இயற்கையின் சுற்றுச் சூழலியல் அமைவுகள் விளங்கியன.

கார்த்திகேசு சிவத்தம்பி "தமிழ்ச் சமூக அமைப்பு, சுற்றுப்புறச்சூழலிலிருந்து முகிழ்த்த தனிச்சிறப்பான பண்புநலன்களைக் கொண்டிருந்தது. மானுடவியல் வலியுறுத்தும் மனிதவாழ்வின் ஐந்து படிநிலைக்கட்டங்களையும் வரலாற்றுக்கு முந்தைய காலப்பகுதியிலேயே தமிழ்ச்சமூகம் எட்டி விட்டது தனித்துவம் வாய்ந்ததாகும் என்று தீட்சிதர் கூறுகின்றார்". (கார்த்திகேசு சிவத்தம்பி, பண்டைத் தமிழ்ச் சமூகம் – வரலாற்றுப் புரிதலை நோக்கி, ப.174) என விளக்கியுள்ளார்.

**சுற்றுச்சூழலியல் வரலாறு**

முதன் முதலில் 'சூழலியல்' எனும் சொல் 19ஆம் நூற்றாண்டில் வழக்கில் வந்தது. 1869ஆம் ஆண்டில் ஜெர்மன் உயிரியலாளர் எர்னஸ்ட் ஹேக்கல் சூழலியல் என்னும் சொல்லை உருவாக்கினார். "சூழலியல் என்பது உயிரினங்களுக்கும் அவற்றின் சுற்றுச்சூழலுக்கும் இடையிலான தொடர்புகள் மற்றும் பூமியில் தாவரங்கள் மற்றும் விலங்குகளின் விநியோக முறை பற்றிய ஆய்வு ஆகும்." (Rana s.v.s., Essentials of ecology and environment science, page no. 1) (Ecology is the study of interactions between living organisms and their environment, and the pattern of distribution of plants and animals on the earth)

ஒரு குறிப்பிட்ட விலங்குகள், தாவரங்கள், நிலம், நீர், காற்று, மற்றும் மனிதர்களை உள்ளடக்கிய ஒட்டுமொத்தமான ஓர் ஒழுங்குப்பட்ட அமைப்பினை சூழல் கொண்டுள்ளது. இச்சூழல் அனைத்து உயிரினங்களையும் இணைக்கிறது.

சூழலியல் மாற்றங்களுக்கு இயற்கை வரலாறு முதன்மை ஆதாரமாகும். இயற்கையின் மாற்றங்களுக்கு ஏற்ப பூமியில் வாழும் உயிரினங்களும் அழிவுகளுக்கு உள்ளாகின்றன. "விலங்கின் கரிம மற்றும் அதன் கனிம சூழலுடன் குறிப்பாக அண்டை தாவரங்கள் மற்றும் விலங்குகளுடன் ஏற்படக்கூடிய நட்பு அல்லது விரோத உறவுகளை உள்ளடக்கியது Oikologie." (மேலது, ப.3) (He defined the content of his oikologie as "comparising the relation of the animal to its organic as well as its inorganic environment particularly its friendly or hostile relations which the neighbouring" plants and animals) நவீனச் சூழலியல் கொள்கையை 'oekologie' சொல்லுடன் எஸ்.வி.எஸ். இரானா ஒப்புமைப்படுத்துகிறார்.

ஷ்ரோடர் மற்றும் கிர்ச்னர் (1896, 1902) தனி நபரின் சுற்றுச்சூழல் உறவுகளை "ஆட்டோகாலஜி" (autocology), என்றும் சமூகங்கள் அல்லது உயிரினங்களின் உறவுகளை "சினோகாலஜி" (synecology) என்றும் இரு வகைப்படுத்தினர்.

பூமியில் வாழும் உயிரினங்களின் வாழ்வாதாரங்களின் அடிப்படையில் அவற்றின் வகைப்பாடுகள், உருவவியல், இனப்பெருக்கம் மற்றும் வாழ்க்கைச் சுழற்சி ஆகியவற்றை பாதிக்கும் காரணிகளை "ஆட்டோகாலஜி" அடையாளப்படுத்துகிறது. உயிரினங்கள் சுற்றுச்சூழலோடு கொண்டுள்ள உறவு நிலையைப் பற்றியும், மக்கள் தொகைப்பெருக்கம், உயிரினங்களின் குழுக்கள் சுற்றுச்சூழல் அமைப்புகளின் ஆய்வு பற்றியது "சினோகாலஜி" ஆகும்.

ராமலே தியோஃப்ராஸ்டஸ் முதல் சூழலியல் நிபுணராகக் கருதப்பட்டார். இவர், தாவரங்களின் சுற்றுச்சூழலை ஆராய்ந்தார். ரோமானிய எழுத்தாளர்களில் ஒருவரான பிளினி.தி.எல்டர் (23-79 கி.பி) சூழலியல் வகைப்பாட்டு முறையைப் பயன்படுத்தினார். ஜெஸ்னர், ஆல்ட்ரோவன்டி, பெலோன், சோர்டஸ் மற்றும் கேஸல்பினோ புவியியலுடனும், வேதியியலுடனும் இயற்கையை மையப்படுத்தி புதியதோர் கொள்கையை அறிமுகப்படுத்தினர்.

காலந்தோறும் சூழலியல் ஆய்வுமுறைகளில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாக, நவீனயுகத்தில் அறிவியல் துறையாக வளர்ச்சிப் பெற்றது. இவ்வறிவியல் ஆய்வு, வேதியியல், இயற்பியல், புவியியல், வானிலை, கால நிலை, நீரியல், மானுடவியல், சமூகவியல், கணிதம் மற்றும் புள்ளியியல் ஆய்வுகளுக்கும் துணைபுரிந்தன. இயற்கையின் பேராபத்தை தடுக்கும் விதமாக, பல நிறுவனங்களுக்கும் சங்கங்களும் 20ஆம் நூற்றாண்டளவில் உருவாகின. குறிப்பாக, 1913 இல் பிரிட்டீஷிலும், 1915 இல் அமெரிக்காவிலும் சுற்றுச்சூழலியல் சங்கங்கள் நிறுவப்பட்டன.

1971 இல் சர்வதேச அமெரிக்க சூழலியல் நிறுவனம் அமெரிக்காவிலும், சர்வதேச வெப்பமண்டல சூழலியல் சங்கம் 1960இல் இந்தியாவின் தலைமையகத்திலும் உருவானது. இச்சங்கங்களும், நிறுவனங்களும் சூழலியல் கருத்துக்களை பதிவு செய்யும் இதழ்கள் தோன்றக் காரணமாக அமைந்தன. அவை, ஜர்னல் ஆஃப் எக்காலஜி, ஜர்னல் ஆஃப் அனிமல் எக்காலஜி, ஜர்னல் ஆஃப் அப்ளைடு எக்காலஜி, ஒய்கோஸ், ஒகோலாஜியா இவ்விதழ்கள் உயிரியலின் கோட்பாடுகளுக்கு உறுதுணை அளித்தன.

இவ்வாறு, சூழலியல் பரந்துப்பட்ட மக்களின் சிக்கல்களை அங்கீகரித்து அறிவியல் ஆக்கம் பெற்றது. இவையன்றி, வரலாறு, நாகரீகம், கலாச்சாரம், பண்பாட்டுத் தன்மைகளுடன் இணைந்தன.

உயிரினங்கள் வாழும் பகுதி சுற்றுப்புறமாகும். மனிதர்கள் வளரும் போது அவர்களைச் சுற்றியுள்ள சுற்றுப்புறமும் தொழில் நுட்ப வளர்ச்சியினால் விரிவடைகிறது. அவற்றினை, சூழலியவாதிகள் 'சுற்றுப்புறச்சூழலியல்' என்றனர். மனிதனைச் சுற்றியுள்ள சமூகம், பொருளாதாரம், உயிரினங்களின் கல்வி, பூமி, நீர், நிலம், வாயு ஆகியவற்றுடன் மனிதனும் பிற உயிரினங்களும் இணைவதும் சூழலியமாகும்.

செடிகள், விலங்குகள், ஆறுகள், குளங்கள், மலை, பூமி, ஆகாயம் உள்ளடக்கிய வாழ்வியலைப் பற்றியது சுற்றுச்சூழலியல். இவை மட்டுமல்லாமல், சமூகப் படி நிலைகளில் மனிதன் உருவாக்கிய வீடுகள், சாலைகள், தெருக்கள், பட்டணங்கள், கலை, இலக்கியம், வரலாறு என்பவைகளும் சுற்றுப்புறச்சூழலியமாகும்.

“திணைக்குடிகளின் மரபறிவைக் கணக்கில் கொள்ளாத சூழலியல் அக்கறைகள் தோற்றுவிடுகின்றன. அத்தோல்விகள் மக்களின் சுமையைப் பெருக்கவும் செய்கின்றன. காலங்காலமாக வாழ்ந்துவரும் நிலத்தையும் அதன் இட, கால, பொழுதுகளின் போக்குகளுக்குத் தங்கள் வாழ்வைத் தகவமைத்துக் கொண்டு வாழ்ந்துவரும் அம்மனிதர்களிடமிருந்து கற்றுக்கொள்ளும் எளிமை நமக்கு வேண்டும்”. (வறீதையா கான்ஸ்தந்தின், திணைவெளி - நிலம் சூழலியல் பண்பாடு, ப.16 )

கடந்த ஐம்பது ஆண்டுகளில் மனிதனுக்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையேயான உறவு பெரிதும் மாறிவிட்டன. நாகரிக வாழ்வும் சுற்றுச்சூழலும் ஒன்றுக்கொன்று நேர்மறையான, விசித்திரமான நிகழ்வை ஒருங்கிணைக்கின்றன. இதற்குக் காரணம், மக்களிடையே சூழலியல் விழிப்புணர்வின்மையாகும். சுத்தமான காற்று, நீர், விவசாயத்திற்கு ஏற்ற தட்பவெப்ப நிலை, அடிப்படைத் தேவைகளுக்காக மனிதர்கள் இயற்கையை நாடுகின்றனர்.

இயற்கை வளங்களின் அழிவு, உலகளாவிய வளிமண்டல மாற்றங்கள், பல்லுயிர் இழப்புக்களை சூழலியல் முன்வைக்கின்றன. இவ்வுலகில் நிலைத்திருக்க விலங்குகள், தாவரங்கள் மனிதனுக்குத் தேவையான பொருட்களின் ஆதாரமாக சுற்றுச்சூழல் விளங்குகிறது.

**சுற்றுச்சூழல் பாதுகாப்பு**

இயற்கையின் அழிவுக்கு காரணமாக விளங்கும் மனிதர்கள் அவற்றினை பாதுகாக்கவும் கற்க வேண்டும். வலுவற்றுப்போகும் இயற்கையைப் பற்றிய விழிப்புணர்வை சமூகத்தில் ஏற்படுத்த வேண்டும். தொழில் நுட்ப வளர்ச்சியுடன் சுற்றுச்சூழலின் பாதுகாப்பும் அவசியமாகும் என்பதை சூழலியல் திறனாய்வாளர்களின் பின் வரும் பண்புகளின் வாயிலாக அறிய முடிகிறது.

- தொழிற்சாலைகளிலிருந்தும் வாகனங்களிலிருந்தும் வெளியேறும் புகையைக் கட்டுப்படுத்துதல்.
- காடுச் சார்ந்து வாழும் விலங்குகளைப் பாதுகாப்பது.
- காட்டில் வாழும் விலங்குகளையும், உயிரினங்களையும் பாதுகாக்கும் விதிமுறைகளைப் பின்பற்றுதல், அவையின் வாழ்வாதாரத்துக்குத் தேவையான திட்டங்களை உருவாக்குதல்.

சுற்றுப்புறத்திற்கு தீங்கு விளைவிக்கும் செயல்களை தடுத்து, இயற்கையை அழிவின் விளிம்பிலிருந்து காத்தலின் மூலமாக, சுற்றுச்சூழலின் அழகியலை வரும் தலைமுறையினருக்கும் உபயோகப்படுத்தும் உரிமையை வழங்குதல் உண்மையான தொழில் நுட்ப ஆக்கங்களாகும்.

மனிதனின் தேவைக்காக இயற்கையை மாசுபடுத்துவதினால், மக்கள் தொகைப்பெருக்கம், உணவுப்பற்றாக்குறை, நீர்ப்பற்றாக்குறை, மாசுபாடு, உலகமயமாதல், பனிக்கட்டி உருகுதல், பூகம்பம், கால நிலை மாறுபாடு, கடல்மட்ட உயர்வு போன்ற பேராபத்துக்கள் சூழ வாய்ப்புள்ளது. இப்பேராபத்துக்களைத் தடுப்பதற்குரிய விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்துதல் அவசியமாகியுள்ளது.

**சுற்றுச்சூழல் அமைப்பு**

சூழலியலின் அடிப்படை செயல்பாட்டு அலகுகளை சுற்றுச்சூழல் அமைப்பு ஆய்கிறது. பல்வேறு உயிரினங்கள், மக்கள் தொகை மற்றும் அவற்றின் உயிரியல் அல்லாத சூழலின் ஊடாட்டத்தினைக் குறிக்கிறது.

ஸ்மித்தின் (1966) சுற்றுச்சூழல் அமைப்பின் பண்புகள் நான்கு விதமான வகைப்பாடுகளில் கீழ்க்கண்டவாறு ஆராய்கிறது.

- சுற்றுச்சூழல் அமைப்பு சூழலியலின் முக்கியமான கட்டமைப்பு மற்றும் செயல்பாட்டைத் தீர்மானிக்கிறது.
- பன்முகத்தன்மையுடன் தொடர்புக்கொண்டது.
- இவ்வமைப்பு செயல்பாட்டின் ஆற்றல் பொருள் சுழற்சியுடன் இயங்கக்கூடியதாகும்.

**சமுதாயச்சூழலியல்**

பொருளாதார தேவையின் பொருட்டு மனிதர்கள் சீர்மிகு வாழ்வை வாழ சுற்றுப்புறத்தை தனக்கேற்ப மாற்றியமைக்கின்றனர். உலகத்தில் உள்ள அனைத்து உயிரினங்களையும் சம்மாக கருதும் போக்கு சமுதாயத்தில் உருவாக வேண்டும். இன்றைய, நவீன உலகில் மனிதர்களின் சுய நலம் கொண்ட வாழ்வியல் முறையானது பூமியில் உள்ள உயிரினங்களையும் வீழ்ச்சியுறுத்துகிறது.

**மனிதச்சுற்றுச்சூழலியல்**

மனிதன் இயற்கையில் ஏற்படுத்தும் மாற்றங்களை எடுத்துரைப்பது இவ்வகைச் சூழலியமாகும். தங்களது தேவைக்காக இயற்கையை மாறுதல்களுக்கு உட்படுத்துவதும், மனித செயல்பாட்டுக் கருவியாகவும் மாற்றுகின்றனர்.

**சமூக – கலாச்சார சூழலியல்**

ஒவ்வொருவருக்கும் வெவ்வேறான கலாச்சாரம், பண்பாடு, வளர்ச்சிப்படி நிலைகள், பொருளாதார முன்னேற்றக் கண்ணோட்டங்களுக்கு இவ்வகைச் சூழலியல் அளிக்கிறது.

**சுற்றுச்சூழலியல் விமர்சனம்**

1990 களின் காலக்கட்டங்களில் இலக்கியத்திற்கும் இயற்கைச்சூழலுக்கும் உள்ள உறவின் ஆய்வாக சூழலியல் விமர்சனம் உருவாகின. இவ்விமர்சனம் மனிதர்களுக்கும், நிலப்பரப்புக்கும் இடையேயான உறவை வெளிக்கொணர்ந்தது. ஆங்கில எழுத்தாளர் Cheryll Glotfelty சூழலியம், இலக்கியம் இரண்டையும் இணைத்து குறிப்பாக, மனிதன் வாழும் பகுதியை திறனாய்வுக் கண்ணோட்டத்தில் உருவாக்கினார். அவர், ஒட்டுமொத்தமாக ‘உலகம்’ என்ற ஒற்றைச் சொல்லுக்குள் சூழலியல் ஆய்வினை மேற்கொள்ள பூமியை மையமாகக் கொண்ட அணுகுமுறையை ஆராய்வது சுற்றுச்சூழலியல் விமர்சனம் என்று கூறினார். இவ்விமர்சன நோக்கு இயற்கை அமைப்பின் உள்ளார்ந்த மதிப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கின்றன. ‘Ecocriticism’ என்பது ‘Eco’ மற்றும் ‘Critic’ இரண்டு கிரேக்கச் சொற்களான ‘Oikos’, ‘Kritis’ என்பதிலிருந்து பெறப்பட்டவையாகும். இதற்கு, ‘வீட்டு அதிபதி’ என்பது பொருளாகும்.

இலக்கியத்தை ஆய்வுக்கு உட்படுத்தவும், விரிவாக்கவும் விமர்சகர்களுக்கு கிடைத்த அரியப்பெட்டகம் சூழலியல் விமர்சனம். மனிதனுக்கு இயற்கைப் பற்றிய

புரிதலை வழங்கும் சூழலியலை விமர்சன முறையில் 1978 இல் வில்லியம் ரூகெர்ட் கண்டறிந்தார். பூமியில் வாழும் மனிதரல்லாத பிற உயிர்களை விடவும், மேம்பட்டவராகவும், இயற்கையை தன் வசப்படுத்தும் எண்ணம், மனிதரின் குணமும், இயற்கை படும் துன்பத்தையும் புதிய களம் நோக்கி சூழலியல் விமர்சகர்கள் பயணிக்கின்றனர்.

இலக்கியம் குறிப்பிடும் இயற்கையின் பண்புகளை கற்பதற்கு மட்டுமல்ல, அவற்றை, மனிதயினத்தின் ஒரு பகுதியாக கருதுதலும், சூழலியலின் பரந்துபட்டக் கண்ணோட்டத்தைக் கொண்டிருக்கவும், சூழலியல் விமர்சனம் மனிதனுக்கு துணை நிற்கிறது. நவீனகாலப் படைப்புகளில் இயற்கையின் பரிணாமங்களை தற்கால சூழலியவாதிகள் படைப்புகளில் படைக்கின்றனர்.

“இன்றைய சுற்றுச்சூழல் பிரச்சனைகள் இயற்கையை அதன் பல்வேறு வெளிப்பாடுகளிலும் மிகவும் அழித்துள்ளன. ஒரு வரலாற்றுத் தேவை காரணமாக இன்று நாம் இயற்கையை விமர்சனப்பூர்வமாக அணுகுகிறோம் மற்றும் மனித இனத்தின் செயற்பாடுகள் இயற்கையை எவ்வாறு அழித்துள்ளன என்பதையும் காட்ட விரும்புகிறோம்”. (குளத்தூரான்.க, சுற்றுச்சூழலும் அழகியலும், ப.78) தற்கால இலக்கியங்களிலும் படைப்பாளிகள் சுற்றுப்புறத்தின் மேல் எழுந்த விமர்சனங்களையும், இயற்கையின் மாசுபாட்டையும், விளைவுகளையும் இலக்கிய ஆர்வலர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

**சூழலியலின் பின்விளைவுகள்**

1. பொருளாதாரத் தேவை, மனிதர்கள் பூமியில் உள்ள இயற்கை வளங்களை சுரண்டுவதினால், பூமியில் நிலைக் கொண்டுள்ள காடுகளின் வளம் சுருங்கி எங்கும் பாலை வனமாகக் காட்சியளிக்கிறது.

2. பூமி வெப்பமடைதல், பனிப்பாறைகள் உருகுதல், கடல்மட்டத்தின் அளவு உயருகின்றன.
3. கால நிலைகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. உதாரணமாக, பூமி குளிர்ந்து பெரும்பகுதி பனியால் மூடிவிடுகின்றன.
4. பூமியில் வாழும் உயிரினங்களின் வாழ்வு சிக்கலுக்குள்ளாகின்றன. இத்தகைய, பருவ நிலை மாற்றத்தினால் உலகில் வாழும் உயிரினங்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாவாதாக இராணா விளக்குகிறார். அவர், சுற்றுச்சூழலுக்கு ஏற்ப வாழ்க்கை முறையை மாற்றியமைத்தல், காடுகளின் வளங்களை பேணிக்காத்தல், பூமியில் வாழும் உயிரினங்களை மனிதன் சமமாக எண்ணுதல், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மக்களில் ஏற்படுத்துதல், இயற்கையைப் பாதுகாத்தல்கள் மூலமாக கால நிலைகளில் ஏற்படும் பேராபத்தை தடுக்க வியலும் என்கிறார்.

உலகம் எதிர்கொள்ளும் சுற்றுச்சூழலியல் பின்விளைவுகளை கான்ஸ்தந்தின் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

- ”கீரின்லாந்தின் பனிப்பாறைகள் குடைசாய்ந்து கொண்டிருக்கின்றன.
- இந்தியாவின் பருவமழைப் போக்குகள் மாறி வருகின்றன.
- திபெத் பீடபூமியின் முகம் மாறிக்கொண்டிருக்கின்றது.
- அமோசான் காடுகளும் சஹாராவின் சோலைகளும் அழிந்து கொண்டிருக்கின்றன.
- எல்நினோ வெப்ப விளைவு தென்கடலில் மேல் திரட்சியை விரிவுப்படுத்தி வருகின்றது.”

(வறீதையா கான்ஸ்தந்தின், திணைவெளி – நிலம்/சூழலியல்/பண்பாடு, ப.29) சூழலியல் மாற்றங்களை ஆய்வுரைக்கிறார். புற்றின் ஒவ்வொரு பகுதியையும் கரையான் அரிப்பது போல இயற்கையின் பகுதிகளை மனிதர்கள் பேரழிவுக்கு உட்படுத்துகின்றார்கள். சுற்றுப்புறம் எவ்வாறு பாதிக்கிறது? அவற்றின் சிக்கல்கள், மீட்டுருவாக்கத்தினை அறிவியல் பூர்வமாக இப்பண்புகள் ஆய்கிறது.

**சுற்றுச்சூழலியல் கல்வி**

மனிதர்கள் செய்யும் தவறுகளுக்கு பருவ நிலைகளிலும் மாற்றமடைகின்றன. சுற்றுப்புறத்தின் பாதுகாப்பு சமூகத்தில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் உரிய குறிக்கோளாகும். சுற்றுச்சூழல் கல்வியியலுக்கு இரண்டு நோக்கங்கள் உள்ளன.

1. சுற்றுப்புறம் குறித்த தெளிவான வரையறைகளும், அறிவுரைகளும் வழங்குதல்.
2. சுற்றுப்புறத்தோடு உறவுமுறையை ஏற்படுத்துவதும் அதனை நடைமுறைப்படுத்தவும், அதற்குரிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.

சுற்றுப்புறத்தோடு ஆழமான புரிதலையும், சிக்கலையும் சரியான வழிமுறையில் நடத்தலும் விதிமுறைகளைப் பின்பற்றுவதாக சுற்றுச்சூழலியல் கல்விமுறை அமைய வேண்டும். சுற்றுப்புறத்தைக் குறித்து எப்படி கற்பது?, எவ்வழியில் கற்பது?, கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் வழி நடத்தும் முறைகள் எப்படிப்பட்டது?, கிடைக்கப்பெறும் தகவல்களின் படி நடவடிக்கை எடுப்பது எவ்வாறு? வினாக்களுக்கு விடைக்காணுதல் சுற்றுச்சூழலியல் கல்வியில் உட்படுத்த வேண்டும். மனிதன் × மனிதன், மனிதன் × சமூகம், மனிதன் × இயற்கை ஆய்வியல் நிகழ்வுகள் கற்றலின் படி நிலைகளாக அமையப்பெற வேண்டும்.

**ஒய்கோபொயடிக்ஸ்**

இந்தியாவில் சூழலியல் திறனாய்வு ஒய்கோபொயடிக்ஸ் (oikopoetics), திணைக்கவிதையியல் (tinaipoetics) பெயர்களில் படைப்பாக்கம் பெறுகிறது. ஒய்கோஸ் கிரேக்கச் சொல்லாகும்.

ஒய்கோபொயடிக்ஸ் அல்லது எகோபொயடிக்ஸ் ஒய்கோஸின் கவிதை வடிவங்களின் ஆக்கக் கூறுகளாகும். பொதுவாக, ஒய்கோஸ் என்பது புனிதம், மனிதர்கள், இயற்கை, மற்றும் கலாச்சார நிகழ்வினை ஒருங்கிணைந்த உறவில் நிற்கும்

இணைப்பினை அடையாளப்படுத்துகிறது. சமூகத்தில் நிலவும் கலாச்சார, பண்பாட்டின் பகுப்பாய்வு செய்ய கருவூலமாகவும் ஒய்கோஸ் பயன்படுகிறது.

பாமயன் " 'Oikos' என்பதற்கு கிரேக்கத்தில் வாழிடம் அல்லது வீடு என்று பொருள்; logy என்பதற்கு இயல் என்று பொருள். இவ்விரண்டு சொற்களும் கூடி 'Ecology' என்னும் சொல் உருவாகியுள்ளது". (பாமயன், திணையியல் கோட்பாடு, ப.12). ஒய்கோஸின் பொருளை விளக்கியுள்ளார்.

இலக்கியப் படைப்பில் குறிப்பிடும் கதாபாத்திரங்களையும், முன்னோர்களின் நிலங்கள், கலாச்சாரங்கள், பண்பாடுகள், உணவுமுறைகள் பற்றியது ஒய்கோஸ். ஒய்கோஸினை ஆராயும் இலக்கிய ஆர்வலர்கள் பின்பற்ற வேண்டிய சில கடமைகளை சூழலியல் ஆர்வலர் நிர்மல் செல்வமணி பின்வருமாறு வரையறுத்துள்ளார்:-

1. ஒய்கோஸை அடையாளங் காண வேண்டும்.
2. ஒய்கோஸுக்கும் சூழலுக்கும் இடையேயான உறவை ஆராய வேண்டும்.
3. ஒய்கோஸை பிற துறைகளுடன் ஒப்பிடுதல் வேண்டும்.

நிர்மல் செல்வமணி ஒய்கோஸை இருவகைப் படுத்தியுள்ளார். அவை,

1. **ஒருங்கிணைந்த திணை (Integrative Oikos):-**

மனிதர்களின் இயற்கைச் சூழலமைவுகளையும், கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் கூறுவது ஒருங்கிணைந்த திணையாகும். இவ்வகைத்திணை சமூகத்தில் அனைவருக்கும் சம உணர்வையும், சுதந்திரத்தன்மையையும், இயற்கையைப் போற்றும் மனப்பான்மையையும் வழங்குகிறது. இயற்கையைப் பேணிக்காத்த ஆதிகாலச் சமூகங்களின் கொள்கையை இத்திணை வலியுறுத்துகிறது.

ஒருங்கிணைந்த திணை பல்வேறுபட்ட நிலத்திணை வகைகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. மலைகள், புதர்கள், மண், கடல் அவற்றிற்குரிய

தனித்தன்மைகளுடன் விளங்குவதையும், சமூகத்தினை மையப்படுத்திச் செயல்படுவதும் இத்திணையிலாகும். எனவே, மனிதர்களுக்குரிய இயற்கைக் கொள்கைகளையும், கடமைகளையும், கலாச்சாரம், பண்பாடு, இயற்கைச் சூழலின் சுதந்திரப் போக்கை ஒருங்கிணைந்த திணை எடுத்துரைக்கின்றன.

2. **படிநிலைத்திணை (Hierachic oikos):-**

இயற்கையை உயர்ந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கும் தன்மையையும், தமிழ்ச்சமூகத்தில் புதியதொரு இயற்கைக் கொள்கைகளையும் படி நிலைத்திணை வலியுறுத்துகிறது. மனிதர்கள் வாழுகின்ற பகுதிகளில் இயற்கையின் பங்களிப்பை உணர்த்துவதும், கடவுள் தான் இயற்கை, இயற்கை தான் கடவுள் என்னும் உலகார்ந்த தத்துவத்தை மனிதர்களுக்கு இவ்வகைத்திணை உணர்த்துகின்றன.

ஒய்கோஸ் மற்றும் வீடு சொற்கள் மனிதர்கள் வாழும் குடும்பத்தை சுட்டுகிறது. எனவே, மனிதர்கள், மனிதரல்லாத பிற உயிரினங்களையும் குடும்பம் எனும் ஒற்றைச் சொல்லுக்குள் ஒய்கோபொயடிக்ஸ் கட்டமைக்கிறது.

**ஒய்கோபொயடிக்ஸும் திணையும்**

ஒய்கோஸுகள் திணைக் கவிதைக் கூறுகளில் ஆக்கம் பெறும்போது, ஒய்கோபொயடிக்ஸாக உருவாகிறது. ஒய்கோபொயடிக்ஸும் திணைக்கவிதையும் நெருங்கிய உறவினைக் கொண்டிருப்பினும், இவ்விரண்டுக்கும் இடையேயும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. திணைகள் ஒய்கோஸுகளாகும். ஆனால், ஒய்கோஸுகள் திணைகளாக வேண்டுமென்பதில் வரையறை இல்லை என நிர்மல் செல்வமணி குறிப்பிடுகிறார்.

இயற்கையையும் மனிதக் கலாச்சாரத்தையும் ஒருங்கிணைத்து, காணுவது சுற்றுச்சூழலியல் காரணியாகும். கிரேக்கச்சொல் ஒய்கோஸ்ஃம் தமிழரின் திணையும் ஒன்றோடொன்று இணைவுக்கொண்டதாகக் காணப்படுகின்றன.

மனிதர்களின் குடும்ப அமைவு, இயற்கைச்சூழல், பொருளாதார மாற்றங்கள் ஒய்கோஸ்ஃடன் ஒருங்கிணைவது போன்று தமிழரின் ஐந்திணைகளும் அந்நில மக்களின் பண்பாட்டு, கலாச்சாரங்களுடன் உறவுக்கொண்டுள்ளன. இவ்வாறாக, திணையும் ஒய்கோஸ்ஃம் இணைந்துக் காணப்படுகின்றன. இத்திணை, இடம், காலம், நேரம் (முதற்பொருள்), உயிரினங்கள் (கருப்பொருள்), மனிதனின் நடவடிக்கைகள் (உரிப்பொருள்) மூன்று வகையாகப் பிரிக்கலாம் என்றும் குறிப்பிடுகிறார்.

**திணைச்சுற்றுச்சூழலியல்**

சுற்றுப்புறத்திற்கு ஏற்ப வாழும் மனிதர்கள் முதல், கரு, உரி மூன்றின் வகைமைப்பாட்டுக்குள் அகத்திணைக் கூறுகளைப் பழந்தமிழர்கள் கட்டமைத்தனர். அக்கட்டமைப்பு பிற்காலங்களில் சுற்றுச்சூழலியமாக உருமாறியது. “ஓர் உயிரினத்திற்கும் அதைச்சுற்றியுள்ள பிற உயிரினங்களுக்கும் அதன் சுற்றுப்புறத்திற்கும் உள்ள உறவைப் (ஒழுகலாற்றை) பற்றிய படிப்பு திணையியல் (Ecology) என்று கூறுவர். (பாமயன், திணையியல் கோட்பாடு, ப.12) பூமியில் வாழும் ஒட்டுமொத்தமான உயிரின வகைப்பாடுகளையும், வாழ்வியலையும் எடுத்துக்கூறும் சுற்றுப்புறம் திணைமைவியலாக வளர்ந்துள்ளது.

திணையும், சூழலியமும் மனிதர்கள் வாழும் குடும்பத்தையும் அவர்களைச் சுற்றி நடைபெறும் உயிரினச்சூழலின் வேறுபாடுகளையும் உள்ளடக்கியுள்ளது. “திணை என்ற சொல்லுக்கு ‘வீடு’ என்ற பொருளுண்டு ‘Ecology’ என்ற சொல்லுக்கு ‘வீடு’ என்று பொருள் மற்றும் ‘உறவு’ (Living Relations) என்ற பொருளும் உண்டு.” (மம்மது. நா, தமிழர்

திணை, ப.15). திணை, Ecology சொற்கள் வீடு பொருளைத்தருகிறது. இவை, இவ்விரண்டின் உறவுகளை எடுத்துக்காட்டுகிறது. மனிதனைச் சுற்றியுள்ள சமூகப்படி நிலைகளை பற்றியதாக திணை அமையப்பெற்றுள்ளன.

திணையை அழகியல் திறனாய்வுடனும், சூழலியல் திறனாய்வுடனும் ஒப்புமைப்படுத்த க.ஜவகரும், நிர்மல் செல்வமணியும் அமைந்தனர். திணைச்சமூகத்தின் வாழ்வியலுடன் கவிதைகளை அணுகி, புதிய திறனாய்வு அணுகுமுறையை நிர்மல் செல்வமணி கண்டறிந்தார். திணைக்கொள்கைகளை கவிதையியலுடன் இணைத்து புதிய சொல்லான ‘ikopoetics’ யை நவீனக் கவிதையியலுக்கு அறிமுகப்படுத்தினார். இவ்வாறு, பழந்தமிழர்களின் திணை நவீனயுகத்தில் ஒய்கோஸாக வளர்ச்சியடைந்தது. “(பருவ) காலம், ( நாட்) பொழுது, ஒழுக்கம், விலங்குகள் மற்றும் தாவரம் முதலிய முதல், உரி, கருப்பொருட்களுக்கு இடையே ஏற்படும் உறவு (Interaction) என்பதே திணை (Ecology)”. (மம்மது. நா, தமிழர் திணை, ப. 20) எனலாம்.

இயற்கையோடு ஒன்றிணைந்த உயிரினங்களையும், கால நிலைகளையும், பருவங்களையும் பண்டைத் தமிழ்ச்சமூகம் திணையின் அடிப்படையில் பாகுபடுத்தி முதல், கரு, உரி மூவகைக்குள் விரிவுப்படுத்தினர். இவ்வகையான ஆய்வுகள் தற்கால சுற்றுச்சூழலுக்கு வலுவூட்டியது. இயற்கை தன்னிலையிலிருந்து மாறாதது. ஆனால், மனிதர்களுடைய தேவைக்காக இயற்கையை மாசுபடுத்துகின்றனர். தன்னிருப்பிலிருந்து மாறாத இயற்கையை தனக்கு ஏற்றவாறு, மாற்றியமைக்கின்றனர்.

நிலத்தையும் அவற்றொடு இணைந்த கால நிலைகளையும், பருவங்களையும், மனிதர்களின் உறவு நிலைகள், தொழில்கள், கலாச்சாரம், பண்பாடு என்பவைகளுடன் திணைகள் ஒன்றிணைந்துள்ளன. பாமயன் ஆங்கிலத்தில் வழங்கும் ‘பயோம்’ சொல்லும்

திணையுடன் ஒப்புமை உடைய சொல் என்கிறார். இச்சொல், திணைச்சமூகத்தின் காரணிகளான பொருளாதாரம், அரசியல், குடும்பம் போன்றவைகளைக் குறிப்பிடுகிறார்.

பண்டைத் தமிழர்கள் வாழ்ந்த இயற்கைச் சூழலை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஐந்து வகைப்படுத்தினர். அந்நிலப்பகுதிகளும் தனித்துவமான பண்புகளையும், அமைவுகளையும் கொண்டிருந்தன. இவ்வைந்து நிலப்பிரிவுகளின் சூழலமைவுகளும், உயிரின வகைமைகளும், இயற்கையுடன் பிணைந்துள்ள உயிரினங்களின் வாழ்வாதாரங்களும் சூழலமைப்பு (Ecosystem) விரிவுப்படுத்தியது.

பண்டையக்கால மனிதர்கள் இயற்கையோடு இணைந்த வாழ்வை மேற்கொண்டவர்கள். அவர்களுக்குத் தேவையான உணவுகளையும், நீர் நிலைகளையும் அறிந்திருந்தினர். ஆகவே, பிற சமூகங்களோடும் சுற்றுப்புறத்தோடும் உறவு நிலை கொண்டிருந்தனர். இச்சுற்றுப்புறம், மக்களின் வாழ்வியல் முறைகளில் பலவிதமான மாற்றங்களை சந்திக்க நேர்ந்தன. பல தலைமுறைகளாக நிலத்தின் பயன்பாடு மற்றும் மேம்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்களினால் நிலப்பரப்பில் நீண்டதொரு நெடிய மாற்றங்களுக்கு உட்பட்டன.

அவற்றில் முதலாவது, விவசாயத்தில் மாற்றங்கள் ஏற்பட்டது. காடழிப்பு, கால் நடைகளின் மேய்ச்சல் நிலங்களை விடுத்து வேறு நிலங்களில் மேய்ச்சலுக்கு விடுதல், புல்களை வெட்டுதல், விவசாய நிலங்களை அழித்து அந்நிலத்தில் வீடுகளைக் கட்டுதல், இராசாயன உரங்களின் பயன்பாடு போன்றவையாகும். இதனுடைய விளைவு, மண், நிலம், நீர், காற்று மாசுபட்டன. ஒரு பக்கம் உணவுத்தேவையின் அதிகரிப்பும், மறுபக்கம் சனத்தொகைப்பெருக்கமும், நவீனயுகத்தில் அபாயகரமான நீர்ப்பற்றாக்குறை, உணவுப்பற்றாக்குறை, போர்கள், நோய்கள் போன்ற சுற்றுப்புறச்சூழல் சிக்கல்களை இவ்வுலகம் நேரிடுகிறது.

பூமியில் வாழும் அனைத்து உயிரினங்களையும் பாதுகாப்பதற்கும், அவையை அழிவின் விளிம்பிலிருந்து காக்கவும் சுற்றுச்சூழல் குறித்த ஆய்வை வலுப்படுத்த வேண்டும். பூமியில் உள்ள உயிருள்ளவைகள், உயிரற்றவைகள் மனிதனைச் சுற்றியுள்ள அனைத்தும் சூழலியமேயாகும்.

சுற்றுப்புறத்தை சமன் நிலையில் வைத்துக்கொள்ளும் ஆற்றல் மனிதனிடம் இருப்பதாகக் கருதப்படுகிறது. சூழலியல் அறிவியலைப் பின்பற்றுவதும், உயிரினங்களின் வாழ்வியல் கல்வியை முன்னிறுத்துவதும் சூழலியல் திறனாய்வின் ஒரு பகுதியாக அமைந்துள்ளது. "இயற்கையை முறையாகக் கையாளத் தவறிவிட்டால் மனிதகுலம் எதிர்காலத்தை இழந்துவிடும்". (வறீதையா கான்ஸ்தந்தின், திணைவெளி-நிலம் சூழலியல் பண்பாடு, ப.101) சுற்றுச்சூழலை முன்வைக்கும் இரண்டு கருத்தாக்கங்களை திணை மற்றும் ஒய்கோஸ் இரண்டும் ஒரே மாதிரியாக இருப்பினும், இவற்றுள்ளும், வேறுபாடுகள் காணப்படுகின்றன.

உலகின் அரணாய் விளங்கும் இயற்கையை மனிதனின் பேராசையால் சிதைவுக்குள்ளாகின்றன. இயற்கை என்றென்றும் நிலையற்ற செல்வமாக மனிதர்கள் நினைத்தால், வருங்காலத்தில் சுற்றுச்சூழலுடன் ஒருங்கிணைக்கப்பட்ட அமைப்பாக இயற்கை வளரும் எனக்கருதலாம்.

## தொகுப்புரை

மனிதனின் வாழ்வியலையும், வாழ்வாதாரங்களையும் மையமாக வைத்து, திணை செயலாற்றுகின்றன. ஆனால், தான் வாழும் சூழ்நிலையில் பல மாற்றங்களை மனிதர்கள் ஏற்படுத்தினர். குறிஞ்சி, முல்லை, மருதம், முதலிய நிலங்கள் தன்னியல்புகளை இழந்து பாலை நிலங்களாக மாற்றம் பெற்றுள்ளன.

தனக்குரிய நில வளத்தையும், சூழலியல் பண்பாட்டையும் உள்ளடக்கிய வாழ்வினைப் பற்றியது திணைக்கோட்பாடு. அரிய வகை மரங்களையும், பல்வகை உயிரினங்களையும் காடுகள் கொண்டுள்ளன. உணவு, உடை, உறைவிடம் இவை மூன்றும் மனிதனுக்குத் தேவையான அடிப்படைக் காரணிகளாகும். இம்மூன்றில், உணவுக்கு அடிப்படைக்களமாக மருத நிலம் அமைகிறது. ஒவ்வொரு திணை நிலங்களும் அவற்றிற்கேயுரிய மேம்பட்ட ஆற்றல்களைப் பெற்றுள்ளது.

கடலின் அழிவு, மழையின்மைக்கும் , வயல் நிலங்களை அழித்தல், வருங்காலத்தில் மக்கள் உணவின்றி இருக்கும் சூழ்நிலைகளையும், வனங்களின் அழிவு பல்லுயிர்களின் வாழ்வாதாரங்களின் அழிவிற்கும் காரணமாக அமைகின்றன.

ஒவ்வொரு திணை நிலங்களும் தனித்தன்மையுடன் என்றென்றும் மனிதர்களுக்கு பல வளங்களையும் அளித்தன. ஆனால், மனிதர்கள் இயற்கைக்கு எதிரான செயல்களில் ஈடுபடுகின்றனர்.

இன்றையக் காலத்தில் விவரிக்கப்படும் சுற்றுச்சூழலியல் (Ecology, Environment) என்ற அறிவியல் கட்டமைப்பினை பழந்தமிழர்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் ஐந்து வகை நிலங்களாக முன்னரே வகைப்படுத்தினர். இவ்வாறாக, திணையியல் திறனாய்வின் ஒரு பகுதி அறிவியல் மாற்றங்களைப் பின்பற்றி நவீனகாலத்தில் திணைமைவியலாக (Ecology) திணை வளர்ச்சிப் பெற்றுள்ளதை அறிய முடிகின்றது.

இயல் இரண்டு

# தேவதேவன் கவிதைகளில் முதற்பொருள்

# இயல் இரண்டு

## தேவதேவன் கவிதைகளில் முதற்பொருள்

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்நிலப்பரப்புகளுக்கும் முறையே முதல், கரு, உரிப்பொருள்கள் கட்டமைக்கப்பட்டுள்ளன. அவற்றுள், முதற்பொருளான இடமும், காலமும் இயற்கைச் சூழல்களுடன் இணைந்துக் காணப்படுகின்றன. மனிதனின் வாழ்வியல் கூறுகளுக்கு இவ்விரண்டும் அமைகின்றன. ஒரு வருடத்தினை இரண்டு மாதங்களாக பிரித்து ஆறு காலங்களாகப் பகுப்பது பெரும்பொழுதும், ஒரு நாளினுடையப் பகுதியாகக் கணக்கிடுவது சிறுபொழுதுமாக தொல்காப்பியம் வகைப்படுத்தியுள்ளன. பருவ காலங்களில் ஏற்படக்கூடிய சூழலியல் அமைவுகள் மனிதனின் வாழ்வியல் சார்ந்த நடைமுறைகளுக்கு வழிவகைப் புரிகின்றன.

இரா. இந்து "முதல் என்பதற்குத் தலைமை, முதன்மை, மூலம் போன்ற பொருள் விரிவாக்கங்கள் உண்டு. அக வாழ்வை வெளிப்படுத்தும் அடிப்படைப் பொருள் என்றும் முதற்பொருளுக்கு முதன்மை தருவர். முதற்பொருளின் அரணாகத் திகழ்கின்ற நிலத்தை உள்ளடக்கிய உலகமும், பொழுது வகைப்பாடுகளைப் பதிவு செய்துள்ள காலமும் வாழ்க்கை இலக்கியங்கள் பிறப்பதற்கு வழிவகுத்துள்ளன". (இந்து.இரா, ஐவகை நிலங்களில் பொறியியல் செய்திகள், ப.5) நிலச்சூழலையும், காலத்தையும் பதிவு செய்யும் முதற்பொருளின் தேவையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

நவீனத்துவப் படைப்பாளர்களில் ஒருவராகத் திகழும் தேவதேவனுடைய கவிதைகளில் வெளிப்படும் முதற்பொருளின் நிலச்சூழலமைவுகளையும், காலப் பகுப்பாய்வுகளையும் பற்றி ஆய்வதாக இவ்வியல் அமைகிறது.

## குறிஞ்சித்திணையின் நிலமும் பொழுதும்

மலையும் மலைச்சார்ந்தப் பகுதியை குறிஞ்சி நிலப்பகுதியாக பண்டைத்தமிழர்கள் வரையறைப்படுத்தியுள்ளனர். மலைப்பகுதியில் கிடைக்கப்பெறும் இயற்கை வளங்களைக் கொண்டு தங்களுடைய அன்றாட வாழ்வை வாழ்ந்தவர்கள் குறிஞ்சி நில மக்கள். ''குறிஞ்சி என்பது குறி என்பதன் அடியாக வந்தது, குறி அடையாளம், காலம், அளவு, தடவை என்று பொருள்படும் என்று பல்லாண்டுக்கால அளவைக் குறிக்கும் பூ. அப்பூக்களுக்கும் செடி. அச்செடி இயற்கையாக வளரும் மலை, மலை சார்ந்த இடம் எனவும் விளக்கி உரைப்பர்". (மாணிக்கம்.அ, குறுந்தொகையில் முதற்பொருள் கருப்பொருள் வருணனைகள், ப.53 ) என்று மாணிக்கம் குறிஞ்சித் திணையின் பொருளை விளக்கியுள்ளார்.

கடவுளால் படைக்கப்பட்ட அற்புதமானப் படைப்பான இயற்கை மனிதர்களுக்கு எண்ணற்ற செல்வங்களை வழங்குகின்றது. அவ்வியற்கையின் ஒரு பகுதியாக மலைக் காட்சியளிக்கிறது.

**”மலை எனில் மலை! அதாவது மிகுதி, மலைநிலம்**

**என்பது…**

**களவுக்காதல் பூக்கும் பெருவெளி.**

**தமிழ் எனில் அகம்!**

**அகம் எனில் காதல்!**

**அதனால் மலை காதலும் தமிழும் கைகுலுக்கும்**

**இடம்!”**

(பாலகிருஷ்ணன்.ஆர், மலையும் தமிழும்! – சங்க இலக்கியக் கருத்தியல்கள், திணை காலாண்டிதழ்.33, ப.12) ஆர்.பாலகிருஷ்ணன் அகத்தில் வெளிப்படும் அன்புக்கு உரியத்தளம் மலைப்பிரதேசம் என்கிறார்.

மலையிலிருந்து விழுகின்ற நீர்வீழ்ச்சியைக் காணும் கவிஞருக்கு தன்னுடைய கூந்தலை வருடும் பெண் போல தோற்றமளிக்கிறது.

**குளித்துக் கரையேறிய பெண்ணொருத்தியோ**

**கோதும் காற்றிற்**

**கூந்தலுலர்த்தும்**

**மலைச் சரிவு?**

**மீண்டும் மீண்டும் பொழிவதற்கோ**

**மேகம் மேகமாய்**

**அவள் கூந்தல்?**

**கொள்ளை இன்பமும்**

**குறுகுறு நடையுமாய்**

**திரும்பித் திரும்பிப் பார்த்துச்**

**சிரித்துச் சிரித்து ஓடும் நதி**

**அதனை எட்டிப் பிடிப்பதற்கெனவே**

**சர சரவென ஓடிவரும் அவள்! (தேவதேவன் கவிதைகள், ப.53)**

பெண்களுடையக் கூந்தலை கருமேகத்திற்கும், ஆற்று நீருக்கும், முகத்தை நிலவிற்கும் ஒப்பிட்டு காலங்காலமாக கவிஞர்கள் படைக்கும் கவிதைகளில் இயற்கைப் படிமங்களோடு உருவகப்படுத்துகின்றனர். 'கோதும் காற்றிற் கூந்தலுலர்த்தும்' எனும் கவிதை வரியில் பெண்கள் குளித்து விட்டு தலைமுடியை கோதுவதை மலைகளில் ஒழுகும்

நீர்வீழ்ச்சியுடன் தேவதேவன் ஒப்புமைப்படுத்துகிறார். காலந்தோறும் கவிஞர்கள் கையாளும் உத்தி முறையை தேவதேவனும் கவிதையில் மேற்கொண்டுள்ளார்.

வானில் தோன்றும் கார்மேகத்தினுடைய உள்ளிருந்து எழுகின்ற நிலவை பெண்ணின் முகத்தோடு

**"முகிலைக் கிழித்து வெளிக் கிளம்பும் – ஒரு**

**முழுமதிபோல நனைந்திருக்கும் – தன்**

**துகிலினைப் பற்றித் துறைக்கு வந்தாள்."**

(வல்லிக்கண்ணன், பாரதிதாசன் உவமை நயம், ப.15)

பாரதிதாசன் உவமித்துள்ளார். பெண்ணின் அழகியல் சாயல்கள் இயற்கையின் இருப்பை உணர்த்துகிறது. கவிஞர் பாரதிதாசனுடைய கவிதையில் உரைக்கப்படும் பெண்களுடைய உருவ வருணனையை தேவதேவனுடைய கவிதை நெறியிலும் காணமுடிகிறது. மலையினுடைய உருவத்தை பெண்ணின் அழகியல் தன்மையோடு உருவகப்படுத்தும் கவிஞர்களின் இயல்பான புலனுணர்வினை தேவதேவனும் கையாண்டுள்ளார்.

மலைப்பிரதேசத்திற்கும் பெண்ணினுடைய உருவ அமைப்பு இருப்பதை, 'மலையடிவாரத்தில் மழை' எனும் தலைப்பில் அமைந்தக் கவிதை புலப்படுத்துகிறது. உலகத்தில் வாழுகின்ற உயிரினங்களுடைய வாழிடமாக மலை அமைந்துள்ளது.

**மிதமான குளிரும்**

**மிதமான வெயிலுமாய்**

**எப்போதும் கார்மேகங்கள்**

**குடை பிடித்துக்கொண்டிருக்கும்**

**பிரம்மாண்டமான**

**அந்த மலையுச்சியில் போய்**

**தனித்து வாழும்**

**ஒரு மனிதனைப் பார்க்கச் சென்றோம்**

**(தேவதேவன் கவிதைகள், ப.756)**

குளிர், வெயில் எனும் இரு வகையான கால நிலைகளை மலை தன்னகத்தேக்கொண்டு அமையப்பெற்றுள்ளது. 'பிரம்மாண்டமான' மலை உச்சியும், மிதமான குளிர்காலமும் குறிஞ்சித்திணைக்குரிய முதற்பொருளான நிலச்சூழலையும், பொழுதையும் கவிதையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. உயர்ந்த மலையும், அவற்றொடு இயங்கும் இடமும் குறிஞ்சித்திணையோடு ஒப்புமைப்படுத்தியுள்ளது. மலைப்பகுதியினுடைய தனித்துவத்தினை விளக்குவதற்காக, கவிஞர் கவிதையில் 'பிரம்மாண்டம்' எனும் சொற்றொடரை பயன்படுத்தியுள்ளார்.

**இலைகளின்றி**

**கிளைகளின்றி**

**தாங்கும் விரல் காம்பு தவிர**

**பிறிதொரு**

**விரலுயரமும் தேவையற்று**

**நேரடியான**

**ஒரு மலராகவே மலர்ந்துள்ளது**

**மலையுச்சியில் ஒரு தாவரம்! (மார்கழி, ப.23)**

பழந்தமிழ் மக்கள் மலையை இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்தவர்கள். அம்மலை தன்னிருப்பிலிருந்து மாறுதலுக்கு உட்படுவதில்லை. ஆனால், அம்மலையில் வாழ்ந்த மக்களுடைய வாழ்வாதாரத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. கவிஞர் தேவதேவனுடைய கவிதையில் குறிப்பிடப்படும் மலையுச்சி என்பது, “மலையின் உச்சியில் மனம் கொள்ளும் பரவசம் சகல சிகரங்களிலும் கனவு முனைகளிலும் மனித மனம் கொள்ளும் பரவசத்தின் குறியீடாக அமைகிறது.” (ஜெயமோகன், ஒளியாலானது தேவதேவன் படைப்புலகம், பக்கம்.44) எனலாம். மனிதர்களுடைய மன ஏக்கத்தை நிறைவு செய்வதில் மலைக்கு உள்ள முக்கியத்துவத்தை 'மார்கழி' கவிதைத்தொகுப்பில் குறிஞ்சித்திணைக்குரிய நிலப்பகுதியின் வழியாக தேவதேவன் எடுத்து இயம்புகிறார்.

தாயினுடைய அரவணைப்பில் உறங்குகின்ற சிறு குழந்தையைப் போன்று பல வியப்புகளையும் உள்ளடக்கிய மிகப்பெரிய மலையின் மீது சென்றோமானால் அத்தகையதோர் அன்பு, பாசம், கருணை ஆகியவற்றினைத் தருகின்றன. கவிஞர்களுடைய பெரும்பான்மையான கவிதைக் கூறுகளிலும் அன்பிலும், தியாகத்திலும், பொறுமையில் பூமாதேவியாகவும் பெண்களைச் சுட்டிக்காட்டுவர். அத்தகையதோர், பெண்மைத் தன்மையினை, ‘மலைக் காட்டிற்று தன் தாய்ப் பிரம்மாண்டத்தை’ எனும் தேவதேவனுடைய கவிதை வரிகள் மலை வளமும் பெற்றுள்ளதை அடையாளப்படுத்துகிறார்.

**பிரமாண்டமான**

**ஒரு மலையுச்சியின்மேல்**

**ஏறி நின்று நோக்க**

**அது காட்டிற்று**

**தன் தாய்ப் பிரமாண்டத்தை.**

**மலையின் மேனியெங்கும் உயிர்த்திருந்த**

**சின்னஞ் சிறு செடிகளின்**

**சின்னஞ் சிறு மலர்களோடும்**

**சின்னஞ் சிறு பறவைகளோடும்**

**கோடானு கோடி**

**சின்னஞ் சிறு உயிர்களோடும்தான்**

**பேசிக் களித்துக்கொண்டிருந்தது**

**அந்தப் பிரமாண்டம் (பேர்யாழ், ப.65)**

செடி, மலர், பறவை, சிறு உயிரினங்கள் என அத்துணை உயிர்களையும் மலை பாதுகாக்கின்றன. அன்னையின் அன்பிற்கு ஈடு இணையே இல்லை. அப்படிப்பட்ட, அன்பிற்கு இணையாக மலையும் இருப்பதாக தன் கவிதை மூலம் தேவதேவன் குறிப்பிடுகிறார். இயற்கையின் அழகியல் தருணம், உணர்ச்சிகள், மகிழ்ச்சி, பரவசம், உள்ளார்ந்த உணர்வுத்தளங்கள் மனித வாழ்வியலோடு ஒன்றி விடுவதை 'பேர்யாழ்' கவிதை வரிகள் எடுத்துக்காட்டுகின்றன.

தேவதேவன் கவிதை என்பது ”தீவிரம், வீர்யம், உணர்ச்சிவேகம், உள்எழுச்சி, என்பதெல்லாமே கவிதையோடு எந்தநிலையில் உறவுகொண்டுள்ளதோ அதே நிலையில் வாழ்வோடும் உறவுகொண்டிருந்தால் மட்டுமே அன்பையும் அழகையும் மாண்பையும் நாம் இந்த உலகில் நிலைநாட்ட முடியும்". (தேவதேவன், கவிதையின் மதம், ப.61) என்கிறார்.

குறிஞ்சித்திணையின் நிலச்சூழலான மலையும் மலைச் சார்ந்தப் பகுதியுடன் உவமிக்கப்படும் பொருள்களையும் ஜெயமோகன் ”மலைகளின் மௌனம், மலைகளின் நீலம், மலைகளுக்கு வானுடன் உள்ள உறவு, மலைகளின் மாறாத இயல்பு, மலைகளின்

வடிவமற்ற பிரம்மாண்டம், மலைகள் மீது மேகம் கவியும் மங்கல், மலை மீது நகரும் மேகநிழல், மலை நடுவே பீறிடும் உதய ஒளி, மலைச்சிகரங்களின் தனிமை என அனைத்துமே பொங்கி விரிந்து மலையும் துயரமும் ஒன்றாகி விடுகின்றன". (ஜெயமோகன், ஒளியாலானது: தேவதேவன் படைப்புலகம், ப.24) மனிதனுடைய உள்ளார்ந்த உணர்வுகளுடன் மலைப்பகுதி இயங்கக் கூடியது என்று கூறியுள்ளார். தேவதேவனுடைய கவிதைச் சொல்லாடல்களின் ஆக்கத்திற்கு ஜெயமோகனுடைய கூற்று வளம் சேர்த்துள்ளது எனலாம்.

நிலமும், பொழுதும் முதற்பொருளுக்கு உரியவையாகும். ஆறு பெரும்பொழுதுகளும், ஆறு சிறுபொழுதுகளும் திணையினுடைய கால வகைகளைப் பற்றி எடுத்துரைக்கின்றன. அவற்றுள், 'இரவு' என்பது குறிஞ்சி நிலத்துக்குரிய சிறுபொழுதாக அமைகிறது.

இயற்கையினுடைய எழிலார்ந்த சூழலுடன் தென்படும் மலைப்பிரதேசத்திற்குரிய தலைவன் காதல் கொண்டுள்ள தலைவியைக் காண விழையும் பொருட்டு இரவென்றும் பாராமல் அவளைக் காணச் செல்கிறான். மறுபுறம், இரவு வேளையில் தனைக் காண வரும் தலைவன் வரக்கூடிய பாதையில் அச்சுறுத்தும் விலங்குகளுடைய தாக்கம் இருக்குமென நினைந்து வருத்தமடைகிறாள். இவ்வாறு, இருவிதமான மன நிலைகளை இரவு வேளைப் பதிவு செய்கிறது. அச்சிறுப்பொழுதை,

**எந்த வகையான ஒலிகளையும்**

**அமைதியாகத் தாங்கிக்கொண்டு**

**நிற்கிறது இரவு.** **(நுனிக்கொம்பர் நாரைகள், ப. 70)**

சுற்றுப்புறம் மயங்கும் நிலைக்கு இட்டுச்செல்லும் வலிமை இரவு வேளைக்கு உண்டு எனக் கருதப்படுகிறது. காலம் மனித உணர்வுகளை எவ்வாறு பாதிக்கிறது? என்பதை கவிஞர்களுடைய படைப்பாக்கங்கள் மூலமாக காலந்தோறும் படைத்தவண்ணம் உள்ளனர். இயற்கையினுடைய ஒரு பகுதியான காலமும் நேரமும் மனித மனங்கள் எதிர்கொள்ளும் உணர்வுகளுடனும், நினைவுகளுடனும் போரிடுகின்றன, குறிப்பாக, மனிதர்களுடைய மனப் போராட்டங்கள் இருளில் ஒலிப்பதை கவிதையில் காண முடிகிறது.

**கோடை இரவில்**
**மரங்களை அளாவிக்கொண்டு திரியும்**
**மென்காற்றின் மீதுற்ற காதலால்**
**கண்விழித்து வெளியே வந்தமர்ந்திருந்த**
**அவனையும் அவள் சீராட்டி மகிழ்ச்சி கொண்டாள்.**

**அவர்கள் விழிகளில் ஒளிர்ந்தன,**
**அவன் வரவில்லையென்றாலும்**
**குறைபட்டிருக்காத அவள் காதலும்**
**அவளைக் காணாத போதும்**
**நிறையழிந்திருக்காத அவன் காதலும். (மேலது, ப.47)**

'காதலால் சீராட்டி மகிழ்ச்சி கொண்டாள்', 'அவளைக்காணாத அவன் காதலும்' என குறிஞ்சி முல்லைத்திணைக்குரிய உரிப்பொருள்களான காதலும், காத்திருப்பும் அமைந்துள்ளன. இவ்வாறாக, இரு வேறுத்திணைகள் ஓர் படைப்புக்குள் அமைவதை, திணை மயக்கம் என்பர்.

சங்க இலக்கியக் காலம் முதல் நவீனகால கவிதைகள் வரையிலான படைப்பாக்கங்களில் முதல் கரு, உரிப்பொருள்கள் ஒவ்வொரு திணைகளுக்கும் முறையே தலைவன், தலைவியினுடைய இரகசிய காதல் உறவுக்கு உரிய இடமும், காலமும், நேரமும் திணைக்கவிதைகளுக்கு உரியவையாக அமைகின்றன. இரவு வேளை குறிஞ்சிக்கவிதைக்குரிய நேரத்தைக் குறிப்பிடுகின்றன. குறிப்பாக, பகற்குறியில் தலைவனும், தலைவியும் சந்தித்தப் பிறகு இரவிலும் இருவரும் காண முயல்கின்றனர். இவ்வாறான, சூழல்கள் ஆண்,பெண் இருவருடைய அன்பை வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளன.

பெரும்பொழுதும், சிறுபொழுதும் மனிதர்களின் மனோபாவத்தையும், ஆளுமையையும் வடிவமைப்பதில் பங்கு வகிக்கின்றன. அவ்வாறான, பங்களிப்பு ஓர் இரவில் மனித மனங்கொள்ளும் இருப்பு நிலைகளை கவிஞர் தேவதேவன் படைத்தருளிய 'பள்ளத்திலுள்ள வீடு' கவிதை தொகுப்பில் இடம்பெற்ற 'நடுவே இறந்துபோனவனின் கனவு' தலைப்பில் அமைந்தக் கவிதையில் எடுத்தாளப்பட்டுள்ளன.

காலத்துடன் பயணிக்கும் மனிதனுடைய அனுபவத்தளங்கள் என்பது வேறுபட்டுக் காணப்படுவதை, 'இறுதியாய் அவனுக்குக் கிடைத்த ஒரே இரவைக் கழிக்க' எனும் கவிதை வரிகளுடன் தேவதேவன் தொடக்கம் குறிக்கிறார்.

**இறுதியாய் அவனுக்குக் கிடைத்த**

**ஒரே இரவைக் கழிக்க**

**கவனக் குறைவாய்**

**அசுத்தமும் அலங்கோலமுமான நிலையில் உள்ள**

**இந்த அறையை**

அவனுக்கு அளித்துவிட்டுச் சென்றுவிட்டார்கள்.

இரவு தொடங்கிவிட்ட பின்னும்
தங்களால் முடிந்த நேரம்
வீதியில் நின்றபடியே பிரிய மனமின்றிப்
பேசிவிட்டுத்தான் சென்றார்கள் நண்பர்கள்.

இந்த இறுதி இரவை
அவன் விழித்தபடியே கழித்தாலும் சரி
முழுத் தூக்கமும் முடிந்தது தெரியாமலே
இறப்பை அடைந்தாலும் சரி
எல்லாம் ஒன்றுதான்.

ஆனால் அசுத்தமும் அலங்கோலமுமான
இந்த அறையை
மாசு நீங்கிய துல்லியமான அழகுடன்
நேர் செய்துகொள்ளாமல்
அவனால் துயில இயலவில்லை.

கிட்டத் தட்ட முழு இரவும்
அறையை நேர் செய்வதிலேயே கழிந்தது
துயிலக் கிட்டிய, மிஞ்சிய
சிறிதளவு நேரத்திலும் பெரும் பகுதி
அறையின் நேர்த்தியைக் கண்டு
மெய் மறந்ததில் கழிந்தது.
எவ்விதமோ இமைகள் மூட

**இறுதியாய் அவன் நுழைந்தது**

**தூக்கத்திற்குள்ளா மரணத்திற்குள்ளா**

**எதுவுமே அவன் அறியான்.**

**(பள்ளத்திலுள்ள வீடு, பக்.68,69)**

ஒவ்வொரு இரவும் ஒவ்வொரு மனிதர்களுடைய வாழ்விலும் ஏற்படக்கூடிய வெவ்வேறான சூழ்நிலைகளைக் கவிதைப் புலப்படுத்துகிறது. கவிஞர் மனிதனின் யதார்த்ததினை உணர்வுகளின் அடிப்படையில் கவிதையில் புகுத்தியுள்ளார். தூக்கம், மரணம் இவை இரண்டின் மாயபிம்பங்களின் ஊடாக இருள் மனித வாழ்வில் பயணிப்பதை கவிஞர் குறிப்பிட்டுள்ளார்.

**நள்ளெனும் யாமம் ஒலிக்க**

**உறங்காத என் விழிகள் கண்டன**

**வானமும் பூமியுமாய் நிற்கும் நின் பேருருவம்.**

**கண்கள் குளமாக என் அகம் கண்டது.**

**உரைக்கவொண்ணா நின் பேராளுமை.**

**என் அகமே ஒரு துயராய்க் கனன்று**

**நின் ஆளுமையோடு கலக்க அறியாது**

**தகித்த துயரமும்தான் எத்துணைக் கொடுமை!**

**(பேர்யாழ், ப.21)**

தலைவன், தலைவி இருவரும் சந்தித்தப் பிறகு பிரிந்து செல்லும் போதும் மீண்டும் மீண்டும் காணும் வேளைகள் இனிமையைத் தருகிறது. அவர்களுடைய ஒவ்வொரு சந்திப்பும் நிகழ்வது இயற்கையின் எழிலார்ந்த வண்ணப்பறவைகள் இசைப்பாடும்

சோலையிலாகும். ஆனால், உறவுகளின் ஒவ்வொரு பிரிவிலும் கவலைக் கொள்ளும் மனித மனம் அல்லல்படுகிறது. அவ்வாறான, பிரிவினையை தலைவியும் அனுபவிக்கிறாள். அதற்கு இரவு வேளைக் காரணமாக அமைகிறது.

'பேர்யாழ்' கவிதையில் 'நள்ளெனும் யாமம் ஒலிக்க' என்னும் சொற்றொடர் இரவுவேளையைக் குறிப்பதை, "இடையாமம் என்றும் இடை இரவு என்றும், ( நள்ளென்) யாமம் என்றும் குறிஞ்சியின் சிறுபொழுது பெயர் பெறுகின்றது". (மம்மது.நா, தமிழர் திணை, ப.116) என்று நா.மம்மதும், 'நள்ளெனும் யாமம்' என்பது நடு இரவைக்குறிப்பதாக குறுந்தொகைப் பாடலும் எடுத்துரைக்கிறது. காலங்காலமாக சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் சொல்லாடல்களை நவீனகால கவிதைகள் வரையிலும் எடுத்தாளுவதை அறிய முடிகிறது.

**நிலா ஒளிரும் இரவு**
**மேகங்களின் நகர்விலும் அமைதியிலும்தான்**
**எத்துணை பெரிய துயரம்! (பேர்யாழ், ப.17)**

'மேகங்களின் நகர்வு' கவிதையில் காதலனின் பிரிவை எண்ணி காதலி படும் துயரை மையப்படுத்தியுள்ளது. கவிதையில் 'மேகம்' காதலனை உள்ளுறையாக கூறப்பட்டுள்ளது. இருவரும் காணமுடியாத தருணத்தைப் போல, இயற்கையின் கருணையை உணராத மக்களின் செயல்பாடுகளைக் கண்ட பூமி கைவிடப்பட்ட காதலின் துயரமாகவும், பசுமையான சோலைப்பகுதிகளில் பூமியின் இதயம் செயல்படுவதாகவும் கவிதையில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

”ஒரு போதும் அடங்காத மோகத்தின் தூலமாகவே தேவதேவன் முன் எல்லாத் தருணத்திலும் இயற்கை காட்சி தருகிறது.” (ஜெயமோகன், ஒளியாலானது தேவதேவன் படைப்புலகம், ப.56) இயற்கையின் மீது தேவதேவன் கொண்டிருக்கும் பற்றினைப் பற்றி ஜெயமோகன் குறிப்பிடுகிறார்.

காதலர்கள் காணும் வேளையில் எழும் மோகத்தைப் போன்று, ஒவ்வொரு வேளையும் இயற்கையினைக் காணும் கவிஞருக்கும் அத்தகையத்தோர் தோற்றத்தினை அளிக்கிறது. மறுபடியும், மறுபடியும் புதியக் காட்சிப் பொருளாக இயற்கை மன நிறைவை ஏற்படுத்துகிறது. அவருடைய கவிதை அன்பினால் தோன்றும் காதல் உணர்வுகளின் மனவோட்டங்களை காலத்தின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

**மரம் தனது காதலைச் சொல்வதற்குத்**

**தேர்ந்தெடுத்த வேளையோ?**

**கோடை இரவில்**

**பூக்கும் மரங்களிலிருந்து விரியும் நறுமணம்.**

**(நுனிக்கொம்பர் நாரைகள், ப. 37)**

சங்க இலக்கியங்களில் குறிப்பிடுவதுப் போன்று, காதலர்கள் சந்திப்பு நிகழும் குறியிடமாகவும், பூக்கள் பூக்கும் இனிய வேளையாகவும், அமைதியின் அடையாளமாகவும், இருப்பதினால் காதலை சொல்ல ஏற்ற வேளையாக இரவு அமைகின்றன. அத்தகையதோர், ஒப்புமையை ‘நுனிக்கொம்பர் நாரைகள்’ கவிதைத் தொகுப்பிலும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. மலையும் அவற்றொடு இயங்குகின்ற பெரும்பொழுதுகளும், சிறுபொழுதுகளும்  குறிஞ்சியின் இயற்கை அமைப்புகளுக்கு உரிய களங்களாக அமைகின்றன.

இருவருடைய உள்ளங்கள் அன்பினால் இணைவது உள்ளப்புணர்ச்சி எனவும், உடலால் இணைக்கப்படுவது மெய்யுறுப்புணர்ச்சி எனவும் கூறுவர். அத்தகையதோர் தன்மையினை தேவதேவன் கவிதை வரிகளிலும் காண நேருகின்றன.

**விம்மி அழத் தூண்டுகிறது**

**உடலோடு உரையாடுகிற**

**ஆடி இரவுக் காற்று. (மேலது, ப.61)**

'ஆடி இரவுக்காற்று' குறிஞ்சித்திணைக்குரிய சிறுபொழுதான இரவும், பாலைத்திணைக்குரிய ஆடி மாதமும் அமையப்பெற்றுள்ளன. இவ்வாறு, இரு திணைகளுக்குரிய பொழுதுகள் தேவதேவன் கவிதையில் வெளிப்பட்டுள்ளன. இவற்றை, பொழுது மயக்கம் என்று கூறுவர். உள்ளம் சார்ந்த நிகழ்வுகளுக்கு குறிஞ்சி இன்றியமையாததாக விளங்குகிறது. அதற்கு காதலர்கள் கூடுவற்கு ஏற்ற களமாக இரவு வேளையும் அமைகிறது. ' நுனிக்கொம்பர் நாரைகள்' கவிதையில் மனிதர்களுடைய அக உணர்வின் ஆக்கத்திற்கு இராப்பொழுதும், ஆடி மாதமும் அமைந்துள்ளன.

ஒரு திணைக்குரிய முதற்பொருள் மற்றொரு நிலத்துக்கு சார்ந்து வருவதற்கு வாய்ப்புள்ளதாக தொல்காப்பியர் கூறியுள்ளார். மேலும், ஒரு பாடலில் இருத்திணைகளுடைய சூழலுகளும் வருவதை சங்க இலக்கியங்களும் பதிவு செய்துள்ளன. அவ்வாறான, பதிவை தற்கால இலக்கியங்களும் உரைக்கின்றன.

'நுனிக்கொம்பர் நாரைகள்' கவிதையில் குறிஞ்சித்திணையின் பொழுதான இரவும், முல்லைத்திணையினுடைய நிலச்சூழலமைவான கடல்பகுதி என இருத்திணைக்குரிய பொழுதும் நிலமும் குறிப்பிடப்பட்டுள்ளன.

**அமைதியான இரவு**

**அலைகளற்ற கடல்**

**தனிமையான படகுச் சவாரி.**

**(நுனிக்கொம்பர் நாரைகள், ப.80)**

ஒவ்வொரு இரவின் முடிவிலும் உதிக்கும் சூரியனைபோல நானும் வருவேன். அலைகளற்ற கடலில் அலைகள் எழும் என்பது தெரியாது. தனிமையான இந்தப் படகு தன் காதல் தீவினைக் கண்டடையும் என்பதும் தெரியாது. உன்னைக் கண்ட இன்றையப் பொழுதை வாழ்வு தன் முடிவின்மையைத் தொட்டுவிட்ட கணமாக எண்ணுகிறேன் என உன்னைக் கண்ட இந்த நொடியே என்னுடைய வாழ்வில் மறக்க முடியாத தருணமென தலைவன் தலைவியிடம் உரைக்கிறான். காதலர்கள் இருவருடைய மன நிலைகளை மட்டுமல்லாது, தற்காலத்திற்கு ஏற்ப மனிதனுடைய அக உணர்வுகளுடைய வெளிப்பாடாகவும் கவிதை அமைந்துள்ளது.

இவ்வாறு, ‘நுனிக்கொம்பர் நாரைகள்’ என்ற கவிதையில் ஒவ்வொரு மனிதனுடைய தனிமையின் நோக்கமும் புலனாகிறது. அத்தனிமைக்கு இரவு வேளை அமைகிறது. கவிதையில், குறிஞ்சியின் சிறுபொழுதான இரவும் , நெய்தல் திணைக்குரிய நிலமும் என இருத்திணைக்கூறுகளுடைய அமைவுகள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு மனிதர்களுடைய வாழ்விலும் ஏற்படக்கூடிய இன்பத்துன்பங்களுக்கும் ஏதேனும் ஒரு வகையில் காலங்களும் இருப்பதை கவிதைகள் எடுத்துரைக்கின்றன.

## முல்லைத்திணையின் நிலமும் பொழுதும்

அரிய வகையான மூலிகைப் பொருட்களையும், வாசனைத் திரவியங்களையும், பச்சைப்பசேலென்று காட்சியளிக்கும் இலைகளும், காய், கனிகளையும் ஆகிய இயற்கை வளங்கள் சூழ்ந்தப்பகுதியாக முல்லைக் காட்சியளிக்கிறது. அரியவகை மரங்களும்,

விலங்குகளும், பல்லுயிர்களும், சிற்றுயிர்களும், பூச்சிகளும், பறவைகளும் என அனைத்து வகையான பல்லுயிர்களும் வாழ்வதற்கு காடு அடைக்கலம் தருகின்றன.

**தனியாகச் செல்லும் மனிதனைப் பிடித்துக்கொண்டு**

**கானகம் அச்சுறுத்தத் தொடங்குகிறது**

**அடர்ந்த புதர் ஓரக் கொடிகள்**

**ஆடைபிடித்து இழுக்கின்றன**

**ஓயாது ஒலிக்கும் அதன் நிழலிருளில்**

**உறுமிக் கொண்டிருக்கின்றன சிறுத்தைகள்**

**சருகுநிலம் சரசரக்க வந்து**

**பாம்புகள் அவன் கால்களைச் சுற்றிக்கொள்ளக்**

**காத்திருக்கின்றன**

**நினைவுகள் மறக்காத யானைகள்**

**துரோகி துரோகி எனக் கோபத்துடன்**

**சவட்டி நசுக்கத் துடித்துக்கொண்டிருக்கின்றன**

**(தேவதேவன் கவிதைகள், ப.752)**

காடு என்றாலே அனைவருக்கும் முதலில் நினைவுக்கு வருவது அவ்விடத்தில் வாழும் கொடிய விலங்குகளின் மேல் இருக்கக் கூடிய அச்சமாகும். தேவதேவனுடைய கவிதையிலும் சிறுத்தைகள், பாம்புகள், யானைகள் என வலிமையுடைய விலங்குகளின் இயல்பினையும், மிகப்பெரிய ஆளுமை வாய்ந்ததாக காடு தகவமைத்துக் கொண்டுள்ளதையும் விளக்கியுள்ளார். காட்டில் காணக்கூடும் விலங்குகளைப் போலவே, சமூகத்தில் வாழும் மனிதர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு குணம் படைத்தவர்களாக காணப்படுகின்றனர். அவர்களுடைய குணாதிசங்களுக்கு ஏற்ப ஒவ்வொரு மனிதர்களும் அவர்களுக்கேற்ப வாழ்க்கையை வாழ வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

கவிஞர் தேவதேவன் காடு என்பதை மனித மனங்களுடைய அகமாக உருவகம் செய்துள்ளார். கவிஞர்களுடைய அகம் என்பது எதற்கும் பயங்கொள்ளாமல் துணிந்து சமுகத்திற்கு எக்கருத்தினை பதிவு செய்ய வேண்டும் என்பதையும், சொல்ல வேண்டிய கருத்தாக்கம் மக்களை சென்றடைவதையும், என்னும் இரு வகையிலான எண்ணங்களை காட்டினுடைய உயிரினங்கள் வழி கவிஞர் எடுத்துரைத்துள்ளார்.

தேவதேவனுடைய கவிதைக்கு வலுவூட்டும் விதமாக, ஆனந்த் “அகத்தைக் கானகமாக்குகின்றார். இருள் நிறைந்த கானகம்; அங்கே அலைந்துகொண்டிருக்கும் வலிய விலங்குகள்; மண்டிய புதர்கள்; கட்டற்று ஓடும் காட்டாறுகள். அதற்குள் நுழையும் ஒருவன் கானகத்தோடு போரிட வேண்டிய சூழலுக்கு ஆட்படுகிறான். போரை முடிக்காமல் அவன் வெளியேற முடியாது. அந்தப் போரில் அயர்ந்துவிடாமல் உள்ளேயிருந்து தொடர்ந்து எழும் சவால்களை எதிர்கொண்டு நிற்பவர்களுக்குக் கடைசியில் வெற்றி கிட்டுகிறது. அதுதான் கவிதை”. (ஆனந்த், கவிதை என்னும் வாள்வீச்சு, ப.16) இருள் சூழ்ந்த கானகம் காணப்படுவது போன்றது கவிதைப் படைக்கும் கவிஞர்களும் எனக் குறிப்பிடுகிறார்.

காண்பவர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தும் கானகத்துள் இன்பத்தை அளிக்கும் சில எழிலார்ந்த பறவைகளும், விலங்குகளும், பல நிறமுடைய பூக்களும் காணப்படுகின்றன. அவை,

**அத்துணை பயங்கரக் கானகத்துள்தாமோ**

**இத்துணை எழிலார்ந்த வனதேவதைகளின் நடமாட்டங்களும்!**

**இன்பமாய்ப் பாடிக்கொண்டிருக்கும்**

**எத்தனை மலர்கள்! எத்தனை சிற்றுயிர்கள்!**

**எத்தனை பறவைகள்!**

**தித்திக்கும் சூரிய ஒளிக் கதிர்களணிந்து**

**ஜொலிக்கும் நீர்நிலைகள்**

**காண்பார் தழுவிக் களிக்கும் தேன் காற்று! (மேலது, ப.752)**

மேற்கண்டக் கவிதை வரிகளில் பல வண்ணங்களைக் கொண்ட பூக்களையும், அரிய வகையான பறவைகளையும், பல்லுயிர் முதற்கொண்டு சிற்றுயிர் வரையிலான உயிரினங்கள் வாழ ஏற்ற இடமாக காட்டினுடைய இயற்கை அமைவுகள் அமைந்துள்ளன. கவிதையை காட்டினுடைய ஒரு பகுதியாக தேவதேவன் உருவகப்படுத்தியுள்ளார்.

காடு எவ்வாறு பல உயிர்களுடைய பெட்டகமாகத் திகழ்கிறதோ, அவ்வாறே, கவிதைக்குரிய தளம் என்பது பல்வேறு வகையான சமூகப்படி நிலைகளையும், சமுகத்திற்கு எடுத்துரைப்பதில் பங்காற்றுகிறது. காரணம், தற்காலத்தில் கவிதைப் படைப்புக்கள் பல வகையான கருத்துக்களையும், எண்ணிலடங்காத தலைப்புக்களையும், மக்களிடையே சென்றடைவதில் தடம் பதித்துள்ளன. குறிப்பாக, கவிதைக்கான பாடுபொருள் என்பது பல யுகங்கள் கடந்து இன்றளவும் சமூகச் சிக்கல்களை எடுத்துரைப்பதில் பங்கு வகிக்கின்றன .

ஆனந்த் “கவிதை என்னும் வனத்தினுள் நான் அறியாமலேயே நுழைந்துவிட்டேன். வேலியில்லாத, கதவு இல்லாத வனம். நுழைந்தது தெரியவில்லை. அதன் அடர்த்தியும் உள்ளே ஓடும் காட்டாறுகளும் சிற்றாறுகளும் அற்புதவெளிகளும் அழகிய விலங்குகளும் மரங்களும் மலர்களும் கனிகளும் என்னை ஈர்த்து இந்த வனத்தின் ஆழங்களுக்குள் இவ்வளவு தூரம் இட்டுச்சென்றுவிடும் என்று நான் அப்போது அறியவில்லை”. (ஆனந்த், கவிதை என்னும் வாள்வீச்சு, ப.21) என்கிறார்.

**கானுயிர்கள்**

**ஒன்றையொன்று சற்றே வெட்டியும் ஒட்டியும்**

**அனுசரித்து வாழும் வாழ்வில்**

**மானுடக் கொடூரங்களே உள்ளனவோ!**

**களங்கமின்மையும் மிரண்ட கண்களின்**

**உயிர்ப் பொலிவும் கொண்டு**

**துள்ளித் திரியும் மான்கள்**

**புதர்களிலிருந்து புதர்களுக்குப்**

**பாய்ச்சலும் பரபரப்புமே நடையாய்**

**ஒளிரும் வெண்முயல்கள்**

**நெருக்கியடித்துக்கொண்டு நிற்கும் மரங்கள்**

**பெருமரங்களின் கீழ்**

**திணறி நிற்கும் சிறு மரங்கள்**

**செடிகொடிகள் புல்பூண்டுகள்**

**புழுக்கள் வண்டுகள் பறவைகள்.**

**என்றாலும்**

**கானகத்தின் எந்த ஓர் உயிரினம்**

**மனிதனைப் போல்**

**பெருங் காமமும் சிறு புத்தியும் கொண்டுள்ளது?**

**(மேலது, பக்.752,753)**

அனைத்து உயிரினங்களுக்கும் வாழ ஏற்ற இடமாக காடு அமைந்துள்ளது. காடும் காடுச் சார்ந்தப் பகுதியினை பழங்கால மக்கள் ஐந்திணைகளில் ஒன்றான முல்லைத்திணைக்கு உரித்தாக்கினர். பண்டையக் காலத்தில் ”முல்லை நிலம் காடும் காடு சார்ந்த இடமுமாகும். முல்லை நிலத்தில் தரிசான கொல்லை எனவும் மரங்கள் அடர்ந்த

பகுதியைப் புறவு, கானம், பாட்டம், தோட்டம் எனவும் பெயரிட்டு அழைத்துள்ளனர்". (இந்து.இரா, ஐவகை நிலங்களில் பொறியியல் செய்திகள், ப.20) முல்லை நிலத்துக்குரியப் பகுதிகளைக் குறிப்பிட்டுள்ளனர்.

தேவதேவனுடைய கவிதைகளில் இடம் பெற்றுள்ள கானகம் எனும் சொல் காட்டுப்பிரதேசமான முல்லை நிலத்தை அடையாளப்படுத்துகின்றன. பல அரிய வகை மூலிகைச் செடிகளையும், மழைப் பொழிவினையும், சுவாசிக்க ஏற்றக் காற்றையும், நீர்நிலைகளையும், எழில் சூழ்ந்த வண்ணங்களாக காடு காட்சியளிக்கின்றன.

தன்னியல்பு மாறாத "காட்டைப் பழக்க முயன்றால் உடன்படாது. நாம் காட்டுக்குப் பழகிக்கொள்வதே இயற்கையானது. காட்டைப் புரிந்துகொள்வது முக்கியமானது. காட்டை அதன் போக்கில் இயங்கவிடுவதே அதற்கு நாம் செய்யும் மிகப்பெரிய சேவை". (வறீதையா கான்ஸ்தந்தின், திணைவெளி- நிலம் சூழலியல் பண்பாடு, பக்.136,137) காட்டினுடைய இயல்பைப் பற்றி வறீதையா கான்ஸ்தந்தின் குறிப்பிடுகிறார்.

வனதேவதைகளின் நடமாட்டங்கள் சூழ்ந்த காட்டில் மனித நடமாட்டங்களின் வருகையினால், காடுகளில் காணப்பட்ட மரங்கள் வெட்டப்பட்டதால், மழைப் பொழிவு நின்று போக காரணமாயின. தற்போது காட்டில் பூச்சிகளின் இரைச்சலும், பறவைகளின் கீச்சிடலும், விலங்குகளின் மரண ஓலங்களும் எங்கும் காணப்படுகிறது. காட்டினுடைய காட்சி அமைப்புகள் முல்லைத்திணைக்குரிய கவிதை ஆக்கங்கள் என்பதை நிரூபிக்கின்றன.

கவிஞர்கள், "இயற்கையில் காணும் பண்புகளை வாழ்வின் உண்மைகளுக்குப் பொருத்தமாக ஒப்புவமை கூறுவது திறமையான செயல். இதற்கு வாழ்வின் அம்சங்களைக் கவனிப்பது போலவே இயற்கை ஆராயும் தன்மையும் தேவை. இத்தகைய

பண்பு இருந்தால் மற்றவர்கள் சர்வ சாதாரணமானவை எனப் புறக்கணிக்கிறவற்றைக் கூட அழகான உண்மைகளாக ஒளிரும் படி செய்யலாம்." (வல்லிக்கண்ணன், பாரதிதாசன் உவமைநயம், ப.47) இயற்கையின் பண்புகளை தங்களுடையப் படைப்பில் படைப்பர் என வல்லிக்கண்ணன் உரைத்துள்ளார். அப்படிப்பட்ட, இயற்கையின் மீது அன்பும், பற்றும், கருணையும், அவற்றின் ஊடாக மனிதர்களுடைய வாழ்வியலில் ஏற்படும் மாற்றங்களையும் கவிதை வரிகளின் மூலம் தேவதேவன் பதிவு செய்துள்ளார்.

தேவதேவனின் கவிதை மொழியானது மனித மனங்களின் உள்ளார்ந்த உணர்வுகளுக்கு தனித்துவம் பெற்று அமையப் பெறுபவைகள். அவர், சமூகப் படி நிலைகளில் மனிதனின் செயல்பாடுகளை கவிதையில் வெளிப்படுத்துபவர். அவ்வெளிப்படுத்தல்கள், இயற்கையினைக் கூர்ந்தப் பார்வையோடும், ஆழ்மனத்தேடுதல்களோடும், நுட்பங்களோடும், இயற்கையோடு இயற்கையாக ஒன்றிவிடும் அசாதாராண மனிதர்களால் மட்டும் முடிவதை தன்னுடைய கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ளார்.

**ஒரு பெரிய சோலை வனமேயாகியது**

**தேன் உண்டு பரபரக்கும் வண்டுகளுக்கு**

**அடர்ந்து செறிந்து நிற்கும்**

**ஒற்றை முருங்கை மரம்.**

**அசைந்தாடும் பச்சைக் கடல் முத்துப்**

**புன்னகைப் பூக்கள் உதிர**

**அணிற் பிள்ளைகள் ஓடித்திரியும்**

**பெருவனம். (பேர்யாழ், பக்.22, 23)**

இன்பமாகச் சுற்றித்திரியும் வண்ணத்துப்பூச்சிகள், எல்லா உயிரினங்களுக்கும் உணவு வழங்கும் காட்டின் சூழல் அமைவுகள், சுதந்திரமாக காட்டில் திரியும் அணிலின் குட்டிகள் என காடுகளில் வாழும் ஒவ்வொரு உயிரினங்களும் மற்றுள்ளவைகளுடன் கொண்டுள்ள உறவு முறைகளைக் கண்டு மனிதர்களும் ஒற்றுமையுடன் வாழ வேண்டுமென கருதும் அளவுக்கு காடு காட்சியளிக்கின்றன. வறீதையா கான்ஸ்தந்தின் “ஒவ்வொரு விதைக்குள்ளும் ஒரு காடு உள்ளது”. (வறீதையா கான்ஸ்தந்தின், திணைவெளி- நிலம்/ சூழலியல்/ பண்பாடு, ப.138 ) என்கிறார்.

’பேர்யாழ்’ கவிதைத் தொகுப்பில் சுட்டப்படும் கவிதை வரிகளில் காட்டினுடைய சூழலமைவுகள் முல்லை வளப்பகுதியின் காட்சியியை கண் முன் நிறுத்துகின்றன. காடுகளில் வாழும் உயிர்களின் ஒற்றுமையை மனிதர்களிடையே காணுவதில்லை என கவிஞர் உள்ளுறையாக குறிப்பிட்டுள்ளார்.

**ஒரு குவளை நீர் கேட்டவன் முன்**
**பூமியையே நிறைக்க வந்ததுவாய்ப்**
**பெய்துகொண்டிருந்தது மழை**

**(தேவதேவன் கவிதைகள், ப.394)**

மழைப்பொழிவு நாடும், காடும், வயல்களும், நாட்டிலுள்ள மக்களும் மேன்மை அடையப்பெற்றனர். பயிரினங்களும், உயிரினங்களும் மகிழ்வினைக்கொண்டன. மேலும், இயற்கையின் வளம் மிகுதிப் பெற்று, புத்துயிர் விடுவது மழைக்காலத்திலாகும். சில உயிரினங்களுக்கு துன்பத்தையும், சிலருக்கு மகிழ்வையும், மழைப்பொழிவினையும் தரவல்லது மழையாகும்.

அகத்தில் ஏற்படக்கூடிய உணர்வுகளுக்கு இயற்கையினுடைய தருணங்களும் ஏதேனும் வகையில் அமைவதை கவிதைப்புலப்படுத்துகிறது. தேவதேவனுடைய ஒவ்வொரு கவிதை ஆக்கங்களும் இயற்கைச் சார்ந்தப் படிமக்கூறுகளுடன் இணைக்கப்பட்டுள்ளதையும், மக்களுடைய அகத்தில் எதனூடாக கருத்துக்கள் சென்றடையும் என்ற நுட்பமும் கவிஞரிடம் காணப்படுவதைக் காணலாம்.

இவருடைய எண்ணங்களை "மழை என்பது எப்போதுமே நனவிலியின் இயக்கத்தை, குறிப்பாக அகச் சிக்கலிலிருந்து விடுபடுவதைக் குறிக்கிறது. அதுவும் இடியுடன் கூடிய மழை என்பது நனவிலியின் ஆழ்தள இயக்கத்தை, ஆழமான அகமாற்றத்தைக் குறிக்கும்". (ஆனந்த், கவிதை என்னும் வாள்வீச்சு, ப.62) ஆனந்தும் அடையாளப்படுத்தியுள்ளார்.

**எண்ணி எண்ணி**

**அரற்றும் மரங்களின்**

**இடையே இடையே**

**நிலவிய அமைதிதான்**

**கொண்டு வந்து சேர்க்கிறதோ**

**கார் காலத்தை?** **(நுனிக்கொம்பர் நாரைகள், ப.53)**

முல்லை நிலத்துக்குரிய பெரும்பொழுது கார்காலமாகும். மழைப்பொழிவதும் இக்காலத்திலேயாகும். 'கொண்டு வந்து சேர்க்கிறதோ கார் காலத்தை' எனும் கவிதை வரிகள் கார் கால வரவினை உணர்த்துவதோடு, வினைப் பயணம் மேற்கொண்டுள்ள தலைவனின் வருகையை உறுதிப்படுத்துவதும், தலைவிக்கு ஆறுதல் கூறுவதாகவும் கார்காலம் அமைவதைக் காணலாம்.

**மாலைத் தென்றல்**

காயங்களை வருடும்

மாயத் தொடுகை. (மேலது, ப.89)

மாலை நேரத்தின் நிகழ்வு தலைவியின் உள்ள உணர்வோடு விரக்தியின் எல்லைக்கு உவமைப்படுத்தப்பட்டுள்ளன. காதலர்களின் ஏக்கத்தினை மாலை நேரம் கவிதைக்குரிய குறியீடாக விளங்குகின்றன. மாலைப் பொழுது பிரிவையும், இணைவையும் குறிக்கிறது. தவிர்க்க முடியாத சோகத்தின் வெளிப்பாடாக அமைகிறது. அந்தி சாயும் நேரம் தலைவியின் மனம் தலைவனை நினைந்து ஏங்குகிறது. கண்களில் மனச்சோர்வுத் தெரிகிறது. பொழுதுக்குரிய வருணனைகளோடு கவிதை வரிகள் அமையப்பெற்றுள்ளன.

மாலைப்பொழுது தலைவனை விட்டுப் பிரிந்த தலைவியை வாட்டும், நிகழ்வோடு ஒப்புமைப்படுத்தப்பட்டுள்ளன. அனைத்து உயிரினங்களும் இல்லம் நோக்கித் திரும்ப, மாலை மயங்கியது போல, தலைவியும் தலைவனின் வருகையைப் பற்றிச் சிந்திக்கிறாள். இவ்விருவர் மட்டுமல்ல, உலகில் வாழும் அனைவரும் ஒரு நாள் பொழுதை நகர்த்துவதற்கு மாலை நேரம் உகந்ததாக உள்ளன. அடுத்த வேளையான இரவுனுடைய தனிமை விரக்தியின் பாடுபொருளினுடைய மையத்தை நோக்கி நகர்வதற்கு மாலைப் பொழுதை கவிஞரும் கையாண்டுள்ளார் எனக் கருதலாம்.

## நெய்தல் திணையின் நிலம்

கடலும், கடற்கரையினுடைய சுற்றுப்புறச் சூழலமைவுகளும் நெய்தல் திணைக்குரிய இடத்தினைச் சுட்டுகின்றன. மலை வளம் கொண்டப்பகுதியான குறிஞ்சியும், வயல் சூழ்ந்த இடத்தினை மருதமும், மணல் வெளியினை உடைய

பாலையும், இயற்கையினுடைய அழகான சோலைகளைப் பெற்ற முல்லையும் ஆகிய நான்கு வகைத்திணைகளும் நிலத்தினுடைய இயல்பினைப் பெற்று அமைந்துள்ளன.

ஆனால், ஐந்து வகைத்திணைகளுள் ஒன்றான நெய்தல் திணை நான்கு வகை நில அமைப்பியலுக்கு முரணாக, முற்றிலும் நீரால் சூழ்ந்தப் பகுதியாகக் காட்சியளிக்கின்றன. பழந்தமிழர்களுடைய நீண்டதொரு நெடிய மரபினை ஐந்திணைகளும் தன்னுள்ளே கொண்டமைந்துள்ளன.

முற்றிலும் நீரால் சூழ்ந்த நெய்தல் திணைப் பகுதியானது மனிதர்களுடைய அகத்தில் தோன்றும் நினைவோட்டங்களுக்கு இடையே ஒற்றுமை இருப்பதாக, கவிஞர் கற்பனை செய்கிறார். மனிதனுடைய மனவோட்டங்களுக்கும் கடலில் எழுகின்ற அலைகளுக்கும் இடையே நெருங்கியத் தொடர்பினை ஏற்படுத்துகிறார். இவை, உத்தி வகைகளில் ஒன்றான நனவோடை உத்தி முறையைக் கொண்டு அமைந்துள்ளது.

மனித மனங்களுடைய ஆழ்மனதில் எழும் எண்ணங்களுக்கு தனிமை மையமாக விளங்குகிறது. அத்தனிமைக்கு இயற்கையினுடைய ஏதேனும் ஒரு பகுதி உறுதுணை அளிக்கிறது. அவற்றை, கவிஞர் கருப்பொருளெனக் கொண்டு கவிதையில் படைத்துள்ளார்.

கடலை நம்பி வாழும் மீனவ மக்கள் ஒவ்வொரு நாளும் கடலுக்குள் மீன் பிடிக்கச் செல்வதற்கு முன்பாக கடலினை தங்களுடைய அன்னையாக பாவித்து வணங்கிச்செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். அன்றைய நாள் மீன்கள் கிடைக்குமென்றும், கடலில் ஏற்படும் இயற்கையின் சீற்றங்களுக்கும், திமிங்கலம், சுறா போன்ற மிகப்பெரிய மீன்களிடமிருந்து 'கடலம்மா' தங்களைக் காப்பாள் எனக் கருதுகிறார்கள். பரந்து விரிந்த கடலை கவிஞர் உற்றுநோக்குகிறார். நீண்டதொரு நெடிய

பரப்பளவைக் கொண்ட கடலைக் காணும் அவருக்கு மனிதர்கள் உறங்குவதைப் போன்ற காட்சியமைப்பை உருவாக்குகிறது.

**மூச்சலைகள் மார்பில் நெளிய**
**மல்லாந்து படுத்தபடி**
**கடல் தூங்குகிறது…**

**கரையோரப் படகுகளாய்**
**ஜனங்களும் அசைந்து கொள்ளப்**
**புரண்டு புரண்டு படுத்துக்**
**கடல் தூங்குகிறது…**
**கரை கொணர்ந்து இரைத்த**
**மீன் சவங்களைச் சுற்றி**
**வெற்றிலைக் குதப்பலாய்**
**வாக்குவாதங்களைத் துப்பிவிட்டு**
**கைலிகளைத் திரைத்துக் கட்டிக்கொண்டு**
**ஓடி வந்து சூழ்ந்துகொண்டனர்,**
**ஆகாயம் நோக்கித் திறந்த**
**ஒரு கூண்டு போல**

**புன்முறுவல் காட்டி**
**குன்றாத உயிர்ப்போடு**
**கடல் கம்பீரமாய்த்தான் தூங்குகிறது…**

**சாவை மொய்க்கக் குனிந்த**
**ஈக்களும் காக்கைகளும் விரட்டிக்**

**காத்திருக்கும் பலகாரக் கடைக்காரிகள்**
**மணலில் புதையத் தள்ளி வந்த**
**டீக்கடை கண்ணாடி கிளாசுகள்**
**கொடுக்கல் வாங்கல் சப்தங்கள்**
**ஏலம் விடுபவனின் ஒற்றைக் குரல்**
**லோடு எடுத்துப் போகும் சைக்கிள்காரனை**
**துரிசப்படுத்தும் கங்காணி வேகங்கள்…**
**எல்லா ஒலிகளும்**
**சோ சோ என முரலும்**
**கடலின் குறட்டைக்கு**
**வெகு எச்சரிக்கையாய்க்**
**கீழாகவே ஒலிக்கிறது**
**குறுகுறுக்கும் நெஞ்சங்கள்**
**கடலின்**
**குறட்டை ஒலியிலேயே**
**பயந்து திருந்த**
**கடல் இங்கே இன்று வரை**
**நிச்சிந்தையாய்த்**
**தூங்கிக் கொண்டுதான் இருக்கிறது…**

**(தேவதேவன் கவிதைகள், பக்.76, 77)**

இரவெல்லாம் அமைதியாகக் காட்சியளித்த கடலும் கடற்கரையோரச் சுற்றுப்புறங்களும் காலையில் அமைதியிழந்துக் காணப்படுகின்றன. கடலில் பிடித்து வந்த மீன்களை படகுகளிலிருந்து கடற்கரைகளில் கொட்டி வைத்துள்ளனர். இறந்த

மீன்களைச் சுற்றி மொய்க்கும் ஈக்களையும், காகங்களையும் விரட்டும் மனிதர்களையும் கவிதையில் சித்தரிக்கப்பட்டுள்ளன.

மீன்களை விற்கவும் வாங்கவும் வருபவர்களையும் 'கொடுக்கல் வாங்கல் சப்தங்கள் ஏலம் விடுபவனின் ஒற்றைக் குரல் லோடு எடுத்துப் போகும் சைக்கிள்காரனை துரிசப்படுத்தும் கங்காணி வேகங்கள்' எனும் கவிதை வரிகள் கடல் சார்ந்தப் பகுதிகளை கண்முன் நிறுத்துகின்றன. இவ்வளவு ஒலிகளுக்கும் நடுவே கடல் நிம்மதியாகத் தூங்கிக்கொண்டுதான் இருக்கிறது எனக் கூறுகிறார்.

அன்பின் வயப்பட்ட நெய்தல் நில காதலர்கள் ஊழ்வினையின் காரணமாக, பிரிவினை சந்திக்கும் வேளை, மரணத்திற்கு ஒப்பான வேதனையை அளிக்கிறது. அவ்வாறான, ஏக்கத்தினை தேவதேவனின் கவிதை வரிகளில் இடம்பெறும் நெய்தலினுடைய சுற்றுப்புற அமைவுகள் எடுத்தாளுகின்றன. மனிதர்களுடைய அமைதிக்கும், புலம்பலுக்கும், பிரிவுக்கும், இன்ப நுகர்வுக்கும் குறியீடாக கடற்கரையும், அவை ஒட்டிய பொழுதுகளும், கருப்பொருள்களும் துணை நிற்கின்றன.

கடலுக்குள் மீன் பிடிக்கச்சென்ற கணவனை நினைந்து மனைவி எரிந்துக்கொண்டிருக்கும் சூரியன் மெல்ல மேற்கே மறைவதைப் பார்க்கிறாள். அவ்வேளையில் கூட்டை நோக்கிச் செல்லும் பறவைகள் இணங்களாகவும், குஞ்சுகளோடும் பறந்து போகின்றன. யாரும் இல்லாத கடற்கரை தன்னந்தனியாக துன்பம் உருவாகப் பெற்ற மனத்தினைக் கொண்டவளாகவும், அவனின் நிலையினை எண்ணி வாடுபவளாகவும் நெய்தல் நில தலைவி காணப்படுகிறாள். அதற்கு, கடல் சார்ந்த இயற்கைச் சூழலமைவுகள் நெய்தல் திணையை வேரூன்றி நிற்க வைக்கின்றன.

**கடலடி**

**அழுந்தும் வாழ்வு**

**நனவுகள்** **(தேவதேவன் கவிதைகள், ப.30)**

கவிஞர் கடலின் அலை ஓசையும், அலையின் அதிர்வுகளும் அமைதியிழந்து காணப்படும் மனிதனுடைய வாழ்வியலோடு பின்னிப் பிணைந்துள்ளது என்கிறார்.

## மருதத்திணையின் நிலமும் பொழுதும்

பயிர்கள் செழிப்பாக வளரும் பகுதியினையும், நீர் வளம் பெருகிய நிலத்தையும், அழகிய சோலையையும், செல்வ செழிப்பால் பெற்ற ஆடம்பர வாழ்வையும் மருதத்திணைப் பெற்றுள்ளன. கழனி, பழனம், வயல், செறு ஆகியவைகளும் மருத நிலத்திற்குரிய பகுதியாக இரா. இந்து குறிப்பிடுகிறார். ஒவ்வொரு காலங்களுக்கும் ஏற்ப விவசாய பெருமக்கள் பயிர்களை பயிரிட்டனர். குறிப்பிட்ட, கால நிலைகளில் பயிரிடப்பட வேண்டிய நெற்கதிர்களையும், விளைச்சலையும், அறுவடையையும், மழைப்பெய்யும் உகந்த பருவகாலங்களையும் பற்றிய தெளிவினைப் பெற்றிருந்தனர். இதன்மூலமாக, பொழுதுகளோடு பயணித்தவர்கள் விவசாயப் பெருமக்கள் என்பது புலனாகின்றன.

பழங்கால மக்கள் வயல்களில் வேலை செய்வதற்கென கருவிகள் பயன்படுத்தாதக் காலக்கட்டமெனக் கருதப்படுகிறது. தங்களுடைய கைகளாலேயே அனைத்து வேலைகளையும் செய்ய வேண்டிய சூல்நிலை இருந்தது. விவசாயத்திற்கு உகுந்த கருவிகள் மக்களிடையே அறிமுகம் இல்லாத காலமது எனலாம்.

தங்களிடம் இருப்பதை மூலதனமாகக் கொண்டு அதில் கிடைக்கப் பெற்ற வருவாயில் வாழ்ந்தவர்கள் உழவர் பெருமக்களாவர். பொருளாதாரத் தேவைக்காக ஆண்களும், பெண்களும் வயல்களில் வேலை செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டன.

இவ்வாறு, ஆண், பெண் இருவரும் இணைந்து செயல்பட்ட பண்பட்ட நிலமாகவும், நாகரிகம் தோன்றிய நிலமாகவும் மருதம் உருவாக்கம் பெற்றன. செல்வ செழிப்பைக் கொண்டப் பகுதியான மருதத்திணையில் சொத்துரிமை உருவாகியதாக கார்த்திகேசு சிவத்தம்பி சுட்டுகிறார்.

வயல்களில் வேலை செய்வதில் ஆண்களுக்கு நிகராக பெண்களும் இருந்தது மட்டுமல்லாது, பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டதையும், "தோட்டத்தை உழுது பயிரிடுதல் பெண்ணுடைய பணி என்றாகியது. கால்நடைகளால் இழுக்கப்படும் கலப்பை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர்தான் வேளாண்மை ஆண்களுக்குரியதாக மாற்றப்படுகிறது". (கார்த்திகேசு சிவத்தம்பி, பண்டைத் தமிழ்ச் சமூகம் – வரலாற்றுப் புரிதலை நோக்கி, ப.186) கார்த்திகேசு சிவத்தம்பியின் கூற்றினால் நிரூபனமாகின்றன.

அன்றாடம் வயல்களில் வேலை செய்யும் உழவர்பெருமக்கள் படும்பாட்டினைக் கொண்ட கவிதை வரிகளையும் தேவதேவன் படைத்துள்ளார்.

**இறங்கி ஏறி**

**இறங்கி ஏறி**

**அள்ளுவதும் கொட்டுவதும்**

**அள்ளுவதும் கொட்டுவதுமாய்**

**அலுக்கும் கமலையும்**

**சலிக்கும் காளைகளும்**

**தீராது**

**சுற்றியும்**

**தீராது**

**ஓலமிடும்**

**கப்பிகளின் சோகத்தில்,**

**சுற்றி பசேலென்று முறுவலித்து**

**வயல் பாடும் ராகத்தில்**

**மனசு தோறும் (தேவதேவன் கவிதைகள், ப.51)**

மருதநிலம் உழவுத்தொழிலுக்கு ஏற்ற இடத்தையும், நீர்வளத்தையும் பெற்று அமைந்துள்ளன. கலாச்சார, பண்பாடுச் சார்ந்த மக்களின் வாழ்வியல் கூறுகள் உருவாகவும், அதன் மூலமாக புதிய விவசாய நிறுவனங்கள் தோன்றவும் மருதம் உறுதுணையாக இருந்தன. 'அலுக்கும் கமலையும், சலிக்கும் காளைகளும்' என்னும் கவிதைச் சொற்றொடர் ஆண், பெண் இருவரும் இணைந்து உழவுத்தொழிலை மேற்கொண்டிருந்ததையும், சமன் நிலையில் இருந்ததினையும் காட்டுகின்றன.

கவிதையில் 'கமலை' என்பது பெண்ணாகவும், 'காளை' என்பது ஆணையும் உள்ளுறையாக உருவகப்படுத்தப்பட்டுள்ளன. அவர்கள், தினமும் பல சவால்களையும் எதிர்கொண்டு வயல்களை உழுது விளைநிலங்களாக மாற்றுகின்றனர். அம்மாற்றங்களே, அவர்களுடைய வாழ்வில் சொர்க்கத்தை அடைந்ததைப் போன்ற, மகிழ்வினை ஏற்படுத்துகின்றன. நாட்டினுடைய முதுகெலும்பாகத் திகழக்கூடியவர்கள் உழவர்கள் என்பதை காந்தியடிகளும் குறிப்பிட்டுள்ளார்.

கார்த்திகேசு சிவத்தம்பி "வேளாண்மையின் தொடக்கக் காலத்தில் குடியிருப்புகளில் தங்கி, வேளாண்மையில் ஈடுபட்டவர் பெண்கள்தாம் என்பது மிகமிகத் தெளிவானதே. நிலத்தை முறையாக உழவு செய்யும் செயலை இந்தியாவில் முதன்முதலாகக் கண்டுபிடித்தவர்கள் பெண்களே என்பது புகழ்மிக்க இந்தியாவில் தாயுரிமை (Mother right in India ) என்ற நூலின் ஆசிரியர் எஃரன் பெல்ஸின் இறுதி முடிவாகும். இவையே போதுமான விளக்கம் தருகின்றன. குடியிருப்புகள்

அமைக்கப்பட்டுக் கொண்டிருந்த அக்காலகட்டத்தில் பெண்களுக்குரிய இவ்விருத்தல் ஒரு பொருளாதாரத் தேவையாக இருந்தது". (கார்த்திகேசு சிவத்தம்பி, பண்டைத் தமிழ்ச் சமூகம் – வரலாற்றுப் புரிதலை நோக்கி, ப.187) என்கிறார்.

எனவே, மருதத்திணை புதியதோர் கலாச்சாரத்தை சமூகத்தில் ஏற்படுத்தியுள்ளன. மனிதர்களுக்கு அறிவுப்பூர்வமான சிந்தனைக் களங்களாக இலக்கியங்கள் காலந்தோறும் வெளிப்படுத்துவதை கடந்த ஐம்பது ஆண்டுகாலமாக தனக்கென ஓர் இடத்தை தக்க வைத்துள்ள கவிஞர் தேவதேவனுடைய கவிதைகளும் கூறுகின்றன.

வயல்களில் வேலையை முடித்துவிட்டு வீடு திரும்புவர்களுடைய இயல்பான வாழ்வியல் பதிவுகளை கவிஞர் சுட்டுகிறார். வேளாண்மைக்காக மாட்டினை உழவர்கள் பயன்படுத்தியிருப்பதை, 'உழவு மாட்டுடன்' என்னும் கவிதை வரிகள் அடையாளப்படுத்துகிறது. மருதநில விலங்கான 'மாடும்' முல்லை நிலத்துக்குரிய விலங்கான 'ஆடும்' என இருத்திணைக்குமுரிய கருப்பொருட்கள் கவிதையில் இணைந்துள்ளதினால் இவற்றை திணைமயக்கம் எனலாம்.

**உழவு மாட்டுடன், தோளில்**
**உழுத கலப்பையுடன்...**
**கஞ்சிக் கலயம்**
**புல்லுக் கட்டு, விறகு**
**இடுப்புக் குழந்தையுடன்...**
**ஆட்டு மந்தை செலுத்தும்**
**கைக்கோலுடன்...** **(மேலது, ப.45)**

மாடு, கலப்பை, கஞ்சிக்கலயம், புல்லுக்கட்டு ஆகியன வயல்பகுதியின் சுற்றுப்புறச் சூழலின் அழகிய தருணத்தினை தெளிவாகக் காட்டுகின்றன. ஐந்நிலங்களில்

மருதநிலம் செல்வாக்குப் பெற்ற நிலமாகவும், நாகரிக, பண்பாட்டையும் கொண்ட நிலமாகவும் விளங்கியது.

அனைவருக்கும் உணவளிக்கும் உழவர்களின் வேலைப்பளுவை எடுத்துக்கூறும் கவிதை மொழிகள் அவர்களுடைய அன்றாட வாழ்வாதாரம் கவலையோடு நகருவதை பற்றியும் பதிவு செய்ய தவறவில்லை என்பதனை,

**அந்தி வானம் ஓர் அடுப்பு நெருப்பாய்க் கனலத் தொடங்க**
**வயல்வெளிகளில்**
**வேலைமுடிந்து வந்துகொண்டிருந்தார்கள்.**
**வழிகளில் பொறுக்கிய**
**சுள்ளிகளின் தலைச்சுமை.**

**உணவுக்காக மட்டுமின்றி**
**பிற விசித்திரமான தேவைகளுக்காகவும்தான்**
**எத்தனை பாடுகள்!**
**எத்தனை தலைச் சுமைகள்!**

**நிலா ஒளிரும் குடிசைமுன்னே**
**பாடுகளைப் பானையிலிட்டு**
**தலைச்சுமைகளால் எரியூட்டி**
**கதகதக்கும் புத்துணவை**
**அகப்பையில் அள்ளி**
**சுவைபார்க்கிறவள் முகத்தில்தான்**
**எத்துணை பேரொளி!**

**பாய்விரித்த முற்றத்தில்**
**தட்டம் விரித்த இரவு**
**அகண்டப் பெருவெளியே**
**ஒருவர் உணவான போழ்து**
**கனவுகளற்ற ஆழ்துயில்**
**ஓய்வு. சொர்க்கம்**
**கணுக்கள் தோறும்**
**உயிரின்பங்கள் பூக்கும்**
**பெருமரம். (பேர்யாழ், பக்.56, 57)**

நெல்லின் உற்பத்திப்பெருக்கைக் கொண்ட மருத நில மக்களின் வாழ்வானது ஒரு வேளை உணவுக்காக அல்லல்படுதலும், ஆடம்பரமாக வாழ்ந்தவர்களின் தற்போதைய நிலையும், அகம் நிலையில் ஏற்படும் உள்ளத்துயரமும் ஆகிய மூன்று உண்மைகள் 'பேர்யாழ்' கவிதையில் வெளிப்படுகின்றன.

ஒவ்வொரு எழுத்தாளர்களுடைய படைப்பாக்கங்களிலும் ஏதேனும் வகையில் நிலப்பின்னணிகளையும், பருவ காலங்களையும், இவ்விரண்டும் மனிதர்களுடைய வாழ்வாதாரத்திற்கு தரும் முக்கியத்துவத்தையும் பற்றிய ஆய்வுகளை எழுத்துருவாக்கத்தில் இயம்பிய வண்ணம் உள்ளனர். அவ்வாறான, பதிவை தேவதேவனும் 'அந்திவானம்' எனும் பொழுதையும், மருத நிலத்தினுடைய எழிலார்ந்த சூழலமைவுகளையும் தன்னுடைய கவிதையில் ஒருங்கே அமைத்துக்கொண்டுள்ளார்.

முதற்பொருளை உணர்த்தும் நில அமைப்புகளும், காலப்பகுப்பாய்வுகளும் சங்க காலம் முதற்கொண்டு நவீனத்துவம், பின்நவீனத்துவம், அமைப்பியல், பின்அமைப்பியல் காலத்தில் தோன்றக்கூடிய பல்வேறு இலக்கியங்களும் எடுத்துரைப்பதை

தேவதேவனுடைய கவிதைகளை 'ஒரு பானைச்சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பதுபோல சான்றாக அமைகின்றன. மருதநில மக்கள் பொருளாதாரச் சிக்கலை எதிர்கொண்டிருப்பினும், அதற்கேற்ப தங்கள் வாழ்வை கட்டமைத்துக்கொண்டனர்.

ஆறு பெரும்பொழுதுகளும், இரவின் நடுப்பகுதியும் பகலின் முன்பகுதியும் மருதத்திற்குரிய சிறுபொழுதாக அமைகின்றன. ஒவ்வொரு காலைப் பொழுதும் பூமியில் வாழும் உயிரினங்களுக்கு புதியதொரு துவக்கத்தை ஏற்படுத்துகிறது.

**வைகறைச் செல்வீ!**
**உஷா!**
**காலைப் பொழுதின்**
**திவ்யமான அமைதியே!**
**இயற்கையின்**
**எல்லாப் பொருட்களிலும்**
**இலங்குகின்ற மவுனமே!**
**என் பேரழகே!**

**(மார்கழி, ப.4)**

இவ்விதம் காலையில் உதிக்கும் சூரிய ஒளியானது அன்றையப் பொழுதை தேவதேவனின் கவிதை வரிகளால் துவக்கி வைக்கிறார். சூரியன் உதிக்கும் காலைப் பொழுதை, சிறுப்பெண்ணாகப் பாவித்து 'வைகறைச்செல்வி' என அழைக்கிறார். வைகறையும், விடியலும் மருத நிலத்திற்குரிய பொழுதுகளாகும்.

இயற்கையின் ஒவ்வொரு செயல்பாடுகளுக்கும், ஊக்கத்திற்கும் " 'ரா' (Raw) என்ற கதிரவத் தெய்வமே, விலங்குகள் முதலிய அனைத்தையும் படைத்தது என்று எகிப்திய

தொன்மவியல் படைப்புக் கோட்பாடு குறிப்பிடுகிறது." (தொகுப்பாசிரியர்கள், இலக்கியக்கோட்பாடுகளும் மறு உருவாக்கங்களும், ப.259)

பரத்தையர் வீட்டுக்கு சென்று காலையில் வீடு திரும்பும் தலைவனின் வருகையைக் கண்ட தலைவியின் கோபத்தைத் தணிப்பதற்கு ஆசையாக பேசுகிறான். உன்னுடைய அமைதி தாள முடியவில்லை, மவுனமான நின் பார்வையில் எனக்கு என்ன செய்வதன்றே தெரியவில்லை என தலைவன் புலம்புவதாகவும் இரு விதமாக கவிதை ஆராய்கின்றன.

இயற்கைக்கும் ஆன்மா இருப்பதினை நம்புபவர் தேவதேவன். உலகத்தில் வாழும் மனிதர்களுக்கு நல்வினைகளை எடுத்துரைப்பதற்கு ஏற்ற களமாக இயற்கையை அவர் தேர்ந்தெடுத்துள்ளார். அவற்றின் மூலமாக, மனிதக்குலத்திற்கு அவர் ஆற்ற வேண்டிய பங்களிப்பையும் இயற்கையினூடாக அறக்கருத்துக்களை எடுத்துரைக்கிறார்.

**ஒரு ஓவியம் உயிர்த்தெழுவதுபோல்**
**புலர்ந்துகொண்டிருந்தது வைகறை.**
**தன் உயிர் உள்ளவரை**
**அதைச் சிதையாதபடி**
**காக்கும் காதல்**
**மலர்ந்துகொண்டிருந்தது அவனிடம்.**

**(நுனிக்கொம்பர் நாரைகள், ப.29)**

பூமியில் உள்ள உயிர்களுக்கு ஏற்ற கால நிலையாக மருதத்திணைப் பொழுதுகள் உள்ளன. அன்றைய நாள் புதியதொரு தொடக்கமாகவும், இனி வரும் நாட்களும் நல்லதொரு ஆரம்பமாக இருப்பதற்கு காலையும், வைகறையும் முக்கியத்துவம்

பெறுகின்றன. அவ்வாறான, ஓர் பொழுதினை வயல் சூழ்ந்த நிலப்பகுதியான மருதம் வரவேற்கின்றன.

மருதத்திணைக்குரிய சிறுபொழுது வைகறையாகும். தலைவியுடன் பழகிய கடந்த கால நினைவுகள் தலைவனை வாட்டுகின்றன. மனிதனின் ஆழ்மனதில் எழும் எண்ணங்களையும், வலிகளையும் ஒருங்கே தன் கவிதைகளின் வழி கொண்டு வருவது கவிஞர்களின் தனிப்பாங்காகும். அத்தகையதோர் பாங்கினை கவிஞர் தேவதேவனும் புலப்படுத்துகிறார்.

இயற்கையின் எழிலார்ந்த சூழலமைவுகளைக் காணும் கவிஞர்கள் அவற்றை தாங்கள் படைக்கும் கவிதைகளில் வெளிப்படுத்துவர் என்பதை தேவதவனுடைய கவிதைகளும் குறிப்பிடுகின்றன. ஆனந்த் ”கவி மனத்தின் அகவளர்ச்சி சார்ந்த முறைபாடுகளை வெளிக்கொணருவதில் கவிதை பெரும் பங்கை வகிக்கிறது. அந்த ஆழ்மன முறைபாடுகள் அருமையான கவிதைகளை வெளிப்படுத்துவதோடு மட்டுமில்லாமல் வாசக மனத்தின் அகவளர்ச்சியிலும் தன்னளவில் பங்குகொள்கின்றன.’’ (ஆனந்த், கவிதை என்னும் வாள்வீச்சு கவிதை பற்றிய கட்டுரைகள், ப.84) கவிஞர்களுடைய மனதில் ஏற்படும் பொருண்மைகள் பெரும்பான்மையாக கவிதைகளில் வெளிப்படும் என்று கூறியுள்ளார்.

## பாலைத்திணையின் நிலமும் பொழுதும்

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணைகளில் பொருளாதாரத்தின் பொருட்டு வேறு தேசத்திற்கு பாலை நிலம் வழி பயணம் மேற்கொள்ளும் கணவனின் பிரிவை நினைந்து மனைவி துன்புறுவதும், அப்பிரிவு அவர்களின் உள்ளங்களில் ஏற்படுத்தும் அன்பினை உறுதிப்படுத்துகின்றன. மனித

மனங்களில் ஏற்படும் வேதனைகளும், வலிகளும், துன்பங்களும் வறண்ட நிலமான பாலைத்திணையைக் குறிக்கின்றன.

**தகிக்கும் பாலை**

**கால்களைக் கெஞ்சக் கெஞ்ச**

**தண்ணிக் குடங்க ளேந்தி வரும் அவளை**

**வாரி விட்டு விடாய் தீர்க்க**

**வழி பார்த்து நிற்கும் பாறைகள்-**

**ரௌடித்தனமாய் (தேவதேவன் கவிதைகள், ப.66)**

'தகிக்கும் பாலை' எனும் கவிதை வரி கடுமையான வெப்பத்தினையும், வறண்ட நிலத்தினையும் பாலைத்திணைக் கொண்டுள்ளதை உணர்த்தி நிற்கின்றன. பாலை வெளியில் நடப்பவர்களுடைய கால்களை இரணமாக்கும் மணல்பாதைகளில் சற்று மழைப்பெய்தால் அந்நிலம் ஈர்க்கும், அதைப்போல தனக்குப் பிடித்த பெண்ணைக் காணும் ஆணினுடைய மனநிலையும் இருக்குமென பாலைத்திணையுடன் ஒப்புமைப்படுத்தப்படுகின்றன.

ஆணினுடைய மனதில் தோன்றும் அன்பை மட்டுமல்ல, 'பாலைமணல் மழைத்துளியை ஈர்ப்பதுபோல் அவன் தன் நண்பனைக் கண்டதும் மலர்ந்தான்' என தோழமையினுடைய உணர்வை வெளிப்படுத்தவும் ஏற்ற களமாக பாலைப்பிண்ணனி அமைகின்றன.

பாலை நிலம் சூழ்ந்தப் பகுதியினை வருணனையோடு ஆக்கம் பெறச் செய்கிறார் தேவதேவன். அக்கவிதை வரிகள்,

**ஒரு பாலையில் போய் குடியிருக்கிறேன்.**

**காலையில் மேற்கில் விழும் வீட்டின் நிழலில்**

**தங்கிக்கொள்கிறேன்; மாலையில் கிழக்கில்.**

**வீட்டிற்குள் எனது கற்புடைய மனைவி.**

**வெப்பம் தாளாத உச்சி வேளை**

**வீட்டுள் போய் புணர்ந்து பெற்ற குழந்தைகள்**

**வெளியே நிழல்தேடி அலைகின்றன**

**விதைகள் சேகரித்து வந்தன, குழந்தைகள்**

**பாலையெல்லாம் சோலையாக்கத்**

**துடிதுடிக்கும் விதைகள்** **(மேலது, ப.131)**

கவிதை ஒரு நாளின் வெவ்வேறு பகுதியில் நிகழும் நேரங்களின் சாராம்சத்தை வெளிப்படுத்துகிறது. கடும் வறட்சியால் பாதிக்கப்பட்ட நிலச் சூழ்நிலைப்பகுதியில் குடியிருக்கும் குடும்பத்தை தத்ரூபமாக தேவதேவன் கவிதையின் வழி அறிய முடிகிறது. பாலையின் வெப்பம் தாளாமல் இறப்பவர்களும், கள்வர்களின் கொடுமைகளும், நிறைந்தப் பகுதியின் ஊடாகப் பயணம் செய்வோர்களின் நிலைக்குறித்துப் பதிவிடும் இலக்கியங்களிலிருந்து சற்று வேறுபட்டு அவ்விடத்தில் வசிப்பவர்களின் நிலைப்பற்றி குறிப்பிட்டுள்ளார்.

எனவே, பருவகாலங்களுடைய யதார்த்தப் பிம்பங்களையும், வறண்ட நிலங்களுடைய காட்சிகளையும், அந்நிலத்தினை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழும் மக்களுடைய வாழ்க்கையில் ஏற்படுத்தும் முரண்பாடுகளையும் தேவதேவனின் கவிதைகளில் பொருத்தமுற அமைத்துள்ளார். பாலை நிலத்தின் அமைப்பு முறையினை எடுத்துரைக்கையில்.

**பாலைவனத்தில் பயணம் செய்வோனுக்கு**

**கைவசமுள்ள நீர்க்கலமே**

**சோலை (மேலது, ப.451)**

முற்றிலுமாக பாலை நிலம் வறண்ட பூமியாகவும், மணல்பகுதியாகவும் அல்லாமல், அவ்விடங்களில் வாழ்கின்ற மக்களுடைய தேவைகளுக்கேற்ற உணவுகளையும் உற்பத்தி செய்துள்ளனர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் நிலங்கள் தலைவியின் வாட்டத்தை நினைவுறுத்த பாலைத்திணை தலைவனின் நினைவுகளுக்கும், பொருளாதாரத்திற்கும் முக்கியத்துவம் அளிக்கின்றன.

ஏரிகள், குளங்கள், ஆறுகள் என அனைத்துவகையான நீர்வளங்களையும் பெற்று குறிஞ்சி, முல்லை, மருதத்திணைகள் அமைய, நேரெதிரான நீர்வளம் குன்றியப் பகுதியாகப் பாலைக் காட்சியளிக்கிறது. இவ்வறட்சி நிலை, ஐந்திணைகளில் ஒன்றான பாலைப் பின்னணியோடு இணைக்கப்பட்டுள்ளன.

பாலை நிலம் நீர் நிலைகளோ, ஓடைகளோ இல்லாத வறண்ட மிதமான நிலமாகும். கோடை மற்றும் நண்பகல் ஆகியவை இதற்கு ஒத்த பருவங்களும், நேரங்களுமாகின்றன. இருவருடைய பிரிவினையை பாலை நிலத்தினை மையமிட்டு உணர்த்துவதில் சங்க இலக்கியப்பாடல்கள் இன்றியமையாததாக விளங்குகின்றன. சங்க காலத்திற்கு பிறகுத் தோன்றிய இலக்கியங்கள் திணையினுடைய பண்பாட்டினை ஏதேனும் முறையில் பதிவு செய்கின்றன. தற்காலத்தில் தோன்றக்கூடிய கவிதைகளிலும் பாலைப்பற்றிய ஆய்வுகளுடைய தனித்தன்மைகளை தேவதேவனும் படைத்துள்ளார் என்பதை,

**கொடும் பாலையாய்த் தகிக்கிறது**
**ஒரு மரத்திற்கும் இன்னொரு மரத்திற்குமிடையே**
**கூடுதலாய் நீண்டுவிட்ட நிலம்.**

**(நுனிக்கொம்பர் நாரைகள், ப.11)**

கவிதை வரிகள் உணர்த்துகின்றன.

"பாலை தனக்கென்று நிலம் இல்லாதது; ஆனால் தனக்கென்று பண்பையும் அது சார்ந்தக் குறியீடுகளையும் கொண்டுள்ளது. பாலை துன்பத்துக்குரிய குறியீடாகவே தொல்காப்பியரால் சுட்டப்பட்டுள்ளன. பாலையை உணர்த்தி எழுதப்பட்ட கவிதைகளும் இதையே அடிப்படையாகக் கொண்டுள்ளன". (அவ்வை.எஸ், சங்கப் பாடல்களில் திணையுணர்வும் தன்னுணர்வும் – கவிதையாக்க நெறி, பக்.132, 133) மனித மனங்களில் ஏற்படுகின்ற மனக்குமுறல்களின் தாக்கத்தினை நவீன கவிதைகளில் படிமக்காட்சிகளோடு ஒத்திசைந்துக் காணப்படுகின்றன.

கவிதை என்பது "தொடக்கத்தில் சந்தோஷமும் ஆழ்மன உணர்வும் தந்து பின் ஏக்கமும் வலியும் தரவல்லது கவிதையின் அழைப்பு." (ஆனந்த், கவிதை என்னும் வாள்வீச்சு கவிதை பற்றிய கட்டுரைகள், ப.97) என கவிதையின் தத்துவத்தினை ஆனந்த் விளக்குகிறார். இத்தகையதோர் கொள்கையை தேவதேவனுடைய 'நுனிக்கொம்பர் நாரைகள்' கவிதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள கவிதை வரிகளில் பாலை நிலக்கொடுமையும், அந்நிலத்தில் வாழுகின்ற உயிரினங்கள் அனுபவிக்கும் உணர்வுகளை தலைவியின் மனக்குமுறல்களில் வெளிப்பட்டுள்ளன.

அருவிகளும், நீர் வீழ்ச்சிகளும் இல்லாத சூடும் வறட்சியும் கொண்ட பகுதியான பாலைக்குரிய சிறுபொழுது நண்பகல் (வெயில்) வேளையாகும்.

**தப்ப முடியாத வலையாய்**

**படர்ந்து எரிந்துகொண்டிருந்தது வெயில்.**

**சும்மா வெளியே இறங்கி நடந்தாலே போதும்**

**நம் ஆற்றலை உறிஞ்சிவிடுகிறது இந்த வெயில்.**

**கோடை வெயிலால் உறிஞ்சப்படும்**
**குளிர்பானமோ நாங்கள்?**
**யாருக்காக எங்கே சேமித்து வைத்திருக்கிறாய்**
**எங்கள் ஆற்றல்களையெல்லாம்**
**ஒட்ட உறிஞ்சி எம்மைத் துப்பிவிட்ட வெயிலே?**
**இயற்கை ஆற்றலை அறியாதவரானோமோ**
**உன்னை இகழும் நாங்கள்?**
**வெயிலின் வெம்மையான நிலப்பகுதி.**

**(பள்ளத்திலுள்ள வீடு, ப.41)**

கோடையின் வலிமையும், வறட்சியின் கடுமையும், வளமற்றப்பகுதியும், வெம்மையின் கொடுமையுமாக பாலையின் பொழுது காட்சியளிக்கிறது. கவிதையில் வெயிலினுடைய வெம்மையான நிலப்பகுதியாக பாலை நிலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. வெயிலினுடைய தாக்கமும் வறட்சியின் கொடுமையும் பாலைக்கவிதையில் காண நேரிடுகின்றன.

**ஒரு நான்கடி உன்னைவிட்டு விலகினால்போதும்**
**கொல்கிறது வெயில்-காலம் காலமாய்**
**நீ சொல்லிக்கொண்டேயிருப்பதை**
**எப்படி மனிதர்கள் உணராதிருக்கிறார்கள்**
**இத்துணை காலம்?**

**(நுனிக்கொம்பர் நாரைகள், ப.34)**

பிரிவை உணர்த்தும் ஆழ்ந்த மனித மனங்களின் வேதனையைக் கூற, மதிய வேளை எற்ற காலமாக அமைகின்றன. வெயில் காலமும், வறட்சியும் மனித மனங்களின் உள்ளார்ந்த நிகழ்வுக்குரியதாகும்.

“காலம் என்னும் கருத்து ஒரு பன்முகப் படிகம் போல் பல கோணங்களில் அனுபவமாகிறது. காத்திருத்தல், எதிர்பார்ப்பு, ஏக்கம், பிரிவாற்றாமை, நடந்தது பற்றிய துயரம், வேதனை, தற்கண சந்தோஷம் அல்லது வலி, சுய தொடர்ச்சி குறித்த மன நகர்வு என்பவை போன்ற மன நிலைகள், கால அனுபத்தை வெவ்வேறு விதங்களில் காட்டுகிறது. சந்தோஷம் காலத்தை லேசானதாகவும், வேகமானதாகவும், துயரம் அதை மிகவும் கனமானதாகவும் மந்தகதி கொண்டதாகவும் காட்டுகிறது.” (ஆனந்த், கவிதை என்னும் வாள்வீச்சு கவிதை பற்றிய கட்டுரைகள், ப.28) காலம் என்பது மனித செயல்பாடுகளின் பல்வேறுப் படி நிலைகளின் கூறுகளாக இருப்பதை கவிஞர்களின் எழுத்துருவாக்கத்தின் மூலமாக எடுத்துரைப்பதை தேவதேவனின் கவிதை மொழிகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

## தொகுப்புரை

மரங்கள், செடிகள், விலங்குகள், பறவைகள், ஆறுகள், குளங்கள், மலைகள், பூமி, ஆகாயம், தென்றல் எல்லாவற்றினையும் இயற்கை உள்ளடக்கியுள்ளது. அவ்வியற்கையின் மீது கொண்டுள்ள அன்பானது, தேவதேவனின் கவிதைகளிலும் வெளிப்படுகின்றன.

கவிஞர் தேவதேவன் இயற்கையில் தோன்றும் காட்சிகளைக் கண்டு அவற்றிற்குரிய கற்பனைகளையும், உவமைகளையும், இரசனைக் கொள்கைகளையும் கலந்து அழகியல் சார்ந்த சூழலமைவுகளைக் கொண்ட கவிதைகளை தன்னுடைய

எழுத்தின் வாயிலாக வெளிக்கொணர்ந்தவர். இவருடைய கவிதைகளில் ஐந்திணை, புல், மரம், இயற்கை, மலை என இயற்கையின் படிமங்களை பதிவு செய்துள்ளார். மேலும், மனிதனுக்குரிய உணர்வுகளும் இயற்கைக்கும் இருப்பதை அவருடைய கவிதைகளில் தென்படுகின்றன.

முதல், கரு, உரி ஆகிய முப்பெரும் பிரிவுகளைத் திணை இலக்கியம் அமையப்பெற்றுள்ளன. முதலாவாதாக, நிலத்தினையும் பொழுதினையும் சுட்டிக்காட்டும் முதற்பொருள் முதல் நிலையில் அமைகின்றன. நிலங்களும், பொழுதுகளும் மனிதனின் அன்றாட செயல்பாடுகளிலும், வாழ்வியல் தளங்களிலும் முக்கிய இடத்தை வகிப்பதை தேவதேவனின் கவிதை வரிகளில் வெளிப்பட்டுள்ளன.

காலமும் இடமும் மக்களுடைய வாழ்வியல் சார்ந்த ஆக்கங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றன. ஆகவே, அவற்றை பழந்தமிழர்கள் முதற்பொருளில் அடக்கினர். முதன்மையாகக் கருதினர். ஐவகை நிலங்களையும் அவற்றுடன் இயங்கும் காலப்பகுப்பாய்வுகளையும் குறிப்பிடும் முதற்பொருளின் அமைவுகள் அவற்றுடன் இணைந்து வாழும் உயிரினக் கோட்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றன. எனவே, கருப்பொருளின் இயல்பினைக் குறிப்பிட முதன்மையாகத் திகழ்வதினால் இடமும் காலமும் முதன்மைப்படுத்தப்படுகின்றன.

இயல் மூன்று

# தேவதேவன் கவிதைகளில் கருப்பொருள்

# இயல் மூன்று

## தேவதேவன் கவிதைகளில் கருப்பொருள்

அகப்புறத்திணைகள் மனித வாழ்வின் இரு கூறுகளாகும். அவற்றுள், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஐந்நிலங்களையும், முதல், கரு, உரி ஆகிய முப்பொருள் பாகுபாடுகளையும் பற்றி ஆராய்வது அகத்திணையாகும். மன்னர்களின் கொடைத்திறம், போர்க்கள நிகழ்வுகள், வீரம் பற்றி உரைப்பது புறத்திணையாகும். அகத்திணையின் முப்பொருள்களில் ஒன்றான கருப்பொருட்கள் நிலத்தில் வாழுகின்ற செடிகள், மரங்கள், பறவைகள், விலங்குகளை தொல்காப்பியர் பத்து வகையாகப் பாகுபடுத்தினார். அகப்பொருளின் இலக்கணம் பற்றி உரைக்கும் நம்பியகப்பொருள் கருப்பொருட்களை பதினான்காக விரிவுப்படுத்தின.

தொல்காப்பியர் ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய கருப்பொருட்களை வரைறுத்துக்கூறவில்லை. உரையாசிரியர்கள் ஐந்திணைகளுக்குரிய கருப்பொருட்களை வகைப்படுத்தினர். ஒவ்வொரு நிலத்திலும் வாழும் மக்களுடைய வாழ்வியலோடு ஒன்றிணைந்தது கருப்பொருட்கள். முதற்பொருளுக்கு அடுத்த நிலையில் இலக்கியங்களிலும், இலக்கணங்களிலும் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு நிலத்திலும் வாழுகின்ற மக்களும், உயிரினங்களும், பயிரினங்களும் அவ்வந்நிலத்தினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப்பொருட்களும் கருப்பொருட்களை மையமிட்டு அமைகின்றன.

"தமிழர் வகுத்த குறிஞ்சி முதலாம் ஒவ்வொரு திணையும் தன்னிறைவுடையது. தன்னகத்து வாழும் மக்கட்கு வேண்டும் உணவு முதலான நுகர்ச்சிகளையும், யாழிசை முதலான கலைகளையும், தெய்வம் முதலான நெறியுணர்வையும், தொழில் முதலான

வினை வாய்ப்புகளையும் வழங்கவல்ல பெற்றியது. வாழ்க்கைக்கு வேண்டும் கூறுகளெல்லாம் கொண்டிருத்தலின் திணை ஒவ்வொன்றும் தனியுலகம் என்று சொல்லத்தக்க அமைவுடையது". (மாதையன்.பெ, அகத்திணைக்கோட்பாடும் சங்க அகக்கவிதை மரபும், பக்.30, 31) ஒவ்வொரு திணையும் ஒன்றிலிருந்து மன்றொன்றுக்கான வளர்ச்சி நிலைகளைக் காட்டுகின்றன.

கவிதை, நாவல், நாடகம், சிறுகதை போன்ற படைப்பாக்கங்களின் வாயிலாகவும், கருப்பொருட்கள் இன்றளவும் பயணித்து வருகின்றன. "கருப்பொருட் சூழல் என்பது காலப் பின்புலத்தினூடாக நிகழக்கூடியது" என (ஜவகர்.க, திணைக்கோட்பாடும் தமிழ்க்கவிதையியலும், ப.284) குறிப்பிடுகிறார்.

மனித வாழ்வியலுடன் இயங்கும் இயற்கையை கருப்பொருட்கள் ஒன்றிணைக்கின்றன. ஸ்ரீ தரன் அஞ்சுமூர்த்தி கருப்பொருள் என்பது பண்பாட்டின் அழகியல் வரையறை எனவும், உயிருள்ள ஒரு பொருளை உறுதிப்பொருளாக மாற்றுகிறது என்கிறார்.

மனித வாழ்வியலில் இயற்கையுடன் கொண்டுள்ள உறவுமுறைகளையும், சமூகப்பதிவுகளையும் காலங்காலமாக கவிஞர்கள் எடுத்துரைக்கின்றனர். தமிழ்க் கவிதைப் புலத்தில் இன்றளவும் தனக்கென்று ஓர் இடத்தை உருவாக்கிக் கொண்டுள்ள தேவதேவனுடைய கவிதைகளின் வாயிலாக, கருப்பொருட்களின் தனித்தன்மைகளையும், அவற்றால் சுற்றுப்புறச் சூழலில் ஏற்படும் மாற்றங்களைப் பற்றியும் இவ்வியல் ஆய்கின்றன.

## குறிஞ்சித்திணை

### பறவை

பதினான்கு வகை கருப்பொருள் அமைவுகளில் பறவை இனமும் குறிப்பிடப்பட்டுள்ளன. மயில் குறிஞ்சிக்குரிய பறவையாகும். தமிழ் இலக்கியங்களில் மயிலின் பெருமையைப் போற்றும் விதமான பாடல்களும் புனையப்பட்டுள்ளன. சங்க இலக்கியப் பாடல்களில் குறிப்பிடப்படும் மயில் தலைவன், தலைவியரின் காதல் வாழ்வின் ஒப்பீடாகும் என்பதை அகத்திணையும், பேகன் குளிரில் நடுங்கிய மயிலுக்குப் போர்வைக் கொடுத்ததை புறத்திணையும் கூறுகிறது. இவ்வாறாக, அகப்புறத் திணைகளுக்கு, மயில் கருப்பொருளாகத் திகழ்கின்றன.

அ.திருமலைமுத்துசுவாமி ”மயிலினை மகளிரது மென்மைக்கும், அதன் கலாவத்தை மகளிரது கூந்தலுக்கும் அதன் குடுமியை வாகைப் பூவிற்கும், அதன் காலை நொச்சி இலைக்கும் ஒப்பிட்டுப் புலவர்கள் பாடியுள்ளனர்”. (திருமலைமுத்து சுவாமி.அ, இலக்கியத்தில் விலங்குகளும் பறவைகளும், ப.35) பெண்களுடைய அழகியல் சாயல் மயிலுடன் வர்ணிக்கப்பட்டுள்ளன. ஐங்குறுநூறில் மயில் குறித்து அமைந்த பத்துப்பாடல்கள் ‘மஞ்ஞைப்பத்து’ எனப்படுகிறது.

’கான மஞ்ஞை’ காட்டு மயிலையும், வயல்வெளிகளில் காணப்பட்ட மயில் வகையையும் முறையே பழந்தமிழர்கள் குறித்தனர். மலை வளம் சூழ்ந்த குறிஞ்சித் திணைப் பகுதியை மயில்கள் இருப்பிடமாகவும், அங்கு கிடைக்கப்பெறும் உணவை உண்டும், சுதந்திரமாக வாழ்ந்தன.

**மிருகக்காட்சி சாலையின் ஒரு கூண்டில்**

**தோகை விரித்தாடியது**

**ஒரு வெள்ளை மயில்** **(நுனிக்கொம்பர் நாரைகள், ப.45)**

மயில் இனங்களில் அபூர்வமான பறவை வெள்ளை மயிலாகும். மலைகளிலும், காடுகளிலும், வயல்களிலும் இயற்கையோடு இணைந்து சுற்றித்திரிந்த மயிலினை கூண்டில் அடைப்பட்டிருப்பதைக் கண்ட கவிஞரின் பதிவாக கவிதை வரிகள் அமைந்துள்ளன.

"களவு, கற்பு என்ற வாழ்க்கையின் இருவேறு நிலைக்களங்களிலும் இணைவுச் சூழலில் இன்பம் காணும் தலைவி, பிரிவுச் சூழலில் துன்பம் காணும் தலைவி என யாராயினும் மயிலுடன் இணைத்து நோக்கப்பட்டிருக்கின்றனர். தலைவி மயிலாகப் பாடப்பட்டதும் உண்டு. மயில் தலைவியாகப் பாடப்பட்டதும் உண்டு". (பாக்யவதி சங்கரலிங்கம், சங்க இலக்கியத்தில் மயில், ப.21) சங்க இலக்கியப் புலவர்கள் தலைவனின் பிரிவால் வாடும் தலைவியை மயிலுடன் ஒப்பிட்டு பாடல்கள் புனைந்துள்ளனர்.

அகத்திணையில் கருப்பொருளுக்குரிய அமைவுகள் ஒவ்வொரு நிலத்திலும் வாழுகின்ற உயிரினங்களின் அடிப்படையில் அமைக்கப்படுகின்றன. இயற்கையும், அவ்வியற்கையின் ஒழுங்கமைவை வாழ்வதாரமாகக் கொண்டு வாழும் உயிரினக் கொள்கைகளையும் ஆராயும் கருப்பொருட்கள் நவீனயுகத்தில் ஏற்படும் மாற்றங்களை கவிதைகள் காலந்தோறும் மெய்பிக்கின்றன.

**பேச்சிழந்து மூச்சிழந்து நின்றேன்**

**விலங்குக் காட்சி சாலையிலே**

**தோகை விரித்தாடிய**

**ஒரு வெள்ளை மயில் கண்டு.**

**(நுனிக்கொம்பர் நாரைகள், ப.51)**

சங்க இலக்கியப் புலவர்கள் தலைவியின் கூந்தலை மயிலினுடைய தோகையோடும், தலைவி மயிலினுடைய சாயலை போன்றவளாகவும் பாடல்களில் ஒப்பிட்டுள்ளனர். அகமாந்தர்களின் செயல்பாடுகளையும், எண்ணங்களையும் ஒன்றிணைப்பதில் மயில் கருப்பொருளாய் விளங்குகின்றன. குறிப்பாக, தலைவியினுடைய மனவோட்டங்கள் மயிலுக்கு உவமைப்படுத்தப்படுகின்றன.

**காதலும் வீரமும் என்று**

**தோகை விரித்தாடியதாம்**

**சங்க காலத் தமிழினம்.**

**காதலும் பெருங்காதலும் என்றே**

**தோகை விரித்தாடுகிறது**

**அன்றிலிருந்து இன்று வரை எனது மயில்**

**(மேலது, பக்.51,52)**

அகம், புறம் இரு வகைத்திணையிலும் மயில்கள் பற்றிய வருணனைகள் இடம் பெற்றுள்ளன. குறிஞ்சி நிலக்கடவுள் முருகனின் வாகனம் மயிலாகும். காதல் மொழிப்பேசும் தலைவனின் உரையாடல்களில் கவிஞர்கள் தலைவியை மயிலின் அழகுடன் வருணிப்பர். தலைவியின் மீது காதல் கொள்ளும் தலைவன் அவளை ‘அணிமயிற் பெடை’ எனப் பாராட்டுவதை சங்க இலக்கியம் குறிப்பிடுகின்றன.

மழை வருவதை முன்பே, அறியும் மயில்கள் தோகை விரித்தாடுகிறது. 'நுனிக்கொம்பர் நாரைகள்' கவிதைத் தொகுப்பில் தன்னியல்பு மாறாத மயிலின் தன்மையை எடுத்துரைக்கின்றார்.

**கூண்டிலடைக்கப்பட்டிருந்தாலுமென்ன**

**கார்மேகங் கண்டிட்டால்**

**தோகை விரித்தாடுகிறது எனது மயில்**

**(மேலது, ப.45)**

மலையும் மலை சார்ந்த இடமுமாகிய குறிஞ்சித்திணைக் கவிதைகளில் பெரும்பான்மையும் மயில் பற்றியக் கருத்தாடல்கள் இடம்பெற்றுள்ளன. கூண்டில் அடைக்கப்பட்டிருப்பினும் மயில் இயற்கையின் செயல்பாடுகளில் மாறாமல் இருக்கிறது. மனித மன உணர்வுகளின் வெளிப்பாடுகளை கவிஞர்கள் படைக்கும் கவிதைகளில் வெளிப்படுத்துவர். அவ்வாறான, உள்ளக்குமுறலை கருப்பொருட்களின் வாயிலாக சமூகத்திற்கு மயில்களின் வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டு மனிதர்களுக்கு குறிப்பால் உணர்த்துகிறார் கவிஞர்.

தலைவனின் மீது கொண்டுள்ள தலைவியின் காதலை அறியும், சுற்றத்தார் அவளை வீட்டுச்சிறையில் அடைக்கின்றனர். வீட்டில் சிறைப்பட்டிருப்பினும், தலைவனின் மீது அவளுக்கு இருக்கும் அன்பில் சிறு மாற்றம், கூட இல்லாமல் அவனின் நினைவால் உருகுவதை 'கூண்டிலடைக்கப்பட்டிருந்தாலுமென்ன' வரிகள் உணர்த்துகின்றன. இவ்வாறாக, இருபொருண்மையின் அடிப்படையில் கவிதை நகர்ந்துள்ளன. மேலும், 'கார்மேகம்' என்பதை தலைவனாகவும், 'மயில்' என்பதை

தலைவியாகவும், அவர்களுடைய 'அன்பை தோகை விரித்தாடுகிறது' என்ற கவிதை வரிகளின் பொருண்மையையும் கொண்டு உள்ளுறையாக வெளிப்படுத்தியுள்ளன.

## விலங்கு

ஒவ்வொரு நிலத்திற்கும் வெவ்வேறு வகையான விலங்குகள் உள்ளன. அந்நிலத்திற்கு ஏற்றவாறு விலங்குகள் வாழும் சூழலை தக்கவைத்துக்கொள்கின்றன. அவ்விடங்களில் கிடைக்கப்பெறும் உணவுகளை உட்கொண்டு வாழுகின்றன.

பி. எல். சாமி "செல்லும்போது 'குறுக்கே நிற்பது' என்ற பொருளிலே விலங்கு என்ற சொல் தோன்றியது". (சாமி பி.எல், சங்க இலக்கியத்தில் அறிவியற் கலை, ப.11) விலங்குக்குரிய பொருளைத் தருகிறார். சங்க நூலில் "விலங்கு என்ற சொல் 'குறுக்கிடுவது' என்ற பொருளில் சங்கநூற்களில் வழங்கியுள்ளது". (மேலது, ப.12) பழங்கால மக்கள் பயணம் மேற்கொள்ளும் போது, அவர்கள் கடந்து செல்லும் பாதையில் கொடிய விலங்குகளின் இடையூறுகளைச் சந்திக்க நேர்ந்துள்ளதினை பி.எல்.சாமியின் கூற்றின் வழி அறிய முடிகிறது.

பண்டைய மக்களுடைய அன்றாட வாழ்வியல் முறைகள் சிறக்க கருப்பொருட்களின் தேவைகள் இன்றியமையாததாக இருந்தன. அக்கருப்பொருட்கள் தெய்வம், உயர்ந்தோர், அல்லோர், பறவை, விலங்கு, ஊர், நீர், பூ, மரம், உணவு, பறை, யாழ், பண், தொழில் என பதினான்கு வகைப்பட்டன.

குறிஞ்சி நிலத்திற்கு பறவை, விலங்குகள், நீர் நிலைகள் அமையப்பெறுவது போல, முல்லை, மருதம், நெய்தல், பாலை நிலங்களுக்கும் பறவை, விலங்கு, நீர் நிலைகள் உருவாக்கம் பெற்றுள்ளன. ஒவ்வொரு நிலங்களும் அவற்றிற்கேயுரிய கருப்பொருள் அமைவுகளுடன் தன்னிறைவு பெற்றிருந்தன.

அ.திருமலை முத்துசுவாமி “விலங்குகள் – பறவைகளைப்பற்றிப் பாடியிருக்கும் புலவர்களின் கற்பனைத் திறனை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை, முறையே, அவர்களின் வாழ்க்கையை அப்படியே காட்டுதல், மனித வாழ்க்கையின் நிகழ்ச்சியை அவற்றிற்கு ஏற்றிக் காட்டுதல், மக்கள் வாழ்வைக் காட்டுதல் என்பவை ஆகும்”. (திருமலை முத்துசுவாமி.அ, இலக்கியத்தில் விலங்குகளும் பறவைகளும், ப.6) என்கிறார். இவ்வாறான, பரந்துப்பட்ட நோக்கத்தினை தேவதேவனும் பெற்றுள்ளார்.

**படகுகளை தன் தோள்மேல் சுமந்து**
**வலம் வரும் தாய்மை தந்தைமையைப்**
**புரிந்து கொண்ட அன்பு தானோ**
**அச்சம் நீங்கி**
**கரையெங்கும் தன் குடும்பத்தோடு**
**அமைதி கொண்டுலவும்**
**காட்டெருமைகளும் யானைகளும்**
**மான்களும் மிளாக்களும்** **(மார்கழி, ப.11)**

காட்டெருமை, யானை, மான், மிளா (கடமான்) குறிஞ்சிக்கு உரிய விலங்குகள் 'மார்கழி' கவிதை வரிகளில் பயின்று வந்துள்ளன. கவிஞர் கருப்பொருட்கள் மனிதர்களுக்கு வேண்டிய பண்பு நலன்களையும், அவைகள், பூமியில் வாழுகின்ற மற்ற உயிரினங்களை முன்னுதாராணமாகக் கொண்டு வாழும் வாழ்வியல் தத்துவத்தை கற்க வேண்டுமெனவும் கவிதையில் எடுத்தாளுகிறார்.

மானிடர்களின் யதார்த்த உணர்வுகளையும், கவலைகளையும் விளக்குவதற்கு படைப்பாளிகள் இயற்கையோடு ஒன்றிணைந்த பொருட்களை பயன்படுத்துவர் என்பதனை, ”கவிஞர்கள் தம் இயற்கை அனுபவத்தைத் தாம் படைக்கும் மாந்தரின்

உணர்வுகளையும் செயல்களையும் விளக்கப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்". (பாக்யவதி சங்கரலிங்கம், சங்க இலக்கியத்தில் மயில், ப.29) பாக்யவதி சுட்டியுள்ளார். கவிஞர் தேவதேவனும் மானுட எண்ணங்களை கருப்பொருட்களின் ஊடாக வெளிப்படுத்தியுள்ளார். அதற்கு, தூண்டுகோலாக இயற்கைப் படிமங்களை அவர் கையாண்டுள்ளார்.

பூமியில் வாழுகின்ற மனிதர்களையும், பிற உயிரினங்களையும் குறித்த சூழலியல் திறனாய்வுக் கொள்கைகளை ஆராயவேண்டியுள்ளது. ஆதிமனிதன் காடுகளில் விலங்குகளின் அச்சமின்றி வாழ்ந்து வந்தான். காரணம், அதற்கு காடும் அங்கே வாழும் சுற்றுப்புறச் சூழலமைவுகளும், உயிரினங்களும் மனிதர்களுக்கு உறுதுணையாக அமைந்திருந்தன.

'மார்கழி' கவிதைத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள கவிதை வரிகளில் தாயும், தந்தையும் புரிந்து கொண்ட அன்பு /அமைதி கொண்டுலவும் காட்டெருமைகள், யானைகள், மான்கள் என மனிதனுக்கும் விலங்குகளுக்கும் இடையே இருந்த புரிதலைக் காட்டுகின்றன. ஆனால், இன்றைய நவீன தொழில்நுட்ப சீர்கேட்டினால் மனிதச் சமூகம் இயற்கையை நுகர் பொருளாகக் கருதுகின்றனர். இதனால் தொடர்ந்து மரங்களும், மலைகளும், நீர்நிலைகளும், உயிரினங்களும் சுரண்டப்பட்டு அழிந்துப் போகக்கூடிய சூழ்நிலைக்கு ஏற்பட்டுள்ளன.

சூழலியலின் ஒரு பகுதி விலங்கினங்களின் தனித்தன்மைகளை முதன்மை ஆய்வை முன்வைக்கிறது. விலங்குகளுக்கும் மனிதருக்குமான உறவையும், நெருக்கத்தையும் அவற்றின் உரிமையையும் பயன்பாட்டில் அவற்றின் பங்களிப்பைப் பற்றியும் ஆராய்கின்றன.

**யானையின் கால்களுக்கு**

**புலிகளின் கால்களுக்கு**

**காட்டெருமையின்  கால்களுக்கு**

**கலைமானின் கால்களுக்கு**

**தீண்டுந் தோறும்  தீண்டுந் தோறும்**

**கொலுசு சூடி**

**ஒலிக்கக் கேட்டு மகிழும் சருகுகள்** **(பேர்யாழ், ப.32 )**

'பேர்யாழ்' கவிதையில் குறிஞ்சி நிலத்துக்குரிய கருப்பொருட்கள் யானை, புலி, காட்டெருமை, மான் விரவி  வந்துள்ளன. புலி, யானை, காட்டெருமை இவற்றின் காலடி ஓசை கேட்டாலே சருகுகள் தன்னுள் மகிழ்வினைக் கொள்ளுகின்றது. இக்கவிதை விலங்குகளுக்கும் × இயற்கைக்குமான உறவு நிலையைப் பேசுகின்றன.

காட்டில் உள்ள விலங்குகளை வேட்டையாடி கிடைக்கப்பெற்ற இறைச்சிகளை பங்கிட்டு உணவு உண்டவர்கள் குறிஞ்சித்திணை மக்கள். இத்திணையில், வேட்டையாடி உணவினை உண்ணக்கூடிய விலங்குகளில் ஒன்றாக புலியைக் கருதினர்.

**காட்டுச் சிறைக்குள்**

**ஒரு புலி**

**வேலியோரமாகவே**

**நடந்துகொண்டிருக்கிறது** **(நுனிக்கொம்பர் நாரைகள், ப.71)**

'காட்டுச்சிறைக்குள் ஒரு புலி' தேவதேவனின் கவிதை வரிகளில் புலிகள் வாழுகின்ற பகுதிகள் சுருங்கி விட்டதை உணர்த்துகின்றன. குறிஞ்சித்திணை மக்களுடனும், இயற்கையுடனும் உறவுக்கொண்டு புலியும் சுற்றுப்புறத்தோடு வாழ்ந்தது. ஆனால், நவ நாகரிகம் என்னும் பெயரில் மனிதர்கள் மற்ற விலங்குகளையும்

தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததால், அவற்றினுடைய வாழ்வியல் முறைகளை முடக்கினர். விலங்குகளுடைய இருப்பிடத்தை தனதாக்கிக்கொண்டனர்.

தலைவியை நினைத்து வாடும் தலைவனின் மனக்குமுறலையும், பாடுபொருளையும் 'புலி' என்பதை தலைவனுக்கு உவமையாகவும், 'வேலியோரமாக' என்ற சொல்லை தலைவியைக் காணாத தலைவனுடைய உள்ளக்கிளர்ச்சியையும் அவனின் வீட்டைச் சுற்றியும், அவன் நடப்பதையும் இரு வகைமைக்குள் கவிதையின் பாடுபொருளை அமைத்துக்கொள்ள முடிகிறது. இவ்வாறு, இருவகையான அடிப்படைகள் தேவதேவனுடைய கவிதை வரிகளைக் கொண்டு ஆராய முற்படுகிறது.

மேலும், தலைவன், தலைவியினுடைய அன்பினை வெளிப்படுத்துவதை அகத்திணை எனக்கூறுவர். அவ்வன்பின் ஊடாக உலகில் வாழும் உயிரினங்கள் நேரிடும் சுற்றுப்புறச் சூழலியல் மாற்றங்களை புறத்திணையினுடைய நீட்சியாகக் கருத இடமுண்டு எனலாம்.

## முல்லைத்திணை

பல வளங்களைக் கொண்ட, செல்வ செழிப்பை உடையப் பகுதி முல்லை நிலம். இந்நில மக்கள், கால் நடைகளின் வளர்ப்பினால் கிடைக்கும் வருவாயில் வாழ்பவர்கள் என்பதை சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

### மக்கள்

ஒவ்வொரு திணைக்குமுரிய மக்களை தொல்காப்பியம் குறிப்பிட்டுள்ளன. அவ்வகையில், இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர், கோவலர், கோவிச்சியர், பொதுவர், பொதுவிச்சியர் முல்லைத்திணைக்குரிய மக்களாவர்.

**அந்தி சாயவும்**

**தம் ஆடுகளணைத்துச் சென்று**

**பட்டியிலடைக்கும்**

**ஓர் ஆட்டிடையன் தோன்றுகிறான்.**

**(நுனிக்கொம்பர் நாரைகள், ப.72)**

முல்லைத்திணைக்குரிய மக்களான ஆயரையும், அவர்களுடைய ஆடு மேய்க்கும் தொழில் பற்றியும் உரைக்கப்பட்டுள்ளது. இடமும் காலமும் கவிதைகளின் திணைகளைக் குறிப்பது போல, கருப்பொருட்களும் குறிக்கின்றன. கவிதை வரிகள் முதற்பொருளையும், கருப்பொருளையும் அவாவி நிற்கின்றன. முல்லைத்திணையின் காட்சி அமைவினைப் பற்றி 'நுனிக்கொம்பர் நாரைகள்' கவிதைத் தொகுப்பில் அமைந்த வரிகள் எடுத்துரைக்கிறது. முல்லை நிலத்தின் பெரும்பொழுதான மாலையும், கருப்பொருளான ஆடும் கவிதை முல்லைத்திணைக்குரியது என்பதை நினைவுறுத்துகிறது.

## விலங்கு

ஒவ்வொரு நிலத்திற்கும் வெவ்வேறான விலங்குகள் உள்ளன. முல்லை நில மக்களின் வாழ்வாதாரம் கால்நடை வளர்ப்பினை மையமிட்டு இருந்தன. ஆண், பெண் இருவரும் பொருளாதாரத்தை முன்னெடுப்பதில் ஈடுபட்டிருந்தினர். இவர்கள், எருமை, பசு, செம்மறியாடு, வெள்ளாடு, மலையாடு போன்ற விலங்குகளை வளர்த்தனர். கோவலர், ஆயர் எனப்படுவோர் ஆடு, மாடுகளை வளர்த்தனர்.

**பரந்த வெளியில்**

**மேய்ந்து களைத்த ஆட்டுக் குட்டி**

**(தேவதேவன் கவிதைகள், ப.31)**

முல்லையின் கருப்பொருளான ஆட்டுக்குட்டியை தேவதேவன் வருணித்துள்ளார்.

காட்டுப்பிரதேசமான பகுதியினை முல்லை நிலத்துக்குரியதாக தொல்காப்பியம் கூறுகிறது. ‘கானகம்’ என்பது முல்லைத்திணைக்குரியப் பகுதியைக் குறிக்கிறது.

**அப்பேர்ப்பட்ட கானகத்தைக் காட்டு விலங்கை**

**நான் கண்டதில்லை எனினும்**

**கண்டிருக்கிறேன் வேறு எங்கோ எவ்விதமோ**

**முறியும் பெருங்கிளைகள்**

**சாயும் குறுமரங்கள்**

**சிக்கித் தவிக்கும் உயிரினங்கள்**

**சரிந்த புதர்கள்**

**நடுவே**

**திடமாக**

**எதையோ**

**பூமியில் ஊன்றி விதைத்துப் போகும்**

**ஒரு விரல் போல்**

**யானை ஒன்று நடந்து செல்வதை**

**(தேவதேவன் கவிதைகள், ப.468)**

குறிஞ்சி, முல்லைத்திணைகளுடைய விலங்கினங்களில் ஒன்றாக யானையைக் கருதுகின்றனர். யானை “இவற்றை முறையே கிரிசரம் (மலையில் பிறப்பது), வனசரம் (வனத்தில் பிறப்பது), மூரிசரம் (கடலிற் பிறப்பது) என வழங்குவர்”. (திருமலை முத்துசுவாமி.அ, இலக்கியத்தில் விலங்குகளும் பறவைகளும், ப.6) குறிஞ்சி, முல்லை, நெய்தல் ஆகியத் திணைகளுக்கும் உரித்தானதாகும். ’கானகம்’ என்ற சொல் முல்லைத்திணையைக் குறிக்கின்றன. கவிஞர் கவிதையில் முல்லைத்திணைக்குரிய விலங்குகளில் ஒன்றான யானை இடம்பெற்றுள்ளன.

கவிஞர் தேவதேவன் காட்டில் நடந்து செல்லும் யானையினுடையக் கால் தடங்கள் ஒவ்வொன்றும் மண்ணில் ஊன்றும் விதைப்போன்றது என்றும், காட்டில் வாழ்கின்ற ஒவ்வொரு விலங்குகளும் காரணக் காரியங்களுடன் செயல்படுகின்றன என்றும் கூறியுள்ளார். யானையினுடைய அடியை அடும்பின் இலைக்கு அ.திருமலை முத்துசுவாமி உவமைப்படுத்தியுள்ளார்.

தேவதேவனுடைய கவிதைகள் ஒவ்வொன்றும் இயற்கையின் ஆழமான கருத்தாக்கங்களை எடுத்துரைப்பதாக உள்ளன. இயற்கைச் சூழலமைவுகளின் அமைப்பியல் முறையையும், அன்பின் வெளிப்பாடுகளையும் விலங்குகள் அறிந்துள்ளன. ஆதலால் தான், அவைகளுக்கு ஏற்றவாறு இயற்கையும் மகிழ்வதை, அங்கு வாழும் விலங்கினங்களால் உணர முடிகிறது. இவ்வாறான, ஆற்றல் மனிதனுக்கும் இருக்க வேண்டுமென கவிஞரும் எடுத்துரைக்கிறார்.

## பூ

தமிழ் இலக்கியங்களிலும் மற்றும் மக்களுடைய வாழ்வியலில் செல்வாக்கு செலுத்திய முதன்மையான கூறுகளில் பூவுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டன. மக்கள் பூவை அலங்காரத்திற்கும், காதலின் குறியீடாகவும், வெற்றியின் அறிகுறியாகவும் பயன்படுத்தினர். குறிஞ்சித்திணையில் 99 வகைப் பூக்களைப் பற்றிக் கபிலர் குறித்துள்ளார். மூவேந்தர்களான சோழர்கள் – ஆத்தியையும், சேரர்கள் – பனையையும், பாண்டியர்கள் – வேப்பம்பூ மாலையையும் தங்களுடைய குலக்குறியாகக் கொண்டனர். தலைவன், தலைவியினுடைய வாழ்வியல் நடத்தைகளில் மலர்கள் பெரிதும் முக்கியத்துவம் பெற்றிருந்தது.

வெண்ணிற மலர் முல்லைக்குரிய மலராகும். ”முல்லைத்திணை என்பது முல்லைக்கொடியால் பெயர் பெற்றதாகும். முல்லையினைக் கொகுடி, தளவம் என்னும் பெயர்களிலும் வழங்குவர். கற்பின் சின்னமாக முல்லைக்கொடி கருதப்படுகிறது. முல்லைக்கொடியினை ஊரைச் சுற்றிலும் வேலியாகப் படரவிடுவர். முல்லை மலரினைப் பிறவகை மலர்களுடன் இணைத்துக் கண்ணியர் சூடிக்கொள்வர்”. (இந்து.இரா, ஐவகை நிலங்களில் பொறியியல் செய்திகள், ப.25) என்பர்.

கலித்தொகையில்,

**“மாதரார் முறுவல்போல் மணமௌவல் முகை ஊழ்ப்பக்,**

**காதலர்ப் புணர்ந்தவர் கதுப்புப்போல்”** **(பாலைக்கலி, 27. வரி 4,5)**

(இராசமாணிக்கனார்.மா, கலித்தொகை, ப.83)

பெண்களுடைய வெண்ணிறப் பற்களைப் போல நிறமுடையது முல்லை மலர் எனக்கூறப்பட்டுள்ளது. வெண்மை நிறமுடைய இம்மலர் தூய்மையான கற்பு வாழ்வு வாழுகின்ற பெண்களுக்கு உவமைப்படுத்தப்படுகின்றன.

கார்த்திகேசு சிவத்தம்பி முல்லை மலரைப்பற்றி "முல்லையின் தாவரவியல் பெயர் ஜேம்ஸ்மினியம் திரிசோட்டுமம். அது நவம்பர் மலர் என்றும் அறியப்படுகிறது. வனங்களை அடுத்துள்ள மேய்ச்சல் நிலங்களில் நடைபெற்ற காதற்செயல்களைச் சுட்டிக் காட்ட இம்மலர் பயன்படுத்தப்படுகிறது". (கார்த்திகேசு சிவத்தம்பி, பண்டைத் தமிழ்ச் சமூகம் – வரலாற்றுப் புரிதலை நோக்கி, ப.177) எடுத்துரைக்கிறார்.

**ஒளிரும் விண்மீன்களின் கீழே**
**இருள் மெத்தைவிரிக்கத் தொடங்கிவிட்ட**
**மரக் கிளைகளூடே**
**பறவைகளும் ஒலித்து அடங்கிவிட்டன.**
**எங்கும் அமைதியைப் போர்த்துகிறது இரவு.**
**வானகத்து ஒளியைக் கண்டு**
**பூக்கும் வெண்ணிற மலர்களின்**
**வாசம் பரவுகிறது காற்றில்**
**சொர்க்கத்தின் கபாடம் திறந்து**
**பூமிக்கு வந்து உலவத் தொடங்குகின்றனர்**
**தேவ கணங்கள்.** **(நுனிக்கொம்பர் நாரைகள், ப.30)**

பூரணச்சந்திரன் "கார்காலப் பருவ மழைக்குப்பின் வேகமாகத் துளிர்விடும் முல்லைக் கொடிதான் இந்நிலத்தின் சிறப்புத் தாவரம்". (தனிநாயக அடிகள், தமிழில் : பேராசிரியர் க.பூரணச்சந்திரன், நில அமைப்பும் தமிழ்க் கவிதையும், ப.115) என முல்லைப்பகுதியில் வளரும் மலரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

முல்லை மலரின் நறுமணம் காடெங்கும் பரவ, இந்நறுமணத்திற்கு வண்டுகள் தேனை விரும்பி உண்ண வருகிறது. அத்தகையதோர், இயற்கைச் சூழலை காடு தனதாக்கிக் கொண்டுள்ளது. அம்மலரின் நறுமணத்திற்கு மண்ணுலகில் வாழும் மனிதர்கள் மட்டுமல்ல, விண்ணுலகில் வாழும் தேவர்களும் பூமிக்கு உலா வருவது கவிதையில் கற்பனை செய்யப்பட்டுள்ளன.

நவீன உலகத்தில் புதிய வகைத் திணை வகைகளும் உருவாக்கம் பெறலாம் என இலக்கிய ஆர்வலர்கள் கூறியுள்ளனர். அதனடிப்படையில், சொர்க்கம் மற்றும் அப்பகுதியில் வாழும் மக்களான தேவர்களையும் புதிய திணைச் சூழலை தேவதேவன் அறிமுகப்படுத்துகிறார். இவை, புதிய வகைத் திணை ஆக்கங்களை விரிவாக்கம் பெறச் செய்கிறது.

முல்லை மலர் பூக்கும் நேரம் மாலை என்பதை 'வானகத்து ஒளியைக் கண்டு பூக்கும் வெண்ணிற மலர்கள்' கவிதை வரி சுட்டுகின்றன. கால, நேரங்கள் கருப்பொருள்களின் வளர்ச்சிகளுக்கு பங்காற்றுகின்றன. பித்திகம், பீர்க்கு, காயா, பிடவம், அவரை ஆகியவையும் முல்லைத்திணைக்குரிய மலர் வகைப்பாடுகளாக அமைகின்றன.

**மரம்**

கொன்றைப்பூ பொன்னிற வடிவம் கொண்டது என்பதை, "ஆங்கிலத்தில் கொன்றையை 'LABURNAM' என்று அழைப்பர். இந்த ஆங்கிலச் சொல்லுக்குப் பொருள் பொன்மாலை என்பதாகும். மேலும் இதன் பூங்கொத்தை ஆங்கிலத்தில் 'Golden Shower' என்றும் 'Streaming gold' என்றும் கூறுவர்". (சாமி பி.எல் , சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம், ப.100) பி. எல். சாமி நிறுவியுள்ளார்.

**பூத்துக் குலுங்கத் தொடங்கிற்று**

**கொன்றை மரம் (நுனிக்கொம்பர் நாரைகள், ப.6)**

பொன்னிறத்தில் பூங்கொத்துக்களால் அலங்கரிக்கப்பட்டதைப் போன்று கொன்றை மரப்பூக்கள் காட்சியளிக்கின்றன. அவை, பூப்பதற்கான பருவ காலம் வந்துவிட்டதை உணர்த்துகிறது.

**ஓர் ஒற்றை மலராய்த்**

**தன்னைக் காட்டிக் கொள்ளும்**

**ஓர் உயர் வேட்கைதானோ**

**ஒவ்வொரு கிளைகளின்**

**உச்சிகளையே தேர்ந்துள்ளது**

**கொத்துக் கொத்தாய்ப் பூத்துள்ள**

**கொன்றை மரத்தில் ?**

**(மேலது, ப.20)**

சிவபெருமானுக்கு அருச்சனை செய்வதற்கு, கொன்றைப் பூக்களைப் பயன்படுத்துவர். இம்மலரை, மலையாள மொழிப் பேசும் மக்கள் 'கொன்னப்பூ' என அழைப்பர். உயர்ந்த கிளைகளில் வளர்கிறது. தேவதேவன் கொன்றைப் பூவின் நுட்பத்தினை உரைத்துள்ளார்.

பி. எல். சாமி, "கொன்றையின் பூக்கள் ஒன்றோறொன்று சேர்ந்து பூத்திருக்கும் கொத்தைச் செடி நூலார் 'Panicle' என்று கூறுவர். இது சங்கப்பாடல்களில் 'கொடியினர்' என்றழைக்கப்படுகின்றது. 'இணர்' என்பது பல பூக்கள் ஒரே காம்பில் சேர்ந்திருக்கும் தொகுதியை (மஞ்சரியைக்) குறிக்கும்". (சாமி பி.எல், சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம், ப.102) ஒரே கிளையில் கொத்து கொத்தாகப் பூக்கும் தன்மையுடையது கொன்றை மரம் என்கிறார்.

கொன்றைப் பூவின் சிறப்பை,

**ஒரு வலியின்றி**

**துயரின்றி**

**அவ்வளவு மென்மையாக**

**வழியில் தடுக்கும்**

**இலைகள் நோகாமல்**

**காற்று நோகாமல்**

**காண்பவர் விழிகளும் நோகாமல்**

**தரை நோகாமல்**

**ஒவ்வொன்றாய்**

**வெகு சாவதானமாய்**

**உதிர்ந்து கிடக்கின்றன**

**கொன்றை மரத்தடியில்**

**அதன் மஞ்சள் பூக்கள்                    (மேலது, ப.26)**

மென்மையானது, காண்பவர்களின் விழிகளுக்கு விருந்தளிப்பது, பசுமையான மஞ்சள் நிறமுடையது ஆகிய உவமைச் சொற்றொடர்களால் கவிஞர் கொன்றைப் பூவை உருவகம் செய்கிறார். "பூத்திருக்கும் போது வளமான வெண் மஞ்சள் பூங்கொத்துகளுடன் மணம் நிறைந்து அழகாக் காணப்படும்; ஓரளவு ஹார்ஸ்செஸ்நட் எனப்படும் தாவரத்தை ஒத்திருக்கும்". (தனிநாயக அடிகள் தமிழில் : பேராசிரியர் க.பூரணச்சந்திரன், நில அமைப்பும் தமிழ்க் கவிதையும், ப.90) கொன்றைப் பூவின் நிறம் குறித்து தனிநாயக அடிகளின் கருத்தை தமிழில் பேராசிரியர் க. பூரணச்சந்திரன் குறிப்பிடுகிறார். அவ்வாறே, கவிஞர் தேவதேவனும் 'நுனிக்கொம்பர் நாரைகள்' கவிதையில் கொன்றை மரப்பூக்கள் மஞ்சள் நிறமுடையது என்கிறார்.

கேரளாவில் சித்திரையின் முதல் நாளை வெகு விமர்சையாகக் கொண்டாடுவர். அன்றைய நாள் காலை எழுந்தவுடன் பழவகைகள், அரிசி, பொன் அணிகள், கொன்றைப்பூக்கள் வைக்கப்பட்ட உருளியில் கணி காணுவர். பொன்னிறத்தினால் அலங்கரிக்கப்பட்ட கொன்றைப்பூக்களை அன்றைய நாள் பார்த்தால், பொன்னாலான செல்வம் பெருகும் என்பது கேரள மக்களின் நம்பிக்கையாகும்.

**ஒரு காரணமுமில்லாமல்**

**தளிர் பொங்கி சிலிர்த்துக் கொண்டிருந்தது**

**கொன்றை.**

**(அமுதம் மாத்திரமே வெளிப்பட்டது, ப.48)**

கேரளாவில் விசு நாளில் கொன்றைப்பூவை கணிகாணுபவர்களுக்கு அவ்வருடம் முழுவதும் நல்லது நடக்கும் எனும் நம்பிக்கை நிலவுகிறது. அவ்வாறான, நம்பிக்கை முல்லைத்திணை தலைவனும் மாலை நேரத்திற்குள் வீடு திரும்ப வருவதை தலைவிக்கு

மாலையில் பூத்த கொன்றைப்பூக்கள் உணர்த்திற்று. கொன்றைப் பூக்கள் பொன்னிறமாக மலர்ந்தது போல தலைவனும் வெகு விரைவாக வீடு வருவான் எனத் தலைவி நம்பிக்கைக் கொள்கிறாள்.

ஒவ்வொரு திணைக்குமுரிய கருப்பொருட்கள் காரண காரியங்களோடு அமைக்கப்படுகின்றன. காட்டு வளங்களைப் பெற்ற முல்லைத்திணையில் வளரும் கொன்றைப் பூக்கள் தலைவியின் வாழ்வில் இன்பத்தை ஏற்படுத்துவது போன்று மக்களுடைய வாழ்விலும் செல்வ சிறப்பினை நிலை நாட்டுவதாகக் கருதப்படுகிறது.

கொன்றைப் பூக்கள் சங்ககாலம் முதல் தற்காலம் வரையிலான இலக்கியங்களிலும் தொடர்ந்து தேவதேவன் கவிதை வரிகளிலும் காண முடிகின்றன.

**ஒரு கோடை மாலை**

**கொன்றைமரத்து இடை போன்ற**

**மொட்டை மாடி இருக்கை.**

**வெப்ப வெளியோடு**

**வெகு இதமாக,**

**ஆனால் வெகு உறுதியோடு**

**பேசி அசைந்துகொண்டிருக்கும் மரம்.**

**வந்து வந்து குலவும் தென்றலில்**

**வீசி உதிரும் பூக்கள்.**

**மாறும் தேனீக்களின் ரீங்காரம்**

**பொங்கி எழும் கொன்றைப்பூக்களின் தேன் கலந்த மணம்.**

**(மேலது, ப.101)**

ஒவ்வொரு நிலத்திலும் காணப்படும் கருப்பொருட்களுக்கு நிலமும், காலநிலைகளும் உறுதுணையாக அமைகின்றன. அக்கருப்பொருட்கள் இடையூறாது புதியதோர் சூழலினை உருவாக்க தட்ப வெப்ப நிலைகளும் அமைகின்றன. 'கோடை மாலை' எனக் குறிப்பிட்டு கொன்றைப்பூக்கள் மலரும் மாலைப் பொழுதையும் தேவதேவன் அடையாளப்படுத்துகிறார்.

காலந்தோறும் கவிஞர்கள் படைக்கும் கவிதைகளில் இயற்கையின் எழிலார்ந்த படிமங்களையும், உவமைகளையும், சொற்றொடர்களையும், பாவனைகளையும் இணைத்து படைப்பர். அவ்வாறான, வெளிப்பாடுகளை இவருடைய கவிதையிலும் காண முடிகிறது.

**வண்டுகளையும்**

**தேனீக்களையும்**

**கிறங்கடிக்கின்றன**

**வசந்தகால கொன்றைப்பூக்களின்**

**வாசனையும் தேனும்**

**வனப்பும்.** **(பேர்யாழ், பக்.68, 69)**

தேனீக்களின் ஒசையும், தேன் கலந்த வாசனைக்கும் தனையறியாமல் இயற்கை ஆனந்த நடனம் ஆடுகிறது. வெகு நாட்களாக தலைவனின் வருகைக்கு காத்திருக்கும் தலைவியை ஆறுதல்படுத்துவது போன்று, இயற்கையின் சூழ்நிலைகள் அமைந்துள்ளன. கொன்றைப் பூக்கள் பூக்கும் காலம் வசந்தமாகும். அப்பூக்களின் நறுமணத்திற்கு வண்டுகளும், தேனீக்களும் தேன் அருந்த வருகின்றன.

’பேர்யாழ்’ கவிதையில் குறிப்பிடப்பட்டுள்ள ‘தேன்’ என்பது குறிஞ்சி நில மக்களுக்குரிய தேனெடுத்தல் தொழிலைக் குறிக்கின்றது. எனவே, இருவகைத்திணைகளுக்கும் உரிய கருப்பொருட்கள் ஒருங்கே கவிதையில் அமையப்பெற்றுள்ளன.

## யாழ்

ஒவ்வொரு நிலத்தின் கருப்பொருட்களைப் பற்றியும் தொல்காப்பியர் வரையறைப்படுத்தும் போது, அவற்றிற்குரிய இசைக்கருவிகளைப் பற்றியும் எடுத்துரைத்துள்ளார். “பொதுவாக இசைக்கருவிகள் ‘இயம்’ எனப்படும்” (கணபதி இளங்கோ, பண்டைத் தமிழர் வாழ்வியல், ப.56) ‘மேழி’ என்னும் சொல் யாழைக் குறிக்குமென கணபதி இளங்கோ குறிப்பிடுகிறார். மனித மனங்களில் தோன்றும் உணர்வுகளின் வெளிப்பாடாக குழலில் இசையின் ஒலியும் ஒலிக்கின்றன. இனிமையான ஒலியையுடைய இசையை ’தீங்குழல்’ என்று கூறுவர்.

"காட்டில் கால்நடைகளின் ஓய்வு நிலை அளித்த அமைதி வாழ்க்கை, குழல் எனும் இசைக்கருவியைக் காண வழி வகுத்தது. நீளவாட்டில் ஒரு சில துளைகள் இடப்பட்ட சிறுமூங்கில் துண்டே குழல். கால்நடைகள் மேய்ந்து கொண்டிருக்க, நீண்ட நேரம் காத்திருப்பதால் ஏற்படும் ஆயரின் மனச்சோர்வைப் போக்கவல்ல இனிய இசை அதனின்றும் எழும்”. (கோவிந்தன்.கா புலவர், தமிழர் பண்பாடு, ப.24) என்பதன் மூலம் இசைக்கு வித்திட்டவர்கள் முல்லை நில மக்கள் என அறிய முடிகின்றன.

**உலகம் முழுதுக்குமாய்**
**ஒளியூட்டிக் கொண்டிருந்த**
**நிலாவில் அமர்ந்த**
**புல்லாங்குழல் துளைகளில்**

**தன் பொன் இதழ் பொருத்தி**

**அவன் ஒலித்த பாடல்,**

**காதலியை அருகீர்ப்பதற்கோ**

**விழித்திருக்கும் மனிதர்கள்**

**செவிசாய்க்கக் கூடுமென்றோ**

**அல்ல;**

**தனக்குத்தானே பேசிக்கொள்வதுபோல**

**அவ்வளவு மெதுவாக**

**அத்துணை இரகசியமாக**

**அதே வேளை**

**நிலாவைப் போலவே**

**அத்துணை வெளிப்படையாக. (பேர்யாழ், ப.52)**

முல்லை நில மக்களில் ஆண்கள் ஆடு, மாடுகளை மேய்ச்சலுக்கு கொண்டு செல்வர். நீண்ட துரம் ஆடு , மாடுகளோடு பயணம் செய்வர். மாலை நேரத்தில் திரும்ப வீடு செல்ல இயலாதச் சூழ்நிலையில் காட்டில் தங்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இச்சூழலில் கணவனின் வரவை எதிர் நோக்கி வீட்டில் காத்திருக்கும் மனைவிக்கு ஆறுதல் கூறும் விதமாக, அவர்கள் புல்லாங்குழலினை வாசிப்பர்.

புல்லாங்குழல் இசையைக் கேட்கும் மனைவிகள் தங்களுடைய கணவன்மார்கள் பாதுகாப்பாக இருக்கிறார்கள் என நிம்மதியாக இருப்பர். இவ்வாறாக, வாசிக்கும் குழலின் இசையானது இருவருக்கும் இன்பத்தையும், நிம்மதியையும் அளிக்கிறது. கலித்தொகை ”ஏ மாலைக் காலமே! ஆயர் குழல் இசை கேட்டு அழியும் நெஞ்சைப் பெற்ற என் பக்கத்தில் இருந்து, என்னைப் பழித்துப் பாராட்டும் நீ, செவ்வழிப் பண்போன்ற மொழி நலம் உடைய மகளிரின், புணர்ந்து பெற்ற, பாராட்டத்தக்க புதுநலத்தைப்

போக்காய்; என்னே உன் கொடுமை?” (இராசமாணிக்கனார்.மா, கலித்தொகை, ப.327) என்று புல்லாங்குழல் இசையினுடைய தனித்தன்மையை விளக்கியுள்ளது.

முல்லைத்திணையில் வாழும் மக்கள் காட்டில் வாழ்ந்தனர் என்பதை “இடையர்களைக் குறிக்குமிடங்களில் எல்லாம் ‘காடுறை இடையன்’ என்ற சொல்லாட்சி காணப்படுவதால் அவன் காட்டில் தங்குபவன் என்பது நிரூபணமாகிறது”. (கார்த்திகேசு சிவத்தம்பி, பண்டைத் தமிழ்ச் சமூகம் – வரலாற்றுப் புரிதலை நோக்கி, ப.181) எனும் கூற்று தெளிவுப்படுத்துகிறது. மனித மனங்களின் மனவோட்டங்களுக்கு இசைஅமைதியையும், பலவிதமான நினைவுகளையும் வழங்குவதை தேவதேவனுடைய கவிதைப் புலப்படுத்துகிறது.

ஆடவன் ஒருவன் வாசிக்கும் புல்லாங்குழல் இசையைக்கேட்கும் பெண்ணொருத்தி அவ்விசைக்கு மயங்கி அவன் மீது காதல் கொள்கிறாள். அவளிடம் கொண்டுள்ள அன்பினை அவனும் ‘நான் ஆடு மேய்க்கும் சிறுவன்’ குறிப்பால் கவிதையில் உணர்த்துகின்றான். அவனுடைய மனக்குமுறலை எடுத்து இயம்பும் வண்ணம் கவிதை அமைகிறது.

**ராதே! உன் பவுர்ணமி உடலின்**

**இயற்கை வெளியினில்**

**நான் ஆடு மேய்க்கும் சிறுவன்**

**பாராய் ராதே!**

**இந்த ஆல் நிழலும் குளமும் நானுமன்றோ**

**எரிக்கும் இக் கோடை நண்பகலை**

**நிலாவெளியாய் மாற்றிக்கொண்டிருக்கிறோம்!**

**என் புல்லாங்குழலின் இசையமுது வேண்டி**

**என் முழங்காலில் உன் மோவாய் வைத்து**

**என்னையே உற்றுப்பார்த்துக்கொண்டிருக்கிறோம்**

**அன்பின் அழகியே, ராதே!**

**எப்போதும் தன் அழகுபற்றியே**

**விவரிக்கவைத்துக் கேட்டு மகிழும்**

**நின் தற்காதலின்**

**ஏவல் கருவி மாத்ரமே தானோ நான்,**

**என் அன்பே!**

**(தேவதேவன் கவிதைகள், ப.803)**

இவ்வாறாக, அவன் வாசிக்கும் புல்லாங்குழலின் இசையில் மயங்கியவளிடம் தன்னுடைய மனதில் தோன்றிய எண்ணங்களை வெளிப்படுத்துகிறான். அதற்கு, தன் வசமுள்ள இசையை ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறான். முல்லை நில மக்களின் தொழில் ஆடுமாடு மேய்த்தலாகும். அந்நில மக்கள் திருமாலை கடவுளாக வழிப்பட்டனர். திருமாலை 'கண்ணன்' என்றும் அழைத்தனர்.

புல்லாங்குழலினை வாசிக்கும் கண்ணனுடைய இசையில் மயக்கம் கொண்ட ஆயர்பாடியில் உள்ள பெண்கள் அவன் மீது காதல் கொண்டதாகக் குறிப்பிடுவர். கண்ணனும் ராதையும் ஒருவர் மீது மற்றவர் வைத்த காதலைப் பற்றி இன்றளவும் புராண,

இதிகாசங்கள் நினைவுறுத்துகின்றன. இவ்வாறான, தோற்றத்தினை தேவதேவனும் ராதே! என கவிதைக்கு அழுத்தம் தந்து இருவருடைய அன்பையும் சுட்டியுள்ளார்.

தேவதேவனுடைய கவிதைகளில் குறிப்பிடப்படும் 'ஆடு மேய்க்கும் சிறுவன்' என்பது முல்லைத்திணை மக்களுடைய தொழிலையும், 'என் புல்லாங்குழலின் இசையமுது வேண்டி' எனும் வரியில் அவர்களுடைய இசைக்கருவியையும் காட்டுகின்றன. இவையிரண்டும், அம்மக்களுடைய கருப்பொருட்களுடைய அமைவுகளாகும். "கொன்றையின் நீண்ட கனியாலோ மூங்கிலாலோ செய்யப்பட்ட குழலின் வாசிப்புக்கேற்றவாறு ஆயர்களும் மகளிரும் நடனமாடினர்". (தனிநாயக அடிகள், தமிழில் : பேராசிரியர் க. பூரணச்சந்திரன், நில அமைப்பும் தமிழ்க் கவிதையும், ப.70) என்பதன் மூலமாக முல்லை நில மக்களுடைய இசைக்கருவி வெளிப்பட்டுள்ளன.

கோவலர்கள் கொன்றையால் செய்த குழலையும் வாசித்தப் படியே காட்டிற்கு ஆடு, மாடிகளை ஓட்டிச் சென்றதை,

**"ஒழுகிய கொன்றைத் தீங்குழல் முரற்சியர்**

**வழூஉச்சொல் கோவலர் தத்தம் இனநிரை"**

**(முல்லைக்கலி 6. வரி. 3,4)**

சங்க இலக்கிய நூலான முல்லைக்கலியும் குறிப்பிடுகிறது. (இராசமாணிக்கனார்.மா, கலித்தொகை, ப.295)

## நெய்தல் திணை

### தொழில்

கடலும் கடலைச் சார்ந்தப் பகுதியை நெய்தல் திணை என அழைப்பர். மீன் பிடித்தலும், அவற்றை விற்பதும், உப்பு விளைவித்தலும் இவர்களுடைய தொழில்முறைகளாகும். "நெய்தல் நில மக்களின் தொழில் மீன்பிடித்தல், முத்துக்குளித்தல், சங்கு குளித்தல், சங்கறுத்தல், பவளம் எடுத்தல், உப்பு உற்பத்தி செய்தல், மீன் உலர்த்துதல், கடல் வணிகம், கலங்கள் கட்டுதல், வலைகள் தயாரித்தல், பிற நிலங்களுக்குச் சென்று மீன் உப்பு ஆகியவற்றை விற்றல் போன்றவையாகும்". (அவ்வை.எஸ், சங்கப் பாடல்களில் திணையுணர்வும் தன்னுணர்வும் – கவிதையாக்க நெறி, ப.57) கடலுக்குள் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களின் வாழ்க்கைப் போராட்டத்தை,

**கழுகுகள் வட்டமிடும்**
**என் கடற்கரையில் இரவெல்லாம்**
**விண்மீனில் குளித்த**
**வல்லங்கள் கடலோடி**
**வலைகளிலே அள்ளி வந்த**
**மீன்களைக் கரையில் இறைக்கும்**

**காலியான கஞ்சிச் சட்டி,**
**வெற்றிலை புகையிலைப் பெட்டி,**
**வலைகள் வழியும் வலிய**
**தோள்களை உயர்த்திக்கொண்டு,**

**வட்டக்கார, கமிஷன்கார**

**யாபாரிகள் மொய்த்துக் கிளப்பும்**

**இரைச்சல்களைப்**

**பீயென ஒதுக்கி விலகி,**

**தத்தமது நிழல் சென்று**

**வலை பழுது பார்க்க அமரும். (தேவதேவன் கவிதைகள், ப.69)**

நெய்தல் திணையின் கருப்பொருள் சூழலமைவுகளுடன் கவிதையில் வெளிப்பட்டுள்ளன. கடலுக்குள் மீன் பிடிக்கப் போகும் மீனவர்கள் கால நிலையில் ஏற்படும் மாறுதல்களினாலும், கடலுக்குள் பயணம் மேற்கொள்பவர்கள் மீனைப் பிடித்து விட்டு கரை திரும்புவதற்கு எவ்வளவு நாட்களாகும் என்பதை அவர்களாலேயே கணக்கிட முடியாமல் போகின்றன. அவ்வாறு, கடலுக்குச்சென்று மீன் கிடைக்காமல் திரும்ப வீட்டுக்கு வர நேர்ந்தால் தங்களது குடும்பங்கள் பட்டினியால் வாடுவதை எண்ணியும் மீனவர்கள் வேதனைப்படுகின்றனர்.

கடலுக்குள் மீன் பிடிக்கச் சென்ற ஆணின் மன வேதனை அமைய, கடற்கரையில் பெண்களின் மன நிலை கடலில் மீன் பிடிக்கச் சென்ற கணவன் திரும்ப வர வேண்டுமென இரவெல்லாம் கண் விழித்துக் காத்துக்கொண்டிருக்கின்றனர். நெய்தல் திணை மக்களின் வாழ்வில் முன்னேற்றமின்மையும், எவ்வளவு தான் அவர்கள் உழைத்து மீன் பிடித்து வந்தாலும், அன்றாட தேவையைக் கூட பூர்த்தி செய்வதற்கு வழியற்றமையும், அவர்களுடைய தொழில் முன்னேற்றத்தையும், ஏக்கத்தை உணர்த்தும் உரிப்பொருளையும் முல்லைத்திணையினுடைய கரு, உரிப்பொருட்கள் கவிதையில் அமைந்துள்ளன.

கடல் நீரை தெப்பங்களாகவும், பாத்திகளாகவும் பிரித்து அவற்றிலிருந்து உப்பு தயாரிக்கப்படுகிறது. 'உப்பில்லாதப் பண்டம் குப்பையிலே' எனும் பழமொழி புழக்கத்தில் வழங்கப்படுகிறது. மனிதர்களுடைய வாழ்வில் உணவு முறைகளில் உப்பு முக்கியத்துவம் பெறுகிறது.

பழந்தமிழர்களுடைய பண்பாட்டின் அடையாளமாக உப்பு இருப்பதை "கிறித்துவுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த அழகர் மலைத் தமிழ்க் கல்வெட்டு உப்பு வணிகன் ஒருவனையும் குறிக்கிறது. உப்பு விளையும் களத்திற்கு 'அளம்' என்றும் பெயர். பெரிய உப்பளங்களுக்கு அரசர்களின் பட்டப்பெயர்களைச் சூட்டியிருக்கிறார்கள். அவை பேரளம், கோவளம் (கோ+அளம்) என்று வழங்கப்பட்டுள்ளன." (பரமசிவன்.தொ, பண்பாட்டு அசைவுகள், பக்.23, 24) என்பதை அறிய முடிகிறது.

சோழர் காலத்தில் நெல்லினுடைய விலையும் உப்பினுடைய விலையும் ஒன்றாகக் கருதப்பட்டதென தொ.பரமசிவன் கூறுகிறார். வயல்களில் நெல்லை பயிரிட தெப்பங்களையும் பாத்திகளையும் அமைத்தனர். உப்பு உற்பத்திக்கும் நெய்தல் நில மக்கள் இம்முறையையே பின்பற்றினர்.

**உப்பளம்**

**சேறு மிதித்துக் கூறு கட்டிய**

**தெப்பங்களிலும் பாத்திகளிலும்**

**என் நாடி நரம்புகளிலும்**

**நிரம்புகின்றன**

**பூமியிலிருந்தும் கடலிலிருந்தும்**

**மின்சார வேகம்**

**உறிஞ்சிக் கொட்டுகிற நீர். (தேவதேவன் கவிதைகள், ப.546)**

'சேறு மிதித்து' என்பது வயல் பகுதியையும் 'கடலிலிருந்து மின்சார வேகம்' என்பது சூரிய ஒளியிலிருந்து தயாரிக்கப்படும் உப்பினுடைய விளைச்சலையும் குறித்துள்ளது. இவ்விரு நில மக்களும் தங்களுடைய வாழ்வாதாரத்திற்காக உழைக்க வேண்டியக் கட்டாயத்திற்கு உள்ளாகியிருப்பது கவிதையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## மருதத்திணை

### பறவை

கொக்கு, நாரை, அன்னம், காகம் மருத நிலத்தில் வாழுகின்ற பறவை இணங்களாகும். வயல் சூழ்ந்த செல்வ செழிப்பான நீர் நிலைகள் நிறைந்த குளங்களில் ஆனந்தமாக கொக்குகள் விளையாடியது. ஆனால், தற்பொழுது மருத நிலம்,

**பாளம் பாளமாய் வெடித்த நிலம்**
**கீறலுக்குள் மாட்டிக்கொண்ட பேனா**
**மேலே**
**வெகு கவனமாய்ப் பறந்து செல்லும் கொக்குகள்.**

**(நுனிக்கொம்பர் நாரைகள், ப.51)**

பருவ கால மாற்றங்களினால் நீர் நிலைகள் வற்றி, வறண்டு பாலை நிலமாகக் காட்சியளிக்கிறது என்பதை கவிதை வரிகள் உணர்த்துகின்றன.

மருதத்திணையில் காணப்படும் மற்றொரு பறவை நாரையாகும். பெருநாரை, சிறுநாரை, கருநாரை, வெண்ணாரை, கூழைக்கடா போன்றவைகள் நாரைகளின் வகைப்பாடுகளாகும். சாம்பல் நிறம் கொண்ட நாரையை 'சாம்பல் நாரை' என்பர். வயல் வெளிகளில் கழனி நாரை, பழன நாரைகள் காணப்படுகிறது. இப்பறவைகள் மீனை உணவாக உட்கொள்ளுகின்றன.

**விண்ணிலுலாவும் வெண்**

**நாரைகள் வந்தன. (பேர்யாழ், ப.47)**

புழு, பூச்சிகள், பல நிறங்களில் வாழுகின்ற பறவைகள், பாம்புகள், முதலைகள் எல்லா உயிர்களையும் அன்போடு அரவணைப்பதில் தாய்மை உணர்வோடு மருத நில இயற்கைச் சூழல் இருப்பதாக கவிஞர் விளக்குகிறார். இவ்வாறான, இயற்கையின் வளத்தை உடைய வயல்பகுதிகளில் வாழும் பறவைகளை துன்புறுத்துவதும், அவைகளின் வாழ்வாதாரமாகத் திகழும் மருத நிலப்பகுதியை மனிதர்கள் சீர் குலையச்செய்வது தவறு என்பதனை,

**பிரமாண்டமான கட்டடத்தின்**

**முன்னே நின்றுகொண்டு சொல்கிறேன்,**

**நண்பா,**

**இதோ, இப்பறவைகளிடம் விட்டுவிட்டு**

**நாம் இந்தப்பூமியை விட்டு**

**விலகிக் கொண்டால் என்ன ? (மேலது, ப.47)**

பறவைகளுக்கான இருப்பிடத்தை அவைகளுக்கு அளிப்பதும், சுதந்திரத்தை வழங்குவது முறை எனும் வினாவினை கவிஞர் எழுப்புகிறார்.

மரங்கள், பறவைகள், விலங்குகளை ஒன்றிணைத்து மருத நிலத்தின் இயற்கைச் சூழலை அரவணைத்து வரவேற்றது. ஆனால், மனிதர்கள் அவ்வுயிர்களின் வாழ்வாதாரத்தை தனதாக்கிக்கொண்டதினால், பல வகையான உயரினங்கள் சிதைக்கப்பட்டன. மருதத்திணைக்குரிய பறவை வகைகளில் அன்னமும் ஒரு வகையாகும். அவ்வன்னத்தை,

**நீரோடிணைந்து**
**நீந்திக்கொண்டிருந்தது அன்னம்**
**இருபுறமும் அலைகள் விரிந்து விரிந்து**
**இப்பேரண்டமெங்கும் தழுவி**
**மீண்டும் அதனையே வந்தணைத்துக்கொண்டது.**

**நீந்தும்அவ் அன்னம்**
**நீரில் எழுப்பிய அலைகளன்றோ**
**நின் அழகின் இரகசியம்**

**(நுனிக்கொம்பர் நாரைகள், ப.82)**

கவிஞர் தூய வெள்ளை நிறமுடைய அன்னத்தைப் பாராட்டுகிறார். "சங்க நூல்களில் கூறப்படும் அன்னமெனும் பெயர் தாரா, காட்டுவாத்து, கிளுவை, சிறவி என்று தற்காலம் அழைக்கப்படும்". (சாமி பி.எல், சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம், ப.96) அன்னத்தின் வகைப்பாடுகளை பி. எல். சாமி குறிப்பிடுகிறார்.

நீர்வாழ் பறவை இனத்தைச்சார்ந்த அன்னப்பறவை வயல் சூழ்ந்தப் பகுதிகளில் ஓடும் நீரோடைகளை இருப்பிடமாகக் கொண்டு வாழ்பவைகள். அவைகளுக்கு அந்நீரோடைப் பகுதி சொர்க்கமாக நினைத்து மகிழ்வோடு வாழுகின்றன. நீரில்

மகிழ்ந்திருக்கும் அன்னம் மருதத்திணைக் கருப்பொருட்களில் சுட்டப்படும் பறவை இணங்களில் ஒன்றாகும்.

அன்னப்பறவையின் நடையை பெண்களின் நடையோடு உவமைப்படுத்தி தமிழ் இலக்கியங்கள் காட்டுகின்றன. அவ்வாறான, சூழலமைவினையும் கவிஞர் தேவதேவனும் நீரில் நீந்துகின்ற அன்னப்பறவையின் அழகை ஒத்தது பெண்களின் அழகு என்கிறார்.

வயல்வெளியினை ஒட்டிக் காணப்படும் நீர் நிலைகளில் தன் இனத்தோடு ஒன்றிணைந்து அன்னப்பறவைகள் மகிழ்வோடு காட்சியளிக்கின்றன. ஆனால், தற்பொழுது வயல்நிலங்கள் சுடுகாடு போல தோற்றமளிக்கிறது என தலைவியிடம் தலைவன் உரையாடுகிறான்.

**தாமரைக் குளத்தில்**

**அன்னப் பறவைகள் சேரும்,**

**இடுகாட்டு நிலத்தில்**

**அண்டங் காக்கைகள் கூடும்;**

**நின்னை ஒருக்காலும் பிரியாத**

**தலம் கண்டு பாடுமே**

**ஆற்றங்கரையின் மரம்! (தேவதேவன் கவிதைகள், ப.739)**

தேவதேவனுடைய கவிதைகளில் பெரும்பான்மையும் மரம், வீடு என்ற சொல்லாடல்கள் படிமங்களாகக் கையாள்வதைக் காணலாம். மேற்கண்டக் கவிதையிலும், ஆற்றங்கரைப் பகுதியில் காணப்படும் மரத்தைப் பற்றிக் கூறியுள்ளார்.

குயிலுக்கு கூடு கட்டத்தெரியாது. காகத்தினுடைய கூட்டில் குயில் முட்டை இடும். காகமும் குயிலினுடைய முட்டைகளை பாதுகாப்பாக அரவணைத்துப் பாதுகாக்கும். குயிலின் முட்டை உடைந்து குஞ்சுகள் வெளி வரும்பொழுது தன்னுடைய குழந்தைகளல்ல, குயிலினுடைய குஞ்சுகள் என காகம் உணர்ந்தாலும், தன்னுடைய (காகம்) குழந்தைகளைப் போல நினைத்து அவைகளுக்கு பறக்கக் கற்றுக்கொடுக்கின்றன. வாழ்வின் தத்துவங்களை காகம் போன்ற பறவைகளிடம் மனிதர்கள் கற்க வேண்டியுள்ளது என்பதை தம் கவிதை மூலம் உணர்த்துகிறார்.

**சுள்ளி அறிந்தது**
**தன்னை அக் காகம் தொட்ட அக்கணத்தில்**
**அவர் காதல் வாழ்வையும்**
**அவர் மனைவி கருத்தரித்திருக்கிறார்**
**என்பதையும் மே - ஜூன் மாதக்**
**காற்றில் பிறக்கும் குழந்தைகளுக்கு**
**அவர் பறக்கக் கற்றுக் கொடுப்பார்**
**என்பதையும்.** **(நுனிக்கொம்பர் நாரைகள், ப.16)**

வேட்டையாடி கிடைக்கப்பெற்ற இறைச்சியை உண்டு வாழ்ந்த குறிஞ்சித் திணையிலிருந்து முற்றிலும் வேறுபட்ட நாகரீகம், பண்பாடுச் சார்ந்த இனக்குழுச் சமுதாயமாக மருதத்திணை உருவாக்கம் பெற்றன. இம்மக்கள் கரடுமுரடான நிலங்களை உழுது, தங்களுடைய உழைப்பை மூலதனமாகக் கொண்டு, செல்வச் செழிப்பான வயல்களாக மாற்றியமைத்தனர்.

இவ்வாறான, பண்பட்ட இனக்குழுச் சமுதாயத்தில் காகம் முக்கியத்துவத்தினைப் பெறுகிறது. பழங்காலம் முதல் இன்றளவும் காகம் மக்களோடு நெருங்கிய உறவுக் கொண்டுள்ளது. இறந்துபோன மூதாதையர்களுக்காக பலியிடும் முறை

பின்பற்றப்படுகின்றன. அப்பலியிடும் வழக்கத்துக்கு பறவையினங்களில் ஒன்றான காகத்திற்கு முதலில் உணவு படைக்கப்பட்டு, அவ்வுணவை காகம் உண்ட பின்பு மனிதர்கள் உண்கின்றனர். உணவருந்த வரும் காகத்தை மனிதர்கள் இறந்து போன மூதாதையராக நினைத்து வழிப்படுகின்றனர். “மலையாளத்தில் பகவதி கோயில்களில் தரும் பலியைப் பூத கணங்கள் காக்கை உருவில் வந்து உண்பதாகக் கருதுவர்”. (சாமி பி.எல், சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம். ப.276) இத்தகைய பறவையினமான காகம் மருத நிலத்தில் வாழும் பறவைகளில் ஒன்றாகும்.

கவிஞர் மனிதர்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதை தன் இனத்தோடு கூட்டமாக வாழும் காகங்களைப் பார்த்துக் கற்றுக்கொள்ள வேண்டும் என்கிறார்.

**நீர்க் கரைக்கு இறங்கி வந்த**
**காகங்கள் குளித்து முடித்துக்**
**கூட்டங் கூட்டமாய்ப் பறந்து செல்லும்**
**வானில்**
**கருமேகங்கள் திரண்டு மறிக்கும்.**

**(தேவதேவன் கவிதைகள், ப.55)**

முதலாவதாக, காகத்தினுடைய அன்றாட செயல்களையும், இரண்டாவதாக, காகத்தின் அறிவு நுட்பத்தையும் கருப்பொருள் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது. மாலை நேரம் வருவதை உணரும் காகம் கூட்டை அடைகிறது. பறவைகள் பொழுதுகளோடு பயணிக்கிறது. அவைகளின் ஒவ்வொரு செயல்பாடுகளும் கால, நேரங்களை ஒட்டி அமைகிறது. வீட்டிற்கு விருந்தினர் வருவதை முன்னமே அறியும் ஆற்றலைக் கொண்ட காகம் வீட்டின் முன் கூக்குரலிடும் என்ற நம்பிக்கையும் மக்களிடையே நிலவுவதுண்டு.

மனிதர்களுடைய வாழ்வில் பறவைகளுடைய இன்றியமையாமைப் பற்றி, “இலத்தீன் மொழியில் நல்ல நிமித்தத்தைக் குறிக்கும் சொல் (Auspicious) பறவைகளைக் காணல் என்ற பொருளில் வந்திருப்பதைக் கவனிக்க வேண்டும். பறவைகள் பறக்கும் திசையைக் கண்டும், வெளியிடும் குரலைக் கேட்டும், பறவைகளின் குடல் முதலிய உள்ளுறுப்புகளை ஆராய்ந்தும் பழங்கால மனிதன் பின்னால் நிகழப்போவதை முன்னால் கூறினான்”. (சாமி பி.எல், சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம், ப.2) கூறப்பட்டுள்ளன.

'புள்' என்னும் சொல் சங்க இலக்கியத்தில் பறவை இனத்தைக் குறிப்பிடுகின்றன. பறவைகள் எழுப்பும் ஒலியை வைத்து, எதிர்காலத்தில் நடப்பதைக் கூறும் சகுனம் பார்த்தல் முறை பழங்காலம் முதல் இன்றளவும் மக்களிடையே காணப்பட்டு வருகின்றன. இதனை, 'நன்னிமித்தம் காணுதல்' எனக் கூறுவர். பறவைகளுக்கு மக்கள் வாழ்வில் கடைப்பிடிக்கும் நம்பிக்கைகளில் முக்கியத்துவம் கொடுத்திருப்பதை இக்கருத்து புலப்படுத்துகின்றன.

சிறுவெண் காக்கை, கடலங் காக்கை, அண்டங் காக்கை, கருங்காக்கை, மணிக்கட்காக்கை என்பவைகள் காகத்தின் பிரிவு வகைகளாகும். ஒவ்வொரு திணைகளுக்கும் உரிய கருப்பொருட்கள் அவைச்சார்ந்த நிலத்திற்கு ஏற்ப பயின்று வருவதை கவிதைகள் புலப்படுத்துகின்றன.

### மரம்

நதிகள் பாய்ந்தோடிய இடங்களில் மருத நில மக்களும் குடியேறினர். நாகரிகம் சார்ந்த நகர வாழ்வை நோக்கி மக்கள் மெல்ல நகர்ந்தனர். நீர் வளம் மிகுதியான வயல் பகுதிகளை உழுது, புன்செய் நிலமாக மாற்றியமைத்தனர். அவ்வயலைச் சுற்றி மணம் கமழும் பூக்களையுடைய மருத மரங்களை வளர்த்தனர்.

**தன் தாயகம் விட்டு வெளியேறும்**

**தொலைதூர யாத்ரீகனைப் போல்**

**ஆழமான திரும்பிப்பார்த்தலுடன்**

**ஈர உடுப்புடன் - ஒரு பெண்**

**இம்மருத மரங்களை விட்டு விலகிச் செல்கிறாள்**

**இவ்வாற்றங்கரையருகே**

**(தேவதேவன் கவிதைகள், ப.33)**

குறிஞ்சிப்பூ, முல்லைப்பூ, நெய்தல் பூ ஒவ்வொரு திணைக்கும் அந்நிலத்தில் பூக்கும் பூக்களால் பெயர் அமைந்தன. ஆனால், மருத மரங்கள் சூழ்ந்தப் பகுதியை மருதத்திணை என அழைத்தனர். 'இம்மருத மரங்களை விட்டு விலகிச் செல்கிறாள். இவ்வாற்றங்கரையருகே' கவிதை வரியில் மருதத்திற்குரிய மரம் சுட்டப்பட்டுள்ளது. இவ்வரிகள், மனிதர்கள் விரும்பும் பிற மனிதர்களின் பிரிவினையை எண்ணி வருத்தமுறும், ஏக்கத்தையும், மருதத்திணையின் கருப்பொருட்களின் மூலமாக வெளிப்பட்டுள்ளது.

வயல்கள் சூழ்ந்த நிலப்பகுதியில் மருத மரங்களைச் சுற்றியும் ஆற்றங்கரையின் நீர் நிலைகளும் அமைந்திருந்தன. சங்க இலக்கியப் பாடல்களில் மருத மரம் பற்றிய செய்யுள்கள் இடம்பெற்றுள்ளன. கரு மருது, வெள்ளை மருது, கலிமருது, பூ மருது ஆகியன மருத மர வகைப்பாடுகளாகும்.

**நெடிதுயர்ந்த மருத மரங்களினுச்சியில்**

**(தேவதேவன் கவிதைகள், ப.786)**

மருத மரம் வானம் தொடுமளவுக்கு நீண்டதொரு நெடிய மரமாக இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. பி. எல். சாமி, "மருத மரம் செடி நுலில் LAGERSTROEMIA FLOS-REGINA என்று அழைக்கப்படுகிறது. அரசிக்கு உகந்த பூ என்ற பொருளில் Flos-Regina என்றும், ஆங்கிலத்தில் 'The Queen's Flower' என்றும் வழங்குகிறது. மற்றும் இதை ஆங்கிலத்தில் 'Pride Of India' என்றும் கூறுவர்". (சாமி பி.எல் , சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம், ப.51) மருதச்சிறப்பை எடுத்துக்கூறியுள்ளார். தமிழ் இலக்கியங்கள் முதல் நவீனகால கவிதை வரையிலும் மருத நிலத்தின் தனித்தன்மையைக் காட்டும் விதமாக அமைந்துள்ளன.

**நீர்**

வயல்கள் சூழ்ந்த மருத நில வளத்திற்கு நீர்வளம் இன்றியமையாததாக விளங்குகிறது. "நீர்நிறைந்த (நன்செய் நிலம்) வயல், குளம், குட்டை, ஊருணி, கண்மாய், கால்வாய், ஏரி, ஆறு வாய்க்கால் என்ற நீர்நிலைகளே மருதநில அடையாளங்கள்". ( மம்மது. நா, தமிழர் திணை, ப.197) ஆகும்.

**சூழ்ந்துள்ள படிக்கட்டுகள் சிதைந்து**
**களைகள் மண்டி**
**சுற்றியுள்ள நிலமெங்கும் முளைத்து**
**மூடத் தொடங்கும் முட்செடிகள் கவிந்து**
**மூடி மறைத்த பாசிகளுக்கு அடியே**
**தீராத மனக்குறை ஒன்றுடன்**
**கண்ணீர் விட்டுக்கொண்டு**
**இன்னும் நீர் வற்றாதிருந்தது**
**கைவிடப்பட்ட அழகுக் குளம்.** **(பேர்யாழ், பக்.46, 47)**

புல்கள், மரங்கள், செடிகள், பூக்கள், பறவைகள் இயற்கையின் சுற்றுப்புற அமைவைக் கொண்டு எழிலார்ந்த இடமாக வயல் காட்சியளித்தது. தற்போது, பாசியும், புல்கள் முளைத்தும், படிக்கட்டுகள் சிதைவுற்றும் காட்சியளிக்கிறது. அகத்திணையில் தலைவனின் பிரிவால் வாடும் தலைவியினுடைய வேதனையைப் போல, கவிதையில் குளத்தினுடைய இயல்பு நிலையில் மாற்றம் பெற்று திரும்ப அவ்வழகை திரும்ப பெற முடியாத நிலையைப்போன்று, தலைவியினுடைய மனதிற்கு ஒப்புமைப்படுத்தப்பட்டுள்ளது.

குளம் மற்றும் அக்குளத்தைச் சுற்றி உருவாக்கம் பெற்றிருந்த, உயிரினங்களும், இயற்கை அமைப்பும், அவைச் சுற்றி வாழுகின்ற உயிர்களின் வாழ்வாதாரங்களும் நிலையற்றிருப்பதை அறிய முடிகிறது. கருப்பொருளினுடைய அமைவுகளின் தன்மையினை வெளிப்படுத்த உரிப்பொருளினுடைய ஒழுக்க வகைப்பாடுகளினுடைய தேவையும் ஏற்படுகின்றன. "முதற்பொருளை உரிப்பொருளுடன் இணைக்கும் கூறுகளே கருப்பொருள். கால இடச் சூழலின் குறியீடுகள், வெளியீட்டு ஊடகங்கள் கருப்பொருள் என்றும் கூறலாம்". (அவ்வை.எஸ், சங்கப் பாடல்களில் திணையுணர்வும் தன்னுணர்வும் – கவிதையாக்க நெறி, ப.40)

'பேர்யாழ்' கவிதையில் மருதத்திணைக்குரிய முக்கியமான நீர் பாசனத்துறையான குளத்தின் தன்மைகளும், அவைச்சுற்றி நிகழும், இயற்கையின் மாறுதல்களும், உயிர்ப்பன்மைய அமைப்பியலுக்கு தீங்கு விளைவிப்பதை கருப்பொருட்களின் ஊடாகவும், அதற்கு உறுதுணையாக உரிப்பொருள்களும் அமைந்துள்ளன. குறிப்பாக, அவ்வாக்கம் கவிதையின் வழி அறிதல் இயற்கையின் தத்துவார்த்தமான உண்மைகளை தேவதேவன் வெளிக்கொணர்ந்துள்ளார்.

## பாலைத்திணை

அகத்திணை மரபில் பாலைக்கென எவ்விதமான இலக்கண வரையறைகளையும் தொல்காப்பியர் வகுக்கவில்லை. பிற்காலத்தில், எழுந்த இலக்கண நூல்கள் பாலைக்கு தனிப் பிரிவினை உருவாக்கினர். முல்லையும், குறிஞ்சியும் முறைமையிற் திரிந்தது பாலை எனப்பட்டது. ஒவ்வொரு நிலத்திற்குமுரிய கருப்பொருட்கள் சுட்டுவது போன்று, பாலைக்கும் தனியாக அமைக்கப்பட்டுள்ளன.

### தெய்வம்

தொல்காப்பியர் கருப்பொருட்களை பட்டியல் இடும்போது முதன்மையாக தெய்வத்தினைக் குறிப்பிடுகிறார். "தெய்வம் மனிதனையும், உயிர்களையும் மேம்படுத்துவதன் பொருட்டே முன்வைக்கப்படுகிறது". (மம்மது. நா, தமிழர் திணை, ப.183) என்பது நா.மம்மதின் கூற்றாக அமைகிறது. இதனடிப்படையில், தெய்வம் முதன்மைப்படுத்தப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நான்கு நிலங்களுக்குரிய தெய்வங்களைப் பற்றியும் தொல்காப்பியம் எடுத்துரைத்துள்ளது. தொல்காப்பியத்திற்கு பின் எழுந்த அகப்பொருள் இலக்கண நூலான நம்பியகப்பொருள் பாலைக்குரிய தெய்வம் கொற்றவை எனக் கூறுகிறது. சூலி, ஐயை, கொற்றவை, துர்க்கை, பகவதி, கன்னி, காளி ஆகியன பாலைத்திணைக்குரிய தெய்வங்களைப் பற்றி நா.மம்மது அடையாளம் காணுகிறார்.

தொன்றுதொட்டே பஞ்சப் பூதங்களை மக்கள் வழிபடும் வழக்கம் கொண்டிருந்தனர். போருக்குப் புறப்படும் முன் வீரர்கள் வெற்றியைத் தரும் காளிதேவியை வழிப்படுவது வழக்கமாகும் என்பதை பரணி நூல் கூறுகிறது.

இவ்வழிப்பாட்டு முறையை 'கொற்றவை நிலை' என்பர். பாலைத் தெய்வமானவள் சூலி, ஐயை, கொற்றவை, துர்க்கை, பகவதி, கன்னி ஆகிய பெயர்களில் மக்கள் வழிபடுகின்றனர்.

பி.இந்திராணி “பண்டைய இலக்கியங்கள் கூறும் ஒரே பெண் தெய்வம் கொற்றவையே ஆகும். இதன் மற்றொரு பெயர் ‘காடுகிழாள்’ என்பதாகும்.” (இந்திராணி.பி, சங்கப் பாடல்களில் பாலை நில இனவரைவியல், ப.65) எனக்கூறியுள்ளார். பாலைத் திணைக்குரிய தெய்வமான காளியைக் குறிப்பிட வந்த தேவதேவன்,

**பிரக்ஞை,**
**விறையல் தாங்காது**
**பிணங்களின் மேல் நிருத்தமிடும்**
**காளியாய் நெஞ்சை உலுக்க;**
**அறுத்தறுத் தெறிந்த**
**மாமிசப் பிண்டங்களென**
**ஆற்றுக்குள் தெரிந்த**
**பாறைகளையும்**
**தனீ உயிராய்**
**கிழக்கே எழும் சூரியனையும்**
**பார்த்தபோது**
**விறையலே இல்லை**

**(தேவதேவன் கவிதைகள், ப.54)**

குறிஞ்சிக்கு முருகனையும், முல்லைக்கு மாயோனையும், மருதநில மக்கள் இந்திரனையும், நெய்தலுக்கு வருணனையும் நான்கு நில மக்களும் ஆண் தெய்வங்களை வழிப்பட்டனர். ஆனால், பாலைக்கு மட்டும் பெண் தெய்வ வழிபாட்டு முறை அமைந்தது. 'பிணங்களின் மேல் நிருத்தமிடும் காளி' கவிதை வரியில் காளிதேவியின் உருவ அமைப்பையும், காண்பவர்களுக்கு அச்சம் தருபவளாகவும், காட்சியளிக்கிறாள். இக்காட்சிப் படிமத்தை தேவதேவன் கண் முன்னே காளித்தேவி தோன்றியது போன்ற உருவ அமைவை கவிதையில் அமைத்துள்ளார்.

## பறவை

பாலை நிலத்தில் வாழும் பறவை இனம் பருந்து. இப்பறவை, வானத்தில் வட்டமிட்டு கீழே உள்ள இரையை துல்லியமாக அறிந்துக்கொண்டு வேட்டையாடும் திறனுடையது.

**கடுங் கோடையில்**

**மேகமற்ற வானில்**

**எதை வட்டமிட்டுக்கொண்டிருக்கும்**

**பருந்து, தன்னை அறிந்த பின்னே ?**

**(நுனிக்கொம்பர் நாரைகள், ப.13)**

'மேகமற்ற வானம்' தலைப்பில் அமைந்த கவிதை வரிகளில் மழை வளம் காணாத வறண்ட நிலத்தைக் குறிப்பாகவும், அந்நிலத்தில் இறக்கும் உயிர்களை உண்ண கழுகுகள் காத்துக்கொண்டிருப்பதையும் குறிப்பால் பாலை நிலத்தை உணர்த்துகின்றன.

பருந்து இரையைத் தேடுவது போல, மனிதர்களும் பொருள் தேடி அலைந்துக் கொண்டிருப்பதாக, கவிதை வரிகள் சுட்டுகிறது. உலகத்தில் வாழும் மனிதர்கள் ஏதேனும்

ஒரு வகையில் தனிமையை விரும்பக்கூடியவர்களாக உள்ளனர். அதற்குக் காரணம், அவர்களைச் சுற்றி நிகழும் சூழ்நிலைகளாகும். பருந்துகள் சிறகுகளை விரித்து, வானில் சுதந்திரமாக பறப்பதைப் போல, மனிதர்களும் தனிமையை விரும்புகின்றனர். பருந்தினுடைய இயல்பு வாழ்வை மனிதனுடன் கவிஞர் ஒப்புமைப்படுத்துகிறார்.

பாலைத்திணையில் காணக்கூடும் ஓமை மரத்தில் பெண் பருந்தொன்று ஆண் பருந்தினை நினைத்து அலறுவதைப் பார்த்த தலைவனுக்கு தலைவியினுடைய நினைவு வருகிறது. இப்பெண் பருந்தினைப் போன்றுதானே தலைவியும் பாலை வழியில் பயணம் செய்யும் தன் நிலைக்குறித்து வருத்தமுறுவாள் என தலைவியினுடைய குணநலன்களைப் பற்றி எண்ணிக்கொண்டே பல மலைகளையும், நாடுகளையும் கடந்து வந்தும் அவளுடைய நினைவால் தலைவனும் வாடுவதை,

**"உலறு தலைப் பருந்தின் உளி வாய்ப் பேடை**
**அலறு தலை ஓமை அம் கவட்டு ஏறிப்**
**புலம்பு கொள விளிக்கும் நிலங் காய் கானத்து,**
**மொழி பெயர் பல் மலை இறப்பினும்,**
**ஒழிதல்செல்லாது – ஒண்டொடி குணனே". (ஐங். 321)**

எனும் சங்க இலக்கியப்பாடல் வரிகள் பாலை நிலத்தில் வாழும் பருந்தை எடுத்தாளுகிறது.

## விலங்கு

பாலைவனத்தில் பயணம் செய்வதற்கு உகந்த வாகனம் ஒட்டகமாகும். அங்கே, நிலவும் மணற்பாங்கான கடுங்கோடையை எதிர்கொள்ள மனிதர்கள் ஒட்டகத்தைப் பயன்படுத்தினர்.

**நொறுங்கிக் கொண்டேயிருக்கும்**

**மலைகளில் மோதி மோதி**

**காற்று கொண்டுவந்து சமைத்த**

**மணற் பாலைகளில்**

**முட்களுடனும் பூக்களுடனும் மலர்ந்துள்ள**

**செடிகளை உண்டு உயிர்த்தபடி**

**ஒட்டகங்கள் பயணிக்கின்றன.**

**(ஹே,மா! (அதிஉச்சம்), ப.5)**

பாலை நிலத்தில் நீரின்றி கிட்டத்தட்ட ஆறு மாத காலம் வரை ஒட்டகங்கள் வாழும் தன்மைக் கொண்டது. அவற்றினுடைய உடலமைப்பு பாலைவனத்திற்கு ஏற்றாற்போல் அமைந்துள்ளன. 'பாலை வனக்கப்பல்' என ஒட்டகத்தை அழைப்பர். பாலை நிலத்தின் இயல்பு நிலையும், முட்களும் பூக்களும் நிறைந்தப் பகுதியும், அங்குக்கிடைக்கும் உணவை உண்டு வாழும் விலங்கான ஒட்டகத்தின் பண்பையும் கவிதை வழி உணரமுடிகிறது. மேலும், குறிஞ்சிக்குரிய நிலப்பகுதியான மலையையும், பாலைக்குரிய கருப்பொருட்களையும் கவிதையில் திணை மயக்கத்தினுடைய தனித்துவமும் விளக்கப்பட்டுள்ளன.

**பூ**

எருக்கலம் என்பது செடி வகையைச் சார்ந்ததாகும். அவற்றில் அழகான பூக்கள் மலர்கின்றன. மழை வளம் காணாத வறண்ட பாலை நிலத்தில் நீரின்றி எருக்கலம் செடிகள் வளரும் இயல்பை உடையது.

**தமக்குள் பத்திரமாய் வைத்திருந்ததைக்**

**காட்டுதற்காய் விரிந்தவையோ**

**எருக்கலம் பூ பன்னீர் பூ**

**இவையெல்லாம் ?**

**(நுனிக்கொம்பர் நாரைகள், ப.74)**

காதலையும், ஏக்கத்தையும் வெளிபடுத்தும் விதமாக, தேவதேவனுடைய கவிதை ஆக்கங்கள் அமைகிறது. இயற்கையின் சூழலமைவுகள் மனித மனங்களின் அக உணர்வுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

**மென்மையாய்த்**

**தொட்டு நெரித்தேன்**

**எருக்கலம் மொட்டை**

**கண்டு கொண்டேன்.**

**பட்டென்று ஓசையுடன்**

**வெளிவந்த அதனை. (மேலது, ப.75)**

“காதல் நிறைவேறாத காதலர்களும் பூக்கள் வாயிலாகத் தங்கள் ஏமாற்றத்தை உரைப்பதாகப் பின்னாளில் காதல் கவிதை வளர்ந்துள்ளது. பிறர் யாரும் விரும்பாத (எருக்கு போன்ற) பூக்களை அவர்கள் அணிந்து பனம்பூ மடல்களால் அமைக்கப்பட்ட குதிரை மீதேறித் தங்கள் துயரத்தைப் பறைசாற்றியவாறு செல்வர்”. (தனிநாயக அடிகள், தமிழில் : பேராசிரியர் க. பூரணச்சந்திரன், நில அமைப்பும் தமிழ்க் கவிதையும், பக்.27, 28) என்பர்.

எருக்கலம் மணற்பாங்கான இடத்தைக்கொண்ட, பாலைப் பகுதியில் வளரும் இயல்புடையது. எருக்கலம் செடியினுடைய மொட்டின் ஓசை இனிமையுடையதாகும். ’தொட்டு நெரித்தேன் எருக்கலம் மொட்டை’ என்பது மொட்டாக

பெண்ணையும், அப்பெண்ணின் மீது அன்பு கொண்ட ஆணினுடைய மன நிலையையும் உள்ளுறை உவமையில் பதிவுப்பெற்றுள்ளது.

**மரம்**

வாகை மரம் பாலை நிலத்தில் வளரக்கூடியது. அகத்திணையில் பாலைக்குரிய இம்மரம் புறத்திணையில் போர்க்களத்தில் வெற்றி பெறும் வீரர்களை வாகை மரப் பூக்களைக் கொண்டு வரவேற்பதை சங்ககாலப் புலவர்கள் பாடல்களில் பதிவு செய்துள்ளனர். அகம், புறம் ஆகிய இருத் திணைகளுக்கும் வாகை மரம் உரியதாகத் திகழ்கிறது.

**வறிய கோலத்திலிருந்த வாகைமரம்.**

**கிளை நுனிகளில் ஆங்காங்கே**
**அபூர்வம்போல்**
**முளைவிட்டிருந்த துளிர்கள்.**

**திடீரென்று முழுமரமும்**
**பசேரென்று ஒளிர்ந்த புதுச்செழுமை.**

**மானுடத் துயர்முழுக்க**
**மறைந்துபோன மாயம்.**

**(ஹே! மா (அதி உச்சம்), ப.62)**

மனிதனுடைய வாழ்வில் சோகம், கவலை, துன்பம், துக்கம், ஏமாற்றம் போன்றவைகள் வறிய கோலத்திலிருக்கும் வாகை மரம் போன்று காணக்கூடும். அம்மரத்தில் சிறியதாக துளிர் விடும் இலைகள் போல, மனித வாழ்விலும் இன்பமும்,

துன்பமும் வரும். வாகை மரத்தினுடைய பகுதிகளை நச்சுத்தன்மைக் கொண்ட உயிரினங்கள் கடித்த இடத்தில் மருந்தாக உபயோகப்படுத்துகின்றனர். பாலையில் கொடிய நச்சுத்தன்மைகள் கொண்ட உயிரினங்களிலிருந்து பாதுகாப்பதற்காக வாகை மரம் பழங்காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் ஆராய்ந்து நட்டு வைத்திருக்கலாம் எனத் தோன்றுகிறது.

**பாலைவனத்தை**

**மறந்தே போய்விட்டது**

**அழகுக்காக**

**அவன் தன் தோட்டத்தில்**

**காதலுடன் வளர்க்கும் கள்ளி.**

**(நுனிக்கொம்பர் நாரைகள், ப.88)**

நீர்வளம் குன்றியப் பகுதியான பாலை வனத்தில் வளரும் தாவர வகைகளில் கள்ளியும் ஒரு வகையாகும். 'காதலுடன் வளர்க்கும் கள்ளி' என்பது பாலை நிலத்தில் அமைந்துள்ள கருப்பொருளையும் தலைவனுடைய அன்பை அம்மரத்தின் இயல்புடன் சுட்டப்பட்டுள்ளது. கருப்பொருளுக்கு அடுத்தப்படியாக உரிப்பொருளுக்கு இருக்கும் ஆக்கத்தினையே கவிதைகளில் காணநேர்கின்றன.

**"வள் எயிற்றுச் செந்நாய் வயவு உறு பிணவிற்குக்**

**கள்ளிஅம் கடத்திடைக் கேழல் பார்க்கும்**

**வெஞ் சுரக் கவலை நீந்தி,**

**வந்த – நெஞ்சம்! நீ நயந்தோள் பண்பே". (ஐங். 323)**

ஓதலாந்தையார் எழுதிய பாலைத்திணைப்பாடலில் கள்ளி நிறைந்த வழியில் பயணம் செய்யும் தலைவனின் நிலைப் பற்றிக் கூறியுள்ளார்.

**பாலைவனத்தில் தான்**

**வளர்வேன் என்றா**

**சொல்கிறது**

**பாலைவனச் செடி ?**

**(நுனிக்கொம்பர் நாரைகள், ப.88)**

நீர் வளமின்றி கள்ளி, எருக்கலம் செடிகள் பாலையில் வளர்கின்றன. இயற்கையோடு இணைந்த கவிஞர்களுக்கு மட்டுமே இவ்வாறான, புரிதல்களும், மனிதர்களின் ஆழ்மன எண்ணங்களையும், கவிதையின் அழகியல் தருணங்களையும் வெளிப்படுத்துவர். கவிஞர் தேவதேவனின் கவிதைகளிலும் இயற்கையைப் பற்றியக் கருத்தாடல்கள் வேரூன்றி நிற்கின்றன. அவர், இயற்கையின் பொருட்களை உயிருள்ளவை, உயிரற்றவை எனப் பிரித்துப்பார்க்காமல், பூமியில் வாழும் ஒவ்வொரு உயிரினங்களுக்கும் புலனுணர்வு உண்டு என்பதை உணர்ந்தவர். அவ்வுணர்வுகளை அவருடைய கவிதையிலும் வெளிப்படுத்தியுள்ளார்.

## தொகுப்புரை

பழந்தமிழ் மக்கள் தாங்கள் வாழ்ந்த வாழ்க்கைக்கு மட்டுமல்ல, தங்களைச் சுற்றியுள்ள உயிரினங்களுக்கும், செடி, கொடி, மரங்களுக்கும் முக்கியத்துவம் அளித்தனர் என்பதை கருப்பொருட்கள் காட்டுகின்றன. நீர்நிலைகள் நிறைந்த மருதத்திணையிலும், நெய்தல் திணையிலும் காணப்படும் பறவைகள் இருத்திணைகளுக்கும் உரியதாகக் காட்சியளிக்கிறது.

குறிஞ்சி : மலையில் கிடைக்கக்கூடிய பொருள்கள், முல்லை : கால்நடை வளர்ப்பு, மருதம் : வேளாண்மை, நெய்தல் : மீன் பிடித்தொழில், உப்பு விளைவித்தல் எனும் நான்கு திணைகளும் வெவ்வேறு விதமான பொருளாதார முன்னேற்றங்களைக் கொண்டிருந்தன.

உலகமாற்றங்களுக்கேற்ப கருப்பொருட்களும் சூழ்நிலைகளுக்கேற்பவும், இடங்களுக்கேற்பவும் மாறுதலுக்குட்பட்டுள்ளன. ஓரறிவு முதல் ஆறறிவு வரையிலான உயிரினங்கள் பிரபஞ்சத்தில் காணப்படுகின்றன. இவையனைத்தும், கவிதையின் மனநிலையை பாதிக்கும் இடங்களில் எல்லாம் காண நேரிடுகிறது. எக்காலத்தில் தோன்றிய படைப்பாக்கமாக இருப்பினும், அவை தோன்றிய காலம் முதல் நவீன காலம் வரையிலாக கருப்பொருளின்றி அமையப்பெறுவதில்லை என்பதற்கு தேவதேவனுடைய கவிதை வரிகள் சான்றாக அமைகின்றன.

இயற்கைப் படிமங்களும், இயற்கையுடன் நிகழும் சூழலியல் கோட்பாடுகளும், மனிதனுடன் இயற்கை கொண்டுள்ள உறவு நிலைகளைப் பற்றியும் கருப்பொருட்கள் பேசுகின்றன. பழங்காலத் தமிழர்களின் வாழ்வியலில் தாவரங்கள், விலங்குகள், மரங்கள், பறவைகள் போன்ற கருப்பொருள்கள் அத்துணையும் இன்றியமையாததாக விளங்குகின்றன. தேவதேவனுடைய கவிதைகளில் வெளிப்பட்டு நிற்கும் கருப்பொருட்களுடைய சூழலமைவுகளும் பண்டையத் தமிழர்களுடைய உயிர்பன்மயக் கோட்பாட்டினுடைய எச்சமாகத் திகழ்கின்றன.

இயல் நான்கு

# தேவதேவன் கவிதைகளில்

# உரிப்பொருள்

# இயல் நான்கு

# தேவதேவன் கவிதைகளில் உரிப்பொருள்

திணைப்பாகுபாட்டை முதன்மைப்படுத்தி எழுதிய முதல் இலக்கிய வடிவம் சங்க இலக்கியம். திணையை மூவகைப் பகுப்புக்குள் அடக்குவர். அவை, முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பவைகளாகும். இம்மூவகைப் பகுப்பை மையப்படுத்தி பழமரபு இலக்கியங்கள் பேசுகின்றன. திணையியல் சிந்தனைகளை மரபுசார்ந்த உலகியல் சிந்தனையாக மாற்றியவர் தொல்காப்பியர்.

மக்களின் வாழ்வியல் ஒழுக்க நெறிகளை எடுத்துரைப்பது உரிப்பொருள். ”மாந்தர் தம் செம்மாந்த உணர்வுகளிலிருந்து புறப்பட்டு வருவதே உரிப்பொருள் ஆகும்.” (அருள் ஜெனீபா A, திணை இலக்கிய கோட்பாட்டு நோக்கில் கம்பராமாயணம், ப.84) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்து வகை நிலங்களுக்கும் முறையே புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல் எனும் ஒழுக்க வகைகளும் அமைந்துள்ளன. தேவதேவன் கவிதைகளில் காணலாகும் உரிப்பொருள்களின் தன்மைகளை கண்டறியும் விதமாக இவ்வியல் அமைந்துள்ளது.

## குறிஞ்சித்திணை

ஆண், பெண் இருபாலரிடமும் தோன்றுகின்ற காதல் சார்ந்த நிகழ்வுகளை உள்ளடக்கிய ஒழுக்கமான புணர்தல் குறிஞ்சி நிலத்துக்குரிய உரிப்பொருளாகும். “புணர்தல் நிமித்தம் என்பது கிழவனுக்கும் கிழத்திக்கும் இடையில் ஏற்படும் மெய்யுறு புணர்ச்சியும் அது சார்ந்த நிகழ்வுகளையும் சுட்டுகிறது”. (அவ்வை.எஸ், சங்கப் பாடல்களில் திணையுணர்வும் தன்னுணர்வும் – கவிதையாக்க நெறி, ப.73) எனும் கூற்று குறிஞ்சி நிலத்தினுடைய ஒழுக்கத்தை உறுதிப்படுத்துகிறது.

**இணைசேர்தல்**

உலகத்தில் உள்ள உயிர்கள் ஏதேனுமொரு காரணத்தினால், ஒன்று சேர்கின்றன. இயற்கையின் பொருட்டு ஆண், பெண் இருவரும் இணையும் காதல் சார்ந்த ஒழுகலாறுகளைப் பற்றியக் கருத்தாடல்களை குறிஞ்சி நில உரிப்பொருள் எடுத்துரைப்பதை,

**இயற்கை, உயிர்களை**
**இணை சேர்த்து விளையாடுவதற்குப்**
**பின்னுள்ள இரகசியம்**
**மிகச் சிறியது**
**காதலோ எத்துணை பெரியது !**

**(நுனிக்கொம்பர் நாரைகள், ப.66)**

தேவதேவனும் சுட்டியுள்ளார். உலகத்தில் உள்ள உயிர்களை ஒன்றிணைப்பதில் இயற்கையின் பங்களிப்பு முதன்மையானது. இயற்கையினுடைய ஒவ்வொரு அசைவுகளும் பூமியில் வாழும் உயிரினங்களிடையே தோன்றும் அன்பிற்கு காரணமாகின்றன. குறிப்பாக, மனிதக்குல வரலாற்றிற்கு இயற்கையினுடைய மரபார்ந்தக் கொள்கைகளும், ஆக்கங்களும், செயல்பாடுகளும் ஏதேனும் வகையில் முக்கியத்துவம் அளிக்கின்றன.

பழந்தமிழர்களுடைய காதல் சார்ந்த நடப்பியல் நிகழ்வுகளுக்கு இயற்கையினுடையப் படிமக்கூறுகள் ஒவ்வொன்றும் அவர்களுடைய வாழ்வில் காணப்படுகின்றன. நிலத்தை ஐவகையாகப் பாகுபடுத்திய மனிதன், வெவ்வேறு இடங்களில் பிறந்த இரு உள்ளங்களுடைய இணைவுகளின் அடிப்படைக் களமாக குறிஞ்சி நிலம் விளங்குவதையும் குறிப்பிடுகின்றான். ஒவ்வொரு நிலத்திலும் உருவாகும்

நடப்பியல் கொள்கைகளுக்கு அவ்விடங்களில் வாழும் மக்கள் முதன்மையாகத் திகழ்கின்றனர். “ஒரு திணைநிலத்தின் பண்புகள் அந்நிலத்தைச் சார்ந்து வாழும் மாந்தர்மீதும் படிகின்றன”. (வறீதையா கான்ஸ்தந்தின், திணைவெளி- நிலம் சூழலியல் பண்பாடு, ப.191)

மனித மனங்களின் இணைவினைப் பற்றி ‘பள்ளத்திலுள்ள வீடு’ என்னும் கவிதை வாயிலாக எடுத்துரைக்கின்றார் கவிஞர்.

**ஒன்றுதல்**
**நமது இந்தக் காதல்**
**நாம் ஒன்றுவதை நோக்கிய**
**முன் விளையாடல்களா?**

**நாம் ஒன்றியதற்குப் பின் நிலவும்**
**நோக்கமிலாப் பாடல்களா?**

**ஒன்றுதலில் காலமில்லாதபோது**
**அதற்கு நோக்கமிருக்க முடியுமா?**
**முன்-பின் தான் இருக்க முடியுமா?**
**நோக்கமில்லாத ஒன்றைத்தான்**
**நோக்கினால் அடைய முடியுமா?**

**பேச இயலாப் பொருள்களோ**
**இக் காதலும் ஒன்றுதலும்?**

**பேச இயலாப் பொருள்களினைச்**

**செயலில் நிகழ்த்துபவனோ மனிதன்?**

**(பள்ளத்திலுள்ள வீடு, ப.75)**

நாம் காதல் கொண்டு ஒன்றுவதற்கு காரணம் முன் ஜென்ம விளைவுகளேயன்றி வேறு எவ்விதமான காரணமுமில்லை. நான் உன்னைக் காதலிப்பதில் மட்டும் நோக்கம் கொள்ளவில்லை என தலைவன் தன்னுடைய மனதில் தோன்றிய காதலின் உண்மைத் தன்மையை வெளிப்படுத்துவதாக, கவிதை அமைகின்றது. முன் ஜென்மத்தின் பலனாகவும், தெய்வ சங்கல்பத்தின் காரணமாகவும் தோன்றுகின்ற காதலை தெய்வப்புணர்ச்சி எனவும், இயற்கையாக தோன்றுவது இயற்கைப்புணர்ச்சி எனவும் கூறுவர்.

**அவையே போலும்**

**அவனிடமுள்ள உன்னதத்தை அவளும்**

**அவளிடமுள்ள உன்னதத்தை அவனும்**

**கண்டுகொண்ட காதலர்களாகிய இருவரில்**

**ஒருவர்க்கு மற்றொருவர் இல்லாத இடந்தனிலே**

**மற்றவர் இருந்தார்:**

**கண்ணெதிரே காணும் மரமாக**

**மலர்களாக**

**பருகும் நீராக**

**பார்க்கும் ஒளியாக, வானாக**

**தழுவும் காற்றாக அவர்**

**பாதம் தாங்கி நிற்கும் நிலமாக**

**நிலமெல்லாம் விரிந்த பசுமையாக... (பேர்யாழ், ப.43)**

இருவரின் உள்ளங்களில் தோன்றும் அன்பின் வெளிப்பாடுகள் நாளடைவில் ஒருவரின்றி மற்றொருவர் இருக்க முடியாது என்னும் நிலைக்கு ஆளாகின்றனர். இவற்றின் விளைவு, உண்ணும் உணவு, குடிக்கும் நீர், வானம், நட்சத்திரம், மரம், மலர் என அவர்கள் காணும் அத்துணைப் பொருள்களிலும் ஒருவர் மற்றவரைக் காணுகின்றனர்.

த.கண்ணன் ”மலையும் மலைசார்ந்த இடமும் இயற்கை தரும் சூழ்நிலை; புணர்தலும் புணர்தல் நிமித்தமும் மனித உணர்ச்சி தரும் சூழ்நிலை இவ்விரண்டையும் பிரிக்க முடியாதவாறு இணைத்துக் குறிஞ்சித் திணைக்கு உரிய புலனெறி வழக்கத்தை மரபாக்கினர்.” (கண்ணன்.த, சங்க இலக்கியத்தில் திணை மயக்கம், ப.52) என்கிறார்.

**'படக்' கென்று உயிரைக்**

**கொத்திப் பறந்த பறவையைப்**

**பின்தொடரும் குளம்**

**திரும்பி வந்து**

**உயிர்த்துக் கொள்ளும்**

**இடைப்பட்ட சில கணங்கள்**

**சடலமெனக் குளம் இங்கே (தேவதேவன் கவிதைகள், ப.38)**

தலைவன், தலைவி இருவரும் ஒன்றாக புணர்ச்சியின் போது இருந்த அத்தருணமானது மிகவும் மகிழ்வு உடையதாக இருக்கின்றது. அதற்கு பிறகு, அவர்களிடையே ஏற்படக்கூடிய பிரிவு என்பது குளத்திலே இருக்கக்கூடிய மீனை உண்கின்ற பறவையின் பசியின்மை நீங்கியது. ஆனால், அவ்வேளையில் குளத்தை விட்டு நீங்கக் கூடிய பறவையை எண்ணி குளம் துக்கப்படுவதைப் போல தலைவனும், தலைவியும் மீண்டும் இதுபோன்றதொரு புணர்ச்சி நிலை மீண்டு வராதா? என்பதனை நினைத்து ஏக்கம் கொள்கின்றனர். குறிஞ்சித்திணைக்குரிய உரிப்பொருளான ‘புணர்தல்’

வெளிப்படையாக அல்லாமல் உள்ளுறையோடு அமைக்கப்பட்டுள்ளதை தேவதேவன் கவிதை வாயிலாக அறிய முடிகிறது.

தலைவியை திருமணம் புரிய காலதாமதம் ஏற்படுத்துவதை அறிந்துக் கொண்ட தோழி சில அறிவுரைகளை தலைவனுக்கு கூறுவதைப் போன்ற பாடல்கள் சங்க இலக்கியங்களில் காண முடிகின்றன. அவ்வாறான, அமைப்பு முறையை,

**வேட்கை**

**ரசனைக் கொடி தழைத்து**

**மலர்ந்தது ஒரு கலைத்தாமரை,**

**அதில்**

**துக்கக் கரு வண்டே**

**தேன் அருந்தும், அருந்தித்**

**தீரா வேட்கையுடன்**

**திரியும் குளத்தகத்தே (தேவதேவன் கவிதைகள், ப.38)**

தேவதேவனின் கவிதை வரிகளில் தலைவன் இன்ப நுகர்வை விரும்புதலினால் தலைவியை திருமணம் புரியாமல் காலம் தாழ்த்தி வருவது தவறு என குறிப்பிட்டுள்ளார். மேலும், உரிப்பொருளுக்கு உற்ற உறுதுணையாக தாமரை, வண்டு போன்ற கருப்பொருட்களும் கவிதைக்கு ஏற்றாற் போல அமைந்துள்ளது.

**மோகவெறியோடு கரு வண்டுகள்**

**இரைந்தபடி சுற்றி வரும் பூக்குலைகளில்**

**எரிந்து கொண்டிருக்கின்றன**

**இன்னும் உதிராத பூக்களுடன்**

**வளர்ந்து கொண்டிருக்கும் மொட்டுகளுடன்**

**தீராத வாழ்வும் வேட்கையும்.**

**(நுனிக்கொம்பர் நாரைகள், ப.30)**

புதிதாக மலர்ந்துள்ள பூக்களில் தேன் அருந்த வரும் வண்டானது அம்மலரினைச் சுற்றி வருவது போல, தலைவியின் அழகில் மயங்கிய தலைவன் அவளைச் சுற்றி வருகிறான் என்பதை அறிந்த தோழி இலைமறைக் காயாக தலைவிக்கு உரைக்கின்றாள். வண்டாக தலைவனையும், மொட்டாக தலைவியையும், வேட்கை என்பதை அவர்களிடையே மலர்ந்துள்ள அன்பையும் உரைப்பதினால் 'நுனிக்கொம்பர் நாரைகள்' கவிதைத் தொகுப்பில் அமைந்துள்ள கவிதை வரிகளில் குறிஞ்சித்திணையின் களவு ஒழுக்கம் வெளிப்படுவதைக் காணலாம்.

**வண்டு வந்து**

**அமர்ந்து சென்றதன்**

**ஆனந்த போதையினாலே**

**அசைந்தாடியது அந்த மலர்.**

**காற்று வெளியினில் திளைக்கும்**

**களிநடனம் கண்டதுண்டு.**

**சலனமேயறியாத**

**நாதாந்த வெளியின்**

**பேரிசையிலும் திளைத்ததுண்டு.**

**(பேர்யாழ், ப.60)**

தலைவன் வந்து தலைவியை புணர்ந்து சென்ற பிறகு, ஒரு விதமான மயக்கத்தோடு அவள் காணப்படுவதை 'ஆனந்த போதையினாலே அசைந்தாடியது அந்த மலர்' என்னும் கவிதை வரிகளில் குறிப்பிடப்பட்டுள்ள மலர் என்பது தலைவியை அடையாளப்படுத்துகிறது.

**வாக்குறுதி கொடுத்தல்**

**இன்பம், மேலும் மேலும் இன்பம் என**

**ஓடிக்கொண்டேயிருக்கும் மனிதர்களைத்**

**தீண்ட இயலாத தோல்வியாலோ**

**வாடி நிற்கின்றாய் என் அன்பே !**

**இல்லை; எத்துயரும் தீண்ட முடியாத**

**ஒரு நீண்ட நெடிய**

**முடிவிலாத அமர்வில் இருந்தபடி**

**அமைதி கொண்டுள்ளனையோ,**

**வாழ்வின் இனிமையைத்**

**துளித் துளியாய்ப் பருகிக் கொண்டு**

**வாழ்வின் தடைகளை**

**அணு அணுவாய்த் தகர்த்துக் கொண்டு.**

**ஆ ! என் ஆருயிரே !**

**இனி உன்னை நான் ஒரு காலம் பிரியேன்.**

**என் வாழ்விலும் தாழ்விலும் உன்னைக் கைவிடேன்.**

**என் எல்லாச் செயல்களிலும்**

**எப்போதும் நீ என் உடனிருப்பாய்**

**என் உயிர் உள்ளவரை உன்னை நான் காப்பேன்.**

**(பள்ளத்திலுள்ள வீடு, ப.39)**

மனிதர்கள் வாழும் வாழ்க்கையின் ஒவ்வொரு தருணங்களிலும் வெற்றி, தோல்வியை சந்திக்கின்றனர். இன்பத்தை நோக்கி அவர்களுடைய பயணங்கள் இருக்கின்றன. பரபரப்பான இவ்வுலகத்தில் நம்முடைய காதல் வாழ்வில் வெற்றிப் பெறுவோம். களவு வாழ்க்கையில் உன்னை விட்டுச் சென்று விட மாட்டேன், உறுதியாக திருமணம் புரிந்துக் கொள்வேன், கைவிடமாட்டேன், பிரியேன், போன்ற ஆசை வார்த்தைகளைக் கூறி தன்னுடைய நிலையாமையை தலைவன் எடுத்துரைக்கிறான். இணை சேர்தல், ஒன்றுதல், புணர்தல், மோகம், போன்றவைகள் ஆண், பெண் இருவரிடையே உள்ளப்புணர்ச்சியின் காரணமாகத் தோன்றும் குறிஞ்சி நில உரிப்பொருளின் நிலைக்களன்களாக கவிதையில் வரையறுக்கப்பட்டுள்ளன .

**புணர்தல்**

குறிஞ்சித் திணைக்குரிய உரிப்பொருள் புணர்தலும் புணர்தல் நிமித்தமுமாகும். பழந்தமிழர்கள் “சந்தித்தல், இணை சேருதல், பொருந்துதல், கூடுதல் என்ற பொருள் கொண்டது புணர்தல் என்ற சொல்” (மம்மது. நா, தமிழர் திணை, ப.117) அடையாளப்படுத்தியுள்ளார்.

முதற்பொருளாலும் கருப்பொருளாலும் இன்ன திணை என்று முடிவு செய்ய இயலாத நிலையில் உரிப்பொருளை வைத்துத் திணையைக் குறிப்பர்.

**எங்கும் காதலின் தேனாறு பாய்கிறது**

**ஆண்மை கிளர்ந்தெழும்படி**

**அதனை சீராட்டி வருடும்**

**பெண்மையின் கரங்களால்**

**(அமுதம் மாத்திரமே வெளிப்பட்டது, ப.62)**

புணர்தலையும், அவற்றுக்கு ஏற்றவாறு அமையும் சூழ்நிலைகளையும் குறிஞ்சித்திணையின் ஒழுக்க வகைமைக்குள் உட்படுத்தப்படுகிறது . ஆண் × பெண் இடையே உருவாகும் உலகளாவிய பாலியல் ஒழுக்கத்தை குறிஞ்சி கூறுகின்றது. 'எங்கும் காதலின் தேனாறு பாய்கிறது' என்பதில் உள்ள தேன் எடுத்தல் என்பது குறிஞ்சிக்கு உரிய தொழிலைக் குறிக்கின்றது. தேன் ஓர் இனிப்பு வகையைச் சார்ந்ததும் மருத்துவ குணமுடையதுமாகும். எங்கும் நில்லாமல் செல்லக் கூடிய தன்மையுடையது ஆறு. 'தேனாறு' என்பது தேன் போன்றச் சுவை அவர்களுடைய அன்பு என்னும் பொருளில் அமைந்துள்ளது. இவ்வாறு, குறிஞ்சித்திணையின் முதல், கரு, உரி ஆகிய மூன்றின் இணைவுகளும் கவிதையில் பயின்று வந்துள்ளன.

இரு உள்ளங்களில் ஏற்படும் அன்பானது தேவதேவன் கவிதையில்,

**அமைதியற்ற சோகக் கறுப்பு வண்டு**

**தாமரைக்குள் நுழைந்து**

**தேன் அருந்தி**

**அவ்வின்பம் நிலைக்க**

**மகரந்தப் படுக்கைதனில்**

**மோதி மோதி**

**மடியத் துடிக்கும்**

**தாமரைப் பூ**

**இதழ்ச் சிரிப்புதிர்த்துக்**

**காய்க்கத் தொடங்கும்.**

**(தேவதேவன் கவிதைகள், ப.37)**

வெளிப்படுகிறது. பூவுக்குள் இருக்கும் தேனை நுகரும் வண்டினைப் போல, தலைவியினுடைய இளமையைத் தனதாக்குகிறான் தலைவன். கவிதையில் வண்டு தலைவனையும், தாமரைப்பூ என்பது தலைவியியையும் குறித்தன. 'காய்க்கத் தொடங்கும்' எனும் வரி அவர்களுடைய அன்பின் ஆழத்தைப் புலப்படுத்துகிறது. "திருமணத்திற்கு முன் நிகழும் ஆண்–பெண் காம உறவின் புணர்ச்சியே கூடல் எனப்படும். இதிலும் இரண்டு வகைகளைக் காண்கிறோம். உள்ளப்புணர்ச்சி, உடற்புணர்ச்சி, உள்ளம் இணைதல், இதனால் தொடர்ந்து உடல்கள் இணைதல் இது குறிஞ்சி". (சீனிச்சாமி.துரை, திணைகோட்பாடு, ப.91) எனப்பட்டது.

**முத்தத்துக்கு வேட்கும்**

**தாமரை இதழ்கள் துடிக்கும்**

**தாபம் கனலும் மேனி**

**ஈரப் புடவையைப் புணர்ந்து மயங்கும்**

**தணியாத காமம்**

**குளிராக நடுங்கும்**

**தாமரை**

**முகம் மட்டும் வெளித் தெரிய**

**அவன் பார்வை எரிக்கும்**

**கரையேறத் துணிந்தாலும்**

**காற்றாக வெளியாகக்**

**காத்திருக்கும் அவன் வேட்கை**

**கவ்விக் கொள்ளும்**

**(தேவதேவன் கவிதைகள், ப.36)**

குறிஞ்சி நிலத்தில் வாழுகின்ற மக்களுடைய ஒழுக்கமென்பது புணர்தல் நிமித்தமாகிய காமமும் அவைச்சுற்றி நிகழக்கூடியத் தருணங்களையும் அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்றன. தேவதேவன் கவிதையில் வேட்கை, காமம், தாபம், கனல், துடிப்பு ஆகிய சொற்கள் இருவருக்குள் ஏற்படும் அன்பினுடைய ஏக்கங்களாக அமைகின்றன. இவ்வேக்கங்கள் குறிஞ்சித்திணையின் தனித்துவத்தினையும், அந்நில மக்களுடைய ஒழுக்கத்தையும் வெளிப்படுத்தியுள்ளன.

“குறிப்பிட்ட காலங்களை, காலக்கூறுகளைக் குறிப்பிட்ட திணைகளுக்கு உரிமைப்படுத்திக் கூறியிருப்பது ஆண் பெண் உறவில் எழும் காதலை, காமத்தை முதன்மைப் படுத்தியதாகவே, மையப்படுத்தியதாகவே உள்ளது”. (மாதையன்.பெ, அகத்திணைக் கோட்பாடும் சங்க அகக்கவிதை மரபும், ப.27) இக்கூற்று தேவதேவனுடைய கவிதைக்கு சான்று பகருகின்றன.

# முல்லைத்திணை

ஐவகை நிலங்களுள் காடும் காடு சார்ந்தப் பகுதியும் முல்லைத்திணைக்குரியதாகும். "கொடி வகை, காட்டு மல்லிகை, ஊசி மல்லிகை, ஈசுரமூலி, முல்லை நிலம், முல்லை நிலப்பண்வகை, உரிப் பொருள்களில் ஒன்றாகிய இருத்தல், கற்பு, சிறப்பியல்பு, வெற்றி, முல்லைக்குழல், முல்லைப்பாட்டு, முல்லைச்சூட்டு, முல்லையாளர்" என 14 வகையான பொருள்களை முல்லைத்திணை தருவதாக முனைவர் வி.சி.சசிவல்லி "முல்லை" (ப.5) என்னும் நூலில் குறிப்பிடுகின்றார்.

தன்னை விட்டுப் பிரிந்த தலைவனை எண்ணி தலைவி அவனுடைய இல்லத்தில் ஆற்றியிருப்பது முல்லைத்திணையின் உரிப்பொருளாகும். ஏக்கம், இழப்பு, கையறுநிலை, வருத்தம், எதிர்பார்ப்பு, ஆறுதல் கூறுதல், செயலற்றத் தன்மை, ஆற்றியிருத்தல், காத்திருத்தல், புலம்புதல் என பல்வேறு வகையான நிகழ்வுகளும் முல்லைத்திணையின் ஒழுக்க வகைப்பாடுகளாக அமைகின்றன.

முல்லைத்திணையின் சிறப்புக்களை அகப்பொருள் இலக்கண நூற்கள் எடுத்துரைக்க, புறத்திணையின் கருத்துக்களை முன்னிலைப்படுத்தும் புறப்பொருள் வெண்பாமாலை இலக்கண நூலும் அரசமுல்லை, அவையமுல்லை, மூதின் முல்லை, வல்லாண் முல்லை, காவன்முல்லை, ஏறாண்முல்லை, கனிவண் முல்லை, குடைமுல்லை, சால்புமுல்லை போன்றவை முல்லைத்திணையின் ஆக்கங்களைப் பற்றி கூறுகின்றன.

**ஏக்கம்**

காதலன் தன்னுடைய காதலியை காண வேண்டும் என்னும் பரிதவிப்போடு அவளுடைய நினைவுகளை சுமந்துக்கொண்டு காடெல்லாம் தேட முற்படுவதை கவிஞர் தேவதேவன் கவிதை வரிகளின் வாயிலாக சொல்லோவியமாகத் தீட்டுகின்றார்.

**தன் இதயச்**

**சுனையருகே**

**தாகித்து நின்றான்,**

**காடெல்லாம் அலைந்தும்**

**காணாத மான் கூட்டம்**

**காண (தேவதேவன் கவிதைகள், ப.28)**

இயற்கையாகவே மலைகளில் தோன்றும் நீர்நிலை சுனைநீர். மலைகளில் தோன்றுகின்ற இந்நீரானது பெருக்கெடுத்து காடுகளிலும் பரவுகின்றன. காட்டில் பெருக்கெடுத்து ஓடும் சுனை நீரினைப் பருக காத்திருக்கும் வனவிலங்குகளைப் போல, காதலனின் இதயமானது காதலியை காண துடிப்பதாக கவிஞர் தேவதேவன் ஒப்புமைப்படுத்திக்காட்டுகிறார். உயிர்கள் உருவாவதற்கு கரு எவ்வளவு முக்கியமோ அதனைப் போன்று மக்களுடைய வாழ்விலும் கருப்பொருள்கள் இன்றியமையாததாக விளங்குகின்றன.

தெய்வம், உயர்ந்தோர், ஏனையோர், பறவை, விலங்கு, ஊர், நீர், பூ, உணவு, தொழில் என கருப்பொருட்கள் பதினான்கு வகைப்படும். முல்லை நிலத்தினை வாழ்வாதாரமாகக் கொண்ட மானின் இயல்பு வாழ்வினை மனிதர்களுடைய மனங்கொள்ளும் ஏக்கத்தை கவிதையில் கட்டமைத்துள்ளார். மனிதர்கள் ஏதேனும் உரிப்பொருளுக்கு உறுதுணையாக கருப்பொருட்களும் துணை நிற்பதை கவிதை வரிகள் எடுத்துக்காட்டுகின்றன. காட்டின் மீது மனிதர்கள் ஆதிக்கம் செலுத்துகின்றனர். இதன் காரணமாக, பத்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்த உயிரினங்கள் மட்டுமல்ல மூன்று, நான்கு வருடங்களுக்கு முன்பு காணப்பட்ட உயிரினங்களையும் காண முடிவதில்லையென கவிஞர் கவிதையில் பதிவுசெய்துள்ளார்.

### இழப்பு

அடர்ந்த புதர்களையும், கொடிய விலங்குகளையும், கடினமான வழிகளையும், கரடுமுரடான பாதைகளையும் கொண்டது காடு. இருப்பினும், தனக்கே உரித்தான சில நல்லியல்புகளையும் காடு தகவமைத்துக் கொண்டுள்ளன.

**இருண்ட கானகத்துள் தொலைந்து போனவன்**

**அடுத்த அடியை வைக்கும் பாதம் தொடுவது**

**பெரும் முள்பரப்பா, ஆழ்சகதியா, பள்ளமா தெரியாது**

**எனது வழியற்ற வழியில் நான் கண்டவர்கள்**

**குறிக்கோளையும் பாதைகளையும் மிகத் தெளிவாய் அறிந்த**

**தீர்க்க நடையினர்**

**நானோ சென்றடைய வேண்டிய இடத்தின்**

**திக்கோ அடையாளமோ தெரியாதவன்**

**வழிகாட்டப்படக்கூடும் வாய்ப்பினை இழந்தவன்**

**(தேவதேவன் கவிதைகள், ப.291)**

மனிதனுடைய வாழ்வில் பல சிக்கல்களையும், கரடு முரடான பாதைகளையும் நேரிடலாம். அவ்வாறான, சூழ்நிலையில் தன்னிலை மாறாமல் நல்வினையில் தன்னுடைய பாதையை அமைத்தல் வேண்டும் என்பதை, காட்டினுடைய இயல்புத்தன்மை மூலமாக கவிதையில் சுட்டியுள்ளதைக் காணலாம்.

**கையறுநிலை**

ஆதிமனிதன் காடுகளில் விலங்குகளின் அச்சமின்றியும், அங்கே கிடைக்கக்கூடிய இயற்கைச் செல்வங்களைப்பெற்றும் வாழ்ந்து வந்தனர். அனைத்துவகையான இயற்கை வளங்களையும் காடு மனிதனுக்கு அருளியது. ஆனால், மனிதனின் சுயநலத்தாலும், பேராசையினாலும் இயற்கைக்கு எதிரான செயல்களில்

ஈடுபடத் துணிந்தான். காட்டின் இயற்கை வளங்கள் சுரண்டப்பட்டதினால் காட்டில் வாழும் உயிரினங்களின் வாழ்வாதாரமானது நிலைகுலையச் செய்தது. இந்நிலையை,

**மின்னல் மழைக்காடுகளில்**
**கருக்கலோடு போய் காளான் சேகரிப்பதற்கும்**
**நிலா நிறைந்த குளம் குட்டைகளில்**
**ராவெல்லாம் தூண்டில் போடுவதற்கும்**
**காடுகள் கொடிகள் படர்ந்து பச்சித்திருக்கையில்**
**கோவங்காய்கள் சேகரிக்கவுமாய் வாழ்ந்த**
**அந்த மனிதன் இறந்துவிட்டான்**
**சேமிப்பை அறியாதவனும்**

**எதிர்காலத்தை எண்ணி அஞ்சாதவனுமான**
**அந்த மனிதன் இறந்துவிட்டான்**

**(தேவதேவன் கவிதைகள், ப.384)**

அமைதியான காடுகளை நம்பி வாழ்ந்த மக்கள் அவற்றின் மூலம் கிடைத்த தேவையான பொருட்களை எடுத்துக் கொண்டு, காட்டை அழிக்க முற்படுகின்றனர். உலகமயமாக்கல், மக்கள் தொகைப் பெருக்கம், இயந்திரத்தனமான வாழ்க்கை, பொருள் தேடல் என்பவைகள் காடு அழிப்பிற்கு காரணங்களாக அமைகின்றன. இயற்கை வளங்களைப் பெற்றுள்ள காட்டைப் பாதுகாக்க வேண்டியது மனிதனின் கடமையாகும் என்பதை கவிஞர் தேவதேவன் உரிப்பொருளின் வாயிலாகச் சுட்டிக்காட்டுகிறார்.

**வருத்தம்**

ஒரு பொருளைச் சுற்றி வளைந்து வளரக்கூடிய செடி வகை முல்லை. கார்காலத்தில் மாலை நேரத்தில் பெய்யக்கூடிய மழையில் முல்லைப் பூக்கள் பூத்துக் குலுங்கத் தொடங்குகின்றன. வெண்ணிறமும், நறுமணமும் கொண்ட புனிதத்தின் சின்னமாகக் கருதப்படும் முல்லைப்பூவை,

**காக்கை திருடி வைத்திருக்கும் வடையோ**

**அதைப் பறிக்க நினைத்த நரியோ**

**அல்ல**

**மர்மமான துக்க இருள் நடுவே**

**ஒரு காட்டுச் செடி**

**தூய்மையின் வண்ணத்துடன்**

**பூக்கிறது ஒரு சின்னஞ்சிறு தேன்மலர்**

**ஆக மெல்லிய அதன் மணக்கைகள்**

**தட்டுகின்றன எல்லோர் கதவையும்**

**(தேவதேவன் கவிதைகள், ப.450)**

கார்காலத்தில் பெய்யக் கூடிய மழையினால், காடு முழுவதும் முல்லை மலரானது பூத்துக்குலுங்க, அம்மலரில் வண்டுகள் தேனை அருந்த, விலங்குகள் தங்களின் இணையோடு கார்கால வரவினை வரவேற்பதைக் கவிதையில் காட்சிப்படுத்தியுள்ளார்.

**நாம் இங்கே வருவோமென்று**

**அறியுமோ காட்டுப் பூக்கள் ?**

**நாம் இங்கே வரவேண்டுமென்ற**

**பிடிவாதத்துடன் -- வராவிட்டாலும்--**

**தழுவப் போகும் தோல்வியின்**

**சற்றும் மனம்கலங்காப் பெருநிறைவுடன்**

**வான்கதிர் நோக்கும் மண்ணின் வியப்புகளாய்ப்**

**பூத்துக்கிடக்கின்றன காட்டுப்பூக்கள் !**

**நிலவின் முத்தம் பெறும்.**

**நட்சத்திரங்களின் கனிவுப்புன்னகைகள் காணும்**

**பறவைகளின் தீங்குரல்களில்**

**நெஞ்சு நிறைந்து உய்யும்.**

**மானுடர் விலகினார் என்றால் என்ன,**

**வாழ்வு முடிந்துவிடுமா என்ன ?**

**என்றாலும் கானகத்தின்**

**இருள்களிலும் நிழல்களிலும்**

**அதன் ஒவ்வொரு அசைவிலும் அழகிலும்**

**மனிதத்துயரமே ஒளிர்கிறதென்ன ?**

**(பள்ளத்திலுள்ள வீடு, ப.10)**

முதற்பொருள் என்பது நிலமும் பொழுதுமாகும். பொழுதை பெரும்பொழுது, சிறுபொழுது என இருவகைப்படுத்துவர். முல்லைத்திணைக்குரிய பெரும்பொழுது கார்காலமும், சிறுபொழுது மாலையுமாகும். இயற்கையின் எழிலார்ந்த காட்சிப்படிமங்களும், கார்காலத்தை வரவேற்கும் முல்லைப்பூக்களின் வருணனையும்

கவிதையில் விளக்கப்பட்டுள்ளது. மேலும், முல்லைத்திணைக்குரிய முதல்,கரு,உரிப்பொருள்களின் அமைவுகள் நவீனகவிதைகளிலும் பயின்று வருவதை அறிய முடிகிறது.

**ஆறுதல் கூறுதல்**

சங்க இலக்கியப் பாடல்களில் தலைவனின் பிரிவை எண்ணி வருந்தும் தலைவிக்கு தோழி ஆறுதல் கூறுவது போன்ற காட்சிகள் கட்டமைக்கப்பட்டுள்ளன. அப்படிப்பட்ட, ஆறுதல் மொழிகளை காட்டிற்கு எடுத்துரைப்பது போன்ற அமைவினை,

**மேஜை மீதிருந்த வரைபடத்தின் மீது**

**சோர்ந்து கவிழ்ந்து இருண்டது**

**சுந்தரியின் வாரி முடிக்காத தலைமயிர்**

**மெல்லக் கோதிற்று ஜன்னல் காற்று**

**"சுந்தரீ**

**மலைகளையும் நதிகளையும் குறிவைத்து**

**பாதைகளைச் சிருஷ்டிக்க முடியாத அக்கானகத்தை**

**வரைபடத்தில் குறித்து என்ன பயன்?**

**என்ன அவசரம் உனக்கு?**

**யாரைத் தேடுகிறாய் நீ?**

**எங்கு போகவேண்டும்?**

**எதற்காகட்டும் ; பாதைகள் தேடாதே**

**பாதைகள் கிடையாது இக்கானகத்தில்!**

**விசைப்படகின் முன் கிழிபடும் நீர்ப்பரப்பு**

**பின்னாலேயே மூடிக்கொண்டு விடுவதுபோல்**

**யார் சிருஷ்டித்த பாதைகளையும்**

**உடனுக்குடன் மூடிக்கொள்ளும் கானகம் இது**

**பாதை தேடும் முயற்சியைக் கைவிடடி**

**புத்துணர்வு கொள்**

**தைரியமாய் இறங்கு**

**உன் புஜபலத்தின் வாள்வீச்சில்**

**சரியும் புதர்களின் வீழ்ச்சியில்தான்**

**பிறக்கிறது உன் பாதை**

**வேறு வழியில்லை, சுந்தரி!"**

**(தேவதேவன் கவிதைகள், ப.261)**

கவிதையில் சுந்தரீ (வனதேவதை) என்னும் பெண்ணிற்கு ஆறுதல் கூறுவது போன்று கவிஞர் தேவதேவன் தன்னுடைய கவிதை வரிகளின் வாயிலாக சித்தரித்துள்ளார். அழிந்து வரும் காட்டினைப் பாதுகாக்கவேண்டிய மனிதர்கள் அவற்றை அழித்துக் கொண்டிருக்கின்றனர். இனிவரும் வருங்கால தலைமுறையினருக்கு 'காடு' இருந்ததினை வரைபடத்தில் அடையாளப்படுத்திக் காண வேண்டிய சூழ்நிலை உருவாகும் எனபதை கவிஞர் உணர்த்துகிறார்.

போர்க்களத்தில் எதிராளியை எதற்கும் அஞ்சாமல் போரிடும் வீரனைப் போல மனிதர்களின் சூழ்ச்சிகளுக்கு மனம் தளராமல் இருக்க வேண்டுமென காட்டிற்கு கவிஞர் ஆறுதல் கூறும் விதமாக கவிதையை அமைத்துள்ளார். அகமும் புறமும் கலந்த திணை

மரபாக்கத்தினை கவிதை எடுத்துரைக்கின்றன. இவை, புதிய வகையான திணை மயக்கத்திற்குரிய வளர்ச்சி நிலைகளைக் காட்டுகின்றன.

**செயலற்றத்தன்மை**

கார்காலத்தில் பூத்துக்குலுங்கும் முல்லை மலரில் வண்டுகள் மொய்த்துக்கொண்டு இன்னிசை பரப்பும், ஏராளமான பூக்களும், பழங்களும், நதிகளும், காட்டாறுகளும், நீரோட்டமுடைய பகுதியாகவும், இயற்கை வளங்கள் அனைத்தையும் பெற்று விளங்கக் கூடிய இடமாகவும் முல்லைத்திணைக் காட்சியளிக்கிறது. மகிழ்ச்சியும், குளிர்ச்சியும், புத்துணர்வும், அழகும் பெற்று விளங்கிய காட்டிற்கு என்ன நேர்ந்தது? என கவிஞர் வினா எழுப்புகின்றார்.

**வண்டுகள் ஆயிரம் ரீங்கரிக்க**

**பூத்துக்குலுங்கும் மலர்த்தருக்களின்**

**கொண்டாட்டம் எங்கே?**

**கொட்டும் அருவியின் பெருஞ்செல்வ ஒலியில்**

**கானகத்தின் மணத்தில்**

**உதிர்ந்த சருகுகளும்**

**கண்மயங்கி கிடக்கும்**

**இன்பத் துய்த்தல் எங்கே?**

**காற்று கொத்து மலர்க்கிளைகளூடே**

**உலவித் திரியும் இன்பம் எங்கே ?**

**பறவைகளின் குரல்களிலும்**

**இலைகளின் முணுமுணுப்பிலும்**

**துக்கம் கூடுவதென்ன ?**

**(பள்ளத்திலுள்ள வீடு, ப.45)**

மனிதர்களுடைய தேவைகளுக்காகக் காட்டின் பகுதிகளை ஆட்படுத்தினர். இதன் விளைவு, காடு தன்னளவில் சுருங்கத் தொடங்கியது. பூமியில் வளரக்கூடிய பல்வேறு வகையான செடி, கொடிகளும், விலங்கினங்களும் வாழும் இடமாகிய காடு தன் இயல்பினை இழந்து, இயற்கை அழகும் அதில் கிடைக்கும் இன்பமும் அழிந்து விட்டச் சூழலை கவிதையின் வாயிலாக எடுத்துரைத்து காட்டின் வளமையைக் காக்கவேண்டும் என்ற உணர்வினை இங்கு பதிவுசெய்கிறார்.

**ஆற்றியிருத்தல்**

வனத்தில் உள்ள மரங்களினால் மூன்றில் ஒரு பங்கு மழைப்பொழிவிற்கு காரணமாக அமைகின்றன. அப்படிப்பட்ட, மரங்களை வெட்டி வீழ்த்துவதினால் மழையில்லாமல் அனைத்து உயிர்களும் துன்பப்படுகின்றன.

**காத்திருக்கும் தாவரங்கள்**

**கடந்துசெல்லும் கார்முகில்கள்**

**இருவருமே நோகும்படி**

**இயன்றுகொண்டிருக்கிறது எது ?**

**(நுனிக்கொம்பர் நாரைகள், ப.91)**

வெயிலின் தன்மை தணிந்து குளிர்ச்சி ஏற்படும் காலம் கார்காலமாகும் (ஆவணி, புரட்டாசி). உயிரினங்களும், பயிரினங்களும் மகிழ்ச்சியில் கொண்டாடுகின்ற வசந்தகாலமாகிய கார்காலத்தை வரவேற்பதற்காக காட்டில் வாழும் தாவரங்களும், விலங்குகளும், பறவைகளும் தங்களின் இணையோடு காத்திருக்கும் நிகழ்வையும், கார்காலத்தில் திரும்ப வருவேன் எனக் கூறிச்சென்ற தலைவனின் வருகையைப் பற்றியும் கவிதை வரிகள் எடுத்தாளுகின்றன.

**காத்திருக்கும் நிலம்**

**கடந்துசென்றுவிட்டன கார்முகில்கள்**

**கொந்தளித்துக்கொண்டிருக்கிறது**

**பிறிதெதுவாலும் தீராத் துயர்.**

**(நுனிக்கொம்பர் நாரைகள், ப.91)**

தலைவியை விட்டுப் பிரிந்த தலைவனுடைய நினைவுகள் தனிமையில் வாடும் அவளுக்கு துன்பத்தினை ஏற்படுத்துகிறது. கவிதையில் தலைவியை நிலத்தோடும், கார்முகிலை தலைவனுடனும், அவர்கள் ஒன்றிணையாமல் தவிப்பதையும் கவிஞர் விவரிக்கிறார்.

**காத்திருத்தல்**

தலைவன், தலைவியிடம் தோன்றுகின்ற காதல் வாழ்வு நிறைவு பெறுவது கற்பு வாழ்க்கையிலாகும். இக்கற்பு வாழ்க்கையின் சிறப்பினைப் போற்றும் முல்லை நிலத்தின் ஒழுக்கத்தை 'இருத்தல்' நிமித்தம் என்று குறிப்பிடுவர். "இருத்தல் என்பது இந்நிலையில் 'உயிர்வாழ்தல்' என்று ஆகிவிட்டது". (கார்த்திகேசு சிவத்தம்பி, பண்டைத் தமிழ்ச் சமூகம் – வரலாற்றுப் புரிதலை நோக்கி, ப.188) என முல்லை நில மக்களுடைய ஒழுக்கம் வரையறுக்கப்பட்டுள்ளன.

எஸ்.அவ்வை குறிப்பிடுகையில் "இருத்தல் ஆகிய முல்லை ஒழுக்கமானது தலைவி வீட்டிலிருக்க கார்காலத்தில் தலைவன் திரும்பிவரும் மந்தை மேய்ப்புடனும், நிலையான விவசாயத்துடனும் ஆரம்பித்து பொருள்வயிற்பிரிவு, பகைவயிற் பிரிவில் நிலைபெற்றிருத்தல் வேண்டும். ஆரம்பத்தில் மந்தை மேய்ப்புக்காக வேற்றுப் புலம் செல்லும் கோவலர் வரும் வரை மனைவியர் வீட்டில் இருத்தல் வேண்டும் என்பது அவசியமாக இருந்தது எனலாம்". (அவ்வை.எஸ், சங்கப் பாடல்களில் திணையுணர்வும்

தன்னுணர்வும் – கவிதையாக்க நெறி, ப.92) என்பதன் மூலம் முல்லை நில மக்களுடைய இல்லற வாழ்வின் பொருட்டு ஆண், பெண் இருவரும் பிரிய வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது தெள்ளிதின் காட்டுகின்றன.

ஆண் ,பெண் இணைவில் இருக்கும் பிரிவு நிலை என்பது ஏதேனும் காரணத்தினால் நிகழ்த்தப்படுகிறது என்பதை,

**ஒரு ஓரிதழ் மலர்,**

**ஓர் ஒற்றை**

**உள்ளங்கை போல்**

**அது தன்னகத்தே**

**ஒரு மகரந்த தண்டாய்க்**

**காத்துக்கொண்டிருப்பது எதை?**

**(நுனிக்கொம்பர் நாரைகள், ப.56)**

புலப்படுத்துகிறது. தேவதேவனின் கவிதை வரிகள் தலைவனின் வருகைக்காகக் காத்திருக்கும் தலைவியின் மன வருத்தத்தினை அறிவிக்கும் விதமாக அமைந்துள்ளன.

**உள்ளதுதான் இடர்ப்பாடுகள் என்றாலும்**

**அதுவே தான் எரியும் பிரச்னை என்றாலும்**

**இருத்தலின் இன்பம் அறியானை**

**வேறு எங்கு கொண்டுவந்து சேர்க்கும் அது?**

**(நுனிக்கொம்பர் நாரைகள், ப.91)**

பிரிவு என்பது மிகப்பெரிய வருத்தத்தினை ஏற்படுத்தினாலும், இனி வருகின்ற காலங்களில் நாம் இன்பமாக வாழ அதுவே உறுதுணையாக அமையுமென தலைவன் ஆறுதல் கூறுகிறான்.

’காத்திருப்பு’ என்பது முல்லைத்திணையினுடைய ஒழுக்கத்தைச் சுட்டுகின்றன. கவிதையில், மாலை நேரம் முல்லைத்திணையினுடைய பொழுதினையும், கருப்பொருளான மானும் விரவி வந்துள்ளன. கவிதையில் குறிஞ்சியினுடைய பொழுதான இரவும் இடம்பெற்றுள்ளன. குறிஞ்சி, முல்லை எனும் இருவகைத்திணையைக் குறிப்பதோடு மட்டுமல்லாமல், முல்லை நில மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கத்தையும் கவிதை வரிகள் பதிவு செய்கின்றன.

**காத்திருக்கிறோம்,**
**உலகின் குழப்பங்கள் அடங்குவதற்காக**
**நானும் இந்த மாலையும்**

**வந்துவிட்டது**
**பளிங்குப் புனல் இரவைப்**
**பருகும் கலைமானும்**
**பருகும் கலைமானைப்**
**பருகும் புனல் இரவும்.**

**வந்துவிட்டது**
**வைகாசிமாதக் காற்றிடையே**
**காதல் நினைவுகளைப் போலவும்**
**நினைந்து நினைந்து மகிழும்**
**நல்லெண்ணங்களைப் போலவும்**
**அசையும் மரங்களின் இன்னிரவு.**
**பறவைகள் தூங்கச் சென்று விட்டன**

**விண்மீன்களும் விழி அயர**

**மழை மேகங்களைப் போர்த்துக்கொண்டன.**

**ஒளிய இடமின்றி !**

**ஒரு வேதனையும் ஆங்கே**

**உள்ளதுதான் எனினும்**

**அமைதியான**

**சலனமற்ற**

**குழந்தைமைமிக்க**

**இந்த வீதி விளக்குகளில்தான்**

**எத்தகைய புத்தம் புதிய ஒளி**

**(பேர்யாழ், ப.73)**

இரவு வேளையை வரவேற்க அனைத்து உயிரினங்களும் அவற்றிற்குரிய வீடுகளுக்குச் சென்று விட்டன. ஆனால், மாலை நேரத்திற்குள்ளாக திரும்ப வருவேன் எனக்கூறிய தலைவன் திரும்ப வரவில்லை என்பதனை கவிதை உணர்த்துகின்றது. இவ்வாறான, மனநிலையோடு தலைவனும் இல்லம் நோக்கி விரைந்து வருகின்றான்.

**புலம்புதல்**

**பொழுதெல்லாம் புலம்பல்**

**அவள் மார்பிலும் மடியிலும்**

**மகிழ்ந்து சீராட்டப்படும் வேளையினை எண்ணி.**

**மின்னல்போல் ஒரு வலி**

**மார்பிலிருந்து தன்னை**

**அவள் பின்னுக்குச்**

**சுண்டி எறிகையிலெல்லாம் (பேர்யாழ், பக்.36, 37)**

என்னும் கவிதை வரிகளில் தலைவனின் மனக்குமுறலைக் காண முடிகிறது. மழையின் வருகை, உயிரினங்களின் மகிழ்வு, காட்டு மலர்களின் நறுமணம், புதிதாக முளைத்த புற்கள், காட்டுச்செடியும் அதன் பூக்களும் இவையனைத்தும் முல்லைத்திணை வருணனைகளை அழகாகக் காட்சிப்படுத்துகின்றன. உயிரினங்கள் வாழ்வதற்கு காடு அடைக்கலம் தருகிறது. உணவுப் பற்றாக்குறை, தட்பவெப்ப வேறுபாடுகள், வறட்சி ஆகிய இயற்கை சீற்றங்கள் காட்டில் வாழக்கூடிய உயிரினங்களை அழிகின்றன.

இயற்கை சீற்றங்கள் மட்டுமல்லாமல், மரங்களை வெட்டுதல், உயிரினங்களின் வாழ்விடத்தை சேதப்படுத்தியும், காட்டில் கிடைக்கக் கூடிய அரிய வகையான மூலிகை மருந்துகள் என காட்டின் வளங்களை அழிக்கும் மனிதனும் காடழிவிற்குக் காரணமாக அமைகின்றனர். மனிதனுக்கும் × இயற்கைக்கும், மனிதனுக்கும் × உயிரினங்களுக்கும் இடையிலான உறவு நிலைகளைப் பற்றி கவிஞர் தேவதேவனின் கவிதைகள் விவாதிக்கின்றன.

## நெய்தல்திணை

கடல் பயணமாகச் சென்ற தலைவனின் நிலையை நினைத்து வருந்தும் தலைவியின் மனவோட்டங்களின் எண்ணங்கள் நெய்தல் நிலத்திற்குரிய ஒழுக்க வகையாக அமைகின்றது.

**கடல் மீது கடல்கொட்டி**

**இடமற்று விரிந்துநிற்கும்**

**பெருங்களியால் மலரும்**

**செந்தாமரைக் கனல்கள்!**

**கடலை மழைத்துளிகளாய் ஏந்திக்**

**காற்றிற் துடிதுடித்து நிற்கும்**

**தாமரை இலைகள்!**

**எவ்வுயிர்தான் உவக்காதிருக்க இயலும்**

**கடல் தான் கண்ணீர்க் கசடுகள் களைந்து**

**நிலத்திற் பொழிகையில்?**

**(பள்ளத்திலுள்ள வீடு, ப.53)**

கடல் நீல நிறமாகக் காட்சியளிக்கின்றது. எங்குப் பார்ப்பினும் கடலின் ஆரவார ஒலிகள் கடலுக்குள் மீன் பிடிக்கச் சென்ற தலைவன் திரும்ப வருவானா? என தலைவி எண்ணுகிறாள். "வனம் போலன்றி, கடலோடிகளது வேட்டைக் களம் சலித்துக் கொண்டிருக்கும் விரிநீர்ப் பரப்பு என்பது கூடுதல் அபாயமானது. வேட்டைக் களத்தில் தன்னைத் தற்காத்துக்கொண்டு, சிறந்த வேட்டைப் பெறுமதிகளுடன் பத்திரமாய்க் கரை திரும்பினால் ஆயிற்று (வேட்டைப் பொருளாதாரம்). பிழைத்திருத்தலின் பொருட்டு அன்றாடம் மரணத்தை எதிர்கொள்ளும் வாழ்க்கை அது. அதன் பொருட்டே 'இரங்கலும் இரங்கல் நிமித்தமும்' நெய்தல் நிலத்தின் உரிப்பொருளானது". (வறீதையா கான்ஸ்தந்தின், திணைவெளி- நிலம் சூழலியல் பண்பாடு, ப.191) என நெய்தல் திணைக்குரிய ஒழுக்கம் இனங்காட்டப்பட்டுள்ளது.

**மனிதன் - பொழிவதற்கு -**

**அவன் எவ்வளவு உயரம் எழுந்தாக வேண்டும்?**

**பருந்துகள் அவனுக்குக் கீழே பறக்கின்றன.**

**மேகங்கள் அவனுக்குக் கீழே**

**எத்தனை சிகரங்கள்**

**அவன் காலடியில்.**

**எத்தனை நதிகள்!**

**எத்தனை எத்தனை அழகிய பள்ளத்தாக்குகள்!**

**எத்தனை சமவெளிகள் ! எத்தனை நகரங்கள் !**

**எல்லாம் நன்கு திட்டமிடப்பட்ட**

**பிரமாண்டமானதொரு**

**வடிவகணித வரைபடம் போலவே.**

**சந்திரன்களும் சூரியன்களும் அவனை வாட்ட,**

**கனக்கும் நெஞ்சோடு அவன் கேட்கிறான்:**

**(ஹே,மா! அதி(உச்சம்), ப.20)**

கடற்பயணம் மேற்கொண்டுள்ள தலைவன் வானத்தில் பறக்கும் பறவையைப் பார்க்கின்றான். தானும் இப்பறவையைப் போல பறந்து சென்று தன் நினைவால் வாடும் தலைவிக்கு ஆறுதல் கூற வேண்டுமென நினைக்கின்றான். "கவிதையின் முக்கியக்கூறு, மனிதனின் உணர்ச்சிகள், நடத்தை, ஒழுக்கம் இவைதான் முக்கியம், ஆனால் இயற்கை இந்த உரிப்பொருள்களை ஒன்றிசைவிலோ, முரண் நிலையிலோ பெரிதுபடுத்திக் காட்டியது". (தனிநாயக அடிகள், தமிழில் : பேராசிரியர் க.பூரணச்சந்திரன், நில அமைப்பும் தமிழ்க் கவிதையும், ப.42)

மீனவர்களின் வாழ்வியல் பற்றிய தொழில் முறைகளைக் கீழ்க்கண்ட தேவதேவனின் கவிதை குறிப்பிடுகின்றன.

**வாழ்வுக் கடலில்**

**சாவே சுகமனத் தேர்ந்த**

**பிணங்கள் நடுவே**

**தத்தளிக்கும் ஒருவன்...**

**கைகொள்ளும்**

**பிணங்களைச் சேர்த்துக்**

**கட்டுமரத் தெப்பமாக்கி**

**அவன், முன்பு ஆசுவாசிக்க: போராடக்**

**கிட்டிய**

**உடைந்த கப்பலின்**

**ஒரு துண்டு மரத்தால், சத்தியத்தால்**

**துடுப்புப் போட்டுப்**

**பிணங்களையெல்லாம்**

**கரைகொண்டு சேர்க்கிறான்**

**சேர்த்துக்கொண்டேயிருக்கிறான்**

**(தேவதேவன் கவிதைகள், ப.75)**

கடலில் கிடைக்கக்கூடிய மீன்களைப் பிடித்து, விற்றுக் கிடைக்கும் வருவாயில் வாழ்க்கை நடத்துபவர்கள் மீனவர்கள். அவர்கள், கடலுக்குள் மீன் பிடிக்கச் சென்றால், உயிருடன் மீண்டு வருதல் சந்தேகம் எனத் தெரிந்தும் கடலில் மீன் பிடிக்கச் செல்கின்றனர். இன்பம், துன்பம் எனும் இருவிதமான வாழ்வினைப் பற்றிய தத்துவத்தினை கடல் உள்ளடக்கியுள்ளது. மீனவர்களின் வாழ்க்கைப் போராட்டத்தினை கவிதை வரிகள் குறிப்பிடுகின்றன.

**வேலைக்காரப் பெண் அவள்; அனாதை போல.**

**குடம் தூக்கி வீடுகளுக்குத்**

**தண்ணீர் எடுத்து ஊற்றிக்கொண்டிருப்பாள்**

**கிணற்றடியில் அமர்ந்து**

**பாத்திரம் துலக்கிக்கொண்டிருப்பாள்**

**சாப்பாட்டுப் பாத்திரங்கள் அள்ளிச்**

**சுமந்துகொண்டு செல்வாள் ரோட்டில்**

**இரண்டு கைகளிலும் பைக்கட்டும் அதன்**

**சிறுவர்களும் பற்றி வர**

**அவர்கள் நடையினுக்கு**

**இசைந்து இசைந்தே தான்**

**இம் மென்னடை கற்றிருப்பாள்**

**கண்களில் எப்போதும்**

**காணும் ஒரு ஆழ்கடல் சோகம்**

**(தேவதேவன் கவிதைகள், ப.48)**

ஆழ்கடலின் ஆழத்தினைப் போன்றது, கவிதையில் சுட்டப்பட்டுள்ள அம்மணி என்னும் பெண்ணின் வாழ்க்கையுடன் ஒப்புமைப்படுத்தப்பட்டுள்ளது. நெய்தல் கடற்கரையின் அமைவுகள் துயரம் கொண்டதாக உரிப்பொருள் தேவதேவனின் கவிதை தெளிவுப்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம்.

**கடலின் இடையறாத பெருங்குரல்**

**கேட்டுக் கொண்டேயிருக்கிறது**

**கரையோரம் ஒரு சிறு படகு**

**காத்துக்கொண்டேயிருக்கிறது**

**எங்கே போய்க்கொண்டிருக்கிறார்கள்**

**நம் 'காதலர்கள்' ?**

**(தேவதேவன் கவிதைகள், ப.194)**

கடற்கரையில் மகிழ்ச்சியாக காதலர்கள் அமர்ந்திருப்பதினைக் கண்ட மனைவிக்கு கடற்பயணம் மேற்கொண்டுள்ள கணவனின் நினைவு வருகிறது. தன்னுள்ளே நினைத்து ஏக்கம் கொள்கிறாள்.

“கடல் ஏதோ சொல்லிக்கொண்டேயிருக்கிறது. ஆனால், அது
நம் காதில் விழவில்லை. சுண்டல் சாப்பிட்டுக்கொண்டே
வேடிக்கை பார்க்கிறோம். இரங்கலையும் இரங்கல் நிமித்தத்தையும்”. (வறீதையா கான்ஸ்தந்தின், திணைவெளி - நிலம் சூழலியல் பண்பாடு, ப.195) கடலினுடைய ஆழத்தை மனிதர்களுடைய மன உணர்வுகளோடு ஒப்புமையாக்கப்படுத்தப்பட்டுள்ளது.

கடல், கரை, இரண்டுக்கும் இடையே உள்ள காதலை போல, தலைவனுக்கும் தலைவிக்கும் இடையில் உள்ள அன்பு உருவகப்படுத்தப்பட்டுள்ளது.

**இறங்கினதும் தான் தெரிந்தது**

**'கடலுக்கு எப்போதுமே**

**கரைகள் மீதுதான் காதல்'**

**கோபத்துடன் வெளியேறும் தோணி**

**கடல்**

**வழிமறித்து மல்லுக்கட்டும்**

**இடையைப் பிடித்துக் கெஞ்சும்**

**உதறி மீண்டும்**

**தோணியின் பக்கங்களையும்**

**கரையையும்**

**மாறிமாறித் தொட்டு**

**அலைமோதி அலைமோதிப் புலம்பும்**

**தோணிக்கு**

**ஈரம் சொட்டச் சொட்டக்**

**கரையேறி நிற்கையில் தான் புரியும்**

**உடனே பிணக்கைக் களைந்து**

**இறங்கும் மீண்டும்**

**கடல்**

**அதனை அணைத்தபடி**

**கரைக்கு வந்தே குலவிக்கொண்டிருக்கும்**

**அந்தக் கரையேற்ற வெளியில்**

**தோணியும் கடலுடன் குலவும்.**

**(தேவதேவன் கவிதைகள், ப.112)**

கடலுக்குள் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கும் கடலுக்கும் எப்போதுமே இடைவிடாத நெருக்கமான உறவை ஏற்படுத்துகின்றன. ஒவ்வொரு முறையும் கடலுடன் அவர்கள் நடத்தும் போராட்டத்தில், நன்மை, தீமை இருவகைத் தன்மையையும் ஏற்கின்றனர்.

‘புலம்புதல்’ எனும் ஒழுக்கத்தைச் சுட்டும் முல்லை நிலத்தினுடைய உரிப்பொருள் அமைவு ஆண்,பெண் இருபாலருக்குமிடையே ஏற்படும் ஏக்கத்தை புலப்படுவது போன்று, கவிதையும் கடலுக்கும் அலைகளில் இருந்து தங்களுடைய அன்றாட வாழ்வினை நேரிடும் மீனவர்களுடைய வாழ்வாதாரத்தினை ஒழுக்க வகையுடன் ஒப்புமைப்படுத்தப்பட்டுள்ளன.

கணவன் கடற்கரையில் விட்டு வந்த மனைவியை எண்ணி வருந்துதலும், மீன் பிடிக்கச் சென்ற தலைவனை நினைந்து தலைவி வருந்துதலும் எனும் அமைப்பில் கவிதை அமைந்துள்ளது.

ஆடையை நனைக்காமலேயே

இக் கடலோரம் நடந்து போய்

வந்துவிடலாமென எண்ணினேன்

கடல்தாயின் மணல்மடியில்

சகலரும் குழந்தைகளாமே

எவ்வாறு தொலைந்தேன் நான்?

கடலின் இரைச்சலில் தேடியபடி நடந்தேன்

உனது குரலை

கடலின்  இரைச்சலில் கேட்காமல் போனது

உனது கூப்பிடு குரல்

பாறைகளின் மீது

இந்த அலைகளுக்கென்ன?

ஆத்திரமா? அமைதியின்மையா?

கொண்டாட்டமா? இல்லை

வேறேதேனும்  நோக்கமா?

ஒன்றுமில்லை

மனோவிகாரங்கள்

காற்றில் கரைந்து விடும்போது

தரிசனமாகிறது உயிரின் சிலிர்ப்பு.

பாறைகளின் மீது அலைகள் –

**வாழ்வை நடித்துக்காட்டும்**

**உயிரின் சிலிர்ப்பு**

**(தேவதேவன் கவிதைகள், ப.386)**

கணவனை நினைந்து வருந்தும் மனைவிக்கு கடல் அன்னையைப் போல ஆறுதல் கூறுகின்றது. முல்லைத்திணைக்குரிய இருத்தல் நிமித்தம் என்பது கணவன் உறுதியாக மாலை நேரத்திற்குள் திரும்ப வந்துவிடுவான் என்பதாகும். ஆனால், நெய்தல் நிலத்திற்கு உரிய காத்திருப்பு என்பது கடற்பயணம் மேற்கொண்டுள்ள கணவன் திரும்ப வருவது உறுதியற்ற எனும் நிலையினைக் கூறுகிறது.

**இன்னது, இப்போது என நாம் அறியாதிருக்கையிலும்**

**உணராதிருக்க இயலவில்லை,**

**எப்போதுமுள்ள ஒரு நெருக்கடி நிலை அவசரத்தை:**

**முச்சிறைக்க வீசும்**

**கடலின் இடையறாத இத்திரைகள்**

**ஓர் அதி அவசரச் சமிக்ஞையேதான்**

**தூரத்திலிருக்கையில்**

**மாபெரும் கனவுகளை விதைக்கும்**

**புன்முறுவற் சலனங்களை தொனித்தது இக்கடல்**

**(தேவதேவன் கவிதைகள், ப.586)**

கணவனின் நிலையை எண்ணி மனைவி வருந்துகிறாள். ஆயிரம் கனவுகளோடு நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உயிருடன் அவர் திரும்ப வர வேண்டும் என அவள் நினைக்கின்றாள்.

அறைச்சுவர் நெரிக்கப்

பிதுங்கும்  அவனுக்கு

'பாவம் பாவம்' என

வழிவிடும் வாசல்.

இரு கரையும் நின்று

மறிக்கும் கட்டடங்கள்

'கைதி' யென அவனை

மிரட்டி 'நட!   த்தும்.

அங்கங்கே

'தப்பி' என பல

சந்துகள்  இரங்கும்

கண்டு நுழைந்தால்

அங்கும் இருகரை

அதே போல் அவனை!

இப்படி

'நட!' ந்து!   'நட!  ந்து 'நட!'ந்து

கடற்கரை வந்து அமர்வான்

சுகமாய்

கடலின் மீது மனத்தை விரித்துவிட்டு

அடிவானைக் குறிவைக்க

(தேவதேவன் கவிதைகள், ப.29)

தலைவனை நினைந்து ஏங்கும் தலைவியின் சொல்லாடல்கள் உரைக்கப்பட்டுள்ளன. தலைவியை நினைத்து ஏக்கம் கொண்டு, வருகைக்காக இரங்கிக் கொண்டிருக்கும் தலைவனின் மனக்குமுறல்களாகும்.

**விடியலின்  ஒரு கதிருக்காக**

**காதலின் ஓர் அன்பு முத்தத்திற்காக**

**வாக்குறுதி அளித்துச் சென்றவளின்  வருகைக்காக**

**இரவெல்லாம் உறக்கமற்று விழித்திருக்கும் தனியன்.**

**துயர்ச்சுமையாலேயே களைப்புற்ற தன் தூக்கத்தால்**

**வருகையைத் தவறவிட்டுவிடும் துரதிருஷ்டசாலி**

**(தேவதேவன்கவிதைகள், ப.601)**

கணவனின் வருகைக்காகக் காத்திருக்கும்  இவ்விரவு நல்லதொரு விடியலுக்காக இருக்கட்டும் என மனைவி தனக்குள்ளேயே ஆறுதல் அடைகிறாள். கவிதையின் கட்டமைப்பிற்கேற்ப வாசகரின் மன நிலையின் அடிப்படையில் நவீனக் கவிதைகள் படைக்கப்பட்டுள்ளன என்பதற்கு ஏற்ப தேவதேவனின் கவிதை வரிகள் அமைக்கப்பட்டுள்ளன. முல்லைகுரிய உரிப்பொருளான ‘இருத்தலும்’, குறிஞ்சித்திணைக்குரிய இரவு வேளையும்  கவிதையில் சித்தரிக்கப்பட்டுள்ளன. இதனை, திணை  மயக்கமென்பர்.

**எந்த அற்புதமும் நிகழ்ந்திராத**

**ஒரு வெறுமையை, வலியை**

**பச்சைக் கடல்களாய்ச் சூழ்ந்திருக்கும்**

**பிரமாண்டமான மரங்களெல்லாம்**

**கிளைகளசைத்துச்**

**சமன்செய்ய விழைகின்றன;**

**அவற்றிற்குத் தெரிகிறது**

**(அமுதம் மாத்திரமே வெளிப்பட்டது, ப.77)**

தலைவனின் வரவினை எதிர் நோக்கி காத்திருக்கும் தலைவிக்கு கடற்கரையோடு அமைந்துள்ள இயற்கைச் சார்ந்த படிமங்கள் அனைத்தும் அவளுக்கு மீண்டும் மீண்டும் தலைவனின் நினைவுகளை உணர்த்திக்கொண்டிருக்கின்றன.

**எப்போதும் உன்னுடன் இருப்பேன்**

**(ஆனால் நீ என்னைத் தேடக்கூடாது)**

**நான் இறந்தபிறகு நீ என்ன செய்வாய்?**

**(கேட்கக் கூடாத கேள்வி இது என்று**

**நீ உணரவில்லையா?)**

**மரணத்திலும் நான் உன்னைப் பிரியேன்**

**(ஆனால் சொற்களை நீ நம்பாதே)**

**(தேவதேவன் கவிதைகள், ப.475)**

இவ்வாறாக, இருவரும் காணமுடியாத போது ஏற்படும் தவிப்பையும், அவைச்சார்ந்து நிகழக்கூடிய துன்ப நிலையையும், மனம்சார்ந்த உணர்வு நிலையினையும் இரங்கல் என்னும் உரிப்பொருளால் சுட்டப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது.

## மருதத்திணை

பரத்தையிடம் சென்ற தலைவனை நினைந்து தலைவி வருந்துதலும், அவர்களிடையே நிகழக்கூடிய பிணக்கினை ஊடல் என்னும் மருதத்திணை உரிப்பொருளால் அடையாளப்படுத்துவர்.

என்னை வந்து காணுகின்ற அனைத்து மனிதர்களிலும் ஒருவராய் உன்னைக் கருதவில்லை. எப்பொழுதும், நீ எனக்கு தனித்துவமானவள் தான் என மனைவியிடம் கணவன் உரையாடுகின்றான். நீ என்னிடம் கொண்டுள்ள காதலை விட நான் உன்னிடம் அதிக அன்பு வைத்துள்ளேன். என்னுடைய வேலை நிமித்தமாக உன்னைப் புறக்கணித்து விட்டேன். ஆனால், எத்தனை மனிதர்கள் என்னை வந்து சந்திப்பினும், என் மீது அக்கறை கொண்டவள் நீ மட்டுமே. அன்பே, என் மீது கோபம் கொள்ள வேண்டாம் என கணவன் கோபம் கொண்டுள்ள மனைவியிடம் வேண்டுவது போன்ற அமைவினை,

**அலுவலிலேயே கண்ணாயிருந்த நான்**

**உன்னைக் கண்டும் காணாமலிருந்துவிட்டேன்.**

**வரிசையாய் வந்துகொண்டிருந்த மனிதர்களில்**

**ஒருவராய் - ஆனால்**

**வரிசைவிட்டு விலகி நின்று**

**எல்லோரும் சென்ற பின்**

**பொறுமையும் தனித்துவமுமிக்க**

**இறுதி நபராய்**

**என் முன்னே நீ வந்து நிற்கையில்**

**உன் விழிகளில் சுடர்ந்த காதல்தான்**

**அனைத்தையும் கூறிவிட்டதே !**

**அன்பே,**

**அவ்வளவு நேரமும்**

**என் வாணாள் முழுக்க**

**என்னை,**

**நான் இவ்வுலகில் பணிசெய்யும் அழகை**

**கண்ணிமைக்காது பார்த்துக்கொண்டிருந்த**

**பேரழகுப் பெருந்தெய்வம் நீயோ?**

**எலும்பும் இரத்தமும் சதையுமாய்**

**வந்துபோகும் மனிதர்களிடையே**

**பாதாதிகேசம் காதலினால் மட்டுமே**

**வனையப்பட்டிருந்த நின் உருவம் கண்டேன்.**

**நின்னைவிட அரும்பொருள்,**

**இந் நிகழ்வைவிடப் பேரனுபவம்**

**பெருவாழ்வு, பெரும்பேறு**

**கண்டிலமைதான் கூறிற்று**

**நீ யார் என்று.**

**(பேர்யாழ், பக்.34, 35)**

'பேர்யாழ்' என்னும் கவிதை வரிகள் கணவன், மனைவி இடையே நிகழக்கூடிய ஊடலை வெளிப்படுத்துகின்றன. “புணர்தல் தவிர்த்த ஏனைய பிரிதல், இருத்தல், இரங்கல் ஆகிய மூன்றுணர்வுகளும் உடலளவில் தலைவனைப் பிரிந்து இரங்கும் தலைவியின் உள்ள உணர்வினைக் குறிப்பனவாகும். ஆனால், 'ஊடல்' என்பது

உடலளவில் இருபாலரும் அருகருகே இருக்கும் சூழலில் உருவாவதாகும்". (அருள் ஜெனீபா.A, திணை இலக்கிய கோட்பாடு நோக்கில் கம்பராமாயணம், ப.91) எனும் கூற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

**காதற் சீண்டலில்**
**நெளியும் அழகுப்**
**பெண்ணுடல் போலும்;**

**ஊரும் புழுவின்**
**உடல்மொழி நடம் போலும்;**

**அவன் நெஞ்சைக் கொண்டு சென்றுவிடும்**
**ஒரு மின்னற் கோலம் போலும்**
**ஒளி வீசிய தழும்பு**

**எந்த ஓர் இணையர்**
**அஞ்சியும் பிணங்கியும்**
**கூடிவிட்டதனால் விளைந்த**
**காதல் நாணச்சுவடு?**

**(ஹே,மா! (அதிஉச்சம்), ப.36)**

அழகான உன்னுடைய நடை பல மொழிகளைப் பேசுகின்றன. பார்க்கின்ற அனைவரையும் காதற் கொள்ளச்செய்யும் அழகு தெய்வம் நீ. நான் பார்க்கும் வேளை நிலத்தினை பார்க்கின்றாய். என் மீது என்ன கோபம்? என் மீது உள்ள அச்சத்தினால் அல்லது என்னுடன் ஏற்பட்ட பிணக்கின் காரணமாக நிலம் நோக்குகின்றாயா? எதற்காக

என் மீது கோபமாய் இருக்கிறாய்? எனக் கேட்கிறான். நான் என்ன தவறு செய்தேன்? பேசாமலிருப்பதேன்? எனவும் வினவுகிறான். மனைவியின் கோபத்தினை போக்குவதற்காக, கணவன் அழகிய சொற்களால் அவளை வருணிக்கின்றான்.

**'நான் உன்னை எவ்வளவு காதலிக்கிறேன் தெரியுமா?**

**உலகிலுள்ள எல்லாவற்றையும் விட**

**உன்னையே நான் அதிகம் காதலிக்கிறேன்'**

**'அப்படியானால் உன் பிரக்ஞையில் என்னோடு கூட**

**எல்லாப் பொருள்களும் இருக்கின்றனவே'**

**அவளுக்காய் எல்லாவற்றையும் விட்டுவிட்டு வந்தேன்**

**'நான் உன்னை காதலிப்பது மட்டுமே அறிவேன்'**

**'அப்படியானால், நல்லது, வா'**

**'................................................'**

**'வா. ஏன் அப்படி நின்றுவிட்டாய்?**

**இல்லை. இப்பொழுது**

**என்னால் உன்பின் வர முடியாது'**

**'ஏன்? அதற்குள் என்னாயிற்று உனக்கு?'**

**இப்பொழுது**

**காதல் மட்டுமே என்னிடமுள்ளது.**

**வெறும் காதல்'**

**(தேவதேவன் கவிதைகள், ப.224)**

பரத்தையிடம் சென்றதனை அறிந்ததால் ஏற்பட்ட தலைவியின் பிணக்கினைப் போக்கும் விதமாகத் தலைவன் தான் செய்த தவறை மன்னிக்கவும் வேண்டுகிறான். காதல் மொழிகளால் அவளை வருணித்த தலைவன், அவளைத் தன்னிடம் பேசுமாறு கெஞ்சிக் கேட்கின்றான். இருப்பினும், அவளுக்கு ஏனோ அவனிடமுள்ள கோபம் தணியவில்லை. இவ்வளவு, உறுதிமொழிகளை அளித்தும் உனக்கு என் மீது இரக்கம் வரவில்லையா? என அவளிடம் வேண்டுகிறான்.

தலைவன் அழகான வருணனைகளால் புகழ்ந்தும் அவளுக்கு கோபம் குறையவில்லை. அக்கோபமானது இரவு இருவரும் உறங்குகின்ற வேளையிலும் தொடருகின்றது.

**படுக்கையில் வந்து சயனித்திருந்த**

**நிலவுக் கீற்றைத்**

**தொந்தரவு செய்ய மனமின்றி**

**அதற்கு இடம்விட்டுப் படுத்துக்கொண்டான் அவன்.**

**அது புன்னகைத்தது**

**அவன் காதல்மடம்**

**அதற்கு ரொம்பப் பிடித்திருந்தது.**

**நிலாக் கீற்றுடன் துயின்றுகொண்டிருந்த**

**அவனைத் தொந்தரவு செய்ய மனமின்றி**

**தள்ளிப்படுத்துக் கொண்டாள் அவன் துணைவி.**

**அது புன்னகைத்தது**

**அவள் காதல் அதற்கு மிகவும் பிடித்திருந்தது.**

**அவர்களைத் தொந்தரவு செய்ய வேண்டாமென்று**

**நிலா தன் கீற்றை இழுத்துக்கொண்டது.**

**ஆனால் அவர்களைப் போர்த்திய**

**தனது நிறை ஒளியை மட்டும் இழுத்துக்கொள்ளாது.**

**அந்த நிலாவைப் பார்த்து புன்னகைத்தது**

**வீட்டில் மூலையிலே ஒரு பேர்யாழ்.**

**அதன் காதல் அதற்கு மிகவும் பிடித்திருந்தது**

**(பேர்யாழ், பக்.16,17)**

தலைவனுக்கு அறியாமல் சிரிப்பு வருகின்றது. தன் மீது கொண்டுள்ள அன்பின் வெளிப்பாடே அவள் கோபமுற்றிருக்கிறாள் என நினைக்கின்றான். அவளுடைய கோபத்தைக் கூட இரசிக்கின்றான். இருவரும் வானில் தோன்றிய நிலவை இரசிக்கின்றனர். இவ்வாறாக, இருவருக்குள் அமையும் உரையாடல்கள் மருதத்திணையின் உரிப்பொருளை மையமிட்டு அமைந்துள்ளன.

சங்க கால முதற்கொண்டு ஒருவரிடம் கூற வேண்டிய கருத்தை தெரிவிக்க மற்றொருவரிடம் அவருடைய செய்தியை கொண்டு சேர்ப்பர். இதை, தூது என்று சான்றோர் கூறுவர். தலைவியினுடைய ஊடலைப் போக்குவதற்கு அடுத்தக் கட்ட நடவடிக்கையை எடுக்கத் துணிகிறான். மனிதர்களையும், இயற்கைப் பொருள்களையும் அவளிடம் தூது அனுப்பினேன். ஆனால், அதற்கு எந்த பதிலும் வரவில்லை. எனவே, இனி அவனே நேரிடையாக சந்திக்கத் துணிகிறான்.

**நிலவை**

**தென்றலை**

**மேகத்தை**

**நாரையை**

**நதியை**

**கிளியை**

**புறாவை - இன்று,**

**எழுத்துக்குமேல் எழுத்து**

**எல்லாம் தூதுவிட்டுப்**

**பார்த்தாச்சு!**

**இனி**

**நானே வரப்போகிறேன்**

**நேரே!**

**(என் கவிதைகளையெல்லாம்**

**போட்டுவிட்டு)**

**(தேவதேவன் கவிதைகள், ப.54)**

இவ்வாறு, தலைவனின் மனவருத்தத்தினை நிலா, தென்றல், மேகம், நாரை, நதி, கிளி, புறா ஆகியவற்றிடம் புலம்புகிறான். தன்னுடைய வாழ்வினில் முழுதுமாக தலைவிக்கு அர்ப்பணித்ததினை கவிதை வரிகள் குறிப்பிடுகின்றன.

**படுக்கச் சென்றேன்**

**என்னைப் பார்த்ததும்**

**எனக்கு நன்றாய் இடம்போட்டு**

**ஓரமாய் நாணிக் கோணி ஒரு தினுசாய்ப்**

புன்னகை ஒன்றையும் காட்டியபடி

என் பத்தினி -

புடவை தேர்ந்தெடுக்கிற

பெண்களுக்கினையான மோகத்துடன்

நான் வாங்கி வைத்திருக்கும்

எனது ஷோலாப்பூர் போர்வை -

கிடக்கிறாள் ஆர்வமாய்.

படுத்துக்கொண்டேன் பக்கத்தில்.

அவள் மொழி கேட்கவே

ஆவலாயிருந்தேன்

அவளோ பிடிவாதமாய்

பேசாதேயிருந்தாள்

ம்ஹூம்ஹூம்

வாடை விறைக்காய் பொழுதினிலே

வரைவதில்லை நான் அவளை,

பக்கம் என்னை உரசிக்கொண்டு

பார்க்கிறாள் பாவமாய்...

உடனே தான்

இரக்கம் கொண்டு நான் அவளை

ஒரு கையால்

மெல்லத் தழுவிக்கொண்டேன்

சொற்கடந்த

**காதல் தொட்ட உறக்கத்தில்**

**கலந்து மறைந்தோம் அவ்விரவில்**

**(தேவதேவன் கவிதைகள், ப.88)**

இருவரும் பேசாமல் இரவுப் பொழுதினைக் கழிக்கின்றனர். அவனுடைய சொற்களால் ஈர்க்கப்பட்ட அவள் நிம்மதி பெருமூச்சு விட்டு, கோபத்தினை தளர்த்திக் கொள்கிறாள். ஊடலுக்குப் பிறகு வருகின்ற அன்பை மையமிட்டு கவிதை வரிகள் அமைந்துள்ளன. கவிஞர் தேவதேவனுடைய கவிதை வரிகள் ஊடலில் தோன்றுகின்ற உரையாடல்கள் இருவருடைய மன உணர்வுகளை வெளிப்படுத்துகின்றன.

கவிதையில் 'மோகம்' குறிஞ்சிக்குரிய ஒழுக்கத்தையும், கணவன், மனைவிக்கிடையே ஏற்பட்ட பிணக்கை மருத நில ஒழுக்கமென ஒருங்கே இணைக்கப்பட்டுள்ளன. இருவேறுத் திணை அமைப்புக்கள் உரிப்பொருள் சார்ந்த ஒழுக்க வகைப்பாடுகள் கவிதைக்குள் கட்டமைக்கப்பட்டுள்ளன.

## பாலைத்திணை

பாலைக்குரிய உரிப்பொருள் பிரிதலும் பிரிதல் நிமித்தமுமாகும். இப்பிரிவு, தலைவன் பொருள், கல்வி, போர் ஆகியவை தலைவியை விடுத்து பிரியக் கூடிய சூழலை உணர்த்துகின்றது. "அகம் புறம் பாகுபாட்டுடன் தொடர்புடையதும் திணையுள் மிகுந்த முக்கியத்துவமுடையதும் 'பாலை' எனலாம். பாலை என்ற சொல்லே 'பிரிதல்' என்ற பொருளில் அமைந்ததாகும். துன்பமும் அதனைப் போக்கிடும் முயற்சியும் பற்றியது பாலைத் திணை". (கணபதி இளங்கோ, பண்டைத் தமிழர் வாழ்வியல், ப.12) ஆகும்.

தலைவனும், தலைவியும் பிரிவை சந்திக்கும் சூழல்கள் கவிதையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. சங்கப்பாடல்களில் குறிப்பிடும் காதலர்களுடைய மனநிலையை பதிவு செய்யும் விதமாக தற்கால கவிதையிலும் பிரிவு நிலை அமைந்துள்ளதை,

**எழுந்து விலக மனமில்லாமல்**

**அப்படி ஓர் இருப்பு.**

**ஒளிரும் ஒரு காதல் நிலை.**

**(நுனிக்கொம்பர் நாரைகள், ப.48)**

கவிதையினுடைய வரிகள் பிரிவு நிகழப் போவதை முன்னமே குறிப்பிட்டுள்ளன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் திணை மக்களிடையே காணப்படும் ஒழுக்கங்களில் இல்லாத பிரிவு நிலைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்ட நீண்டதொரு துன்பத்தினுடைய உரிப்பொருளினைக் கொண்டது பாலை நிலம். "கணவனின் பயணம் குறித்த மனைவியின் கவலை பாலைக்குரிய ஒழுக்க வடிவமாகும்". (மாதையன்.பெ, அகத்திணைக் கோட்பாடும் சங்க அகக்கவிதை மரபும், ப.56) என பெ.மாதையனும் பாலைக்குரிய ஒழுக்கத்தைச் சுட்டுகிறார்.

தலைவன் பொருள் ஈட்டச்செல்வதினால், ஏற்படும் பிரிவினை நினைத்து தலைவி வருத்தமடைகிறாள். தன்னை விட்டுப்பிரியும் தலைவனின் பிரிவு என்பது புயல் தாக்குவது போன்றதாகும். இதனை,

**உவப்புக் கூடி**

**உள்ளப் பிரிகையில்**

**உற்பவித்ததோர்**

**வெற்றிடத்திற் குடிகொண்டிருந்தது**

**அந்த இரகசியம்.**

**(நுனிக்கொம்பர் நாரைகள், ப.87)**

கவிதை வரிகள் இன்பத்திற்குப் பிறகு பிரிவினால் ஏற்படும் துன்பத்தை கூறுகின்றன. பாலை நிலத்தில் வாழும் குடும்ப உருவாக்கத்திற்கு "பொருளீட்டல், வாணிபம், நகர் மயமாக்கம், உற்பத்தி பெருக்கம், பொருள் தேடிய இடப் பெயர்ச்சி முயற்சிக்கு 'பிரிவு' எனப்படும் பாலைத் திணையே அடிப்படையாகும்". (கணபதி இளங்கோ, பண்டைத் தமிழர் வாழ்வியல், ப.13) அமைகின்றன.

**நாகரிகங்கள் கண்ட நாடுகளின்**

**ஆதிக் கவித் தொகைகளிலெல்லாம்**

**பாடுபொருளாய் இருந்தது**

**ஆண் பெண் இணையர்**

**காதல் வாழ்வு. அதில்**

**புகழ்பெற்றிருந்தது**

**அவர்கள் சந்திப்பின் இன்பமும்**

**பிரிவின் துயரமும்.**

**காதலிப்பதற்கு**

**ஒருவர் தேவையேயில்லாமல்**

**வாழ்ந்து வரும்**

**இயற்கையை அறிந்துகொண்ட பிறகோ**

**காதலின் பொருள்**

**இப் பேரண்டமளவுக்குப்**

**பெரிதாகி விட்டது?**

**கூடவே**

**சந்திப்பின் இன்பமும்**

**பிரிவின் துயரமும் ?**

**(நுனிக்கொம்பர் நாரைகள், ப.66)**

ஆண், பெண் இருபாலருக்கும் இடையில் தோன்றும் காதல் உணர்வுகள் பெறக்கூடிய இன்ப நிகழ்வுகள் அனைத்தும் பிரிவு ஏற்படும் நிலையிலும் அத்தகையதொரு மனப்பான்மையைப் பெறுகின்றன. பிரிவு என்பது அனைவருக்கும் உரியது. மனித நாகரிகம் தோன்றிய காலம் முதல் ஆண், பெண் இருபாலருக்குமிடையே ஏற்படும் காதல் இன்பம், துன்பம் எனும் இரு அமைவுகளைக் கொண்டிருந்தன. இன்பம் ஒன்றிருப்பின் துன்பமும் இருக்கும் எனத் தலைவனின் பிரிவினைப் பற்றி தலைவிக்கு கவிதையில் எடுத்துரைக்கின்றன.

பண்டையத் தமிழர்களுடைய வாழ்வியலில் இருவருடைய மன உணர்வுகளை வெளிப்படுத்தும் விதமாக, குறிஞ்சி நில மக்களுடைய காதல் வாழ்வு முதன்மைப்படுத்தப்பட்டன. அதன்பிறகு, அவர்களுடைய வாழ்வில் ஏற்பட்ட பிரிவினைகளும், அவற்றுக்குட்பட்ட ஒழுக்கங்களும் பிறவகைத் திணைகளுக்கு உரித்தானதாக அமைந்தன. இந்நிலையில், தேவதேவனுடைய கவிதையில் குறிஞ்சி நில மக்கள் மேற்கொண்ட காதல் வாழ்வும், பாலை நில மக்களுடைய வாழ்வில் நேரிட்ட பிரிவினை என இருவகைத் திணைகளுடைய உரிப்பொருள்களும் ஒருங்கே அமைந்துள்ள விதத்தை அறிய முடிகின்றது.

**கலந்த பின்னும் உவப்புடனே பிரிந்து**

**ஆடும் காதல் விளையாடல்களில்**

**காணுந்தோறும் காணுந்தோறும்**

**கண்டடையும் இன்பங்கள் தாம் எத்தனை கோடி!**

**யாவும் உறவின் பின்னல்களாய்ச் சமைந்திருக்க**

**உறவின் ஒவ்வொரு சந்திப்பிலும் நீ அமர்ந்து**

**காதலர் குறியிடம் போல் கனன்று கொண்டிருக்கிறாய்.**

**நீயும் நானுமாய் வாழும் இரகசியச் சோலையெங்கும்**

**வண்ணப் பறவைகளின் வாத்திய இசைகளை நாளும்.**

**ஆனால்**

**உறவுகளின் ஒவ்வொரு பிளவுகளின்**

**இரத்தக் கசிவெங்கும்**

**துடிதுடிக்கும் அகங்களும், துடிப்பற்று**

**மடிந்து கிடக்கும் அகங்குளுமாய்**

**ஒரு போர்க்களம்.**

**மானுடப் பரப்பெங்கும்**

**ஒலிக்கும் உயிரற்ற இயந்திரங்களின்**

**பேரோசை நடுவிலும்**

**புன்னகைக்கும் உன் கருணையின்**

**பேரிசை.** **(பேர்யாழ், ப.22)**

என்ற வரிகளில் இருவரும் ஒன்றிணைந்து இனிமையாக வாழ்ந்தோம். அதற்கு ஈடு இணையில்லை. நாம் ஒன்றிணைந்து வாழ்ந்த இன்பமான காலங்களை நினைத்து, உன் வருகைக்காகக் காத்திருப்பேன். நாம் பழகிய காலக்கட்டங்களில் சுற்றித்திரிந்த இடங்கள் எல்லாம் நம்முடைய அன்பினைக் கூறுகின்றன. இயற்கைச் சார்ந்த சூழலோடு

வாழ்ந்தோம். ஆனால், பூத்துக்குலுங்கிய சோலை வனமாக இருந்த இடம் தற்போது வறண்ட பூமியாகக் காட்சியளிக்கின்றன. தலைவனின் பிரிவினை நினைத்துத் தலைவி வருத்தமுடைகிறாள். ஆனால், நீயோ! பொருள் தேடுவதையே குறிக்கோளாகக் கொண்டு அவற்றிலிருந்து பின் மாறாமல், என்னிடமிருந்து விலகினாய் என பொருளாதாரத்தேவைக்காக தலைவன் பிரிந்து சென்றதை நினைந்து தலைவி புலம்புவதாக கவிதையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**ஒவ்வொரு இலையினின்றும்**

**நழுவி நழுவி**

**மற்றொரு இலை வந்தடைந்து கொண்டிருந்த**

**மழைத்துளியை**

**பிரியவிட விரும்பாத வேட்கையுடன்**

**பொத்திக் கொள்ள**

**உறுதி கொண்ட**

**ஓர் இறுதி இலையாய்**

**நின்று கொண்டிருந்தான் அவன்.**

**வேண்டாம் நீயும் விட்டுவிடு**

**பிரியவிட விரும்பாத வேட்கையோ**

**பொத்தி வைத்துக்கொள்ளத் துடிக்கும் தாபமோ**

**வேண்டாம். (பேர்யாழ், ப.38)**

தன்னை விட்டு நீங்கிய தலைவி எப்படி இருப்பாள் என்பதனை எண்ணியும், தலைவியை விட்டுச் செல்ல மனமில்லாமலும், தலைவன் புலம்புவதினைப் போன்ற

அமைவினை கவிதை வரிகள் உணர்த்துகின்றன. அவன் பின் செல்கின்ற தலைவியை வரவேண்டாம் எனக் கூறுகின்றான். என்னுடைய இப்பயணம் நம்முடைய இனி வரப்போகும் இன்பமயமான வாழ்விற்கு ஆதாரமாக விளங்கக்கூடியது. எனவே, வெகு விரைவிலேயே வந்து விடுவேன். நீ துன்பப்படுகிறாய் என நான் போகக்கூடிய பயணத்தை ஒத்தி வைக்க இயலாது. அதைப்பற்றி சிந்திக்க வேண்டாம்.

பிரிவு என்பது தாற்காலிகமானது தான் என பிரிவின் முக்கியத்துவம் பற்றிக் கூறுகின்றான். பிரிவைச் சந்திக்கும் தலைவன், தலைவியினுடைய கருத்தாடல்கள் 'பேர்யாழ்' கவிதைத் தொகுப்பில் அமைந்த கவிதை வரிகள் பாலைத்திணையின் தன்மையை எடுத்துரைக்கின்றன.

திரும்ப வருவேன், பிரிய மாட்டேன் என தலைவன் ஆறுதல் கூறிச் சென்று விட்டான். என்றைக்கும் என்னை விட்டுச் செல்ல மாட்டேன் என்று சபதம் உரைத்தவன். 'பிரியா விடை கொடுத்துப்போனான்', பிரிவு என்னும் சொல்லைக் கேட்டாலே அக்கணமே இறந்து விடுவேன் எனக் காதலிக்கும் போது ஆசை வார்த்தைகளைக் கூறியவன். திருமணம் முடிந்த பின்னர் அவ்வார்த்தைகள் அனைத்தும் பொய்யாகியதோ எனும் எண்ணம் தோன்றுகின்றன. நான் வருத்தப்படுவேன் எனத் தெரிந்தும் பிரிந்து விட்டான் என தலைவனின் பிரிவினை எண்ணி தலைவி பலவிதமான மனக்குமுறல்களுக்கு உள்ளாகின்றாள்.

**காகிதத்தில் எழுதப்பட்டிருந்த பென்சில் வரிகளை**

**அழித்துக் கொண்டிருந்தான் அவன்**

**கரியோடு**

**ஒருயிராய்க் கலந்த**

**ரப்பர் துகள்கள்,**

**காகித வெளியோடும்**

**கரையாத பென்சிலோடும்**

**ரப்பர் துண்டோடும்**

**பிரியா  விடை பெற்றுக் கொண்டிருக்கும் போது**

**மெதுவாக,**

**மெதுவாக,**

**அவசரப் படாதே**

**அவற்றை அகற்றுவதற்கு;**

**உன் கவிதைகளை**

**தங்கள் உடம்பிலும் உயிரிலும்**

**தாங்கி  நின்றவை அவை!**

**(நுனிக்கொம்பர் நாரைகள், பக்.66, 67)**

என்னும் கவிதை வரிகளில் பாலைத்திணையின் பிரிவுச் சார்ந்த கருத்தாக்கங்கள் விவரிக்கின்றன.

**பிரியமனமில்லாத மலரொன்று**

**மழைத் தாரையோடு போகிறது**

**கூப்பாடு போட்டபடி.**

**(நுனிக்கொம்பர் நாரைகள், ப.73)**

தலைவி பிரியா விடை அளிக்கின்றாள். அவன் சென்ற பாதையில் நின்று கண்ணீர் மல்க நிற்கின்றாள். ஒவ்வொரு நாளும் தலைவனின் வரவினை எதிர்நோக்கி காத்திருக்கின்றாள். பாலைவனத்தினுடைய நிலப்பாங்கினை பெண்ணினுடைய மனநிலைக்கு ஏற்றவாறு உவமைப்படுத்தப்படுகின்றன. பிரிந்து சென்ற தலைவனை நினைந்து அவள் புலம்புகிறாள்.

**பாவி, என் நெஞ்சப் பாலைவனமும்**

**பதைத்திட அழுது நின்றேன்**

**மார்புறத் தழுவுகையிலே**

**உந்தன் மாண்புறு தனங்கள் கண்டு.**

**அன்பே, என் ஆரமுதே**

**தகிக்கும் நம் இதயங்களைத்**

**தாங்கும் பெருந்தனமாய்**

**பரிந்து வந்து நிற்கும் அந்தப் பேர்யாழை**

**மார்புறத் தழுவி எடுத்து மீட்டு.**

**மறைந்து கிடக்கும் பேரிசையை அது மீட்கட்டும்.**

**(பேர்யாழ், ப.14)**

நான் வேண்டிக்கேட்டும் என்னை விட்டு நீங்கிச் சென்று விட்டாய். நீரற்று வறட்சியுற்று காணப்படுகின்ற பாலை நிலம் போல என் வாழ்வினிலும் துன்பநிலையினை ஏற்படுத்தி விட்டாய். போக வேண்டாம் எனக்கூறியும் சென்றுவிட்டாய். நாம் இன்பமாக வாழ்க்கையைத் தொடங்கிய போது, இன்ப உணர்வுகளையும், மகிழ்ச்சித் தருணங்களையும் அளித்தாயோ அவற்றையெல்லாம் ஒட்டுமொத்தமாக என்னிடமிருந்து பறித்து விட்டாய். ஒன்றாக இருந்தபோது என்னுடைய அகம் பெற்ற மகிழ்ச்சியை, தற்போது துக்கப்படுவது நீ அறிவாயா? என தலைவியின் நெஞ்சக்குமுறலை தேவதேவனின் கவிதை வரிகள் எடுத்தாளுகின்றன.

**வேண்டாம் காதல,**

**காதலின் சின்னமாய்**

**நீ தரும் வைரமோதிரம்!**

**அது நம் பிரிவைச் சுட்டுகிறது**

**ஆகவே அது ஒரு பொய்**

**அதன் ஒளியில்**
**மறைகிறது அதன் பொருண்மை என்னும்**
**அதன் பொருண்மதிப்பில்**
**ஒளி மறைந்து**
**பேரழிவின்**
**கொலைக் கருவி நெடியே அடிக்கிறது**

**வேண்டாம், காதல,**
**வேண்டாம்! வேண்டாம்!**

**(தேவதேவன் கவிதைகள், ப.803)**

தன்னுடைய (தலைவன்) நினைவாக கையில் அணிந்திருக்கும் மோதிரத்தை தலைவியிடம் கொடுக்கின்றான். அவற்றை, அவள் வாங்க மறுக்கிறாள். அம்மோதிரத்தினால் எனக்கு (தலைவி) மதிப்பு இல்லை. நீ (தலைவன்) என்னுடன் இருப்பதே இல்லற வாழ்வினுடைய அறநெறியென உரைக்கின்றாள். பிரிவின் முன், புணர்ந்து பின் பிரிதல், உவப்புடன் பிரிதல், பிரிய மனமில்லாமல் பிரிதல், பிரியா விடை பெறுதல், பிரிந்ததினை நினைந்து வருந்துதல், வரவினை எதிர்நோக்கி காத்திருத்தல் என பாலைக்குரிய உரிப்பொருளான பிரிவின் வகைப்பாடுகளை நவீன கவிதைக் கூறுகளிலும் காணக்கூடியவைகளாக அமைகின்றன.

## தொகுப்புரை

முதல், கரு, உரி மூன்றனுள் உரிப்பொருளானது மனித வாழ்வியலுடனும், வாழ்வினில் அறநெறியினைப் போற்றும் விதமாகவும் அமைகின்றன. தலைவன், தலைவி இடையே நிகழக்கூடிய அக உணர்வுகளை வெளிப்படுத்தும் ஒழுக்கங்கள் மனித மனங்களில் வெளிப்படும் மனக்குமுறல்களை எடுத்தியம்பும் கருவியாக விளங்குகின்றன. நவீனகவிதைகளிலும் ஐந்திணைகளுக்கும் உரித்தான உரிப்பொருள் பற்றிய தனித்தன்மைகளை தேவதேவனின் கவிதைகள் எடுத்துரைக்கின்றன.

பழந்தமிழர்கள் போற்றிய இல்லற வாழ்வியலுடைய மரபாக்கங்கள் என்பது, நவீனகாலப் படைப்புக்களில் அவ்வொழுக்கமானது சுற்றுப்புறச் சூழலுடன் மனிதர்களுக்கு வேண்டிய உறவு நிலைகளையும், அவர்கள், அவற்றைப் போற்றிப் பாது காக்க வேண்டிய கடமைகளையும் எடுத்தியம்பும் ஒழுக்கமாகவும் எடுத்துரைக்கின்றார். குறிப்பாக, தேவதேவனுடைய கவிதைகளில் மனிதர்களுக்குரிய பண்பு நலன்களை எடுத்தியம்பும் விதமான கவிதைகளும், ஒரு திணைக்குரிய ஒழுக்கவகை மட்டுமல்லாது, இருவேறுத்திணைகளுக்குரிய ஒழுக்கங்களும் கவிஞர் தேவதேவன் கவிதைகளில் கட்டமைக்கப்பட்டுள்ளன.

இவ்வகையான கவிதைப் படைப்புக்கள் இனிவரும் காலங்களிலும், புதிய வகைத் திணை வகைப்பாடுகளையும், ஒழுக்கங்களையும் கொண்ட கோட்பாடுகளை உருவாக்கும் திறனாய்வுக் கொள்கைகளின் களங்களாக அமைகின்றன.

# முடிவுரை

# முடிவுரை

சங்க இலக்கியப் பாடல்களில் அமையப்பெறும் முப்பொருள் பாகுபாடுகள் இடம், காலம், இயற்கை, மனித உணர்வுகள் இலக்கியத்திற்கும் இயற்கைக்கும் உள்ள உறவுகளை வெளிப்படுத்துவதில் தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களுக்குரிய சிறப்பம்சங்களாக விளங்குகின்றன. இவ்வகையான வகைமையை கொள்கையாக வகுத்தவர் தொல்காப்பியர்.

இடம், காலம், நேரம் இவை மூன்றும் மனித உணர்வுகளோடு, இயற்கையினுடனும் இணைத்துக்காட்டும் தன்மையை பழங்கால இலக்கியம் முதல் நவீனகால இலக்கியங்கள் வரையிலான படைப்புக்களில் பதிவுசெய்துள்ளமையைக்காணலாம். காலப்பகுப்பாய்வுகளை மட்டுமல்லாது மனித வாழ்வியல் நெறிகளையும் திணைக்கோட்பாடு எடுத்துரைக்கின்றது.

முதல், கரு, உரி ஆகிய முப்பெரும் பாகுபாடுகள் அகத்திணை உருவாக்கத்திற்கு காரணமாக விளங்குகின்றன. இம்மூன்றும் மனித வாழ்வியல் முறைகளோடு இணைந்துக் காணப்படுகின்றன.

அகப்புற இணைவுகளைத் திணை உள்ளடக்கியுள்ளது. தலைவன், தலைவியினுடைய இல்லற வாழ்வில் நேரிடும் சூழலமைவுகளை ஐந்திணைப் பகுப்புகள் குறிப்பிடுகின்றன. தேவையான தொழில் நுட்ப வளர்ச்சிகளும், ஒரு இடத்திலிருந்து இன்னொரு பகுதிக்கு செல்வதற்கான போக்குவரத்து வசதிகளும் இல்லாதக் காலக்கட்டத்தில், தங்களுக்குள்ளேயே ஏற்படுத்திக் கொண்ட பண்பாட்டு எச்சங்களை ஐந்திணைக் கட்டமைப்புகள் சுட்டுகின்றன.

இயற்கையின் எண்ணிலடங்காத நன்மைகளை பழங்கால மக்கள் அறிந்திருந்தனர். நிலம், பொழுது இரண்டின் தேவையினை உணர்ந்துக்கொண்ட அம்மக்கள் இயற்கையை தங்களுடைய வாழ்க்கையின் ஒரு பகுதியாகவே நினைந்து வாழ்ந்துள்ளனர் என்பதனை இலக்கண, இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

இயற்கையைப் பற்றிய கருத்தாடல்களும், நுட்பங்களும், யதார்த்தங்களும், விமர்சனப்போக்குகளும் தேவதேவனின் கவிதைகளில் வெளிப்படும் அனுபவத்தளங்களாக வெளிப்படுகின்றன. இவ்வனுபவக் கொள்கைகளை நவீன கவிதைகளிலும் காண முடிகின்றன.

இயற்கையின் மீதான கவிஞர்களுடைய அக்கறையும், அன்பும், அரவணைப்பும் அவதானிக்க முடியாத ஒன்றாக உள்ளது. அவ்வாறான, இயற்கையின் எழிலார்ந்த தன்மையினையும், மனிதர்களுக்கு எடுத்துரைக்க வேண்டிய வாழ்வியல் தத்துவங்களையும் கவிதையின் ஊடாக கவிஞர் தேவதேவன் விளக்கியுள்ளார்.

சங்க மரபுகளில் எடுத்தாளும் காதல் உணர்வை தேதேவனின் கவிதைகளில் வெளிப்படும் போது புதிய வகையான பரிணாமக் கொள்கையை உணர்த்துகின்றன. மேலும், இயற்கையினுடைய பரிணாம மாற்றங்கள் சுற்றுப்புற அமைப்பு முறையில் மாறுதல்களை ஏற்படுத்துகின்றன. அம்மாற்றங்கள், சூழலியல் பற்றிய ஆய்வு பெருகிவரும் நவீனயுகத்தில் திணையையும் சூழலியலோடு இணைத்துக்காணும் நோக்கமும் வளர்ந்து வருவதை தெளிவுபடுத்துகின்றன.

திணை விரிவாக்கங்கள் சுற்றுச்சூழலியலோடு மட்டுமல்லாமல், பெண்ணியம், அரசியல், பொருளாதாரம், மெய்யியல் ஆகிய துறைகளோடும் ஒப்புமைப்படுத்தப்படுகின்றன. இவை, புதிய வகையான திணைக்கொள்கைகளை அறிமுகப்படுத்துகின்றன. இவ்வாறு, தமிழர்களுக்கே உரிய பண்பாட்டுத் தளத்தோடு திணை விளங்குகின்றன. இதற்கு இலக்கண நூற்களும், சங்க இலக்கியங்களும் சான்றாகத் திகழ்கின்றன.

## மேலாய்வுக் களங்கள்

1. தேவதேவன் கவிதைகள் – புறத்திணை திறனாய்வு
2. தேவதேவன் கவிதைகளில் வெளிப்படும் எடுத்துரைப்பியல்
3. தேவதேவன் கவிதைகளில் திணை மயக்கம்
4. தேவதேவன் கவிதைகளில் சமூகவியல் திறனாய்வு
5. தமிழ் – மலையாளக் கவிதைகளில் திணைக்கோட்பாடு
6. தேவதேவனுடைய கவிதைகள் – சங்க இலக்கியம் ஒப்பீடு

# துணைநூற்பட்டியல்

# <u>துணைநூற்பட்டியல்</u>

## முதன்மைச் சான்றுகள்


1. தேவதேவன் - அமுதம் மாத்திரமே வெளிப்பட்டது, பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட், சென்னை. முதல் பதிப்பு : நவம்பர், 2016.

2. தேவதேவன் - தேவதேவன் கவிதைகள், தமிழினி, சென்னை-14. முதல் பதிப்பு: நவம்பர், 2005.

3. தேவதேவன் - நுனிக்கொம்பர் நாரைகள், NCBH, சென்னை -600 098. முதல் பதிப்பு: நவம்பர், 2016.

4. தேவதேவன் - பள்ளத்திலுள்ள வீடு, NCBH, சென்னை - 600 098. முதல் பதிப்பு : ஜீலை, 2013.

5. தேவதேவன் - பேர்யாழ், NCBH, சென்னை -600 098. முதல் பதிப்பு : ஜீலை, 2014

6. தேவதேவன் - மார்கழி, மருதம் வெளியீடு, நெய்வேலி-607 802. முதல் பதிப்பு : டிசம்பர், 2008.

7. தேவதேவன் - மெய்வழிச்சாலை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை-600 098.

முதல் பதிப்பு : மே, 2012.

8. தேவதேவன் - ஹே,மா! (அதி உச்சம்),
NCBH, சென்னை - 600 098.
முதல் பதிப்பு : செப்டம்பர், 2014.

## துணைமை ஆதாரங்கள்

1. ஆனந்த் - கவிதை என்னும் வாள்வீச்சு,
காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை,
நாகர்கோவில் - 629 001.
முதல் பதிப்பு : 2009.

2. இந்து.இரா - ஐவகை நிலங்களில் பொறியியல் செய்திகள்,
தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
முதற்பதிப்பு : ஏப்ரல், 2017.

3. இராசமாணிக்கனார்.மா - கலித்தொகை, பூம்புகார் பதிப்பகம்,
127, (ப.எண்:63), பிரகாசம் சாலை (பிராட்வே),
சென்னை – 600 108.
முதற் பதிப்பு : ஆகஸ்ட், 2011.

4. இராமசுப்பிரமணியன்.வ.த - நம்பியகப்பொருள் (விரிவுரையுடன்),
முல்லை நிலையம், சென்னை-600 017.
மறுபதிப்பு : 2008.

5. இளங்குமரனார்.இரா முதுமுனைவர் -
மாந்தர் வாழ்வும் இறையுணர்வும்,
இளந்தமிழ்ப் பதிப்பகம், 2,
பிச்சையம்மாள் நகர், காசாமலை,

திருச்சிராப்பள்ளி 23.
முதற்பதிப்பு : கி.பி.2017.

6. இளம்பூரணர் - தொல்காப்பியம் பொருளதிகாரம் (அகத்திணையியல் – புறத்திணையியல்), திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், 154, டி.டி.கே.சாலை, சென்னை – 600 018. மறுபதிப்பு – ஆகஸ்ட், 1997

7. எழில் வசந்தன் - மருதத்திணைக் குறியீடுகள், காவ்யா, சென்னை-600 024. முதல் பதிப்பு : நவம்பர், 2010.

8. ஐங்குறுநூறு(2) - NCBH, சென்னை - 600 098. மூன்றாம் பதிப்பு : செப்டம்பர், 2015.

9. கார்த்திகேசு சிவத்தம்பி - பண்டைத்தமிழ்ச்சமூகம், - வரலாற்றுப் புரிதலை நோக்கி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41- பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 600 098. இரண்டாம் பதிப்பு : அக்டோபர், 2017.

10. குளத்தூரான்.க முனைவர் - சுற்றுச்சூழலும் அழகியலும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்; 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 600 098. முதல் பதிப்பு : ஜீலை, 2018.

11. சசிவல்லி.வி.சி டாக்டர் - பண்டைத்தமிழர் தொழில்கள்,
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,
டி.டி.டி.ஐ அஞ்சல், தரமணி,
சென்னை – 600 113.
முதல் பதிப்பு : நவம்பர், 1989.

12. சசிவல்லி.வி.சி முனைவர் - முல்லை,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சி.ஐ.டி. வளாகம், தரமணி,
சென்னை – 600 113.
முதல் பதிப்பு : 1998.

13. சண்முக செல்வகணபதி முனைவர் -ஒப்பிலக்கிய நோக்கில் தமிழிலக்கியம்,
இராஜா பப்ளிகேஷன்ஸ், நெ.10,
மேல்தளம், இப்ராஹிம் நகர்,
காஜாமலை, திருச்சி – 620 023.
மூன்றாம் பதிப்பு : 2014.

14. சாமி பி.எல் - சங்க இலக்கியத்தில் அறிவியற்கலை,
சேகர் பதிப்பகம், 66/1, பெரியார் தெரு,
எம் ஜி ஆர் நகர், சென்னை-600 078.
முதற் பதிப்பு : டிசம்பர், 1991.

15. சாமி பி.எல் - சங்க இலக்கியத்தில் செடிகொடி விளக்கம்,
திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி-6,
முதற் பதிப்பு : 1967

16. சாமி பி.எல் - தமிழ் இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41-பி, சிட்கோ எஸ்டேட்,
சென்னை-600 098,

நான்காம் அச்சு : ஜீன்,1986.

17. சாமி பி.எல் - சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், 1/140, பிரகாசம் சாலை, சென்னை-1.
முதற்பதிப்பு : மே 1976.

18. சாமி பி.எல் - சங்க நூல்களில் மரங்கள், திருக்குறள் பதிப்பகம், 66/1, பெரியார் தெரு, எம்.ஜி.ஆர். நகர், சென்னை-600 078.
முதற்பதிப்பு : 1992

19. சாமி பி.எல் - சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், 1/40, பிரகாசம் சாலை, சென்னை-1
முதற்பதிப்பு : மே, 1976.

20. சீனிச்சாமி.துரை - திணைக்கோட்பாடு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41- பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 600 098.
முதல் பதிப்பு : மே, 2016.

21. சுப்பையா.அரங்க - இலக்கியத்திறனாய்வு இசங்கள் – கொள்கைகள், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை –14.
ஐந்தாம் பதிப்பு : 2007

22. ஞானசம்பந்தன் அ.ச பேராசிரியர் - அகமும் புறமும், கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தியாகராய நகர்,

சென்னை-600 017.
இரண்டாம் பதிப்பு: ஏப்ரல், 2001.

23. தட்சிணாமூர்த்தி.அ - தமிழர் நாகரிகமும் பண்பாடும்,
யாழ் வெளியீடு, ஏ.பி., 1108, தென்றல் குடியிருப்பு, மூன்றாவது தெரு, மேற்கு அண்ணா நகர், சென்னை-600 040.
முதல் பதிப்பு : செப்டம்பர்,1994.

24. தமிழ்த்துறை ஆசிரியர்கள் - இலக்கணச் சிந்தனைகள்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலை நகர், தமிழ் நாடு.
முதற்பதிப்பு : நவம்பர், 1973.

25. தமிழண்ணல் - சங்க இலக்கிய ஒப்பீடு (இலக்கியக் கொள்கைகள்),
மீனாட்சி புத்தக நிலையம், மதுரை-625 001.
மூன்றாம் பதிப்பு : டிசம்பர், 1985.

26. தமிழண்ணல் - சங்க மரபு,
மீனாட்சி புத்தக நிலையம், மயூரா வளாகம், 48, தானப்ப முதலி தெரு,
மதுரை – 625 001.

27. தனஞ்செயன்.ஆ - சங்க இலக்கியமும் பண்பாட்டுச் சூழலியமும்,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41- பி,
சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை – 600 098.
முதல் பதிப்பு : ஜீலை, 2010.

28. திருமலை முத்துசாமி.அ - இலக்கியத்தில் விலங்குகளும் பறவைகளும்,
ஔவை நூலகம், சென்னை.

1959.

29. தேவதேவன் - கவிதையின் மதம்(கட்டுரைகள்),
தன்னறம் நூல்வெளி, குக்கூ காட்டுப்பள்ளி,
புளியானூர் கிராமம்,
சிங்காரப்பேட்டை-635 307.
முதல் பதிப்பு : ஜூன்,2023.

30. நக்கீரனார் - இறையனார் அகப்பொருள் விளக்கம்,
திரு நெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், 1/40, பிரகாசம்
சாலை, சென்னை-1.
ஆறாம் பதிப்பு : 1976.

31. நடராசன் தி.சு - பின்னை நவீனத்துவம் கோட்பாடுகளும்
தமிழ்ச்சூழலும்,
விடியல் பதிப்பகம்,
கோயம்புத்தூர்.
முதல் பதிப்பு : ஏப்ரல், 1998.

32. பகவதி.கு - திறனாய்வு அணுகுமுறைகள்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை-600 113.
முதல் பதிப்பு : மார்ச், 1989.

33. பஞ்சாங்கம்.க - இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும்,
அன்னம், மனை எண் – 1, நிர்மலா நகர்,
தஞ்சாவூர் – 613 007.
முதற்பதிப்பு : நவம்பர், 2001.

34. பஞ்சாங்கம் க டாக்டர் - தமிழிலக்கியத் திறனாய்வு வரலாறு,
செல்வன் பதிப்பகம், ப.பிரபாவதி,
‘காசி இல்லம்’,
20–ஆவது குறுக்குத்தெரு,

அவ்வை நகர், புதுச்சேரி – 605 008.
முதற் பதிப்பு : ஆகஸ்டு, 1990.

35. பரமசிவன். தொ - பண்பாட்டு அசைவுகள்,
காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்.,
669 கே. பி. சாலை, நாகர்கோவில்
629001.
பதினாறாம் பதிப்பு : ஏப்ரல் 2018.

36. பழனிவேலு.கே - தொல்காப்பியத் திணைக்கோட்பாடு:
திறனாய்வியல் நோக்கு,
மாற்று வெளியீட்டகம்,
சென்னை. முதற்பதிப்பு : 2018.

37. பாக்யவதி சங்கரலிங்கம் - சங்க இலக்கியத்தில் மயில்,
உலகத் தமிழ்க் கல்வி, 33, திருமலை நகர்
இணைப்பு, பெருங்குடி, சென்னை-600 096,
முதற்பதிப்பு : ஜீன், 1989.

38. பாமயன் - திணையியல் கோட்பாடு,
தடாகம், சென்னை.
இரண்டாம் பதிப்பு :ஜனவரி, 2019.

39. பாலசுப்பிரமணியன்.க - தொல்காப்பியத்தின் ஒருமையும் முழுமையும்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை-600 113.
முதற்பதிப்பு : 2015.

40. பாலசுப்பிரமணியன்.சி - அகப்பொருள் மரபும் திருக்குறளும்,
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.
முதற்பதிப்பு : 1980

41. பாலசுப்பிரமணியன் சி டாக்டர் - வாழ்வியல் நெறிகள்,
நறுமலர்ப் பதிப்பகம்,

சென்னை-600 029.
முதற்பதிப்பு : டிசம்பர், 1990.

42. பாலமுருகன் ந பேராசிரியர் - டி.கே.சி.யின் திறனாய்வுப் போக்கு (ஒரு செயல்முறை ஆய்வு), திருமொழிப் பதிப்பகம், 119, ஜவகர் பஜார், கரூர்-639 001.
முதல் பதிப்பு : 30-11-83

43. பாலுச்சாமி.எ - மருதத்தில் மக்கள் வாழ்வியல், NCBH, சென்னை -600 098.
ஆறாவது பதிப்பகம் : 2011.

44. பிரகாஷ்.வெ - திணை உணர்வும் பொருளும், பரிசல் புத்தக நிலையம், சென்னை-600 004.
முதல் பதிப்பு : 2016.

45. பிள்ளை கே.கே டாக்டர் - தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில் நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை – 600 113.
2008

46. பூரணச்சந்திரன் க பேராசிரியர் - தனிநாயக அடிகள் நில அமைப்பும் தமிழ்க்கவிதையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.
முதல் பதிப்பு : செப்டம்பர், 2014.

47. பெருமாள் ஏ.என் - தமிழர் இசை,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
டி.டி.டி.ஐ.,
தரமணி, சென்னை-600 113.
முதற் பதிப்பு : அக்டோபர்,1984.

48. மம்மது. நா - தமிழர் திணை,
வம்சி புக்ஸ்,
திருவண்ணாமலை.
முதல் பதிப்பு : டிசம்பர், 2016.

49. மருதநாயகம்.ப - ஒப்பில் தொல்காப்பியம்,
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்,
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம்,
சென்னை-600 010.
முதல் பதிப்பு : 2022.

50. மனோகரன் ந (மொ.ஆ) - அய்யப்பப்பணிக்கர் இந்திய இலக்கியக்
கோட்பாடுகள் சூழல்-பொருத்தம்,
மாற்று வெளியீட்டகம், எண்.96,
ஜெ.பிளாக், நல்வரவு தெரு,
எம்.எம்.டி.ஏ.காலனி, அரும்பாக்கம்,
சென்னை-600 106.
டிசம்பர், 2012.

51. மாணிக்கவாசகன் ஞா கவிஞர்கோ- தொல்காப்பியம் மூலமும் விளக்க
உரையும்,
உமா பதிப்பகம், சென்னை-600 001.
மூன்றாம் பதிப்பு : நவம்பர், 2010.

52. மாதையன்.பெ - சங்க இலக்கியத்தில் குடும்பம்,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

சென்னை-600 098.
முதற் பதிப்பு : ஜீன், 2010

53. மாதையன்.பெ - சங்க இலக்கியத்தில் வேளாண் சமுதாயம், NCBH, சென்னை-600 098.
இரண்டாம் அச்சு : மார்ச், 2010

54. மாதையன்.பெ - தமிழ்ச்செவ்வியல் படைப்புகள் கவிதையியல் சமுதாயவியல் நோக்கு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 600 098.
இரண்டாம் அச்சு : ஆகஸ்ட், 2011.

55. மாதையன்.பெ - அகத்திணைக் கோட்பாடும் சங்க அகக்கவிதை மரபும், பாவை பப்ளிகேஷன்ஸ் வெளியீடு, சென்னை-600 014.
முதல் பதிப்பு : டிசம்பர், 2009.

56. மாணிக்கம் வ.சுப - தமிழ்க்காதல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41- பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 600 098.
முதல் பதிப்பு : செப்டம்பர், 2012.

57. முத்து கண்ணப்பன்.தி - சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம், அதிபத்தர் பதிப்பகம், 6, வசந்தா பிரஸ் சாலை, அருணாசலபுரம், சென்னை – 600 020.
முதற் பதிப்பு : ஆகஸ்டு, 1978.

58. முருகுசுந்தரம் - தமிழகத்தில் குறிஞ்சி வளம்,
பழனியப்பா பிரதர்ஸ், சேப்பாக்கம்,
சென்னை-5.
முதற்பதிப்பு : பிப்ரவரி, 1962.

59. வசந்தாள். த - தமிழிலக்கியத்தில் அகப்பொருள்
மரபுகள் – ஒரு வரலாற்றுப் பார்வை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை – 600 105.
முதல் பதிப்பு : 1990.

60. வரதராசனார்.மு - முல்லைத்திணை,
சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை,
சென்னை – 14.
இரண்டாம் பதிப்பு : அக்டோபர், 1955.

61. வல்லிக்கண்ணன் - மலையருவி கவிதைகள்,
தமிழ்ப் புத்தகாலயம், 58, டி.பி.கோயில் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை-600 005.
முதற் பதிப்பு : ஜீலை, 1985.

62. வல்லிக்கண்ணன் - பாரதிதாசன் உவமைநயம்,
ராஜகுமாரி பப்ளிகேஷன்,
சென்னை.
மூன்றாம் பதிப்பு : ஜீலை, 1999.

63. வறீதையா கான்ஸ்தந்தின் - திணைவெளி நிலம்/
சூழலியல்/பண்பாடு,
புலம், சென்னை.
முதல் பதிப்பு : டிசம்பர், 2021.

64. விக்ரமாதித்யன் - தமிழ்க்கவிதை மரபும் நவீனமும்,
மருதா, சென்னை.
முதல் பதிப்பு : 2004.

65. விஜயலட்சுமி.த - தமிழ் இலக்கியக் கோட்பாடு,
பூவரசி வெளியீடு, சென்னை.
முதற்பதிப்பு : 2019.

66. ஜகந்நாதன் கி.வா - குறிஞ்சித்தேன் (சங்க நூற் காட்சிகள்),
அமுத நிலையம், பிரைவேட் லிமிடெட்,
தேனாம்பேட்டை, சென்னை-18.
இரண்டாம் பதிப்பு : செப்டம்பர், 1956.

**67.** ஜகந்நாதன் கி.வா - மலை அருவி ( நாட்டுப்புறப் பாடல்கள்),
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர். ஐந்தாம் பதிப்பு, டிசம்பர் : 2004.

68. ஜமாலன் - மொழியும் நிலமும்(கட்டுரைத்தொகுப்பு),
புதுமலர் பதிப்பகம், 176/10,
வைகைவீதி, வீரப்பன்சத்திரம்,
ஈரோடு – 638 004.
முதல் பதிப்பு : அக்டோபர், 2003.

69. ஜவகர். க - திணைக்கோட்பாடும் தமிழ்க் கவிதையியலும்,
காவ்யா, 16, இரண்டாம் குறுக்குத் தெரு,
டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம்,
சென்னை-600 024.
இரண்டாம் பதிப்பு : 2017.

70. ஜவகர்.க - திணைவெளி
(திணைக்கோட்பாட்டுக் கட்டுரைகள்),
புதுப்புனல், சென்னை-600 005.
முதற் பதிப்பு : திசம்பர், 2012.

71. ஜெயமோகன் - ஒளியிலானது தேவதேவன் படைப்புலகம், சொல் புதிது, கடலூர்-07. முதல் பதிப்பு : டிசம்பர், 2012.

72. ஸ்ரீ குமார் எஸ் டாக்டர் - தமிழில் திணைக்கோட்பாடு, NCBH, சென்னை-600 098. இரண்டாம் பதிப்பு : மார்ச், 2014.

73. ஷாஜகான் கனி வெ.மு முனைவர் - திணை வரலாறு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இண்டர் நேஷனல் இண்ஸ்டிட்யூட் ஆஃப் தமிழ் ஸ்டடீஸ், இரண்டாம் முதன்மைச்சாலை, மையத் தொழில் நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை – 600 113. முதல் பதிப்பு : 2012.

## அகராதிகள்

1. கதிரைவேற்பிள்ளை. நா - தமிழ்மொழி அகராதி, சாரதா பதிப்பகம்.

2. கதிரைவேற்பிள்ளை.ஸ்ரீ - தமிழ்ச் சொல்லகராதி (முதற் பாகம்), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை – 600 113. 1998

3. கிருஷ்ணசாமிப்பிள்ளை சீ - நவீன தமிழ் அகராதி, ஸி.குமாரசாமி நாயுடு ஸ்ன்ஸ், சென்னை. 1935

4. சண்முகம் பிள்ளை. மு - தமிழ் – தமிழ் அகரமுதலி,
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்,
சென்னை

5. சிங்காரவேலு.ஆ - அபிதான சிந்தாமணி,
தமிழ்க்களஞ்சியம், செம்பதிப்பு,
சீதை பதிப்பகம்.

## ஆய்வேடுகள்

1. அவ்வை.எஸ் - சங்கப் பாடல்களில் திணையுணர்வும்
தன்னுணர்வும் கவிதையாக்க நெறி,
சென்னைப் பல்கலைக்கழகம்,
2023.

2. அருள் ஜெனீபா. A - திணைக்கோட்பாட்டு நோக்கில் கம்பராமாயணம்,
பாரதிதாசன் பல்கலைக்கழகம்.
2021.

3. இந்திராணி.பி - சங்கப் பாடல்களில் பாலை நில இனவரைவியல்,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி – 627 012. பிப்ரவரி, 2022.

4. கண்ணன்.த - சங்க இலக்கியத்தில் திணை மயக்கம்,
தமிழ்த்துறை அழகப்பா பல்கலைக் கழகம்,
காரைக்குடி-630 003.
பிப்ரவரி, 2008.

5. குணவதி.கோ - திணைக்கோட்பாட்டு மரபும் மருத நிலப் புதினங்களும்,
இலக்கியத்துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் – 613 010.

அக்டோபர், 2017.

6. சோமசுந்தரம்.எம் - சங்க அகப்பாடல்களில் திணைமயக்கம், பாரதியார் பல்கலைக்கழகம், 1991.

7. தமிழரசி.அ - நற்றிணையில் நெய்தல் நில மக்கள், தமிழ்த்துறை, மன்னை இராசகோபாலசாமி அரசினர் கலைக் கல்லூரி, (பாரதிதாசன் பல்கலைக் கழக இணை பெற்றது) மன்னார்குடி – 614 001. மார்ச், 2024.

8. மனோகரன். ந - தேவதேவன் கவிதைகள் : பின் நவீனத்துவ வாசிப்பு, பாரதியார் பல்கலைக்கழக இளநிலை ஆய்வாளர் (எம்ஃபில்) பட்டத்திற்காக அளிக்கப்பெறும் ஆய்வேடு, தமிழ்த்துறை, பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 641 046

9. மாணிக்கம்.அ - குறுந்தொகையில் முதற்பொருள் கருப்பொருள் வருணனைகள், பெரியார் பல்கலைக் கழகம். 2017.

10. ரேவதி.சா - இனவரைவியல் நோக்கில் முல்லைத்திணைப் பாடல்கள் (எட்டுத்தொகை மட்டும்) , அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்-608 002. 2014

## ஆங்கில இதழ்கள்


- Kaviarasu k - Tinai poetics : An ecopoetics of south india, kaviarasu kanakappan, vivekananda college, Literary Association of Nepal. Volume.30, march 2017.
- The criterion - An International Journal in English, October 2018 Vol.9, Issue – 5, 9th Year of Open Access


## ஆங்கில நூற்கள்


- Rana s.v.s. - Essentials of ecology and environment science, PHI learning private limited, new delhi-110001. Sixth printing(fourth edition), september, 2010.
- singh y.k Dr - Environmental Science, New Age International (p) Limited, Publishers, 4835/24, Ansari Road, Daryaganj, New Delhi – 110002. Copy right – 2006.

## மலையாள நூற்கள்


1. செபாஸ்டியன் வி.ஜெ - ஆதுனிக கவிதயும் திண்சங்கல்பனவும், தி ஸ்டேட் ஆஃப் லாங்கேவஜஸ், திருவனந்தபுரம். முதல் பதிப்பு : ஜீலை, 2009.
2. சிசுபாலன் கெ டாக்டர் - திராவிட காவ்யசாஸ்த்ரவும் திணசித்தாந்தவும், ஆத்மா புக்ஸ், கோழிக்கோடு. முதல் பதிப்பு : அக்டோபர், 2023.
3. சுலேகா கெ.கெ டாக்டர் - நாதபரிதமாய சிதம்பரங்கள், அக்காபுல்கோ பப்ளிகேஷன்ஸ், திருச்சூர். முதல் பதிப்பு : அக்டோபர், 2020.
4. ராஜேஷ் M.B Dr - விவஸ்தயும் அடருகளும், வித்யார்த்தி பப்ளிகேஷன்ஸ், மனச்சிர டவர், எ.ஜி. ரோடு, கோழிக்கோடு – 01.


## தமிழ் இதழ்கள்


1. நாகர்ஜுனன் - பெங்களூர் ஜெர்னல், காவ்யா பதிப்பகம். ஜுலை 1995 இதழ் 3 & 4, ப.63
2. பாலகிருஷ்ணன்.ஆர் - மலையும் தமிழும்! – சங்க இலக்கியக் கருத்தியல்கள், திணை காலாண்டிதழ்.33.

**websites**

- Archive.org
  http://archive.org
- www.the-criterion.com
- https://kalkionline.com
- https://www.tamilvu.org

# பின்னிணைப்பு

**பின்னிணைப்பு**

## கவிஞர் தேவதேவனின் நேர்காணல்

1. **வினா :** கதை, கவிதை, நாவல் எனும் பல்துறை சார்ந்த இலக்கியங்களில் உங்களுடைய ஆர்வம் கவிதை படைப்பதில் உள்ளது போல் தோன்றுகிறது. இது பற்றி உங்கள் கருத்து.

**பதில் :** கவிதை தவிர்த்த பிற சிறுகதை நாவல் போன்ற துறைகள் கவிதை உச்சத்தைத் தொட்டிருக்கும்போதுதான் சிறந்த படைப்புகள் ஆகின்றன என்றாலும் அவைகள் பெரிதும் காலத்தையும் இடத்தையும் சார்ந்திருக்கின்றன. காலமும் இடமும் சார்ந்த மனித குணங்கள், பண்பாடு, சூழல், மனித நாடகம், வரலாறு ஆகியவை. கவிதை இவைகளைப் பொருட்படுத்தாத ஆழத்தையும் உச்சத்தையுமுடைய மனிதப் பண்பாட்டையே மய்யமாகக் கொண்டது.

2. **வினா :** தூத்துக்குடி வட்டார மொழிகளை உங்களுடையக் கவிதைகளில் பதிவு செய்துள்ளீர்களா?

**பதில் :** இல்லை என்றே நினைக்கிறேன். காரணம் கவிதை முதன்மையாக அதைத் தொற்றி நிற்கும் ஒன்றல்ல;

3. **வினா :**

உழவு மாட்டுடன், தோளில்
உழுத கலைப் பையுடன்
கஞ்சிக் கலயம்
புல்லுக்கட்டு, விறகு
இடுப்புக் குழந்தையுடன்
ஆட்டு மந்தை செலுத்தும்...
டாக்கிஸிலிருந்து தாபிக்கும்
காதலன் பிளிறலுடன

இக்கவிதையின் இறுதி இரண்டு வரிகள் எக்கருத்தை முன்வைக்கிறது.

**பதில் :** நிச்சயமாக அது எந்தக் கருத்தையும் முன் வைக்கவில்லை. 'கவிதை என்பதே ஒரு கருத்தை முன்வைப்பதற்கானதல்ல' என்ற கருத்தையும் கூட அது முன்

வைப்பதாகவும் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. அதில் வெளிப்பட்டிருப்பது ஒரு மானுட துக்கம்...

4. **வினா :** 'நுழைவாயிலிலேயே நின்று விட்ட கோலம்' கவிதைத் தொகுப்பில் 'குல்மோஹர் மரம்' ஒன்றை குறிப்பிட்டுள்ளீர்கள். அது என்ன வகையான மரம்?

**பதில் :** ஏதோ ஒரு அயல்நாட்டிலிருந்து வந்த மரம் தான் இது. பெயரை மறந்துவிட்டேன். Google ல் தேடினால் தான் கிடைத்துவிடுமே உங்களுக்கு. இலங்கையில் இதனை ராஜாத்தி மரம் என்று அழைப்பார்களாம். பிரமிள் சொன்னது. முழுக்க இலைகளுதிர்ந்து விட்ட கோடையில் ராஜாத்திபோல் மலர்களாகிய புதிய ஆடையை அணிந்து கொள்கிறார்களாம். முழுக்கவும் சிவந்த மலர்களால் ஒரு பெரிய மலர்போலிருக்கும் இதனை flame of the forest – காட்டுத் தீ என்றும் சொல்வார்கள். எங்கள் தூத்துக்குடி வீட்டில் உள்ளேயும் வெளியேயும் இந்த மரங்கள் இருந்தன.

5. **வினா :** நீங்கள் படைத்த கவிதைத் தொகுப்பிற்கு 'நார்சிசஸ்வனம்' என தலைப்பு வைத்துள்ளீர்கள். இதில் குறிப்பிடப்பட்டுள்ள 'நார்சிசஸ்' என்பதற்குரிய பொருள் என்ன?

**பதில் :** நார்சிசஸ் என்பது ஒரு மலரின் பெயர். கிரேக்க தொன்மத்தில் வரும் ஒரு நாயகனின் பெயரும் கூட. தன்னைத் தானே மோகிக்கும் மனதினை நார்சிசம் என்று உளவியலார் குறிப்பிடுவர். எனது நார்சிசவனம் என்னும் காவியம் இது குறித்த ஆழமான விசாரணைக்குள் சென்று மீண்டுள்ள ஒரு கதை.

6. **வினா :** நவீனக்காலக் கவிதைப் படைப்புக்களில் சமூகத்தில் பெண்களுக்கான நிலை எவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது?

**பதில் :** பாரதியும் பாரதியின் காலமும் பெண் விடுதலை பற்றி ஆண்கள்தம் ஆண்பார்வையில் பேசிக்கொண்டிருந்தார்கள். கவிதையும் அப்படித்தான் இருந்தது. இன்று பெண்கள் பேசத்தொடங்கியிருக்கிறார்கள், பேசுகிறார்கள் என்பதுதான் நவீனக்காலப் கவிதைப் படைப்புகளில் காணப்படுகிறது.

7. **வினா :** கானகவாசி – ரிபூ என்பதில் குறிப்பிடப்படும் 'ரிபூ' என்பதற்குரிய பொருள் என்ன.

**பதில் :** ’ரிபூ’ என்பது அந்தக் காலத்து ரிஷி ஒருவரின் பெயர். அவ்வளவுதான்.

8. **வினா :** போஷிக்க, ஸ்வப்ன ஸ்கலிதம், கச்சடா, டிமிக்கி, ஜோலி, பந்தோபஸ், சேக்காளிகள் - இச்சொற்கள் எந்த வட்டார மொழிக்குரியது. தமிழ் மொழியில் இவைகளுக்கு மாற்றாக வேறு சொற்கள் உள்ளனவா.

**பதில் :** தமிழில் சமஸ்கிருதம் முதலான பிற மொழிச் சொற்களின் கலப்பை - அநாவசியமான கலப்பை – நாம் நம் உரைநடைகளில் நீக்கியுள்ளோம். நல்லதுதான். ஆனால் கவிதையில் – இப்போது இங்கே குறிப்பாக என் கவிதைகளில் அவை அறிந்தே அதன் அதன் இடத்து ஒலிநயத்தினால் தவிர்க்க இயலாது அமைந்துவிட்டது தவிர வேறொன்றுமில்லை. இது வட்டார வழக்கு என்பதை விட உணர்வெழுச்சியின் ஓசைநயம் என்பதே சரியானது. போஷிக்க என்பது பேண என்பதும், ஸ்வப்ன என்பது கனவு என்பதும், ஸ்கலிதம் என்பது வெளியேற்றம் என்பதும், கச்சடா என்பது குப்பை என்பதும், டிமிக்கி – தப்பித்தல், ஜோலி – வேலை, பந்தோபஸ்து – பாதுகாப்பு, சேக்காளிகள் – நண்பர்கள் என்பதெல்லாம் நாம் அறியாததல்லவே?

9. **வினா :** உங்களுடைய கவிதை வரிகளில் சங்க இலக்கியத்தின் தாக்கத்தை காண முடிகிறது. இது பற்றிய உங்கள் கருத்து?

**பதில் :** இருப்பது இயல்புதானே! மொழியைக் கற்கும்போதே அதன் பின்புலமும் நம்மை வந்து சேரத்தானே செய்யும்! எனது சிறுவயது பள்ளி வாழ்க்கையின் போதே நான் ஆசிரியப்பா, வெண்பா, விருத்தம் போன்ற யாப்பு வடிவங்களில் கவிதை எழுத அறிந்திருந்தேன். ஆனால் மிகமுக்கியமாக நான் இங்கே சொல்ல விரும்பும் ஒன்று என்னவென்றால் இயல்பான ஒரு பேச்சு மொழி ஒலியிலிருந்துதானே அந்த யாப்புகளும்கூட பிறந்திருக்கும் என்பதுதான்.

எனது முதல் கவிதைத் தொகுப்பான “குளித்துக்கரையேறாத கோபியர்களில்” உள்ள ’காடு’ என்ற முதல் கவிதை (முதல் கவிதை என்று நினைக்கிறேன்) இன்றும் அதை மனதினால் நினைக்க முடிவது அதன் ஆழத்தினால் மட்டுமின்றி ஒலியினாலும் என்றே நினைக்கிறேன். இதோ சொல்கிறேன்.

தன் இதயச்

சுனையருகே

தாகித்து நின்றான்

காடெல்லாம் அலைந்தும்

காணாத மான்கூட்டம்

காண

மொழியிலுள்ள எதுகைகளும் மோனைகளும் இயல்பான மனிதவாழ்வின் பேச்சு மொழியில் இயல்பாகத் தோன்றும் இசை ஒலிகள் தாம் என்பதை அறிவதற்கு பெரிய ஆராய்ச்சி ஒன்றும் தேவையில்லையே!

10. **வினா :** 'நுனிக்கொம்பர் நாரைகள்' கவிதைத்தொகுப்பில்

பாலைவனத்தில் தான்

வளர்வேன் என்றா

சொல்கிறது

பாலைவனச் செடி

எனும் கவிதை வரிகளுடைய பாடுபொருள் சமூகத்திற்கு எக்கருத்தினை பதிவு செய்கிறது?

**பதில் :** தீவிர கவிஞனுக்கு முழுமையான வாழ்வுதான் எப்போதுமே ஒரு பாடுபொருள். கருத்து என்பதைக் குறித்து – நான் முன்னமேயே சொன்னபடி – முதன்மையானதல்ல, பிறர் அதை எப்படி எடுத்துக்கொண்டாலும் – உணர்வுதான் முதன்மையானதும் கவிஞன் கடத்த எண்ணியிருப்பதும்.

இந்தக் கவிதை ஒரு பெரிய வறுமையின் போது கூட துளிர்க்கிற, மகிழ்கிற, வாழ்கிற ஒரு மனித மனநிலையை, வாழ்வின் ஓர் உச்சநிலையின் களிப்பை அல்லவா கடத்த நினைக்கிறது!

**கவிஞர் தேவதேவனுடன் ஆய்வாளர்**

